
Koviloor Digital Library

நேமம் கோயில்



Acc. No: 762
Ql : 38

மா. சந்தரமூர்த்தி எம்.ஏ

Koviloor Digital Library

Koviloor Digital Library

4645

நேமம் கோயில்

30-3

762

கோவிலூர் ஆதீனம்
ACC.NO: 762
01136
... 630 307

மா. சந்திரமூர்த்தி, எம்.ஏ.,

மெய்யப்பன் அறக்கட்டளை

மெய்யப்பன் பதிப்பகம்
சிதம்பரம்

1991

Koviloor Digital Library

முதற் பதிப்பு:
பிப்ரவரி 3, 1991

உரிமை: ஆசிரியர்க்கு

பக்கங்கள்: xvi + 168

நேமம் கோயில் நகரப்பெருமக்களால்
குடமுழுக்கு விழா நாளாகிய ஞாயிற்றுக் கிழமை
(3—2—1991) அன்று இந்நூல் வெளியிடப் பெற்றது.

விலை: ரூ. 20-00

கிடைக்கும் இடங்கள்

மணிவாசகர் நூலகம்

12.பி. மேலசன்னதி - சிதம்பரம்
55. லிங்கித்தெரு - சென்னை-1
28.A. வடக்கு ஆவணி மூல வீதி - மதுரை
3/4 ராஜவீதி - கோவை
28. நந்தி கோயில் தெரு - திருச்சி 2.

அச்சிட்டோர்:
கே.பி.டி. இண்டஸ்ட்ரீஸ்
அண்ணாமலைநகர்-608 002

Koviloor Digital Library

நகரத்தார் கலைப்பாணி நலங்கள்

டாக்டர் ச. மெய்யப்பன், எம்.ஏ.
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மணிவாசகர் பதிப்பகம் கடந்த முப்பது ஆண்டுகளில் (1960-1990) நானூறு நல்ல நூல்களை வெளியிட்டுப் பேரும் புகழும் பெற்று வருகிறது. தனித்தன்மை உடைய அரிய நூல்கள் தமிழ் மறுமலர்ச்சிக்கு வழி வகுப்பன. தமிழர் நாகரீகம் பண்பாடு விளங்கப்பெறும் வகையில் பல நூல்களை வெளியிட்டுப் பெருமை பெற்று விளங்குகிறது.

திருக்கோயில் சிறப்புக்களை விளக்கும் வகையில் நாற்பது நூல்களை அழகுடன் வெளியிட்டுள்ளது. திருக்கோயில் சிறப்புக்களை இவ்வரிசை நூல்கள் விளக்குகின்றன.

தில்லைத்திருக்கோயில்	அறுபடை வீடுகள்
மதுரைமீனாட்சி	பஞ்சபூதத்தலங்கள்
திருவண்ணாமலை.	அட்டவீரட்டத்தலங்கள்
திருவாரூர்.	

சிறப்பாக வெளிவந்து பல பதிப்புகள் பெற்றுவிட்டன.

இப்பொழுது செட்டி நாட்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்க்குச் சொந்தமான "ஒன்பது கோவில்கள்" பற்றி விரிவான நூல்கள் வெளியிடும் பெருந்திட்டத்தில் நகரக்கோவில் வரிசை வெளிவருகிறது.

1. மாத்தூர்க்கோவில்
2. இலுப்பைக்குடிக்கோவில்
3. இரணியூர்க்கோவில்

Koviloor Digital Library

முப்பெருநூல்களை முன்னர் வெளியிட்டோம். இப்பொழுது நேமம் கோவில் மலர்கிறது.

நகரக்கோவில்களின் தனிச்சிறப்பு-பெருமை நகரத்தார்களுக்கே தெரியாது. திருமணநாளில் பாக்கு வைப்பதும், கோவில் மாலைகள் பெறுவதும் என்ற அளவிலேயே தெரிந்திருப்பார்கள். நகரக்கோவில்களில் திருமணப் பதிவேடு மிகச்சிறந்த ஆவணமாக அமைந்துள்ளது. 'புள்ளிக் கணக்கு' மக்கள் தொகை விபரம் அறிய மிகச் சிறந்த பேரேடு. மிக ஒழுங்காக பதியப்பெற்று முறைப்படி காக்கப் பெற்ற சான்றுகள். அறிவியல் முறைப்படி நகரத்தார் வாழும் ஊர்தோறும் வாழும் புள்ளி விபரம் அறியப் பெரிதும் துணை செய்யும் பதிவேடாக விளங்குகிறது.

சோழ, பாண்டிய, நாயக்கமன்னர்கட்குப்பின் நகரத்தார் கலைப்பாணியின் தனித்தன்மையை ஒன்பது கோவில்களும் உலகிற்குப் பிரகடனம் செய்கின்றன.

ஓவியங்கள் செப்புப்படிமங்கள் சிற்பங்கள் தனித்தன்மை கொண்டவை. ஒரு காலக்கட்டத்தின் அடையாளங்கள் பழைய தமிழ் மரபுகளின் புதுமைக் கோலங்கள் என்பதனை இவ்வரிசை நூல்கள் உள்ளங்கை நெல்லிக்கனி என விளக்குகின்றன.

நான்கு நூல்களையும் ஒருசேர வைத்துப்பார்க்கும் பொழுது-ஆராயும் பொழுது செட்டிநாட்டுக்கலைப்பாணி நகரத்தார் கோவில் கட்டடக்கலைப் பாணியின் பொதுத் தன்மைகளும் சிறப்புக் கூறுகளும் தெளிவாக விளக்கம் பெறுகின்றன.

ஒன்பது கோவில்களும் குன்றக்குடியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் சுற்றளவுக்குள் அமைந்துள்ளது ஒரு சிறப்பு. எல்லாக் கோவில்கட்கும் நகரப் பேருந்துகள் இடைவிடாது இயங்குகின்றன. அண்மைக்காலங்களில்

Koviloor Digital Library 30-3

ஒரே நாளில் ஒன்பது கோவில் சுற்றுத்திட்டத்தை ஊக்குவிக்க நகரத்தார் இளைஞர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள். நம்பெருமை நாமே உணர இது சிறந்த ஏற்பாடாகும்.

காலவெள்ளத்தால் அழிக்க முடியாத கலைப் பேழை களைக் காப்பது நம் முதற்கடமை. அதற்காக ஒன்பது கோவில் பெருமக்கள் தொடர்ந்து குடமுழுக்கு நடத்தி திருப்பணிகள் மூலம் கலைச் செல்வங்களைப் பேணிக் காத்து வருகின்றனர். அவர்தம் கடமை உணர்வுக்குத் தமிழ் உலகு கடமைப் பட்டுள்ளது.

தலம் பற்றிய அனைத்துச் செய்திகளையும் வரலாற்றுச் செய்திகளையும் அச்சிட்டுப் பாதுகாப்பதற்கான முயற்சி கள் தாம் இத்தகைய கோவில் வரிசை நூல்கள்.

இந்நூலாசிரியரின் உண்மை உழைப்பையும், லட்சிய வெறியையும், உயர்ந்த குறிக்கோளையும், செய்திதேடல் திறத்தையும், விளக்கும் திறனையும், புதியன கண்டுபிடிக் கும் மதிநுட்பத்தையும், ஆராய்ச்சி உண்மைகளை வெளியி டும் புலமைத் திறத்தையும் இவர் அரிதின் முயன்று எழு திய நான்கு நூல்களும் பறை சாற்றுகின்றன.

மாண்பமை நடுவர் அரு. இலக்குவனார் இரணியூர்க் கோயில் நூலுக்கு அளித்த அணிந்துரையில் ஆசிரியரின் பல்துறை அறிவையும் பட்டறிவையும் எழுத்தாற்றலை யும் சிறப்பித்துப் பாராட்டியுள்ளார்.

பூம்புகார்க் கல்லூரி முந்நாள் முதல்வர் பேராசிரியர் இலக்குவன் அவர்கள் மாத்தூர்க்கோவில் நூலின் சிறப் புரையில் ஆசிரியர் மதிநுட்பத்தையும் கலைகளில் உள்ள பயிற்சியினையும் பாராட்டியுள்ளார். பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் சந்திரமூர்த்தியின் நகரக்கோவில்கள்

Koviloor Digital Library

ஆய்வு தமிழகக் கோவில் ஆய்வுகளுக்கு துணை நிற்கும் அடிப்படைக்கூறுகளைக் கொண்டது எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

ஒன்பது நகரக் கோவில் ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்ற அறிஞர் வ. தேனப்பன் சந்திரமூர்த்தியைக் கலை ஆராய்ச்சி ஒளி நல்கும் சூரியமூர்த்தி எனப் போற்றி யுள்ளார்.

பெருமக்கள் நால்வரும் உரைத்த உண்மை உரைகளுக்கு மேல் பதிப்பாசிரியர் என்ன பகரவேண்டியுள்ளது?

கடந்த மூன்று ஆண்டுகளில் நூலாசிரியர் நகரக் கோவில்களில் பலமுறைவலம் வந்தவர். கோவில் சூழல்களையும் சுற்றுப்புறங்களையும் ஆர்வத்துடன் ஆராய்ந்தவர். சிற்பங்களில் செப்புப்படிமங்களில் உள்ளார்ந்த அழகினை ஓர்ந்து உணர்ந்தவர். பயிற்சியால் அனுபவத்தால் தனிக்கூறுகளை நன்கு தெளிந்து நுண் கூறுகளை விளக்கிக் காட்டியுள்ளார். மேலும் ஒரு நல்ல நூலை ஆற்றல் வாய்ந்த இவரது எழுதுகோல் தமிழகக்கலை வரலாற்றுத் தொகுதிக்கு அளித்துள்ளது.

நூலாசிரியரோடு நகரக் கோவில்கட்குப் பலமுறை சென்று வந்துள்ளேன். அவற்றின் தன்னிகரில்லாத கலைப் பாணியைக் கண்டு உணர்ந்துள்ளேன். சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் நடுநாட்டிலும் நகரத்தார் திருப்பணி செய்துள்ள முறைகளில் இந்த கலைப் பாரம்பரியம் மரபு பட்டொளி வீசுவதை நேர்ரே கண்டு உணர்ந்து மகிழ்ந்துள்ளேன்.

இந்நூல் உருவாகும் பொழுது ஒத்துழைத்த நேமம் கோயில் பெருமக்களுக்கும் நேமம் கோயில் நகரத்தார் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Koviloor Digital Library

30-3

O. RM. M. SP. SV. AN.
ANNAMALAI CHETTIAR
Founder President
Sree Sevugan Annamalai College

அணிந்துரை

நம் குலமுறைக் கோயில்கள் ஒன்பதில், நேமம் கோயில் மிகவும் பெரியதாகும். பிறகோயிற் சிற்பங்களை விட இக் கோயிற்சிற்பங்கள் அளவில் பெரியவை, கலை நுட்பம் மிக்கவை. ஜெயங்கொண்ட சோழீசுவரர் சௌந்தரநாயகி அம்மன் கோயில், சோழர் காலந்தொட்டுப் புகழோடு விளங்கி வருகிறது; இக்கோயில் பாண்டிய மன்னர்களின் போற்றுதல்களையும் நேமம் நகரத்தார் திருப்பணி களையும் பெற்று விளங்குவது.

இத்தல நேமம்காளி, பைரவர் இரண்டும் சக்தி வாய்ந்தவையாக நம்பப்படுகின்றன. பாடுவார் முத்தப்பர் இந்தக் கோத்திரத்தில் வந்தவர்; தல இறைவரை 'சிரித்துச் செயங் கொண்டார்' எனப் போற்றியவர்.

இக்கோயில் சக்தி வாய்ந்தது என்பதற்கு, இங்குக் களவுபோன சிலைகள் எவ்வித விக்கினமுமின்றி இருபத் தோரே நாளில் திரும்பி வந்ததே போதிய சான்றாகும். இந்தச் சாந்நித்யத்தை என்னென்பது?

இக்கோயிலுக்கு 500 ஏக்கர் சொத்து இருந்தும், இப் போது 39 ஏக்கர்களே அனுபவத்தில் உள்ளன. கோயில் நகரத்தாரோ புள்ளி வரிகள் மூலம் பெருந்தொகையை மூலதனமாக வைத்து, அதன் வருமானத்திலிருந்தே நித்திய படித்தரம் செய்து வருகின்றனர்.

இத்திருக்கோயிலைப் புதுப்பித்து, வர்ணம் வைத்து, சிறந்த முறையில் கும்பாபிஷேகம் செய்ய நகரத்தார்

Koviloor Digital Library

பெரும் பொருளை அள்ளித்தந்துள்ளனர். தேவகோட்டை உ.மு.சுப.லெ.மெ. மெய்யப்பசெட்டியார் தலைமையில் திருப்பணிக்குழு அமைந்து சிறந்த முறையில் திருப்பணி நடைபெற்றுவருகிறது. விழாவினை யொட்டி உபதலைவர் வி.என்.சிடி. சிதம்பரம்செட்டியார் தலைமையில் கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் போன்றன நடைபெறுகின்றன. விழாமலரும் வெளிவருகிறது.

நேமம் கோயில் நகரத்தார் அனைவரும் ஒருமித்த கருத்துடன் அயராது உழைத்து குடமுழுக்கு வைபவத்தைச் சிறப்பாக நடைபெறச் செய்வது போற்றுதலுக்கு உரியது.

நகரக்கோயில்கள் பற்றி நன்கு ஆராந்து வரும் சிற்பக் கலைஞர் உயர்திரு மா. சந்திரமூர்த்தி அவர்கள், நம் நேமம்கோயில் பற்றியும் 21 நாள் இங்கு வந்து தங்கி நேரே ஆய்ந்து சிறந்த ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதியுள்ளார் கள். அதை நம் மெய்யப்பச் செட்டியார் அவர்கள் அழகாக வெளியிட்டுள்ளார்கள்.

மன்னர் பின்னோரான நமக்கு என ஒரு தனி கோயிற் கலைப்பாணி அமைந்துள்ளதாக நூலாசிரியர் நிறுவும் கருத்து மிகவும் பொருத்தமான ஒன்று. ஒன்பது கோவில் கள் தவிர, செட்டிநாட்டு ஊர்களிலெல்லாம் உள்ள சிவன் கோவில்கள் பற்றியெல்லாம் ஒருபெரும் நூல் எழுத இருப்பது நமக்கெல்லாம் எல்லையில்லாத மகிழ்ச்சி தருகிறது. இவரே ஒன்பது கோயில்களையும் ஒன்று சேர்த்து ஒரு பெரிய நூலைப்படைக்க வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்; அதற்கு நகரத்தார் எல்லோரும் ஒருமன தாக ஊக்கம் அளித்தல் வேண்டும்.

ஜெயங்கொண்ட சோழீசுவரர் சௌந்தரநாயகி அம்மன் அருள் அனைவர்க்கும் அமைய வாழ்த்துகிறேன்.

உ.ராம.மெ.சுப.சேவு. அண்ணாமலைசெட்டியார்
தேவக்கோட்டை

Koviloor Digital Library

உ மு.சுப.லெ.மெ. மெய்யப்பசெட்டியார்
தலைவர்
நேமம் குடமுழுக்கு திருப்பணிக்குழு

வாழ்த்துரை

நம் நேமம் திருக்கோயில் மிகவும் புராதனமானது. சிவபெருமான் திரிபுரங்களையும் சிரித்து எரித்து ஜெயங் கொண்டமையால், 'ஜெயங்கொண்ட சோழீச்சுரம்' என்னும் திருநாமம் ஏற்று விளங்குகிறார். இக்கோயிலின் மகாகும்பாபிசேகம் வரும் 3 – 2 – 1991 ஞாயிற்றுக் கிழமை நடைபெறுகிறது.

அந்தப் புனித நாளில் இக்கோயில் பற்றிய விரிவான நூல் வெளிவருவது மிகவும் பொருத்தம்; வரவேற்க வேண்டியது. இதை எழுதிய செல்வர் திரு.மா. சந்திர மூர்த்தி அவர்கள். நம் குலமுறைக் கோயில்கள் ஒன்பது பற்றியும் எழுதிவருவது நமக்கெல்லாம் மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

நம் பெருமையை நாமே பேசுவதைவிட – எழுதுவதை விட, இந்தத் துறையில் தேர்ந்த ஒருவர் எடுத்து இயம்புவது நல்லது. பிறர் நம்பெருமை போற்ற வேண்டும்; அப்போதுதான் உலகம் ஏற்கும்.

நாம் செய்ய வேண்டியதை நமக்காகச் செய்யும் இவரை நாம் மனதார வாழ்த்துவோம். சௌந்திர நாயகி சமேத ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீசுரர் அருளும் இவருக்குக் கிட்டட்டும். நேமம் கோயிற் புள்ளிகளாகிய நம் எல்லோரின் ஆசியும் இவருக்கு என்றும் உண்டு.

இந்த நல்லநூல் பொதுவாக நம் நகரத்தார் பற்றிய புள்ளிவிவரங்களையும், சிறப்பாகக் கோயிற்பணியின் பெருமை, கோயில் அமைப்பு அழகு, கலைச் சிறப்பு, கல்

Koviloor Digital Library

வெட்டு, செப்பேடு, உற்சவமூர்த்திகள் பற்றியெல்லாம் துல்லியமாகத் தெரிவிக்கும் தகவல் களஞ்சியமாக விளங்குகிறது.

நம் நகரக் குலக்கோயில் பற்றி ஏதேனும் தெரிய வேண்டுமானால், வேறு எதையும் தேடித் திண்டாட வேண்டியதில்லை; இந்தக்கலைக் கருவூலத்தைத் திறந்து பார்த்தால் போதும்.

நாமெலவாம் செய்திகள் தேடிக் கொஞ்சமும் சிரமப் படாமல் இருக்க, இவர் ஒருவரே மிகவும் சிரமப்பட்டு தேனீ போலே சேகரித்துத் தந்திருக்கிறார். நமக்காகக் கஷ்டப்பட்ட இவருக்கு நாம் எல்லோரும் நன்றி சொல்ல வேண்டும்.

நகரத்தார் எல்லாம் இப்பொக்கிஷத்தை வாங்கி வீட்டில் வைத்துப் போற்ற வேண்டும்; நகர இளைஞர்கள் எல்லாம் படித்துப் படித்து, நம் பாரம்பரியப் பணிகள் எல்லாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நம் எல்லோர் வீட்டிலும்-நம் ஒவ்வொருவர் கையிலும் இந்நூல் இருக்க வேண்டும். அதுவே இதை எழுதிய சந்திர மூர்த்தி அவர்கட்கும், வெளியிட்ட மெய்யப்பன் அவர்களுக்கும் நாம் அளிக்கும் ஊக்கமும் ஆக்கமும் ஆகும். வாழ்க! வளர்க.

உ.மு.சுப.லெ.மெ. மெய்யப்பசெட்டியார்
தேவகோட்டை

Koviloor Digital Library

உங்களுடன்...

நான்கு ஆண்டுகளுக்கு முன் வடலூர் தைப்பூசத்திற்குக் குடும்பத்துடன் சென்று திரும்பும்போது. பேருந்தில் மெய் யப்பனார் அவர்களைக் கண்டு அளவளாவிக்கொண்டி ருந்தபோது, 'கோயில் வரிசையில் எத்தனையோ நூல் கள் போட்டு வருகிறீர்களே, ஏன்? உங்களுக்கென்று உள்ள நகரக் கோயில்களைப் பற்றி நூல் வெளியிடக் கூடாது' எனக் கேட்டதற்கு, 'நல்லா வெளியிடலாமே' என்றார்.

'நான் அப்பகுதியில் ஏழாண்டுகளாக அலுவலராக இருந்திருக்கிறேன். ஒன்பது கோயில்களைப் பற்றி நிறைய குறிப்புகளைத் திரட்டியுள்ளேன். சோமலெ அவர்கள் என்னை வேண்டி, இலுப்பைக்குடி பற்றி 45 பக்கக் கட்டுரை பெற்று இலுப்பைக்குடி மலரில் வெளியிட்டார்' என்றேன். உடனே, 'அதை எடுத்துக்கொண்டு, வரும் அமாவாசை யன்று வாருங்கள்' என்றார். அப்படியே எடுத்துச் சென்று காட்டினேன். 'இன்னும் செய்திகள் சேர்த்துப் பெரிதாக்கித் தாருங்கள், போட்டுவிடுவோம்' எனப் பச்சைக் கொடி காட்டினார்!

இதற்காக, மீண்டும் இலுப்பைக்குடி சென்று தங்கி முழுமைப்படுத்திக்கொண்டு, அப்படியே மெய்ப்பனாருடன் மாத்தூருக்கும் போய் அக்கோயில் பற்றிய குறிப்புகளைத் தொகுத்துவந்து, இலுப்பைக்குடி – மாத்தூர் இரண்டும் பற்றிய என் நூற்படிகளைத் தந்தேன். உடனே அவரும் நூலாக்கி வெளியில் உலவவிட்டார்.

இப்படிச் செட்டி நாட்டுப் பகுதிகளில் என் பெயர் அறியச்செய்த, உடன் பிறவாச் சகோதரராம் டாக்டர் மெய்யப்ப செட்டியார் அவர்களை என் சிந்தையில் சதா

Koviloor Digital Library

காலமும் நினைந்து நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகி வருகிறேன்.

என் வாழ்நாள் புனிதப் பணியாக நகரத்தார் கோயில் வரிசை எழுதிவரும் எனக்கு, ஆக்கமும் ஊக்கமும் தந்து வரும் செட்டி நாட்டுச் செந்தமிழ் அன்பர்கள் எல்லோருக்கும் என் இதயம் கனிந்த நன்றி பாராட்டுகிறேன்.

தொடக்க காலத்தில் என்னை நன்கு புரிந்து இத் துறையில் ஆற்றுப்படுத்தி ஆளாக்கிய அறிஞர் பெருந்தகை, 'பல்கலைச் செல்வர்' டாக்டர் இரா. நாகசாமி அவர்களை எப்போதும் நினைவு கூர்தல் என் இனிய கடனாகும். தொடர்ந்து என்னை ஊக்கிவரும் இயக்குநர் 'கல்வெட்டறிஞர்' திருமிகு. நடன காசிநாதன் அவர்களுக்கும் என் அன்பு நன்றி.

இந்நூலுக்கு வாழ்த்துரை நல்கிய திருப்பணிக் குழுத் தலைவர் சிவத்திரு. உ.மு.சுப.லெ.மெ. மெய்யப்ப செட்டியார் அவர்களுக்கும்; அணிந்துரை அளித்த பொருளாளர் 'கல்விக்காவலர்' தேவகோட்டை உ.ராம.மெ.சுப.சேவு. அண.அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கும் எனது அன்பும் நன்றியும் உரியனவாகும்.

இந்நூல் எழுதிவரும்போது உறுதுணை புரிந்த பரங்கிப் பேட்டை இராம. புருஷோத்தமன்; உடனிருந்து சலிக்காது படி எடுத்து உதவிய, தலைமைச் செயலக வருவாய்த்துறை அன்பர் எஸ். தனபால் இருவருக்கும் என் பாராட்டுதல்கள்.

எப்பொழுதும் குடும்பப் பொறுப்புகளை எல்லாம் தான் ஏற்று, எனக்கு எந்தவிதக் குடும்பக் கவலைகளும் இல்லாமல் ஒருமுகப்பட்டு முழு ஈடுபாட்டுடன் இந்நூற் களைப் படைக்கப் பிற்புலமாக விளங்கி வருகின்ற எனது

Koviloor Digital Library

வாழ்க்கைத் துணைநலம் திருமதி, இலட்சுமிமூர்த்தி அவர்களுக்கு என் அன்பும் ஆசியும்.

எனக்குப் பதினைந்து ஆண்டுப் பழக்கமுடைய - கேட்ட போதெல்லாம் கிடைத்தற்கரிய நூல்களை மனமுவந்து அளித்துவரும் 'பெரும் நூல் சேகரிப்பாளர்' நேமம் கோயில் புள்ளிகளில் ஒருவர் என் வணக்கத்திற்குரிய பெரியவர் கோட்டையூர் உயர்திரு. ரோஜா முத்தையா செட்டியார் அவர்களுக்கு என் நெஞ்சம் கலந்த நன்றி.

இந்நூல் படைக்க உள்ளத்தாலும் உடலாலும் உதவி வரும் அண்ணார் பேரா. மது.ச. விமலானந்தம் அவர்கள்; கிள்ளை ஜனாப்.சி.எஸ். பீரான்; சிந்தைக்கினிய சிதம்பரம் மயில்வாகனன் அவர்கள்; பள்ளத்தூர் கல்லூரி முதல்வர் பேரா.ஆர்.கற்பகம் அவர்கள்; எங்கள் துறை துணை இயக்குநர் திரு. கு. தாமோதரன் அவர்கள். உதவி இயக்குநர் ஜனாப்.அ.அப்துல் மஜீத் அவர்கள்; தொல் பொருள் அலுவலர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி; கல்வெட் டாய்வாளர் திரு.கோ. முத்துசாமி இவர்களுக்கெல்லாம் என் அன்பு கலந்த நன்றி.

எனக்குக் களப்பணியின் போது தங்க இடம் தந்து உதவிய பள்ளத்தூர் கல்லூரித் தாளாளர் உ.அ.பெரி.மு. அரு.அ. பத்மநாபன் செட்டியார்; வரைபடம் வரைந்து தவிய ஸ்தபதி திரு.வே. இராமன்; ஒளிப்படம் எடுத்து தவிய சிதம்பரம் பேலஸ் ஸ்டுடியோ உரிமையர்; மேல் அட்டை உருவாக்க உதவிய மணிவாசகர் சென்னை மேலாளர் இளவல் ஆர்.குருமூர்த்தி; மெய்ப்பு திருத்தி உதவிய புலவர் இரா.கணபதிஅய்யா; சிறப்பான முறையில் அச்சிட்டுத் தந்த கே.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் உரிமையாளர் திரு. சேரன் ஆகிய அனைவருக்கும் எனது நன்றி உரியது.

Koviloor Digital Library

என்னைச் செட்டி நாட்டுப் பகுதிகட்கு அறிமுகப் படுத்திய அறிஞர் பெருந்தகை 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசனார் ஆவார்கள்; செட்டிநாடு பற்றி எழுதத் தூண்டிய பெருமகனார் 'பயண இலக்கியப் பேராசிரியர்' அறிஞர் சோமலெ அவர்கள். இவ்விருவரையும் என்றும் என் இரு கண்களாக எண்ணி இதயம் நெகிழ்ந்து ஏத்தி வருகிறேன்.

ஒரு தைப் பூசத்திருநாளில் தொடங்கிய இந்நூற்பணி தொடர்ந்து வளர்ந்தேறி வந்து இந்தத் தைப்பூச நன்னாளில் நான்காவது நூல் மலர அருள் செய்த வள்ளல் பெருமானை உள்ளத்தில் வைத்து வணங்கி மகிழ்கிறேன்.

வாசக அன்பர்கட்கெல்லாம் என் இதய நன்றி.

சிதம்பரம்,
31.1.1991.

மா. சந்திரமூர்த்தி

Koviloor Digital Library

உள்ளே ...

Koviloor Digital Library

விநாயகர் வணக்கம்

"சீர்பொருந்துந் தென்னியமச் செயங்கொண்ட
சோழீசர் திருப்பேர் வாழ்த்தி
பார்பொருந்துங் குருவிருத்தப் பாமாலை
தனிலுகப் பழமைச் சொல்லை
யேர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப்
புவியிலுள்ளோ ரிசைந்து கேட்கக்
கார்பொருந்துந் துதிக்கரத்தான் வெயிலுகந்த
கணபதிதான் காப்புத் தானே"

பாடுவார் முத்தப்பர்
[செயங்கொண்டார் வழக்கம்]
-காப்புச்செய்யுள்

Koviloor Digital Library

1. வரலாற்றில் நேமம்

அமைவிடம்

நகரத்தார்களின் குலமரபுக் கோயில்கள் ஒன்பதில் நேமம் ஒன்றாகும். ஏனைய எட்டுக் கோயில்களான இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, வைரவன்கோயில், மாத்தூர், இரணியூர், சூரைக்குடி, பிள்ளையார்பட்டி, வேலன்குடி போல, நேமம் கோயிலும் தேவர் திருமகன் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

தேவர் திருமகன் மாவட்டத்தில் குன்றாப் புகழ்பெற்ற குமரன் தலமான குன்றக்குடிக்கு வடக்கே 2.கி.மீ. தொலைவில் கிழச்சிவல்பட்டி செல்லும் சாலையில் நேமம் என்னும் சிற்றூர் உள்ளது. திருப்பத்தூர் வட்டத்திலுள்ள இவ்வூர், திருப்பத்தூரிலிருந்து 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. காரைக்குடி ரயில் நிலையத்தலிருந்து 14 கி.மீ. தொலைவில் குன்றக்குடி வழியாக இவ்வூரை அடையலாம். திருப்பத்தூரிலிருந்தும் காரைக்குடியிலிருந்தும் நகரப் பேருந்துகள் மூலமாகவும் இவ்வூரை அடையலாம்.

ஊரும் பேரும்

பழமையும் பெருமையுமிக்க இத்தலம் 'நியமம்' என்ற பெயரிலே பண்டைய நாளில் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இத்தலத்திற்கு நந்திபுரம், மதுநதிபுரம், செயங்கொண்ட சோழபுரம், குலசேகரபுரம், என்ற வேறு பல பெயர்களும் உண்டு. நியமம் என்ற பண்டைய பெயரே, மக்கள் வழக்கில் நேமம் என்று மருவி வழங்கி வருகிறது.

Koviloor Digital Library

பன்நெடுங்காலமாக நியமம் என்ற சொல் தமிழ் இலக்கிய உலகில் ஆளப்பட்டு உள்ளது. பண்டைய இலக்கியங்களில் நியமம் என்னும் சொல் நகரம், கோயில் மண்டபம், ஒழுக்கம் என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பத்துப்பாட்டில் ஒன்றான மதுரைக்காஞ்சி நியமம் என்றால் நகரம் என்ற பொருளைத் தருகிறது. இதனை ஒவு கண்டன்ன இருபெரு நியமம், என மதுரைக் காஞ்சி கூறும். எனவே இதனைச் சங்க இலக்கியங்களில் பயின்றுவரும் பழமையான சொல்லாக அறிகிறோம். சங்ககாலத்தைச்சார்ந்த தமிழ் பிராமி கல்வெட்டிலும் இச் சொல்குறிக்கப்படுகிறது. சான்றாக 2000 – ஆண்டுகளுக்கு முற்பட்ட இக்கல்வெட்டில், 'வெள்ளறை நிகமது' என வெள்ளறை நிகமத்தாரை குறிக்கக்காண்கிறோம். இது வெள்ளறையைச் சார்ந்த (நகரத்தார்) வணிகக் குழுவைக் குறிக்கிறது. எனவே மாங்குளம் கல்வெட்டில் நிகமம் என்றசொல் வணிகக்குழு என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது என அறிகிறோம்.

கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் தஞ்சைப் பகுதியில் இருந்த முத்தரையர்கள் நியமம் என்ற ஊரில் கோயில் அமைத்துள்ளார்கள் என்பது வரலாற்றில் நாம் காணும் செய்தியாகும். அவ்வூர் நேமம் என்ற பெயரிலேயே இன்றும் வழங்கப் பெறுகிறது. தவிர கொங்கு நாட்டுப் பகுதியிலும் நிகமம் என்ற பெயரில் ஊர் இருந்து வருகிறது.

திவாகர நிகண்டில் நியமம் என்னும் சொல், 'வழிபாடு என்ற விதிமுறைகளில் வழுவாது ஒழுகல், என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது. நியமம் என்ற சொல் கோயில் என்ற பொருளையும் குறிக்கும். 'உவணச்சேவல் உயர்த்தோன் நியமமும்' எனச்சிலம்பிலும், 'சித்தா விளக்கின் செழுங்கலை நியமம், என்று மணி மேகலையிலும், 'கோயில்'

Koviloor Digital Library

என்ற பொருளில் 'நியமம்' என்னும் சொல்லாட்சி வருகிறது. தவிர மண்டபம் என்ற பொருளும் இதற்குண்டு. இதனை 'பட்டி நியமம்' எனப்பெருங்கதை குறிப்பிடுகிறது இவ்விதம் பல்வேறு பொருள்களில் நியமம் என்ற சொல் எடுத்தாளப்பட்டிருந்தாலும், வணிக நகரைக் குறிக்கவே பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு. எனவே, பண்டைய நாளில் வணிக மக்கள் வாழ்ந்த இந்நகர் நியமம் என்ற பெயரில் புகழுடன் விளங்கி வந்துள்ளதை அறிகிறோம். இவ்வூர் நிகமம் என்றாகி மக்கள் பேச்சு வழக்கில் நேமம் என மருவியுள்ளது.

செயங்கொண்ட சோழபுரம்

சோழ மாமன்னன் முதலாம் இராசராசனின் ஆட்சியில் (கி,பி.985 – கி.பி.1014), அவனது விருதுப்பெயர்களில் ஒன்றான'செயங் கொண்டான்' என்ற பெயர் இவ்வூருக்குச் சூட்டப்பட்டு, 'செயங் கொண்ட சோழபுரம்' என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. காலப்போக்கில், இப்பெயர் மறைந்தபோதிலும் அதன் எச்சமாக இன்றும் காரைக்குடியைச் சார்ந்த செக்காலை என்னும் பகுதிக்கு 'செயங்கொண்டபுரம்' என்ற பெயர்வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இன்றும் இப்பகுதியில் நகரத்தார் பெருவாரியாக வாழ்ந்து வருவதும், அவர்களில் நேமம் கோயிலைச் சார்ந்து வாழும் மக்கள் 'செயங்கொண்டான்' என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருவதும் எண்ணி மகிழத்தக்கதாகும்.

குலசேகரபுரம்

சோழர்களுக்குப் பின்பு இப்பகுதியைப் பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்து வந்துள்ளனர். அவர்களில் விக்கிரம பாண்டியன், மாறவர்மன் சுந்தரபாண்டியன்,

Koviloor Digital Library

வீரபாண்டியன், குலசேகரப்பாண்டியன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது ஆட்சியில் இப்பகுதி சிறப்புடன் விளங்கி வந்துள்ளது. இவர்களின் கல்வெட்டுக்கள் குன்றக்குடி, நேமம், ஆற்காடு, இரணியூர் ஆகிய பகுதிகளில் காணக்கிடக்கின்றன. இப்பாண்டிய மன்னர்களில் ஒருவரான மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் காலத்தில் 'நேமம்' என்ற இவ்வூர், குலசேகரபாண்டியபுரமாக மாறியது. குலசேகரப் பாண்டியனது விருதுப் பெயரான இராச கம்பிரன் என்னும் பெயரிலும் இப்பகுதியில் ஊர்கள் உள்ளன. எனவே, 12-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இப்பகுதி 'குலசேகரபுரம்' என அழைக்கப்பட்டு வந்துள்ளதை அறிகிறோம். பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்களில் இவ்வூர் 'கேரள சிங்க வளநாட்டு தேனாற்றுப் போக்கு நேமம்' என்றும், 'கேரள சிங்க வளநாட்டு நேமம் ஆகிய குலசேகரபுரம்' என்றும் குறிக்கப்பெறுகிறது.

மதுநதிபுரம்

நேமத்தைச் சார்ந்த ஆற்காடு என்னும் ஊர் பழமை மிக்கது. இவ்வூருக்குத் தென்புறம் பழைய நேமம் என்னும் சிற்றூர் உளது. ஆற்காட்டிலிருந்து உற்பத்தியாகும் தேனாறும் வரலாற்றுப் புகழ்மிக்கது. இது புராணங்களில் 'மதுநதி' எனக்குறிக்கப்படுகிறது. ஆற்றங்கரையை ஒட்டி சிவபெருமானுக்கு எடுக்கப்பட்ட ஆலயம் ஒன்று 'மதுநதீசுவரர்' என்ற பெயரில் இருந்து வருகிறது. இது அகத்திய முனிவர் வழிபட்ட தலம் ஆகும். இவ்வாற்றுப் பாசனம் பண்டைய நாளில் நேமம் நாட்டை வளப்படுத்தியதாகக் குன்றக்குடி கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அதனையைச் சேர்ந்த நேமம் நாடு 64 ஊர்களைக் கொண்ட பரந்த பகுதியாக விளங்கியதை செப்பேடுகள் செப்புகின்றன. பாண்டியர் கல்வெட்டுக்களில் இப்பகுதி 'கேரள சிங்க

Koviloor Digital Library

வளநாட்டு தேனாற்றுப் போக்கு நேமம்' என்று குறிக்கப் படுகிறது. தேனாற்றுப் போக்கில் அமைந்த ஊராதலின் நேமத்திற்கு 'மதுநதிபுரம்' என்ற பெயர் வழங்கிற்று.

தொன்மைச் சிறப்பு

நேமம் 1800-ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மைச் சிறப்பு வாய்ந்த ஊராகும். இவ்வூருக்கு இரண்டு கி.மீ. தூரத்தில் உள்ள குன்றக்குடி மலையில் சங்க காலத்தைச் சார்ந்த தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் உள்ளன. இக் கல்வெட்டுகள் சங்க காலத்தில் வாழ்ந்த 'ஆதன் சாத்தன்' என்பவனைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. சற்றேறக்குறைய இதே காலத்தைச் சேர்ந்த முது மக்கள் தாழிகள் சிலவும், மண்பாண்டங்கள் பலவும் நேமம் பகுதியில் காணக்கிடைத் துள்ளன. இத்தடயங்கள் கிடைக்கும் பகுதி 'கோட்டை மேடு' என இன்றும் வழங்கப்படுகிறது. இங்கு ஒரு சிறந்த கோட்டை இருந்திருக்க வேண்டும். இடிந்த மதிற்சுவர்களும் உயர்ந்த மேடுகளும் இங்கே சிதைந்து காணப்படுகின்றன. இன்றைய நேமத்தின் மேற்கேயுள்ள இப்பகுதியில் 1800-ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்து வந்துள்ளார் கள் என அறியமுடிகிறது.

நேமன் கோட்டை

கோட்டை மேடு என்னும் பகுதி சங்ககாலம் தொடங்கி வரலாற்றுச் சிறப்புடையதாக இருந்து வந்துள் ளது. இப்பகுதியில் நேமராசன், கண்டன் உதயஞ் செய் தான் ஆகியோரது கோட்டை இருந்ததாகச் செவிவழிச் செய்தி கூறுகிறது. நேமன் என்பவன் பொன்னமரா வதியை ஆண்ட பொன்னன். அமரனுடன் பிறந்தவன் என்றும் "நேமன் கோட்டையோ ஏமன் கோட்டையோ?" என்று நாட்டார் வியக்கும் வண்ணம் கோட்டை கட்டி

Koviloor Digital Library

ஆண்டான் என்றும், முடிவில் இவன் தம் சகோதரர்களு டனேயே சௌந்தரபாண்டியனால் கொல்லப்பட்டான் என்றும் செவிவழிச்செய்தியால் அறிகிறோம்.

மேலேசுவரம்

இப்பகுதியில் மேலேசுவரம் என்ற பழமையான சிவாலயமும், பழையாத்தங்குடிப் பகுதியில் மற்றொரு சிவாலயமும், பெருமாள் கோயிலும் இருந்து அழிந்திருப் பதற்கான தடயங்கள் காணக்கிடைக்கின்றன. மேலேசுவ ரத்திலிருந்த சிவலிங்கத்தை 'மேலேசுவரர்' என்ற பெயரில் நேமம் கோயிலில் இன்றும் காணலாம். அவ்வாறு பழையாத்தங்குடியில் புதையலாகக் கிடைத்த சக்கரத் தாழ்வார், திருமாலின் தேவியரில் ஒருவரான திருமகள் ஆகிய செப்புச்சிலைகளையும் நேமம் கோயிலில் காணலாம். அப்பகுதியிலிருந்த பழைய திருமால் சிலை ஒன்று அண்மை யில் அகற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவற்றைக் கொண்டு அப்பகுதியில் பாண்டியர்காலச் சிவாலயமும், விண்ணகரமும் 700-ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்க வேண்டும் என்பதை அறியலாம்.

தலச்சிறப்பு

'என்றுமுள தென்றமிழை இயம்பி இசை கொண்டவ' ராகிய அகத்திய முனிவர் ஒருசமயம் தேவலோகத்தில் நடந்து போய்க்கொண்டிருந்தார். திடீரென்று அவரு டைய பாதையில் ஏதோஒருதடை ஏற்பட்டு, வழிமறைக் கவே அவரால் மேற்கொண்டு ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அப்போது அவர் சிந்தையைக் கவர்ந்திருந் தது ஒரு சீர்மிகு சோலை. அந்தச் சோலையை நோக்கி பூமிக்கு வந்த குருமுனி, அங்கே சிவபெருமானின் வடிவ மொன்றை அமைத்தார். பின்னர், அத்திருவுருவத்தைத்

Koviloor Digital Library

தேனில் முழுக்காட்டி, மாலை சாத்தினார். ஆனால், மாலை இறைவனின் திருமுடி மீது நிற்காமல் தேனாகப் பெருகி ஓடிற்று. தேனாற்றில் மூழ்கிய அகத்தியர் இறைவனின் திருவிளையாடலை எண்ணி எண்ணி இன்பமடைந்தார். பிறகு, அங்கிருந்து தெற்கு நோக்கிச் சென்ற அகத்திய முனிவர் வழியில் ஓரிடத்தில் தெரிந்த மாணிக்கப் பேரொளியினைக் கண்டு மனமகிழ்ந்து, "எம்பெருமானே நீ எங்கே இருக்கிறாய்? அடியவனுக்குச் சொல்லி அருள் புரிய வேண்டும்!" என்று சிரந்தாழ்ந்திக் கரங்கூப்பிப் பணிவுடன் வேண்டிக்கொண்டார். அப்பொழுது எங்கிருந்தோ ஒரு குரல் ஒலித்தது; "மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய் ஒண்சுடராய்" எங்கும் சிவபெருமானின் திருப்புதல்வன் நான்; மாணிக்கக் கணபதி என்று என்னை அழைப்பார்கள். முக்கியமான ஒரு செய்தி, பொன், வெள்ளி, இரும்பு என்னும் உலோகங்களால் ஆன மூன்று, கோட்டைகளில் தாரகாட்சன், வித்யுன்மாலி, கமலாட்சன் என்ற மூன்று அசுரர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தாம் நினைத்த நினைத்த நேரமெல்லாம் அந்த கோட்டைகளுடன் பறந்து சென்று, தேவர்களுக்கும் மக்களுக்கும் எண்ணற்ற இன்னல்களை இழைத்து வந்தனர். தேவர்களும், மக்களும் அந்த அரக்கர்களின் தொல்லை பொறுக்க முடியாமல் என் தந்தையாகிய சிவபிரானிடம் வந்து வேண்டினர்.

"அசுரர்களைக் கொன்றழிக்க விழைந்த என் தந்தையார், மேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், திருமாலை அம்பாகவும், அக்கினி தேவனை அந்த அம்பின் கூராகவும் கொண்டு இந்த இடத்திற்குப் போர் புரிய வந்தபோது உண்மையாகவே போர் செய்யவில்லை. புன்மைக் குணம் கொண்ட அரக்கர்களைக் கண்டு புன்னகை புரிந்தார். அத் திரிபுரம் எரிந்து

Koviloor Digital Library

ஒழிந்தது. இங்கு சிரித்தே செயங்கொண்டார் சிவபெருமான். எனவே, அந்தத் திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுளை இந்த இடத்தில் வணங்கி மேற்கதி பெறுவீர்களாக!" என்ற மொழிகள் தெளிவாகக் கேட்டன. இதைச் செவியுற்ற அகத்தியரும், தேவர்களும், முனிவர்களும், மக்களும், செயங்கொண்டாருக்கு இங்கே கோயில் எழுப்பி வழிபட்டு வரலாயினர். இது இக் கோயிலைப் பற்றி வழங்கும் தலபுராணத்தினால் அறியப்படுவதாகும்.

நேமம் கல்வெட்டுகள்

நேமம் கோயிலில் விக்கிரம பாண்டியன், சுந்தர பாண்டியன், குலசேகர பாண்டியன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் இருந்துள்ளன. பழைய சிவன் கோயிலைத்திருப்பணி செய்தபோது, அவை சிதைந்தும், இடம் மாறியும் ஊரைச் சுற்றிலும் காணக் கிடைக்கின்றன. அழகு நாச்சியம்மன் கோயிலிலும், சேவகப் பெருமாள், அய்யனார் கோயிலிலும் அவற்றை இன்றும் காணலாம்.

கல்வெட்டில் இறைவன் – இறைவி

பாண்டியர் கல்வெட்டுக்களில் 'கேரளசிங்க வளநாட்டு அதளையூர் நாட்டு தேவாற்று உடையார் செயங்கொண்ட சோழீசுவரர்' என இறைவனது பெயர் குறிக்கப்படுகிறது. மற்றொரு கல்வெட்டு இத்தலத்து இறைவனைக் 'கேரள சிங்க வளநாட்டு நியமத்து உடையார்' எனக் குறிக்கிறது. பாண்டியர் கல்வெட்டுகளில் இக்கோயில் 'செயங்கொண்ட சோழீசுவரமுடைய நாயனார் கோயில்' எனக் குறிக்கக் காண்கிறோம். மேலும், இத்தலத்து இறைவி 'திருகாம கோட்ட நாச்சியார்' என அழைக்கப்பட்டு வந்துள்ளதைக் கல்வெட்டு வாயிலாக அறிகிறோம். திரு காம கோட்ட நாச்சியாருக்குத் திருவமுது படைக்கக்கொடையளித்ததை

Koviloor Digital Library

இக்கல்வெட்டு விரிவாகக் குறிக்கிறது. மாறவர்மன் சுந்தர பாண்டியனது 15-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி.1231) இக் கல்வெட்டு குறிக்கப் பெற்றுள்ளதால் தற்போது சிவன் கோயிலில் உள்ள அம்மனது பழைய சிலை கி.பி.1231-க்கு முற்பட்டது என்பதை அறிகிறோம். எனவே, கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இக்கோயிலும் அம்மனது சன்னதியும் புகழோடு விளங்கி வந்ததை இக்கல் வெட்டுகள் உறுதி செய்கின்றன.

கல்வெட்டில் அதிகாரிகள்

பாண்டியர் கல்வெட்டுக்களில் இந்நேமத்தைச் சேர்ந்த நியமத்துக் கண்டன் உதயஞ் செய்தான் என்பான் குறிக் கப்படுகிறான். இவன் இவ்வூரைச் சார்ந்த அதிகாரியா வான். மேலும், காங்கேயன் செயங்கொண்ட[1] சோழன் என்றும் மற்றொரு அதிகாரியும் குறிக்கப்படுகிறான். இவர் கள் இருவரும் சோணாடு வழங்கி அருளிய சுந்தர பாண்டி யனது 11-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிக்கக் காண்கிறோம்.

செப்பேடு வழங்கும் செய்திகள்

நேமத்தில் வரலாற்றுச் சிறப்புடைய செப்பேடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்செப்பேடு தற்போது, நேமம் நாட்டுச் சேர்வையான ஆற்காடு குழ. சுப்பையா சேர்வை அவர்களிடம் உள்ளது. இது மதுரை நாயக்கர் பேரரசு காலத்தியது. இதன் காலம் கி.பி. 1758 என்பதால் அரசன் பெயர் குறிக்கப்படவில்லை. சாலிவாகன சகாப்தம் எனத் தொடங்கும் இச்செப்பேடு இதற்கு அடியழும்பு செய் கிறவர்கள் இராமேசுவரத்திலே ஏழு காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போகக்கடவது என முடிகிறது.

கி.பி. 1758-ல் மூவேந்திரராயர், விருப்பாச்சிராயர், பவுத்திரராயர் ஆகியோர் தம் சீமைக் குடியில்லாமல் சலியாதகண்டன், தளவாய் முத்துசாமி சேர்வை,

Koviloor Digital Library

உள்ளிட்டாரைக் கையோடு கூட்டிவந்து அதளை நாடு 64 கிராமங்களில் உள்ள ஆற்காடு முழுவதும், நேமம் முழுவதும், ஆத்தங்குடி முழுவதும், தளவான்குடி முழுவதும், வெளுவூர் முழுவதும், குன்றக்குடிமுழுவதும், சிறுவயல் முழுவதும், பாதரக்குடி முழுவதும், சூரக்குடி முழுவதும் இதற்கு உட்பட்ட உட்கடை கிராமங்களில் உள்ள கோயில்களங்களில் முதல் மரியாதை திருவிழாக்களில் முன்துப்பட்டிப்போட்டு மரியாதை செய்வித்ததைக் குறிக்கிறது. இவ்வகையினர் நேமம்,குன்றக்குடி ஆகிய கோயில்கள் அவைத்திலும் இம்மரியாதையை இன்றும் பெற்று வருகின்றனர். இத் தாமிர சாசனம் பவுத்திரராயர் உள்ளிட்டார் சம்மதித்து, மூவேந்தர் வேளாளர் கைப்பட வெட்டினது என்றும், இதற்குக்கல்வெட்டு நேமம் கோயில் திருமஞ்சன மண்டபம் தெற்குச்சுவரிலும், கோம்பமலையிலும் வெட்டப்பட்டுள்ளது என்றும் பட்டயம் குறிக்கிறது.

இச்செப்பேட்டின் காலம் சாலிவாகன சகாப்தம் 1680; இதற்கு இணையான ஆங்கில ஆண்டு கி.பி. 1758; தமிழ் ஆண்டு-ருத்ரோகாரி வருடம், வைகாசி மாதம் 15-ஆம் தேதியாகும். இப்பட்டயம் இன்றைக்குச் சரியாக 233 ஆண்டுக்கு முற்பட்டது எனலாம். அதளை நாட்டைச் சேர்ந்த 64 கிராமங்களில் ஆற்காடு, நேமம், தளவான்குடி வெளுவூர், குன்றக்குடி, சிறுவயல், பாதரக்குடி, சூரக்குடி ஆகிய ஊர்கள் முழுவதும் முக்கிய ஊராக விளங்கியதை அறிகிறோம்.

நேமம் பற்றி நவிலும் நல்லிலக்கியங்கள்

புகழ் பூத்த இவ்வூரைப்பற்றிப் பல்வேறு சிற்றிலக்கியங்களில் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. பெரும்புலவராக விளங்கிய பாடுவார் முத்தப்பர் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது செயங்கொண்டார் பிள்ளைத்தமிழ், செயங்கொண்டார் சதகம், செயங்கொண்டார் பதிற்றுப்·

Koviloor Digital Library

பத்தந்தாதி, ஊசல் மற்றும் பல பிரபந்தங்கள் இயற்றி யுள்ளார்.

'சீர் பொருந்தும் தென் நேமம்',
'தருவை நிகர் தென் நேமம்',
'வயங்கு புகழ் நேமம்',
'களைப்பாற்றும் நன் நேமம்',
'வாவி திகழ் தென் நேமம்'

என்றெல்லாம் புலவர் பெருமக்களின் புகழ் மொழிகளைப் பெற்ற தலம் இது. இவ்வூர் இறைவனையும் மற்றும் வணிக மண்டல சதகம், தனவணிகர் தாலாட்டு, வணிகர் தசாங்கம், இளசைப் புராணம், மாற்றூர்ப் புராணம், வைரவன் கோயில் புராணம், சூரக்குடிபுராணம், இலுப்பைக்குடி புராணம் போன்ற சிற்றிலக்கியங்களில் குறிக்கக் காண்கிறோம். இவை அனைத்திலும் நியமம் என்ற பெயரே வழங்கப் பெறுகிறது.

என்ன செயங்கொண்டார்?

என்ன செயங்கொண்டார் இவர் என இத்தலத்து இறைவனைப் பற்றி ஊனையூர்ப் பாரதியார் கேட்ட கேள்விக்குப் பாடுவார் முத்தப்பர் பாடிய பாடல் கேட்டு இன்புறத்தக்கது.

ஓங்கு பத்மா சூரனைக் கண்(டு) ஓடி ஒளிந்தார் விசயன்
வாங்கு தனுவால் பூசைவாங்கினார்-ஈங்(கு) இருக்கும்
நன் நியமச் சோழீசனார் செயங்கொண்டார் என்றால்
என்ன செயங்கொண்டார் இவர்?"

—ஊனையூர்ப் பாரதியார் கேள்வி

விடை யாக, முத்தப்பர் பாடிய பாடல்:

என்ன செயங்கொண்டார் இவர்? என்றான் முப்புரத்தைச்
சொ(ர்)ன்ன மயமாய்ச் சமைத்த சோழீசர்-பின்னும்
சிரித்துச் செயங்கொண்டார்; சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண்டார் இவர்"

Koviloor Digital Library


செயங்கொண்டார் வழக்கம்

செயங்கொண்டார் வழக்கம் என்ற இந்நூல் நியமத்தைச் சேர்ந்த அழகப்பச் செட்டியார் மகன் முத்தப்ப செட்டியார் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடியதாகும். பழமொழி, தண்டலையார் சதகம் போல் இது பழமொழிகளைக் கொண்டு நூறு பாடல்களால் ஆனது. சாத்திரம், ஆகமம், புராணம் முதலியவற்றில் புலமை மிக்கவர் முத்தப்பர். இவர் சுப்பிரமணிய பண்டாரம் கேட்டதற்கு இணங்க இந்நூலைப் பாடினார். திருமுக விலாசம், திவ்விய தேச யாத்திரியர் சரித்திரமும் இவர் பாடினார். இவர் தம் நூலில் இத்தலத்து இறைவனைத் தென்னிமய செயங்கொண்ட சோழீசர் என்று அடிக்கடிக் குறிப்பிடுகிறார். மற்றும் 'மழுவேந்தும் கரதலத்தூர் செயங்கொண்டார்', 'மானணியும் கரத்தார்', 'மேருவை வில்லாய் வளைத்த சௌந்திரியப்பாகர்' 'வெண்ணிலவைச் சடையில் வைத்த செயங்கொண்டார்', 'தண்டமிழ்க்கருள் புரியும் செயங்கொண்டார்'. என நேமம் செயங்கொண்ட சோழீசுவரரை புகழ்ந்தேத்துகிறார்.

பிற சிறப்புகள்


இயற்கையான சூழலில் அமைந்துள்ள இக்கோயில் கேரளசிங்க வளநாட்டு நேமமாகிய குலசேகரபுரத்தில் தேனாறு பாயும் இளநல உடையார் என்னும் நேமம் கோயில் நகரத்தாரால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பண்டைநாளில் ஆறு லட்ச ரூபாய் செலவில் இக்கோயிலைப் புதுப்பித்து அழகிய நாச்சியம்மன் கோயில், பிள்ளையார் கோயில், பசுமடம், நந்தவனம் முதலியன புதியனாகக்கட்டி 1907-ஆம் ஆண்டில் மகாகும்பாபிசேகம் செய்திருக்கிறார்கள். அதன்பிறகு 5.2.1961 அன்றும் 3.2.1991 அன்றும் கும்பாபிசேகம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

Koviloor Digital Library



நேமம் கோயிலின் புறச்சுவர் அதிட்டான அமைப்பு

Koviloor Digital Library




நேமம், செயங்கொண்ட சோழீசுவரர் திருக்கோயிலின் வரைபடம்

Koviloor Digital Library

நேமம், செயங்கொண்ட சோழீசுவரர் திருக்கோயிலின் வரைபட விளக்கம்

1. சுவாமி கருவறை
2. இடைநாழி
3. அர்த்த மண்டபம்
4. மகா மண்டபம்
5. நடராசர் சபை
6. பள்ளியறை
7. சௌந்தரநாயகி அம்மன் சன்னதி
8. தனி அம்மை
9. தட்சிணாமூர்த்திகொரடு
10. சண்டிகேசுவரர்
11. பைரவர்
12. நந்தி
13. பீடம்
14. கொடிமரம்
15. திருச்சுற்று
16. சூரியன்
17. திருமாலைக்கட்டுமேடை
18. சந்தனம் அறைக்கும் மேடை
19. கருவூலம்
20. அம்மன்கோபுரம்
21. வெஞ்சன அறை
22. நால்வர் மேடை
23. கன்னிமூலை விநாயகர்
24. சோமாசுகந்தர்
25. மேலேசுவரர்
26. செயங்கொண்ட விநாயகர்
27. விசுவநாதர்-விசாலாட்சி
28. சுப்பிரமணியர்
29. நேமம் காளி · உட்பீடம்
30. கஜ லட்சுமி
31. வாகன அறை
32. அய்யனார்
33. நெற்களஞ்சியம்
34. நவக்கிரக மண்டலம்
35. சந்திரன்
36. சுவாமிகோபுரம்
37. இரண்டாம் திருச்சுற்று
38. மடைப் பள்ளி
39. அம்மன் பெரியகோபுரம்
40. கிணறு
41. பசுமடம்
42. அலங்கார மண்டபம்
43. இராசகோபுரம்
44. நேமம்காளி வெளிபீடம்

Koviloor Digital Library



சுவாமி விமானத் தோற்றம்,
செயங்கொண்ட சோழீசுவரர் கோயில், நேமம்,
நகரத்தார் கலைப்பணி.

Koviloor Digital Library

2. கட்டடக்கலை

நேமம் கோயில் அமைப்பு

இக்கோயில் நேமம் கிராமத்தில் வடமேற்குத்திசையில் கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் கருவறை, இடைநாழி, அர்த்த மண்டபம், மகா மண்டபம், முன் மண்டபம், திருச்சுற்று, திருச்சுற்று மேல்பத்தி, திருச்சுற்று மாளிகைப்பத்தி, நடராசர்சபை, பள்ளியறை, அம்மன்சன்னதி, நந்தி, பீடம், கொடிமரம், வெஞ்சன அறை, வாகன அறை, சுவாமி கோபுரம், அம்மன் கோபுரம், ராஜ கோபுரம், ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. விநாயகர், சுப்பிரமணியர், கஜலட்சுமி, சண்டிகேசுவரர், பைரவர், சூரியன், சந்திரன் ஆகிய பரிவார தெய்வங்களுக்கு இக்கோயிலில் தனித்தனியாகச் சிற்றாலயங்களும், சன்னதிகளும், மேடைகளும், அமைக்கப் பட்டுள்ளன.

இக்கோயில் மகாமண்டபத்தின் வட திசையில், நடராசர் சபை தென்திசை நோக்கி அமைந்துள்ளது. முக மண்டபத்தின் வடபுறம் பள்ளியறையும் அம்மன் சன்னதியும் தனித்தனியாகத் தென்திசைநோக்கி அமைந்துள்ளன. பள்ளியறையைப் ஒட்டி பின்புறம் பைரவர் சன்னதி மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையின் வடபுறம் சண்டிகேசுவரர் சன்னதி தென்திசையை நோக்கியுள்ளது. இவ்வாறு மேற்குறித்த நான்கு சன்னதிகளும், இக்கோயில் திருச்சுற்று மேல் பத்தியில் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் கீழ்த்திசையில் உள்ள திருச்சுற்று மாளிகைப் பத்தியில் வடக்கிலிருந்து தெற்காக, நெற்களஞ்சியம், நவக்கிரக மேடை, சந்திரன், சூரியன் ஆகிய பரிவார தெய்வங்களுக்கான மேடை, திருமாலை கட்டும் மேடை, சந்தனம் உறைக்கும் மேடை, கருவூலம் ஆகிய

Koviloor Digital Library

பகுதிகள் உள்ளன. திருச்சுற்று மாளிகைப் பத்தியின் தென் திசையில் அம்மன் கோபுரத்தை ஒட்டி, வெஞ்சன அறை உள்ளது. வெஞ்சன அறையை ஒட்டி அப்பர், ஞான சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் ஆகிய நாயன்மார் களுக்கான உருவங்கள் மேடைமீது அமைக்கப்பட்டுள்ளன. திருச்சுற்று மாளிகைப் பத்தியின் மேற்றிசையில் தெற்கி லிருந்து வடக்காக கன்னி மூலை கணபதி, சோமாஸ் கந்தர் சன்னதி, மேலேஸ்வரர், மேற்படி அம்மன், ஜெயங் கொண்ட விநாயகர், விஸ்வநாதர், துர்க்கையம்மன், சுப்பிரமணியர், நேமம்காளி, கஜலட்சுமி ஆகிய தெய்வங் களுக்கான சன்னதிகளும், அறைகளும் அமைக்கப்பட்டுள் ளன. திருச்சுற்று மாளிகைப்பத்தியின் வடக்குப் பிரகாரத் தில், கோயில் வாகனங்களுக்கான வாகன அறையைக் காணலாம். அதனையடுத்து, அய்யனார், பூரணி, புஷ்கலை ஆகிய கிராம 'தெய்வங்களின் கற்சிலைகள் காணப்படு கின்றன.

அம்மன் சன்னதிக்கெதிரே, முதல்பிரகாரத்தை ஒட்டி திருச்சுற்று மாளிகை மதிலின் தென் திசையில் மூன்று நிலைகளையுடைய சிறிய அம்மன் கோபுரமும், அதனை யடுத்து, இரண்டாம் பிரகாரத்தின் தென் திசையில் ஐந்து நிலைகளையுடைய பெரிய அம்மன் கோபுரமும் அமைந் துள்ளன. சுவாமிசன்னதியின் எதிரே முகமண்டபத்தின்முன் புறம், கிழ்த்திசை வாயிலில் மூன்று நிலைகளைக் கொண்ட சுவாமி கோபுரமும், இரண்டாம் பிரகாரத்தின் திருமதிலை ஒட்டி ஐந்து நிலைகளைக் கொண்ட இராஜ கோபுரமும் கிழ்த்திசை வாயிலாக அமைந்து விளங்குகின்றன. இரண்டாம் பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் மடைப் பள்ளியும், அம்மன் கோபுரத்தை அடுத்து பசுமடமும், மேற்குப்பிரகாரத்தை ஒட்டி நேமம் காளிபீடமும், வட திசையில் அலங்கார மண்டபமும் அமைந்துள்ளன.

Koviloor Digital Library

மேலும், அம்மன் கோபுரத்திற்கு எதிரேயுள்ள வெளிப் பிரகாரத்தில், தென்திசையில் இக்கோயில் திருக்குளமான சோழா ஊருணியும், அதன் வடகரையில் ஊருணி விநாயகர் ஆலயமும் அமைந்துள்ளன. இராஜகோபுரத்தின் எதிரே உள்ள வளாகத்தில் சென்ற நூற்றாண்டில் கட்டப் பட்ட பழைய நகர விடுதியும், அண்மையில் விரிவுபடுத்தி நவீனமாகக் கட்டப்பட்ட புதிய விடுதியும் இணைந்த நிலையில் அமைந்துள்ளன. விடுதியின் கீழ்த்திசையில் பழைய செட்டி ஊருணி அமைந்து காணப்படுகிறது.

ஜெயங்கொண்ட சோழீஸ்வரர்

நேமம் ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் கோயில் கிழக்கு நோக்கிய சன்னதியை உடையது. இதன் கருவறை சதுர வடிவுடையது. கருவறையின் வெளிப்பக்களவு, 4.38 மீட்டர் உள் பக்களவு 2.75 மீட்டர் ஆகும். கருவறையின் நடுவே வட்ட வடிவான ஆவுடையார் மீது அமைந்துள்ள லிங்கம் ஜெயங் கொண்ட சோழீஸ்வரர் என்ற பெயரில் வழிபாட்டில் உள்ளது. இக்கோயில் கருவறை நிலைவாயி லின் இருபக்கங்களிலும் சட்டத் தலையுடன் எளிமையான அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன.

இத்திருக்கோயிலின் கருவறையைச் சுற்றியுள்ள புறச் சுவர்கள், கட்டட வேலைப்பாடுமிக்கனவாயும், சிற்பநுணுக் கங்களைக் கொண்டும், சிற்ப இலக்கணங்களைத் தழுவியும் அமைக்கப்பட்டுள்ளன. கருவறையின் உபபீடம், கூரையின் மேல்பட்டம்வரை வெள்ளைக்கல் கொண்டு கட்டப்பட் டுள்ளது. அவ்வாறு அர்த்த மண்டபம், மகாமண்டபம், முன்மண்டபம் போன்ற பகுதிகளும் அதைச் சார்ந்துள்ள அறைகளும், தூண்களும், சன்னதிகளும், மாளிகைப்பத்தி யும் வெள்ளைக்கல்லால் கட்டப்பட்டு விளங்குகின்றன. இக் கற்கள் யாவும் நேமத்தைச்சுற்றியுள்ள வைரவன்பட்டி,

Koviloor Digital Library

திருமயம், தென்கரை, குன்றக்குடி ஆகிய பகுதியிலுள்ள மலைகளிலிருந்து கொண்டு வரப்பட்டவை.

விமானம்

இக்கோயில் விமானம் கீழ்க்கண்ட

1. உபபீடம் (துணைபீடம்)
2. அதிட்டானம் (பீடம்)
3. சுவர் (கால்)
4. பிரஸ்தரம் (கூரை)
5. கிரிவம் (கழுத்து)
6. சிகரம் (தலை)
7. ஸ்தூபி (குடம்)

ஆகிய ஏழு பகுதிகளைக் கொண்டுள்ள அமைப்போடு கவினுறக் கட்டப்பட்டு கம்பிரமாகத் திகழ்கிறது. விமானத்தின் ஒவ்வவாரு பகுதியும் பல நுணுக்கமான அங்கங்களையும் வரிகளையும் அளவோடு பெற்றுத் திகழ்கின்றன.

உபபீடம்

உபபீடம் என்னும் பகுதி உபானம், கண்டம், கபோதகம் என மூன்று வரிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உபான வரியில் உபானம், பத்மம், கம்பு என்ற சிற்றுறுப்புகளும், கண்டப்பகுதியில் பாதக் கால்களை உடையதாகவும், கபோதகவரியில் கபோதகம், யாளிவரியை உடையதாயும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இங்கு யாளி உருவங்கள் சித்திரிக்கப்படாமல் எளிமையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. கபோதகத்தின் கிழ் உள்ள கண்டப்பகுதியில் காணும் பாதக்கால்களுக்கு மேலே கூடுகள் எளிமையாக சிம்ம முகத்துடன் சித்திரிக்கப்பட்டுள்ளன. இங்கு உபபீடத்தின் மூன்று உறுப்புகளையும், ஒரே கல்லில் செய்து ஆங்காங்கே இணைத்துள்ளனர்.

Koviloor Digital Library

அதிட்டானம்

இக்கோயில் அதிட்டானம் முறையே உபானம், ஜகதி, குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய அங்கங்களைக் கொண்டுள்ளது. இப்பெரிய அங்கங்களில் பல சிற்றுறுப்புகள் அடங்கியுள்ளன. எடுத்துக்காட்டாக உபானவரி உபானம், மகாபத்மம், கம்பு ஆகிய சிற்றுறுப்புகளைக் கொண்டுள்ளது. மகாபத்மம் அமைப்பில் விரிந்த பத்மமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அதன் கோடியில் நாகபந்தம் மகாபத்மத்தின் இதழைத் தாங்கியவாறு உள்ள அமைப்பு காணத்தக்கது. அவ்வாறு ஜகதிவரி ஜகதி, பத்மம் ஆகிய சிற்றுறுப்புகளை எளிமையாகக் கொண்டுள்ளது. அதன் மேலுள்ள குமுதகவரி கம்பு, பத்மம் மற்றும் பதினாறு பட்டைகளையுடைய குமுதமும், அதன்மேல் பத்மம், கம்பு ஆகிய சிற்றுறுப்புக்களோடும் திகழ்கிறது.

குமுதகவரியில் உள்ள குமுதம் வட்டவடிவாகவோ, முப்பட்டை வடிவாகவோ, எண்பட்டை வடிவாகவோ அமையாமல், இங்கு பதினாறு பட்டைகளைக் கொண்ட ஷட்கோண வடிவில் அமைந்துள்ளது. இக்குமுதகத்தின் மேலும் கீழும் கம்பை ஒட்டி, பத்ம இதழ்கள் படர்ந்த நிலையில் விரிந்து வனப்பூட்டுகின்றன. கண்டவரி சிற்பங்களின்றி மிகவும் எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது. பட்டிகை வரியானது கம்பு, பத்மம், மகா பட்டிகை, பத்மம் கம்பு ஆகிய சிற்றுறுப்புகளைக் கொண்டது. மகாபட்டிகை இங்கு எளிமையாகக் காட்டப்பட்டிருப்பினும், அதன் மேலும் கீழும் இதழ் விரிந்துள்ள பத்ம உறுப்புகள் பாங்குற அமைந்துஅழகு செய்கின்றன.

அதிட்டானத்தை இரு பகுதியாகப் பிரித்து உபானம் முதல் ஜகதியின் மேலுள்ள பத்மம் வரை ஒரு பகுதியாகவும், அதற்கு மேலுள்ள குமுதம் முதல் மகாபட்டிகை வரை மற்றொரு பகுதியாகவும் ஆக இரு பகுதிகளாகத்

Koviloor Digital Library

தனித்தனி பெருங்கற்களைக் கொண்டு மயிரிழை இணைப்பில் பொருத்தியுள்ள பாங்கு வியந்து போற்றத்தக்கது. இதை நகரத்தார்கால கட்டடக்கலைப்பாணியில் குறிப்பிடத்தக்க அம்சமாகக் கருதலாம். இவ்வகையில் இக் கோயில் அதிட்டானத்தை எழிலாகவும், திறம்படவும் எழுப்பியுள்ளனர். இவ்வகை அதிட்டானத்தை 'அம்போஜ கேசரம்' என்றும், புஷ்ப புஷ்கலம் என்றும் சிற்ப நூல்கள் குறிப்பிடுகின்றன. இவ்வதிட்டானம் பாத பந்த அதிட்டான வகையைச் சேர்ந்ததாகும். இது பிரதி பந்த அதிட்டானம் என்னும் பிறிதொரு வகை அதிட்டான அமைப்பிலிருந்து, வேறுபட்டுத்திகழ்கிறது. நேமம் கோயில் அதிட்டான மானது ஏனைய நகரக் கோயில்களான இலுப்பைக்குடி, மாத்தூர், பிள்ளையார்பட்டி ஆகிய கோயில் அதிட்டானத்தைப் போன்ற ஒத்த அமைப்புடையது.

முகபத்திரமும வர்க்கபேதமும்

கருவறையின் புறச்சுவரில் உள்ள அதிட்டானம் மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் மையப்பகுதி முன்னோக்கிப் பிதுங்கிய நிலையிலும், ஏனையபகுதி சற்று அதற்கு உள்ளடங்கிய நிலையிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் முன்னோக்கியுள்ள பிதுங்கிய பகுதியே முகபத்திரம் ஆகும். இது பக்கங்களில் உள்ள அதிட்டான அமைப்பிலிருந்து, மேலும் வேலைப்பாடு மிக்கதாகவும், நுட்பமானதாகவும், அலங்காரமிக்கதாகவும் காணப்படுகிறது. இவ்விதம் அதிட்டானத்தின் உள்ளடங்கிய பகுதியின் அமைப்பிலிருந்தும், அங்கங்களிலிருந்தும் முற்றிலும் மாறுபட்டவகையில் தோற்றமளிக்கும் அமைப்பினை 'வர்க்க பேதம்' எனச் சிற்ப நூல்கள் கூறும். சான்றாக, நேமம் கோயில் அதிட்டானத்தின் முகபத்திரப் பகுதியிலுள்ள உபானவரியை உபானம், பத்மம் கம்பு, கண்டம், கம்பு, கபோதகம், யாளம், வாஜனம் ஆகிய

Koviloor Digital Library

சிற்றுறுப்புகளாகச் சித்திரித்துள்ளனர். இதில் பத்ம வரி சிற்றுறுப்பாக இருந்த போதிலும், விரிந்த இதழ் களோடு வனப்பூட்டுகின்றது. அவ்வாறு, கண்டவரி எளிய பாதங்களையுடையதாகவும், அதன் பக்கங்களில் வரிசை யாக மணிச்சட்டங்களை அமைத்தும் காட்டப்பட்டுள்ளது. அதன் மேலுள்ள கபோதகம் கூடுகளைக் கொண்டு அலங் கரிக்கிறது.

இங்கு ஜகதி வரியானது முகபத்திரத்தில் ஜகதி பத்ம மாக விரிந்து வனப்பூட்டுகிறது. இப்பத்மத்தில் உள்ள இதழ்கள் நீண்டும், இடையிடையே மகரந்த கேசரங் களைக் கொண்டும் விளங்கக்காண்கிறோம். அதன் கோடிப் பகுதி மூன்று இதழ்களைக் கொண்டதாக வனப்பூட்டு கிறது. இவ்வரியில் கருவறையின் வடபுறம் முகபத்திரத்தின் மையப்பகுதியில் கோமுகி இணைக்கப்பட்டுள்ளது.

சிலம்பு குமுதம்

குமுதவரியானது, இங்குபதினாறு பட்டைக்குப் பதில் சிலம்பு குமுதமாக அமைந்துள்ளது. இச்சிலம்பில் அதிக பட்சமாக 46-கல்முத்துக்கள் கோத்த நிலையில், பக்கத் திற்கு 51-சிலம்புகள் வீதம் அடுக்காக அமைந்து, அவை அனைத்தும் ஒரு நீண்ட சட்டத்தில் இடையே இணைந்த வாறு குமுதகத்தை அமைத்துள்ள சிற்பியின் திறனும், சிற் றுளியின் ஆற்றலும் கட்டடக்கலையை வியக்க வைக்கின் றன.

இதனை அடுத்துள்ள கண்டவரியானது பக்கத்திலுள்ள அமைப்பை ஒத்துள்ளது. அதன் மேலுள்ள மகாபட்டிகை வரியானது இங்கு கபோதக வரியாக மாற்றப்பட்டுள்ளது. இக்கபோதகத்தின் மேல் பகுதி நெடுக வனப்பூட்டும் மாவிலைத்தோரணங்களாக அமைந்து இடையிடையே கருக்குகளுடன் கூடிய சிம்ம முகக் கூடுகள் அலங்கரிக்கக் காண்கிறோம். இவ்விதம் அதிட்டானத்தை வர்க்கபேதத்

Koviloor Digital Library

துடனும், அதிட்டானத்தின் முகபத்திரத்தை நுட்பமான வேலைப்பாடுகளுடனும் சீரிய முறையில் சித்திரித்துள்ள எழுவன் கோட்டை சிற்பியின் கைவினையும், நகரத்தாரின் கட்டடக்கலைவளமும் இங்கு கண்டு இன்புறத்தக்கவை.

சுவர்

இக்கோயில் கருவறை அதிட்டானத்தின் மேல் மட்டத்திலிருந்து, உத்திரத்தின் அடிமட்டம் வரை உள்ள பகுதியைச் சுவர்ப்பகுதி என்பர். இத்தாய்ச்சுவர் கர்ணக்கூடு பத்தி, அகாரைப்பத்தி, மற்றும் முகபத்திரப்பத்தி என்னும் பிரிவுகளோடு கூடியது 'இதில் கர்ணக்கூடு பத்தியும் அகாரைப்பத்தியும் சம அளவிலும், முகபத்திரப் பத்தி அதைப் போன்று இரு மடங்கு அளவோடும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக நேமம் கோயில், கர்ணச்கூடு பத்தி 73.செ.மீ. கொண்டும், முகபத்திரப் பத்தி 1.44.மீ. கொண்டும் இரு மடங்காக அமைக்கப்பட்டுள்ளது. கருவறை புறச்சுவரின் நான்கு மூலைகளிலும் எண்பட்டை வடிவுடைய நான்கு முழுத்தூண்கள் அலங்கரிக்கின்றன. அவ்வாறு முகப்பத்திர மூலைகளின் இரு கோடிகளில் பக்கத்திற்கு இரண்டு தூண்கள் வீதம் மூன்று திசைகளிலுமாக ஆறு தூண்கள் அலங்கரிக்கின்றன. இவை செங்குத்தான கோடுகள் வெட்டப்பட்டு, தாரைவடிவுடையதாகக் காட்சியளிக்கின்றன.

கரைவுக்கால்கள்

சுவரின் மூலைக் கோடிப்பகுதியில் அமைந்துள்ள தூண்கள் ஒவ்வொன்றும் அசுவபாதம், கால், நாகபந்தம் அணி செய்யும் இடைக்கட்டு, எண் கோண வடிவுடைய உடல், இடைக்கட்டு, கலசம், தாடி, குடம், பலகைபத்மம், பலகை, வீரகண்டம், போதிகை ஆகிய உறுப்புகளைக் கொண்டு விளங்குகின்றன. இத்தூண்கள் ஒவ்வொன்றும்

Koviloor Digital Library
ACC - No: 762
(91'28)

கீழிருந்து மேலாகக் கரைந்துசெல்லும் நிலையில் கரைவுக் காலாகக் காணப்படுகின்றன.

கோஷ்டபஞ்சரம்

கர்ணக்கூடு பத்திக்கும், முகபத்திர பத்திக்கும் இடையேயுள்ள பத்தியை அகாரைப்பத்தி என சிற்பநூல்கள் குறிக்கும். இப்பத்தியில் இருகால்களுடன் கூடிய கோஷ்ட பஞ்சரங்கள் அலங்கரிக்கின்றன. இதன் கால்கள் ஒவ்வொன்றும் 1.05.மீ. உயரமும், 12.செ.மீ. அகலமும் உடையன.

இக்கால்களில் அசுவ பாதத்திற்கு மேலுள்ள காலின் உடல் பகுதி, பலகை பத்மம் வரை அடுக்கடுக்காகத் துண்டிக்கப்பட்டு வனப்பூட்டுகின்றது. இக்கால்களின் மேலுள்ள பலகையின் மீது போதிகை அமையாமல் இரு கால்களையும் மூடும் வகையில் கூரைப் பகுதியும், அதன் மேல் ஒரு தளத்தையுடைய விமானமும் அமைந்து விளங்கு கின்றன. இப்பஞ்சரம் அகாரையின் கீழ் மட்டத்திலிருந்து உத்திரம் வரை தாய்ச்சுவரில் அமைந்து அழகு செய்கிறது.

இப்பஞ்சரத்தின் கூரைப் பகுதியும், கூடுப்பகுதியும், கூரையின் உட்புறமும், சிகரமும், ஸ்தூபியும் வேலைப்பாடு மிக்கதாய் மிகுந்த கவனத்தோடு செதுக்கப்பட்டுள்ளன. கூரையின் உட்புறம் அமைந்துள்ள மரச்சட்டங்களின் இடையிடையே உருட்டுக் கம்பிகளும், முறுக்குக் கம்பிகளும் ஆங்காங்கே இணைத்து குமிழ் ஆணிகள் தரித்து, கல்லிலே வடித்த கற் கூரையாகத் திகழ்கிறது. இத்தகைய நுட்பமான வேலைப்பாடுகளுக்காகச் சிற்பிகள் எடுத்துக் கொண்ட ஆர்வமும் முயற்சியும் போற்றத்தக்கன. கூரைப்பகுதியிலுள்ள கூடுகள் சிம்ம முக முகப்பும், கருக்குகளைவாயில் கௌவிய நிலையில், சிம்மத்தின்வாயிலிருந்து வெளிப்படும் இரு மகரங்கள், அக்கருக்குகளை வாயில் கௌவிப்பிடிக்கும்

Koviloor Digital Library

இரு மகரங்களின் அமைப்பும் கண்டுகளிக்கத்தக்கவை. அக் கூடுகளின் உட்புறம் பல்வகை சிற்ப உருவங்களைக் கண்டு களிக்கலாம். கருவறையின் தென்திசை பஞ்சரத்திலிருந்து இக்கூடுகளில் பல்வகைச் சிகரங்களும், அஞ்சலித்து நிற்கும் அடியார்களின் உருவங்களும் அமைக்கப் பட்டுள்ளன. அவ்வாறு கூரையின் மேலுள்ள கழுத்துப்பகுதியில் இடை வெளியோடு கூடிய சிறு பஞ்சரக்கால்கள் வெட்டப்பட்டு காட்சியளிக்கின்றன. அதன் மேலுள்ள சிகரப் பகுதி செவ்வக வடிவுடையதாய் மூன்று ஸ்தூபிகளுடன் திகழ்கின்றது.

சிறிய சிற்பங்கள்

இப்பஞ்சரத்தின் அகவ பாதத்திற்கு மேலுள்ள காலில் மனித உருவங்களும், தெய்வீக உருவங்களும், மலர் வளை யங்களும், கொடிக் கருக்குகளும், அடைப்புக் கருக்கு களும் கவினுற விளங்குகின்றன. கருவறையின் தெற்குப் புறச் சுவரிலிருந்து வலம் வருவோமானால் தலையில் சடைமகுடம் தரித்து நிற்கும் மாமுனிவர்கள், சின்முத் திரை காட்டி நிற்கும் இளம் துறவிகள், ஏடு ஏந்தி நிற்கும் மணிவாசகர், முகத்தில் தாடியுடன் வணங்கி நிற்கும் முனிவன், திருவாமூரில் பிறந்த திருநாவுக் கரசர், அரச உடையில் வணங்கி நிற்கும் சுந்தரர், அந்தணர் குலத்தைச் சேர்ந்த ஆளுடைப்பிள்ளையான ஞானசம்பந்தர் ஆகிய நால்வரின் உருவங்களும் சிற்பங் களாகச் செதுக்கப்பட்டுள்ளன.அவ்வாறு சீறும் சிம்மத்தைக் குறுவாளால் குத்தியடக்கும் மறவன், அழகிய ஆடும் மகள், தாருகாவனத்து மாமுனிவர்களின் ஆணவத்தை அடக்க, ஆடையற்ற கோலத்தில் அழகே உருவாகத் தோன்றி மயக்கும் மோகினி, அவளது அழகினைக் கண்டு யோகம் கலைந்து மோகித்து நிற்கும் முனிவன் ஆகி யோரது உருவங்கள் அர்த்த சித்திரமாகச் செதுக்கப் பட்டுள்ளன. இவை உருவில் சிறியவை; சிற்பக்கலைத்

Koviloor Digital Library

திறன் நிறைந்தவை. கற்பனையும் கலைத்திறனும் மிக்கவை. சுமார் 20.செ.மீ உயரமும், 10 செ.மீ. அகலமும் உடையவை. மேல் பத்தித்தூண் சிற்பங்களை விட அழகு மிக்கவை. கற்பனையும் கலைத்திறனும் மிகுந்த பெரும் சிற்பக் காவியங்களை நேமத்தில் தோற்றுவித்த எழுவன் கோட்டைச் சிற்பிகள், அதே உணர்வோடும், ஊக்கத்தோடும் 20.செ.மீ. உயரமுடைய சிற்றிலக்கியங்களை ஒத்த இச்சிற்பங்களைப் படைத்துள்ள பாங்கு அவர்களது ஆற்றலை வெளிப்படுத்தி நிற்கிறது. இவை நகரத்தார் கலைப்பாணியை அளவிட சிறந்த கருவியாக அமைகின்றன.

தேவ கோட்டம்

கருவறையின் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகளிலும் தேவ கோட்ட மாடங்கள் சற்று முன்னோக்கிய நிலையில் வெளிப்பட்டு காணப்படுகின்றன. இம்மாடங்களில் முறையே தென்திசைச் செல்வனான தட்சிணாமூர்த்தி, அடிமுடிகாணா அண்ணாமலையார், நான்முகனான பிரம்மன் ஆகிய மூன்று தெய்வ உருவங்கள் காணப்படுகின்றன. இவை அமைந்துள்ள மாடங்கள் பக்கங்களில் இரு அரைத்தூண்களைக் கொண்டும் அவற்றை மூடும் வகையில் வேலைப்பாடு மிக்க கூரைகளையும், அவற்றின் மேல் இரு நிலைகளை உடைய கோபுர அமைப்பையும், ஸ்தூபிகளையும் கொண்டு விளங்குகின்றன.இவ்வரைத்தூண்களின் உடல் வட்ட வடிவுடையதாகவும், சட்டத்தலையோடு கூடியதாகவும் விளங்கக் காண்கிறோம். இதன் கூரைப்பகுதியானது பஞ்சரக்கால்களின் மீதுள்ள கூரைபோன்ற வளப்பும், வேலைப்பாடும் மிக்கவை. ஆனால், கூரையின் கூடுகளின் நடுவே, சிகர அமைப்புகள் காட்டப்பட்டுள்ளன. மேலும், கோபுரப்பகுதி கர்ணக்கூடு, பஞ்சரம், முகசாலையுடன் கூடியதாய் அமைந்து விளங்குகிறது. அவ்வாறு கோபுரத்தின் மேல்

Koviloor Digital Library

அலங்கரிக்கும் சாலையானது நீண்ட வண்டிக் கூரையை ஒத்த அனைத்து உறுப்புகளையும் பெற்றுத்திகழ்கிறது.

தேவகோட்ட மாடங்கள் அமைந்துள்ள முகபத்திரத்தின் இரு கோடிகளிலும் உள்ள தூண்கால்களில் கொடிக் கருக்குகள், அடைப்புக்கருக்குகள், வாலைச்சுருட்டி நிற்கும் சிம்மம், பாய்ந்து நிற்கும் யாளி, வனப்புடைய மகரம், சங்கு சக்கரம் ஏந்தி யானைக்கு அருள் பாலிக்கும் திருமால், கணையும் சிலையும் ஏந்தி நிற்கும் ரகுராமன் ஆகிய உருவங்கள் அழகொழுக புடைச்சிற்பமாக விளங்குகின்றன.

கூரை

போதிகையின்மேல் மட்டத்திலிருந்து வியாளவரி மேல் மட்டம் வரை உள்ளபகுதியை பிரஸ்தரம் என்றும், கூரை என்றும் கூறுவர். இக்கூரைப் பகுதியானது இங்கு கருவறையை மூடும் அங்கமாக விளங்குகிறது. இக்கூரைப் பகுதி உத்திரம், கம்பு, எழுதகம், கபோதகம், வியாளம் என்ற உறுப்புக்களைக் கொண்டு விளங்குகிறது. உத்திரப் பகுதி எளிமையாகவும், மூலைப்பகுதி சற்று முன்னோக்கிப் பிதுங்கிய நிலையில், சிவகணங்களுடன் காட்டப்பட்டுளது. அதன் முகப்பில் சங்கூதும் நிலையிலும், வாளேந்திய நிலையிலும், வில்லும்அம்பும் பற்றிய நிலையிலுமாக சிறு சிவகணங்கள் காட்டப்பட்டுள்ளன.

எழுதகப்பகுதி வரிசையாக மதலைகள் அணிசெய்ய காட்சியளிக்கின்றது. கூரைப்பகுதியில் உள்ள கபோதகம் மாவிலைத் தோரணங்கள் அலங்கரிக்க, வளைந்தும் பின் உள்ளடங்கி வெளிப்பட்ட நிலையிலும் எளிமையாகக் காட்சியளிக்கின்றது. கபோதகத்தின் இடையிடையே உள்ள கபோதகக் கூடுகள் சிம்ம முகத்துடன் பெரியதாகவும், பல்வகை இறை உருவங்களைக் கொண்டும் விளங்கக் காண்கிறோம். அதன் மேல்வரிசையாக யாளிவரி அமைந்

Koviloor Digital Library

துள்ளது. அதன் மூலைப் பகுதிகளில் திறந்த வாயும், கூரிய பற்களும் உள்ள மகரத்தலைக்கட்டுகள் காட்டப் பட்டுள்ளன.

கபோதகம் மட்டத்திற்குக் கருவறையின் உட்பகுதியில் கோணவிட்டமும், வியாளம் மட்டத்திற்கு சதுரவிட்டமும் அமைத்து கூரையை மூடியுள்ளனர். இதன் நடுவே பிரம்ம துவாரம் அமைந்து விளங்குகிறது.

கபோதக சிற்பங்கள்

இக் கோயில் மகாமண்டபத்தில் முகப்புவாயிலிலிருந்து அர்த்த மண்டபம், கருவறை ஆகிய பகுதிகளைச்சுற்றி வலம் வருவோமானால் கபோதகத்தின் கூடுகளிலும் பல் வேறு அழகிய சிற்பங்களைக் கண்டு களிக்கலாம். அவை முறையே:

1. ஆனைமுகத்தானான இடம்புரி விநாயகர்.
2. அருள் பாலிக்கும் ஆறுமுகப்பெருமான்.
3. தாடி தரித்த முனிவர்.
4. வீணை ஏந்தி நிற்கும் துறவி.
5. காலனைக் கடிந்துகந்த பெருமான்.
6. மானுக்குத்துளிர் கொடுக்கும் அண்ணல்.
7. உமையின் ஊடல் தவிர்க்கும் சிவன்.
8. இரு நாய்கள் புடைசூழத்தோன்றும் பைரவர்.
9. யானையின் தோலை உரித்தாடும் பெருமான்.
10. ஒற்றைக்காலில் நின்று தவம்புரியும் பகீரதன்.
11. செண்டு பிடித்திருக்கும் அய்யனார்.
12. ஆழியும் சங்கமும் ஏந்திநிற்கும் திருமால்.
13. நீள்சடை வளர்த்துத் தவம்புரியும் முனிவன்.

Koviloor Digital Library

14. குழல் ஊதும் வேணு கோபாலன்.
15. ஆடை தளர்த்தி நிற்கும் மோகினி.
16. நீலோத்பலம் ஏந்திநிற்கும் சிவகாமி.
17. அசுரனை அழிக்கும் அக்கினி வீரபத்திரர்.
18. தில்லைக் கூத்தனான ஆடவல்ல பெருமான்.
19. உமையுடன் தோன்றும் கங்காதர மூர்த்தி.
20. மழுவும் மானும் ஏந்திநிற்கும் சந்திரசேகரமூர்த்தி.
21. உடுக்கையையும் பாசத்தையும் கொண்டு நிற்கும் பைரவர்.
22. உத்குடி ஆசனத்தில் தோன்றும் தட்சிணாமூர்த்தி.
23. தாருகாவனத்தில் பிச்சைபுகும் பெருமான்.
24. யானைக்கு அருள் பாலிக்கும் அண்ணல்.
25. அடிமுடிகாணா அண்ணலான அண்ணாமலையார்.
26. உமையொரு பாகனாகத்தோன்றும் அர்த்தநாரீசுவரர்.
27. திருமகளும், நிலமகளும் புடைசூழ நிற்கும் பெருமான்
28. மழுவும் சங்கும் ஏந்தி நிற்கும் சங்கர நாராயணன்.
29. அயோத்தி அண்ணல் இராமபிரான்.
30. அம்பேந்தி வணங்கி நிற்கும் இலக்குவன்.
31. மிதிலைச் செல்வி சீதை.
32. காளைமீது சாய்ந்து நிற்கும் காளை வாகனதேவர்
33. சரசுவதி, சாவித்திரி ஆகிய தேவியர் சூழ நிற்கும் நான்முகன்.
34. அம்பும் வில்லும் ஏந்திநிற்கும் திரிபுரசம்காரமூர்த்தி.
35. அயபவரத மளித்துநிற்கும் ஏகபாத மூர்த்தி.

Koviloor Digital Library

36. மழுவும் மானும் ஏந்திநிற்கும் சந்திரசேகரர்.
37. காலனை அழிக்கும் காலசம்காரமூர்த்தி.
38. உடுக்கை கொட்டும் கங்காள மூர்த்தி.
39. சதுர நடனமாடும் காளி.
40. சங்கு சக்கரம் ஏந்திநிற்கும் விஷ்ணு துர்க்கை.
41. காலை உயர்த்தி உடுக்கை அடிக்கும் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி.
42. வேணுகானம் இசைக்கும் கோபாலன்.
43. ஆநிரைகளைக்குழலோசையால் மயக்கும் ஆயர் குலத்து அண்ணல்.
44. நீல மேனி நெடியோன்.
45. காளிங்கன் மீது பதமெடுத்தாடும் கண்ணன்.
46. சண்டிக்கு மலர்மாலை சூட்டும் சண்டேச அனுக்கிரக மூர்த்தி.
47. ஆனைமுகத்தானுக்கு அருள் பாலிக்கும் அண்ணல்.
48. மனிதஉடலும், சிம்மமுகமும் கொண்ட சிங்கபிரான்.
49. அபயமுத்திரைகாட்டும் நரசிம்மர்.
50. அஞ்சலித்து நிற்கும் அதிகார நந்தி.
51. மலை மகளுடன் தோன்றும் சிவபெருமான்.
52. நர்த்தனமாடும் விநாயகப்பெருமான்.
53. பாம்பின் மீது நடமாடும் கண்ணன்.
54. மீசையை முறுக்கிவரும் குறமகன்.
55. கிளியைத்தலையில் சுமந்துவரும் குறமகள்.
56. ஊர்த்துவ தாண்டவர்.
57. காரைக்கால்தாய்.

Koviloor Digital Library

58. குடமுழா வாசிக்கும் நந்திதேவர்.
59. அஞ்சலித்து நிற்கும் நான்முகன்.
60. வணங்கி நிற்கும் திருமால்.
61. சின்முத்திரைகாட்டும் மாணிக்க வாசகர்.
62. நர்த்தனமாடும் ஞான சம்பந்தர்.
63. அரச உடையில் வணங்கி நிற்கும் சுந்தரமூர்த்தி நாயனார்.
64. உழவாரப்படை ஏந்திநிற்கும் அப்பர் பெருமான்.
65. அருள் பாலிக்கும் சிவபெருமான்.
66. யானைக்குத் துளிர் கொடுக்கும் சிவன்.
67. அன்னவின் அருகில் தோன்றும் அன்னை.
68. அன்னத்தின் மீது அமர்ந்து அம்பெய்யும் மன்மதன்.
69. அஞ்சலித்து நிற்கும் அடியார்.
70. முப்புரமெரித்த முழுமுதற்கடவுள்
71. திரிபுரசுந்தரி.
72. மீனாட்சி திருக்கல்யாணம்.
73. மயில் வாகனன்.
74. கெஜலட்சுமி—ஆகிய சிற்பங்கள் அலங்கரிக்கின்றன.

கிரீவம்

கூரைக்கு மேலும், விமானத் தளத்திற்குமிடையே உபக்கிரீவம் அமைந்துள்ளது. இப்பகுதியானது வேதிகை, பாதம், கபோதகம் ஆகிய உறுப்புகளைக் கொண்டுள்ளது. விமான தளத்தை உயர்த்திக்காட்டுவதற்காக இக்கோயிலில் உபக்கிரீவம் எளிமையாக இணைக்கப்பட்டுள்ளது.

விமானம்

கருவறைக்கு மேலுள்ள பகுதியை விமானம் என்பர்.

Koviloor Digital Library

இது பல தளங்களைக் கொண்டதாய் அமையும். நேமம் கோயிலில் கருவறைக்கு மேலுள்ள விமானம் மூன்று தளங்களையுடையதாய் அமைந்து விளங்குகிறது. ஒவ்வொரு தளமும் பலபத்திகளாகப் பிரிக்கப்பட்டு கர்ணக் கூடு, அகாரை, பஞ்சரம், சாலை ஆகிய உறுப்புகளைப் பெற்றுத்திகழ்கிறது. ஒவ்வொரு தளத்தின் மூலைப்பகுதியில் கர்ணக்கூடுகளும் நடுவே சாலையும், இடையே பஞ்சரமும் அமைந்து அலங்கரிக்கின்றன. ஒவ்வொரு தளத்திலும் சாலைகளின் நடுவே திசைக்கேற்ப சிற்ப நூல்களைத்தழுவி தெய்வ உருவங்களை அமைத்துள்ளனர். சான்றாக முதல் தளத்தின் கீழ்த்திசைச் சாலையில் உமையுடன் விடை யேறும் பெருமான், தென்திசையில் ஜனகாதி முனிவருடன் வீராசனத்தில் தோன்றும் தட்சிணாமூர்த்தி, திருமகள், நிலமகள் சூழ வீற்றிருக்கும் வைகுநதப்பெருமாள், சரசுவதி சாவித்திரியுடன் தோன்றும் நான்முகன் ஆகியோரின் சுதைச்சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. கீழ்த்திசையில் விடையேறும் பெருமானின் இரு பக்கங்களிலும் சிவன், ஏறு ஊரும் பெருமான், ரதி மன்மதன் ஆகியோரின் அழகிய சிற்பங்களைக் காண்கிறோம். அவ்வாறு தென்திசையில் தட்சிணாமூர்த்தியின் இருபுறமும் சேவல் கொடியோன், சந்திரசேகரர், கங்காளமூர்த்தி, யானைக்கு அருள் பாலிக் கும் அண்ணல் ஆகியோரின் உருவங்களைக் காண்கிறோம்.

மேல்திசையில் அயோத்தி அண்ணல் இராமபிரான், மிதிலைச் செல்வி சீதாபிராட்டி, இலக்குமணப்பெருமாள், குழலூதி ஆநிரைகளை மயக்கும் வேணுகோபாலன், கூடையேந்திய குறத்தி, குறவன் ஆகியோரின் சுதைச் சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. வடதிசையில் பிரமனின் பக்கங்களில் சத்திப் படையும், வச்சிரப்படையும் ஏந்தி தேவியர்களுடன் நிற்கும் சுப்பிரமணியர், கருப்பர், மதுரைவீரன் ஆகியோரின் வண்ணச் சிற்பங்களைக் கண்டு களிக்கலாம்.

Koviloor Digital Library

இரண்டாவது தளத்தின் கீழ்த்திசையில் ஐராவதத்தின் மீது தேவியுடன் பவனிவரும் இந்திரன், இந்திரலோக நடனமாதர் அரம்பை, ஊர்வசி, விநாயகர், சுப்பிரமணியர் திருமால் ஆகியோரின் சுதைச்சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. தென்திசையில் யோகாசனத்தில் வீற்றிருக்கும் ஆலமர் செல்வன், மானுக்குத் துளிர் கொடுக்கும் பிச்சாடனர், வடுகவாகனத்துடன் தோன்றும் பைரவர், இராஜ உடையில் தோன்றும் பழநிமுருகன், அக்கினி ஏந்தி ஆடு பரமசிவன் ஆகியோரின் உருவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. மேல் திசையின் நடுவே கருட ஆழ்வார் தோளில் தோன்றும் திருமால், நீலமேனிநெடியோன், ஆழியேந்தி அருள் பாலிக்கும் சிங்கபிரான் ஆகியோரின் சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. வடதிசையில் தேவியர் இருவருடன் நான்முகனும், அருள்பாலிக்கும் இறை உருவங்களும் காட்டப்பட்டுள்ளன. கூரையினைத் தம் முதுகில் தாங்கும் நிலையில் பக்கத்திற்கு நான்கு விமானம் தாங்கிகள் பல்வகை ஆடை அணிகள் அணிந்து, தலையில் தலைப் பாகையுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றனர். இரண் டாவது தளத்தின் மேல்திசையில் சஞ்சீவி பருவதத்தைத் தூக்கிச் செல்லும் ஆஞ்சனேயரின் இரு சுதை உருவங்கள் விமானம் தாங்கியாகக் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளத்தின் நான்கு கோடிகளிலும் கூப்பிய கரங்களோடு தோன்றும் அடியார்கள் உருவங்கள் உள்ளன. விமானத்தின் கிரீவ கோட்டத்தில் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் முறையே தேவியர்சூழ, இந்திரனும் ஆலின் கீழ் அமர்ந்த அண்ணலும், இரு தேவியர்களுடன் சூழும் திருமாலும், நான்முகனும் காட்சியளிக்கின்றனர் கிரீவ கோட்டத்தின் வேதிப்பகுதியில் நான்கு மூலைகளி லும் கர்ணக்கூடுகள் அலங்கரிக்க, அதன் பக்கங்களில் இரு நந்திகளும், சிவகணங்களும் காட்டப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

கிரீவத்திற்கு மேலுள்ள பகுதியைச் சிகரம் என்பர். சிகரப் பகுதியைச் சதுரமாகவோ, வட்டமாகவோ, எண் பட்டையாகவோ அமைப்பது கட்டடக்கலை மரபு. இதனையே நாகரம், வேசரம், திராவிடம் என சிற்பநூல்கள் கூறும். நேமம் கோயில் சிகரம், வேசரப் பாணியைத்தழுவி வட்டமாக அமைக்கப் பட்டுள்ளது. இச்சிகரத்தின் உடற் பகுதியானது தூக்குக் கோடு, இடைக்கட்டு, பத்மம், உடல், பத்மம், கட்டுமாலை, கண்ணாடி சட்டம், மகா பத்மம் போன்ற அங்கங்களை யுடையதாய் வனப்புடன் விளங்கு கிறது. தூக்குக் கோட்டிற்கு மேல் பகுதியில் பல்வேறு நிலைகளில் எண்வகை முனிவர்கள் காட்டப்பட்டுள்ளனர். இது சிகர அமைப்பில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிகரத்தின் இடைக்கட்டுப் பகுதி மலர் சரத்தால் அலங்கரிக்கக் காண்கிறோம். அவ்வாறு உடற் பகுதியைத் தொங்கும் மாலைகள் வனப்புடன் அணி செய்கின்றன. சிகரத்தின் நான்கு திசைகளிலும் மகர நாசிகளும், அவற்றிற்கிடையே சித்ர நாசிகளும் சிகரத்தின் அழகை மெருகூட்டுகின்றன. மகர நாசிக்கூடுகளில் தவமுனிவர்கள் காட்டப் பட்டுள்ளனர். இதுவும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஸ்தூபி

கட்டடத்தின் இறுதிப் பகுதியை ஸ்தூபி என்பர். இதனைக் கலசம் என்றும் குடம் என்றும் கூறுவர். உலோகத்தாலான ஸ்தூபி இங்கு சிகரத்தை அலங்கரிக்கிறது. இவ்வாறு பல்வேறு பகுதிகளையுடைய விமானம் 14.5 மீட்டர் உயரத்தில் பாங்குற அமைந்து காட்சியளிக்கிறது.

அந்தராளம்

கருவறைக்கும் அர்த்தமண்டபத்திற்குமிடையே அந்தராளம் என்னும் பகுதி அமைந்துள்ளது. இதனையே இடைநாழி என்பர். அந்தராளப் பகுதியானது கருவறைக்

Koviloor Digital Library

கும் அர்த்த மண்டபப் புறச்சுவருக்கும் இடையே பிரிக்கும் நிலையில் உள்ளடங்கி அமைந்துள்ளது. இப்பத்தி 73 செ.மீ. நீளமுடையது. இதனிடையே அழகிய கும்ப பஞ்ச ரத்தைக் காணலாம்.

இதன் அடிப்பகுதி குடத்தை ஒத்த கும்ப வடிவிலும் பக்கங்களில் யாளியும், வளைந்த கொடிக்கருக்குகளும் கொண்டு அமைவது வழக்கம். ஆனால், இங்கு குடப்பகுதி பல்வகை எளிய சிலம்புகளால் அலங்கரித்து அதன் இடையே உள்ள பகுதியை இணைத்துக்கட்டி முடிச்சி யுடனும், குஞ்சங்களுடனும் காட்டப்பட்டுள்ளது. கலசத் தின்மேல் இரு பக்கங்களிலும் இரு யாளியின் வாயிலிருந்து வெளிப்படும் கொடிக்கருக்குகளைக் கீழேயுள்ள மகரங்கள் வாயில் பற்றி நிற்கின்றன. கலசத்தின் மேல் வரும் தூண் அடுக்குகளாக வெட்டப்பட்டு பலகைபத்மம் வரை அலங் கரிக்கிறது. உத்திரத்தின் மேலுள்ள கூரையும், கழுத்தும், சிகரமும் அகாரைப்பகுதியில் உள்ள பஞ்சரக்கால்களை ஒத்து விளங்குகின்றன. கூரைமீதுள்ள விமானம் சதுரவடி வில் ஒரு தளத்தைக் கொண்டுள்ளது.

அர்த்த மண்டபம்

கருவறையின் முன்புறமுள்ள அர்த்த மண்டபம் உட் புறம் நீள் சதுரவடிவிலும், வெளிப்புறம் சதுரவடிவிலும் அமைந்துள்ளது. இதன் உட்புறம் 4.30.மீ. நீளமும், 2.80 மீ. அகலமும் கொண்டு விளங்குகிறது. அர்த்தமண்டபத் தின் வெளிப்புறம் 4.38.மீ. பக்க அளவுடையது. அர்த்த மண்டபத்தின் உட்புறம் தூண்களின்றி எளிமையான அமைப்பினைக் கொண்டு விளங்குகிறது. அர்த்தமண்டபம் வாயில் நிலைக் கால்களின் பக்கங்கள் தாமரை இதழ்கள் விரித்த நிலையிலும், பக்கங்களில் உள்ள பாந்தில் வரிசை யாக மணிகள் பதித்து மணிச் சட்டமாக அழகு செய்கிறது. இருநிலைக்கால்களும், படியும், படியடையும் எளிமையான

Koviloor Digital Library

அமைப்புடையவை. திருநிலைக்கால்கள் 2.30.மீ. உயரமும் 1.45மீஅகலமும் உடையன. அதன்சுத்த துவாரம் 1. 95.மீ. உயரமும் 1. 10. மீ, அகலமும் உடையது.

திருநிலை வாயிலின் இருபுறமும் சட்டத் தலைகளுடன் கூடிய, வட்டவடிவான அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இதன் போதிகையின் மீது கூரைப்பகுதி அமைந்துள்ளது. உத்திரப்பகுதியில் எளிய வடிவத்தில் கஜலட்சுமி அருள் பாலிக்கக் காண்கிறோம். கூரையின் கபோதக மையத்தில் திருவாசியுடன் கூடிய கஜலட்சுமியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கூரையின் கீழ் உள்ள கஜலட்சுமியின் இருபுறமும் எளிய சிம்ம முகக் கூடுகள் அலங்கரிக்கின்றன. அர்த்த மண்டப வாயிலை அலங்கரிக்கும் இரு அரைத்தூண்களின் இடையே உள்ள அகாரைப் பகுதியில் 'ஒற்றைக்கால் பஞ்சரம் காட்டப் பட்டுள்ளது.

அர்த்த மண்டபத்தின் புறச்சுவர்

அர்த்த மண்டபத்தின் புறச்சுவர் கருவறையை ஒத்த அமைப்புடையது. இதன் வடக்கிலும் தெற்கிலும் முகபத்திரத்தில் கோட்டங்கள் அமைந்துள்ளன. இவற்றில் முறையே துர்க்கை, விநாயகர் ஆகிய தெய்வ உருவங்களைக் காணலாம். இவற்றை அமைப்பதற்கான அடிபீடத்தை ஆங்காங்கே திட்டமிட்டு கபோதக வரியிலேயே இணைத்துள்ளனர். இம்முறையைக் கருவறையின் தேவ கோட்ட அமைப்பிலும் பின்பற்றியுள்ளனர். பல்லவர், சோழர், பாண்டியர், விஜய நகரர் ஆகிய மன்னர்கள் காலத்திய கோயில்களில் காண முடியாத இத்தகைய அமைப்பினை நேமம் கோயிலில் காணமுடிகிறது. நகரத்தார் காலத்திய கட்டடக்கலைப் பாணியில் இதனை ஒரு புதிய அம்சமாகவே கருத வேண்டும். இது அக்கால கட்டடக்கலை வளர்ச்சியினை அடையாளம் காண உதவுகிறது.

Koviloor Digital Library

முகபத்திரத்தின் பக்கங்களில் அமைந்துள்ள இருகால் பஞ்சரங்களின் வடதிசையில் வேடன், கண்ணப்பர், யானைக்குக் கரும்பு கொடுக்கும் அண்ணல், அஞ்சலிக்கும் அடியார், கூப்பிய கரங்களோடு வணங்கி நிற்கும் அனுமன், தாழங் குடையுடன் தோன்றும் வாமனர் ஆகிய சிற்பங் களைக் காணலாம். அவ்வாறு தென்திசையில் நீண்ட கோலைப் பற்றி நிற்கும் இடைக்குலத்து ஆயன், வீணை மீட்டும் வனிதை, தாடி தரித்து சின்முத்திரைகாட்டும் துறவி, விரிசடையுடன் தோன்றும் இளம் துறவி ஆகிய சிற்பங்களைக் காண்கிறோம். விநாயகர் அமைந்துள்ள தென்திசைக் கோட்டத்தை அலங்கரிக்கும் அரைத் தூண் களின் கால் பகுதியில், பலாப்பழங்களைத் தலையில் சுமந்து வரும் நிலையில், இரு உருவங்களைக் காண் கிறோம். உருவில் சிறிய இச்சிற்பங்கள் சீரிய கலைத்திறன் மிக்கவை.

மகா மண்டபம்

அர்த்த மண்டபத்தின் முன்புறமுள்ள மகா மண்டபம் சதுர வடிவில் அமைந்துள்ளது. மகாமண்டபத்தின் உட்பகுதி 7.15.மீ. பக்க அளவுடையது. அதன் வெளிப்பகுதி 8.90.மீ. பக்க அளவுடையது. அர்த்த மண்டபத்திலிருந்து மகா மண்டப நீட்சியானது 2.20.மீ. உடையது. இம்மகா மண்டப அளவு கருவறையைப் போன்று இரு பங்கு அளவுடையது. தெற்கிலும் கிழக்கிலும் படிகளோடு கூடிய வாயில்களைக் காணலாம். இம்மண்டபம் அர்த்த மண்ட பத்துத் தளவரிசை மட்டத்தைவிடத் தாழ்ந்தும், விதானம் உயர்ந்தும் காட்சியளிக்கிறது. இம்மண்டப விதானத்தை நான்கு அணிஒட்டித்தூண்கள் தாங்கி நிற்கின்றன. இம் மண்டபத்தின் வடதிசையில் நடராசர் சபையும் தெற்கில் அதன் வாயிலும் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

Koviloor Digital Library

இச்சபையின் வாயில் அர்த்தமண்டப வாயில் அமைப்பினையும், அழகினையும் ஒத்து விளங்குகிறது. மகாமண்டபத்தின் தெற்கிலும் வடக்கிலும் உற்சவ மூர்த்திகளை வைப்பதற்கான கல்மேடை, உபபீட வரிவர்க்கங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அம்மேடைகளின் கீழ்ப்பகுதி கருவூலமாகப் பயன் படுத்தப்பட்டு வருகிறது. மகாமண்டபத்தின் உட்புறம் கருவறையைப் பார்த்த வண்ணம் உலோகத்தாலான நந்தி, பலிபீடம், கண்ணாடி ஆகியவை இடம் பெற்றுள்ளன. அர்த்த மண்டப வாயிலின் இரு புறமும் விநாயகர், தண்டாயுதபாணி ஆகிய உருவங்கள் வழிபாட்டிலுள்ளன. நடராசர் சபையின் தென்திசை வாயில் பார்ப்பவர்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் கலையழகு மிக்கதாய் விளங்குகிறது. இவ்வாயிலின் நிலைகளை பத்மவரிகளும், இடையே மணிச் சட்டமும் அலங்கரிக்கின்றன. இதன் நிலைவாயில் காலின் முன்புறம் இரு அழகிய கொடிப்பெண்கள் காட்டப்பட்டுள்ளனர். நிலைவாயிலின் இரு பக்கங்களிலும் சற்று முன்னோக்கிய நிலையில் இரு அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண்களுக்குக்கீழ் உள்ள அதிட்டானப் பகுதி வர்க்க பேதங்களுடன் அமைந்து, வேலைப்பாடு மிக்கதாக விளங்குகிறது. சட்டத்தலையின் முகப்பின் இருபுறமும் சின முத்திரை காட்டும் முனிவர்கள், வாயில் கொடிக்கருக்கு பற்றி மென்னடை பயிலும் அழகிய இரு அன்னங்கள், கைகளில் ஓங்கியவாளும் கேடயமும் பிடித்து மண்டியிட்ட நிலையில் தோன்றும் இரு சிவகணங்கள், இரு வால்களைக் கொண்ட குந்து சிம்மங்கள், நான்கு இதழ்களைக் கொண்ட விரிந்த மலர்கள் ஆகியன அலங்கரிக்கக் காண்கிறோம். அதிட்டானத்தின் மேலுள்ள வேதிகை மீது, மலர்ச்சரங்கள் அணி செய்யும் சட்டத்தலையுடன் கூடிய அழகிய தூண்களைக் காணலாம். இத்தூண்கள் செங்குத்தாக வரம்புகள் வெட்டப்பட்டு தாரை ஸ்தம்பமாகக் காட்சியளிக்கின்றன.

Koviloor Digital Library

சட்டத் தலையின்மீது, பின்கால்களை ஊன்றி நிற்கும் யானையின் துதிக்கையைத் தனது நீண்ட துதிக்கையால் பற்றிப் பிடித்த நிலையில் முன்னோக்கிப்பாயும் துதியாளி யின் உருவங்கள் வனப்புடன் காட்டப்பட்டுள்ளன. இத் தூண்களின் மீது பக்கங்களில் வளைந்த போதிகையும், முனிவர் உருவம் சித்தரிக்கப்பட்ட உத்திரமும், உத்திரத் தின் நடுவே சாமரம் வீசும் பணிப்பெண்களுடன்கூடிய கஜ லட்சுமியின் உருவமும் பாங்குற அமைந்து விளங்கக்காண் கிறோம். உத்திரத்தின் மேலுள்ள கூரையில் கபோத கத்தின் நடுவே தாமரை இருக்கையின் மீது, பெரிய கஜ லட்சுமி வீற்றிருக்க, பக்கங்களில் இரு யானைகள் அமுத கலசத்தைத் தம் துதிக்கையால் பற்றி உயர்த்திப் புனிதநீர் சொரியும் காட்சியும், இரு பணிப்பெண்கள் சாமரை ஏந்தி நிற்கும் காட்சியும்கவினுற வடிக்கப்பட்டுள்ளன. கஜலட்சுமி யின் இரு பக்கங்களிலும் உள்ள நாசிக் கூடுகளில், இரு துவார பாலகரின் உருவங்கள் காட்டப்பட்டுள்ளன.

மகாமண்டபவாயில்

இக்கோயிலின் மகாமண்டப வாயில் கட்டடக்கலைச் சிறப்பும் சிற்பக்கலைச் செறிவும் ஒருங்கே பெற்றுத்திகழ் கிறது. இதன் நிலைவாயிலை மணிச்சட்டமும் தாமரை இதழ்களும் அலங்கரிக்க விசாலமாகக் காட்சியளிக்கிறது. யிலின் நிலைக்கால்கள் 2.50.மீ உயரமும், 1.50 மீ. அகலமும் உடையவை. அவ்வாறு இதன் சுத்ததுவாரம் 2.15.மீ. உயர மும், 1.15.மீ. அகலமும் உடையது. நிலைக்காலை அடைய நான்கு படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. நிலைக் காலின் இரு பக்கங்களிலும் சற்று முன்னோக்கிய நிலையில் அதிட்டானமும் வேலைப்பாடுமிக்க் அரைத்தூண்களும் அமைந்துள்ளன. பக்கங்களில் உள்ள அதிட்டான அமைப்பைவிட இவை வடிவத்தில் உருமாற்றம் பெற்று சட்டத் தலைகளுடன் திகழ்கின்றன. இச்சட்டத்தலையின்

Koviloor Digital Library

இருபுறமும் மேலிருந்து கீழாக மூசிக வாகனன், மயில் வாகனன், நடைபயிலும் அன்னங்கள், வாளேந்திய சிவ கணங்கள் குந்துசிம்மங்கள், விரிந்த மலர்கள் அலங்கரிக்கின்றன. தூண்களின் அசுவபாதத்திற்கு மேலிருந்து பலகை பத்மம் வரை தாரைக்கால்களும் அதன் முன்பக்கங்களில் பூவேலைப்பாடு மிக்க சட்டத்தலைகளும், அவற்றின் மீது பூதகணங்களின் கைதளத்தில் முன்கால்களை ஊன்றிப் பாய்ந்து நிற்கும் புரவிகளும், புரவிகளை ஓட்டி வரும் மறவர்களும், புரவிகள் பாய்ந்து செல்லும் வேகத்தில் பறக்கும் ஆடைகளும் மிக இயற்கையாகச் சித்திரிக்கப் பட்டுள்ளன.

அவ்வாறு பலகைமீது வளைந்து வனப்பூட்டும் போதிகைகளும், பருத்திப்பூ முனையை ஒத்த பூ முனையும், வாளும் கேடயமும் ஏந்திய வீரர்களைக் கொண்ட உத்திர முகப்பும், அதன்மீது மரச்சாத்துகளை வெட்டியடுக்கியது போன்று வியக்க வைக்கும் உட்கூரை அமைப்பும், அச்சாத்துகளின் ஊடே ஊடுருவிச் செல்லும் உருட்டுக்கம்பிகளும், முறுக்குக்கம்பிகளும் பொருத்தியுள்ள முறையும், அதன் முனைப்பகுதிகளில் கல் ஆணிகளைத் தைத்துள்ள அழகும் சிற்பியின் சீரிய ஆற்றலை வெளிப்படுத்துவன. மேலும் கூரையின் கபோதகத்தின் நடுவே அமுத கலசம் கொண்டு புனிதநீர் சொரியும் யானைகளுடன் கஜலட்சுமியை வடித்துள்ள பாங்கும், கபோதகங்களின் இடையிடையே உள்ள கீர்த்திமுகக் கூடுகளில் மீனாட்சிக் கல்யாணம், ஆறுமுகப் பெருமான் போன்ற பல்வேறு வகையான இறை உருவங்களை அமைத்துள்ள அழகும் கண்டு களிக்கத் தக்கவை. இவ்விதம் யாளிவரியின் மீதுள்ள சாலையின் முகப்பும், அச்சாலையின் நடுவே உமையும் சிவனும் காளை மீது அமர்ந்து காட்சிதரும் கோலமும், பக்கங்களில் மாதொரு பாகனும், மாலொரு பாகனும் அமைந்து நிற்க மற்றும் பஞ்சரக்கால்களின் முன்புறம் ஆனை முகத்தானும் மயில் வாகனனும் அலங்கரிக்க, அருகே வீணையும் பிடிலும்

Koviloor Digital Library

ஏந்தி இசை எழுப்பும் இரு கந்தர்வப் பெண்கள் தம் கால்களை மடித்து சிம்மங்களின் மீது ஒயிலாக நிற்கும் காட்சியும் தேவலோகக் காட்சியை நம் மனக்கண்முன் கொண்டு வருவனவாகத் திகழ்கின்றன.

இவ்விதம் நேமம் கோயில் முழுவதும் வெள்ளைக் கல்லால் செதுக்கப்பட்டுள்ள இச்சிற்பக்காவியம் எழுவன் கோட்டைச்சிற்பிகளின் கைவண்ணத்தையும் சிற்றுளியின் ஆற்றலையும் காட்டுவனவாக அமைகின்றன. வயிரவன்பட்டி மலைப்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட இக் கற்களைக் கொண்டு மகத்தான முறையில் இக்கோயில் கருவறையையும், அர்த்தமண்டபத்தையும், மகாமண்டபத்தையும் எழுப்பியுள்ள நகரத்தார்களின் சாதனையை எவ்வளவு போற்றினாலும் தகும். நகரத்தார் கலைப்பாணி தோன்றுவதற்கு இத்தகைய மாபெரும் சாதனைகள் அடித்தளமாக அமைந்து விளங்கக் காண்கிறோம்.

நடராசர் சபை

இச்சபை மகாமண்டபத்தின் வட திசையில் அமைந்துள்ளது. இதன் உட்பகுதி நீள்சதுர வடிவுடையது. உட்புறச்சுவரை ஒட்டியவாறு நீண்ட மேடை எழுப்பப்பட்டு அதில் நடராசர், சிவகாமி, மாணிக்கவாசகர் ஆகியோரின் உலோகத்திருமேனிகள் வழிபாட்டில் வைக்கப்பட்டுள்ளன. இச்சபையின் புறப்பகுதி ஏனைய கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபத்தை ஒத்த அமைப்புடையது. இருப்பினும் இங்கு அதிட்டான வரிகள் உள்ள குமுதப் படை, முப்பட்டைக் குமுதமாக அமைந்து விளங்கக் காண்கிறோம். அவ்வாறு சுவர்ப் பகுதியில் அமைந்துள்ள கோட்டங்கள், சிலைகள் பொருத்துவதற்கு ஏற்ற வகையில் அமையாமல் பொய்மையான கோட்டமாக எழுப்பப்பட்டுள்ளன. இதன் கபோதக வரியில் சிலைகள் பொருத்துவதற்கான பீட அமைப்பு இணைக்கப்படவில்லை.

Koviloor Digital Library

முகமண்டபம்

மகாமண்டபத்தின் முன்புறம் முகமண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் மகாமண்டபத்தைவிடத்தாழ்ந்தும் விதானங்கள் உயர்ந்தும் கவினுறக்காட்சி அளிக்கிறது. இம்முகமண்டபத்திலிருந்து கொண்டு சுவாமி சன்னதியும், அம்பாள் சன்னதியும் பள்ளியறையும் அடியார்கள் வணங்கும்வகையில் நன்கு திட்டமிட்டுக்கட்டடப்பட்டுள்ளன. முக மண்டபத்தின் இருபுறமும், இரண்டு வரிசைகளில் அணி ஒட்டிக் கால்கள் விதானத்தைத்தாங்கி நிற்கின்றன. இவ்வணி ஒட்டிக்கால்கள் வரிசைக்கு ஐந்து கால்கள் வீதம் இருவரிசைகளில் பத்துக்கால்களும், மேலும் முகமண்டபத்தின் முன்புறம் இரு கர்ணக்கால்களுமாகப் பன்னிரண்டு கால்கள் இம்மண்டபத்தை அலங்கரிக்கின்றன.

அணிஒட்டிக்கால்கள்

இக்கால்கள் ஒவ்வொன்றும் தாய்க்காலோடு பிள்ளைக் கால் இணைந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளன. தாய்க் காலையும் பிள்ளைக் காலையும் இடையே உள்ள மணி பாந்துடன் கூடிய தாமரைக்கட்டுகள் இணைக்கின்றன. தாய்க்கால் ஒவ்வொன்றும் அசுவபாதம், கால், கலசபந்தம் பட்டைக்கால், சதுரம், பட்டம், சதுரம், போதிகை ஆகிய பகுதிகளுடன் விளங்குகின்றன. அசுவபாதமானது உபானம், கண்டம்,கபோதகம், வியாளம் ஆகிய சிற்றுறுப்பு களைக் கொண்டும், அதன் மேலுள்ள பீடம், உபானம், பத்மம், கண்டம், விருத்த குமுதம், கண்டம், கபோதகம் வியாளம் ஆகிய உறுப்புகளைக் கொண்டும் விளங்குகிறது. இதன் மீதுள்ள கால் பகுதி மேலும் கீழும் நடுவிலும் சதுரமாக அமைந்து, இடையே உள்ள பத்தி 16 – பட்டை வடிவுடனும், எண்பட்டையுடைய இடைக்கட்டுகளுடனும், எளிய பட்டத்துடனும் செதுக்கப்பட்டுள்ளது. கீழேயுள்ள கால்களின் மேல்புறம் கலச பந்தமும், அதன் கோடிகளில்

Koviloor Digital Library

நாகபந்தமும் இடைக்கட்டோடு விளங்கக் காண்கிறோம். இத்தூண்களின் மீது இருதலைப் போதிகை மதலையுட னும் வனப்பூட்டுகின்றன. இத்தாய்த்தூணின் முன்னுள்ள பிள்ளைக்கால் அசுவபாதத்தின் மீதுள்ள பீடத்தின் மேல் சமஉயரத்தில் சிறிய அளவில் அமைந்துவிளங்குகிறது. இது கால், உடல், இடை, கலசம், தாடி, குடம், பத்ம பலகை, பலகை ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. பலகைமீது பெரிய மதலையும், அதன் மீது ஆலாங்கு பட்டரையில் குந்துசிம்மம் கம்பீரமாக காட்சியளிக்கிறது. சிம்மத்தின் தலைமீது நீண்டு செல்லும் கொடிவளையும், அதன்மீது முட்டிபந்தமும் நீண்டு வளைந்து செல்லும் நாணுதலும், பூமுனை யும் மதலையோடு அமைந்து பாவுக்கற்களுடன் இணைகின்றன. இவ்வாறு தாய்த்தூணை அணிசெய்யும் அணி ஒட்டிக்கால்கள் வேலைப்பாடு மிக்கனவாய் காண்போர் வியக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

மேல்சுற்றுப் பிரகாரம்

இக்கோவில் செயங்கொண்ட சோழீசுவரர், சௌந்திரநாயகி அம்பாள், பள்ளியறை, சண்டி கேசுவரர், பைரவர் ஆகிய சன்னதிகளைச் சுற்றி அடியார்கள் வலம்வரும் வகையில் மேல் சுற்றுப் பிர காரம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரகாரத்தின் தரைப் பகுதி. மகாமண்டபத்தைவிடத் தாழ்ந்தும், முக மண்டப மட்டத்திலும் அமைந்து விளங்குகிறது. பலகைக்கல் பாவப்பட்டுள்ள விதானமட்டம், முக மண்டபத்தை விடத் தாழ்ந்தும் ஒரேமட்டத்தில் சீராக அமைந்தும் விளங்குகிறது. மேல்சுற்றுப்பிர காரம் இரு பத்திகளாகப் பிரிந்து விளங்குகிறது. இச்சுற்றுப்பிரகாரத்தில் இரு பத்திகளிலும் அழகான சித்திரக்கால் தூண்கள் அலங்கரிக்கின்றன. தவிர

Koviloor Digital Library

மேல் சுற்றுப்பிரகாரத்தின் முகப்பில் திருச்சுற்றை ஒட்டி, தென்வடலாக வேலைப்பாடுமிக்க பெரும் சிற்பங்களைக் கொண்ட 6-கர்ணக்கால் தூண்கள் அலங்கரிக்கின்றன.

சித்திரக்கால்கள்

இச்சுற்றுப் பிரகாரத்தை அலங்கரிக்கும் தூண்கள் பெரும்பாலும் சித்திரக்கால் வகையைச் சேர்ந்த தூண்களாகும். சித்திரங்களால் கண்டிக்கப்பட்ட ஸ்தம்பம் 'சித்திரக்கால் ஸ்தம்பம்' என்றும், 'சித்திரக் கால்' என்றும், 'சித்திரத்தூண்கள்' என்றும் அழைப்பர். இச்சித்திரக்கால் ஒவ்வொன்றும் 40.செ.மீ×40.செ.மீ.×3.65.மீ. அளவுடையவை. இத்தூண்கள் மேலும் கீழும் நடுவிலும் சதுரமாக அமைந்து, இடையேயுள்ள பகுதி 16-பட்டை வடிவுடையதாக விளங்குகிறது.

இத்தூண்களின் கீழ்ப்பகுதி அசுவபாதமாகவும், கால்பகுதி அர்த்த சித்திரங்கள் சூழ்ந்தும், அதன் நான்கு மேல் மூலைகளிலும் நாகபந்தங்களும், நடுவே கலசமும் அமைந்து, கலசபந்தமாக விளங்குகிறது. கலசத்தின் மேலுள்ள 16- பட்டங்களைச் சுற்றிலும் எண் கோணமுடைய இடைப்பட்டமும், இடைக்கட்டும் மேலும் கீழும் நடுவிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதன் மேலுள்ள சதுரப்படையின் நான்கு பக்கங்களிலும் வட்டங்கள், விரிந்த தாமரை, முடிச்சிப் பூக்கள், மலர்கள், கொடிக்கருக்குகள், அடைப்புக்கருக்குகள், ஒருவரோடு ஒருவர் கைகளையும் கால்களையும் பற்றிச் சக்கரம் போல் சுழன்றாடும் நிலையில் வடிக்கப்பட்டுள்ள கழைக்கூத்தாடும் சிற்பங்கள், யாளி, சிம்மம், அன்னம் முதலிய விலங்கு மற்றும் பறவை இனங்கள் அலங்கரிக்கக் காண்கிறோம். அவ்வாறு

Koviloor Digital Library

மேலே உள்ள சதுரப்படைகளிலும் மலர்க் கொடிகள், கருக்குகள், மிருகங்கள், பறவைகள் ஆகியவை அர்த்த சித்திரமாக இடம்பெற்றுள்ளன. இத்தூணை அணிசெய்யும் போதிகை மதலை, வளைவு பூமுனை கள் ஆகிய உறுப்புகளைப் பெற்று, இருதலைப் போதிகையாக அலங்கரிக்கின்றன. இவ்விதம் இச்சுற்றுப் பிரகாரத்தைச் சுற்றிலும் 34-சித்திரக்கால்களும், அதன் முகப்பில் 6-கர்ணக்கால்களும், பக்கங்களில் 32-அணி ஒட்டிக்கால்களும் ஆக மொத்தம் 72-தூண் கள் அணிசெய்கின்றன.

திருச்சுற்றுப் பாதையிலிருந்து அம்மன்சன்னதி, நடராசர் சபை, தட்சிணாமூர்த்திக்குறடு, கோஷ்ட மாடங்கள், சண்டிகேசுவரர் சன்னதி ஆகிய சன்னதி களை அடைவதற்கு, மேல் திருச்சுற்றுப் பத்தியில் தெற் கிலும், மேற்கிலும், வடக்கிலுமாக ஐந்து வாயிற் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாயி லிலும் நான்கு படிக்கற்களைக் காணலாம்.

கல்லிலே வடித்த களிறுகள்

அம்மன் சன்னதிக்கு எதிரேயுள்ள வாயிலின் இரு புறமும், உருட்டுக்கட்டைகளைத் துதிக்கையில் பிடித்த வண்ணம், கம்பீரமான இருகளிறுகள் காட்சி அளிக் கின்றன. வலுவான கால்களையும், பெருத்த உடலையும், முறங்களை ஒத்த விரிந்தகாதையும், பருத்த மத்தகத்தையும், நீண்டு வளைந்த துதிக்கையையும் கூர்மையான கண்களையும், உறுதியான தந்தத்தையும், வளைந்து தொங்கும் வாலையும் கொண்டு கல்லிலே வடித்த களிறு கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. யானை யின் நெற்றியில் பட்டமும், கழுத்தில் சதங்கை கோத்த வாரும், மேலுடலில் வேலைப்பாடு மிக்க பட்டாடையும்

Koviloor Digital Library

இடையின் பின்புறம் இடைவாரும், வயிற்றில் கட்டப் பட்டுள்ள மணியும், காலில் சதங்கை கோத்தகாப்புடன் 60.செ.மீ. நீளமும், 47.செ.மீ. உயரமும் கொண்டு, இயற்கையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இவை சுவாமி சன்னதி வாயில்களை அலங்கரிக்கும் யானைகளின் அழகோடு ஒப்பிடத்தக்கன.

திருச்சுற்று பத்தித் தூண் சிற்பங்கள்

சித்திரக்கால் தூண்களுக்கும், அணி ஒட்டிக்கால் தூண்களுக்கும் இடையேயுள்ள மேல் திருச்சுற்றுப்பத்தியை வலம் வருவோமானால், கீழ்க்கண்ட சிற்பங்களைக் கண்டு களிக்கலாம். அவையாவன:

1. ஓங்கி அறையும் தாடக முத்திரையோடு தோன்றும் அனுமன்.
2. உழவாரப் படையோடு தோன்றும் அப்பர்.
3. யானைக்கு அருள்பாலிக்கும் சிவன்.
4. மானுக்குத் துளிர் கொடுக்கும் பிச்சாடனர்.
5. தண்டாயுதபாணி.
6. வாலைச் சுருட்டிப் பாயும் யாளி.
7. மனித உடலும் மிருகத்தின் கால்களும் கொண்ட புருஷாமிருகம்.
8. அம்பும் வில்லும் ஏந்தி நிற்கும் இராமபிரான்.
9. முன் கால்களை மடித்து நிற்கும் யாளி.
10. சூலத்தால் அசுரனை அழிக்கும் அக்னிவீரபத்திரர்.
11. அஞ்சலித்து நிற்கும் நகரத்தார்.
12. சங்கூதும் பூதகணம்.
13. கொடிக் கருக்குகளைப் பற்றி நிற்கும் யாளி.

Koviloor Digital Library

14. பிளந்த வாயுடன் சீறும் சிம்மம்.
15. கொடிக்கருக்கை நீண்ட துதிக்கையோடு பிடித்து நிற்கும் துதியாளி.
16. அரிவாளைப் பிடித்து நிற்கும் வீரன்.
17. இலிங்கத்திற்குப் பால் சொரியும் பசு.
18. இலக்குமணப் பெருமாள்.
19. யோக நரசிம்மர்.
20. மயில்வாகனன்.
21. தாடிதரித்த முனிவர்.
22. அஞ்சலித்து நிற்கும் அப்பர்.
23. அடைப்புக்கருக்கை அலங்கரிக்கும் இரட்டைக்கிளி.
24. மழுவும், மலரும் பிடித்து நிற்கும் உமையொருபாகன்.
25. மூன்று கால்களுடன் வணங்கிநிற்கும் பிருங்கிமுனிவர்.
26. தலமரத்தின் கீழுள்ள லிங்கம்.
27. கொண்டையிட்ட குறமகள்.
28. ஆழியும் சங்கமும் ஏந்தி நிற்கும் திருமால்.
29. ஓங்கிய கையுடன் தோன்றும் பூதகணம்.
30. மரத்தின்கீழ் தவம் புரியும் மாமுனிவர்.
31. மனித உடலும், பறவையின் இறக்கையும் கொண்ட கருடாழ்வார்.
32. கால்களையும் கைகளையும் தரையில் ஊன்றியுள்ள குந்து சிம்மம்.
33. அன்னத்தின் உடலும் மகரத்தின் வாயும் கொண்ட புராணப் பறவை.
34. உத்குடி ஆசனத்தில் அபயமளிக்கும் சிவன்.

Koviloor Digital Library

35. கதை ஏந்தி சூசி முத்திரைகாட்டும் துவாரபாலகர்.
36. சிம்மத்தின் தலைமீது ஏறி நிற்கும் யானை.
37. குறுவாளோடு தோன்றும் காவல் பூதம்.
38. நீலமேனி நெடியோன்.
39. கற்பக விருட்சத்தைப் பற்றியுள்ள மாமுனிவர்.
40. தாடி தரித்த புருஷாமிருகம்.
41. கைக்கூடையோடு தோன்றும் கன்னிகை.
42. சுவடி ஏந்திநிற்கும் மாணிக்கவாசகர்.
43. தாருகாவனத்துப் பத்தினியாளுடன் தோன்றும் பிச்சாடனர்.
44. சிம்ம முகத் திருவாசியுடன் வளப்பூட்டும் லிங்கம்
45. இலிங்கத்தை நாவால் நீவும் பசு.
46. கைவிரலைச் சுட்டி நிற்கும் ஞானசம்பந்தர்.
47. மாவிலைத் தேங்காயுடன் கூடிய கும்பகலசம்.
48. தாடிதரித்து வணங்கி நிற்கும் முனிவர்.
49. நீலோத்பலம் ஏந்திய அம்மன்.
50. காவடி தூக்கும் இடும்பன்.
51. மாறுபட்ட நிலையில் யோகம் செய்யும் நரசிம்மர்.
52. ஆலின்கீழ் அமர்ந்துள்ள அண்ணல்.
53. அவர் எதிரேயுள்ள ஜனகாதி முனிவர்.
54. சந்திரசேகரமூர்த்தி.
55. மான் மழு ஏந்தி நிற்கும் சிவபெருமான்.
56. சேவல்கொடியோன், தெய்வயானை.
57. குல்லாயுடன் தோன்றி ஆடும் கோமாளி.
58. அனுமனுக்கு உபதேசிக்கும் இராமபிரான்.

Koviloor Digital Library

59. மான்தலையும், மனித உடலும் கொண்ட கலைக் கோட்டு மாமுனிவர்.
60. துள்ளி ஓடும் கலைமான்.
61. தலையில் உருத்ராட்ச மாலையணிந்த அடியார்.
62. கழு ஏறும் இரு சமண முனிவர்கள்.
63. இரு கரங்களை உயர்த்தித் தொழும் துறவி.
64. தலமரத்தின் கீழுள்ள முகலிங்கம்.
65. குடையுடன் கூடிய வாமனர்.
66. ஆநிரையை மயக்கும் வேணுகோபாலன்.
67. மகுடி ஊதி பாம்பை மயக்கும் பண்டாரம்.
68. சஞ்சீவி மலையை ஏந்திவரும் அனுமன்.

ஆகிய நுட்பமான சிற்பங்களைக்காணலாம். இச்சிற்பங்கள் யாவும்உருவில் சிறியவை. காட்சிக்கு எளியவை. நகரத்தார் கலையை வெளிப்படுத்துபவை. உற்று நோக்கி, கண்டு களிக்கத்தக்கவை.

இவ்வாறு அணியொட்டிக்காலிலும், சித்திரக்காலிலும் அர்த்த சித்திரமாக அமைந்த இச்சிற்பங்களைத்தவிர, மேல் சுற்றுப்பிரகாரத்தின் முகப்பை அலங்கரிக்கும் கர்ணக் காலில் தாய்ச் சுவரிலும், எழில்மிகு சிற்பங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. வடக்கிலிருந்து தெற்காக அமைந்துள்ள தூண்களின் சதுரப்படையில் கீழ்க்கண்ட சிற்பங்களைக் காணலாம்.

1. மானும் மழுவும் ஏந்தி யானைக்குத் துளிர் கொடுக்கும் சிவன்.
2. கொடிக்கருக்கைப் பற்றியுள்ள முனிவன்.
3. காளை மீது அமர்ந்து காட்சியளிக்கும் சிவன்.

Koviloor Digital Library

4. நீலோத்பலம் ஏந்திநிற்கும் உமையன்னை.
5. அம்பும் வில்லும் ஏந்திநிற்கும் ரகுராமன்.
6. எதிரெதிரே சண்டை செய்யும் வாலி சுக்ரீவன்.
7. கைகளை உயர்த்தி சுட்டிக்காட்டும் அணங்கு.
8. பறையறையும் பணியாள்.
9. கைகோத்து நடமாடும் இரு ஆடவர்.
10. அரிவாளும் கதையும் கொண்டு நிற்கும் கருப்பசாமி.
11. அன்னத்தின் மேலிருந்து மலரம்பால் ஏவும் ரதி.
12. கிளிமீது அமர்ந்து கரும்பை வளைத்து அம்பெய்யும் மன்மதன்.
13. காளிங்க நர்த்தனன்.
14. வானுலகத்தில் பூச்சொரியும் கந்தர்வப்பெண்.
15. இலிங்கத்திற்குப் பால் சொரியும் பசு.
16. குதிரைமீது சவாரி செய்யும் மறவன்.
17. சீறும் புலியைக்கத்தியால் குத்தும் வீரன்.
18. வாலைத்தூக்கி, கையை ஓங்கிநிற்கும் அனுமன்.
19. யானைக்குத்துளிர் கொடுக்கும் சிவன்.
20. மழுவும் மானும் ஏந்தி நிற்கும் சிவன்—நான்முகன் – திருமால் ஆகிய சிற்பங்களைக் கண்டு களிக்கலாம்.

இச்சிற்பங்கள் யாவும் இம்மண்டபத்தை அலங்கரிக்கும் மூவகைத் தூண்களின் கால் பட்டத்திலும், இடைப்பட்டத்திலும் செதுக்கப்பட்டுள்ளன. இவை சைவம், வைணவம் ஆகிய சமயத்தைச்சார்ந்த சிற்பங்களாக விளங்குகின்றன. தவிர, தெய்வ உருவங்கள், மாமுனிவர்கள், அடியார், மானிடர்கள், மிருகங்கள், பறவைகள், மனித உடலும் மிருகத்தின் தலையும், மனிதத்தலையும் மிருகத்தின் உடலும்

Koviloor Digital Library

மாறிய நிலையில் அமைந்த முனிவர்கள், மலர்கள், கொடிக் கருக்குகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. குறிப்பாக சைவ சமயத்தைச் சேர்ந்த தெய்வ உருவங்கள், சிவன், தாருகாவனத்து முனிப் பெண்களை மயக்கும் பிச்சாடனர், மானுக்கும் யானைக்கும் துளிர் கொடுக்கும் சிவனது வடிவங்கள், யோகித்து நிற்கும் முனிவர்கள் போன்ற சிற்பங்களைக் காணலாம். பழநி தண்டாயுதபாணியின் உருவங்களே இத்தூண்களில் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறு, கையில் சுவடி ஏந்தி சின்முத்திரை காட்டும் மாணிக்கவாசகரது உருவங்களும் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளன.

வைணவ சமயத்தைச் சார்ந்த திருமால், யோக நரசிம்மர், காளிங்க நர்த்தனர், வேணுகோபாலன் ஆகியோரின் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. இராமாயணத் தொடர்புடைய சிற்பங்கள் சிலவும் இங்கு இடம் பெறறுள்ளன. குறிப்பாக அயோத்தி அண்ணல் இராமபிரான், இலக்குமணப் பெருமாள் ஆகியோர் அம்பும் வில்லும் ஏந்திய கோலத்திலும், இராம பிரான் அனுமனுக்கு உபதேசிக்கும் நிலையிலும், மற்றும் வாலி சுக்ரீவனது சண்டைக்காட்சியும் காணத்தக்கவை. மேலும், ரதி மன்மதனுடைய அழகிய சிற்பங்களும் இங்கு காணத் தக்கவையாக உள்ளன.

மதுரையம்பதியில் கழு வேற்றிய சமணர் இருவ டைய உருவங்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. அன்னம், கொக்கு, நாரை, மயில், கிளி ஆகிய பறவை இனங்களும், யானை, யாளி, சிம்மம், புலி, மான், பசு, நாய் ஆகிய மிருகங்களும் ஆங்காங்கே செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற் பங்கள் சுமார் 40 செ.மீ. உயரமும், 25 செ.மீ. அகலமும் உடையவை. சிற்பங்கள் யாவும் மிகவும் எளிமையாக சித்தி ரிக்கப்பட்டுள்ளன. நகரத்தார் கலையை வெளிப்படுத்தும்

Koviloor Digital Library

இச்சிற்பங்கள் யாவும், வைரவன்பட்டி, குன்றக்குடி ஆகிய பகுதியிலிருந்து கொண்டுவரப் பெற்ற வெள்ளைக் கற்களைக்கொண்டு செதுக்கப்பட்டுள்ளன. திருச்சுற்று

இக்கோயிலின் திருச்சுற்றை வலம் வருவதற்கு, நீண்டு அகன்ற திருச்சுற்றுப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இது மேல் சுற்றுப் பிரகாரத்திற்கும், திருச்சுற்று மாளிகைப் பத்திக்கும் இடையே நெடுக நீண்டு செல்கிறது. இது மேல் சுற்றுப் பிரகாரத்தின் தளவரிசையை விட, 85.செ.மீ. தாழ்ந்து விளங்குகிறது. இத்திருச்சுற்றுப் பாதை வழியே வலம் வருவோமானால், அம்மன் சன்னதி, நடராசர்சபை தட்சிணாமூர்த்தி குறடு, சுற்றுப்பிரகார மேல் பத்தி மற்றும், சண்டிகேசுவரர் ஆகியவற்றை அடைவதற்கு உரிய படிக்கட்டுகள் அமைத்து வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு திருச்சுற்று மாளிகைப்பத்தியில் நால்வர் மேடை அடைவதற்கும், சோமாசுகந்தர், செயங்கொண்ட விநாயகர், சுப்பிரமணியர், மகாலட்சுமி, நவக்கிரகமேடை, திருமாலை கட்டும் மண்டபம் ஆகிய பகுதிகளை அடையவும் உரிய படிக்கட்டுகள் அமைந்து காணப்படுகின்றன.

இத்திருச் சுற்றுப்பாதை கிழக்கு மேற்காக 51 மீட்டர் நீளமும், தென் வடலாக 30 மீட்டர் நீளமும் உடையது. இதன் சுற்றுப்பாதை கீழ்மேலாக 5.20 மீ. அகலமும், தென்வடலாக 4.85மீ. அகலமும் உடையது. இவ்விதம் இத்திருச்சுற்றைச் சுற்றிவர மொத்தம் 162 மீட்டர் நீளத்தில் பாதை அமைத்துள்ளனர். இது நகரத்தார்களது திட்டமிட்ட கட்டடக்கலை அமைப்பினைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

திருச்சுற்று மாளிகை

இத்திருச்சுற்றுப்பாதையை ஒட்டி, திருச்சுற்று

Koviloor Digital Library

மாளிகைப் பத்தி எழுப்பப்பட்டுள்ளது. இப்பத்தியின் நான்கு திசைகளிலுமாக மொத்தம் 65 தூண்கள் அலங்கரிக்கின்றன. இவற்றில் 6-தூண்கள் கர்ணக்கால் தூண்களாக அமைந்து, கம்பீரமாக இம்மண்டபத்தை உயர்த்திக் காட்டுகின்றன.

கர்ணக்கால்கள்

இத்தூண்கள் ஒவ்வொன்றும் திருச்சுற்று மாளிகைப் பத்தியின் மூலைகளிலும், மேல் சுற்றுப் பிரகாரத்தில் பத்தியின் கோடிகளிலும் 5.85 மீ. உயரத்தில் வானளாவ உயர்ந்து, விதானத்தைத் தாங்கி நிற்கின்றன. சதுரமாக அமைந்துள்ள இதன் தாய்க்கால் அசுவ பாதத்திற்கு மேல் மூலைகொடு பிள்ளைக்கால் விதம், நான்கு கோடிகளிலும் நான்கு கால்கள் அலங்கரிக்க, அதன் இருபுறங்களிலுமுள்ள உடற்பகுதியின் முன்புறம் 1.70 மீ. உயரமுடைய பெரும் தெய்வ உருவங்கள் காட்சியளிக்க, தாய்க்காலின் பலகைமீது விரிந்த மதலைகளும், மதலைகளில் இடையிடையே இசைக்கலைஞர்களும், நடன மாதர்களும், பூச்சிகளைப் பற்றும் உடும்புகளும், மதலைகளைக் கொய்யும் கிளிகளும், சீறும் சிம்மங்களும், குழல் ஊதும் தெய்வ உருவங்களும், சிற்பச் செறிவுடன் அழகு செய்ய, மதலை மீது உயர்ந்த ஆலாங்குபட்டரையும், அதன் மீது வலுவான உடலும், புடைத்த விலா எலும்புகளும், உறுதியான கால்களும், அவற்றின் மேல் வெளிப்படும் நரம்புகளும், கூர்மையான நகங்களும், நீண்ட பற்களும், பிளந்த வாயும், பருத்து உருண்ட கண்களும், புடைத்த நாசியும், அடர்ந்த பிடரியும் கொண்ட குந்து சிம்மங்களின் மூன்று உருவங்களும் அவற்றின் தலைமீது நெடுக நீண்டு வளைந்து செல்லும் கொடிவளையும், அதன் மீது நீண்டு வளைந்த நாணுதலும், பூமுனையும், முட்டிப் பந்தமும், மதலைகளும் அணிசெய்ய, இத்தூண் பாவுக்கற்

Koviloor Digital Library

களுடன் இணையும் காட்சி பார்ப்போரை வியக்க வைக்கும் வண்ணம் நகரத்தார் கட்டடக்கலையின் மாட்சியினை வெளிப்படுத்தி நிற்கின்றன. இதனை எழுவன் கோட்டைச் சிற்பிகளின் சீரிய ஆற்றலை அளவிடுவதற்கு, ஒரு சிறந்த இடமாகக் கருதலாம்.

இத்திருச்சுற்று மாளிகைப்பத்திகளில் 48-அணியொட்டிக் கால்கள் அலங்கரிக்கின்றன. இவை ஒவ்வொன்றும் 5.85.மீ. உயரமுடையவை. இதன் தாய்க்கால் பிள்ளைக் காலோடு இணைந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. தாய்க்காலின் சதுரப்படைகளின் மீது பல அழகிய சிற்பங்கள் அர்த்த சித்திரமாக அழகு செய்கின்றன. அவை முறையே.

1. காளியன் மீது ஆடும் நர்த்தன கண்ணன்.
2. கொடிக்கருக்கைப் பற்றி நிற்கும் யாளி.
3. கைகளை மேலே உயர்த்தி வணங்கும் முனிவர்.
4. ஏடு ஏந்தி நிற்கும் திருவாதவூரர்.
5. வேணுகானம் இசைக்கும் கோபாலன்.
6. சீறிநிற்கும் சிம்மம்.
7. அபயகரம் காட்டும் அரசன்.
8. அஞ்சலிக்கும் அடியார்.
9. கொடிக் கருக்கைப் பற்றி நிற்தும் அன்னம்.
10. பாம்பின் உடல் கொண்ட பதஞ்சலி முனிவர்.
11. சங்கு ஊதும் பூதகணம்.
12. மயில் வாகனன்.
13. பழநிமுருகன்.
14. அழகிய கொடிப்பெண்.
15. காளைமீது சாய்ந்து நிற்கும் ரிஷபவாகனர்.

Koviloor Digital Library

16. சின்முத்திரைகாட்டும் மாணிக்கவாசகர்.
17. சிலைவளவன் ரகுராமன்.
18. தண்டத்தைப்பிடித்து நிற்கும் தண்டாயுதபாணி.
19. புருஷாமிருகம்.
20. ஆனந்தத் தாண்டவமாடும் அம்பலவாணன்.
21. குல்லாய் தரித்து நிற்கும் கோமாளி.
22. கானகத்தில் பாய்ந்து செல்லும் புள்ளிமான்.
23. இசையால் ஆநிரையை மயக்கும் ஆயர்கோன்.
24. காவடி தூக்கும் இடும்பன்.
25. உத்குடி ஆசனத்தில் உபதேசிக்கும் தட்சிணாமூர்த்தி.
26. திருமகள் மணாளன்.
27. நிலமகள்.
28. சண்டிகேசுவரர்.
29. இராமபிரானை வணங்கி நிற்கும் அனுமன்.
30. தன் தலையை வாளால் கொய்து நிற்கும் மறவன்.
31. அம்பும் வில்லும் ஏந்தி நிற்கும் இலக்குவன்.
32. படகு ஓட்டும் குகன்-ஆகிய சிற்பங்கள் இத்தூண்களை அலங்கரிக்கின்றன. இத்தூண்கள் யாவும் கட்டடக்கலையின் சிறப்பு மிகுந்தும், சிற்பங்களில் செறிவு குறைந்தும் விளங்குகின்றன. இத்தூண் சிற்பங்கள் யாவும் நாயக்கர் சேதுபதி காலக் கட்டடக்கலையின் தொடர்ச்சியினைக் காட்டுவனவாக அமைகின்றன.

இங்குள்ள கம்பீரமான கர்ணக்கால் தூண்களும், சிற்பங்கள் நிறைந்த சித்திரக்கால் தூண்களும், நகரத்தாரால் போற்றி வளர்க்கப்பட்ட கட்டடக் கலையை அடையாளம் காட்டும் வகையில், தனித்தன்மையுடன் விளங்கக் காண்

Koviloor Digital Library

கிறோம். திருக்கோயில்களை முழுமையாகத் திருப்பணி செய்ய, பெருமளவில் திட்டமிட்டு, அத்திட்டத்தை உரிய கலைஞர்களையும், அறிஞர்களையும் கொண்டு ஊக்குவித்து, முறையாகச் செயல்படுத்தும் நாட்டுக்கோட்டை நகரத்தார் ஆற்றலை இவை தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

பரிவார ஆலயங்கள்

திருச்சுற்று மாளிகையின்மேல் திசையில் சோமாசுகந்தர், மேலேசுவரர், செயங்கொண்ட விநாயகர், சுப்பிரமணியர், மகாலட்சுமி ஆகிய தெய்வங்களுக்குத் தனிச்சன்னதிகள் எழுப்பப்பட்டுள்ளன.

சோமாசுகந்தர் சன்னதி

இது திருச்சுற்று மாளிகையின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இச்சன்னதி கீழ்த்திசையை நோக்கியுள்ளது. இது உபபீடம், அதிட்டானம், சுவர், கூரை கிரீவம், சிகரம்ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. அதிட்டானம் பாதபந்த அதிட்டானமாக அமைந்து விளங்குகிறது. குமுதகவரி முப்பட்டை உடையதாய்க் காட்சியளிக்கிறது. சுவரைச்சுற்றிலும் அரைத்தூண்கள் பல அலங்கரிக்கின்றன. வடக்கிலும் தெற்கிலும் உள்ள கோஷ்ட மாடங்கள் எளிமையான அமைப்புடையன. இச்சன்னதி வாயிலின் இரு புறமும் வட்டமான அரைத்தூண்கள் சட்டத்தலையுடன் அமைந்து அலங்கரிக்கின்றன. கூரையின் கபோதகத்தின் நடுவே கஜலட்சுமியின் உருவம் காட்டப்பட்டுள்ளது. சன்னதியை ஒருதளவிமானம் அலங்கரிக்கின்றது. சன்னதியில் பிரியாவிடையுடன் கூடிய சோமாசுகந்தர், தனியம்மன் ஆகிய தெய்வ உருவங்களின் உலோக வடிவங்கள் வழிபாட்டில் உள்ளன.

மேலேசுவரர்

சோமாசுகந்தர் சன்னதியை அடுத்த அறையில் லிங்க

Koviloor Digital Library

வடிவில் மேலேகவரர் உருவம் உள்ளது. இதன் ஆவுடையார் சதுர வடிவுடையது. இது பிற்கால பாண்டியர் காலத்தியது. இதன் வலப்புறம் மேலேசுவரியின் நின்ற கோலத்திருவுருவம் பேரழகு மிக்கது. இது தாமரை இருக்கையில் வலதுகாலை ஊன்றி, இடதுகாலைச் சற்று முன் வைத்து இடையை வலப்புறமாக ஒடித்து ஒயிலாக நிற்கும் கோலத்தில், வலக்கையில் நீலோத்பலம் பிடித்து இடக்கை தாழ்கையாகக் கொண்டு காட்சியளிக்கிறது. 1.25. மீட்டர் உயரமும், 30 செ.மீ. அகலமும் கொண்டு விளங்கும் இத்தேவியை 1907-இல் நடந்த முதல் திருப்பணியின் போது நகரத்தார்கள் பிரதிட்டை செய்துள்ளனர். இதன் வலப்புறம் தண்டாயுதபாணியும், இடம்புரி விநாயகரும் சிற்ப வடிவில் காட்சி அளிக்கின்றனர்.

செயங்கொண்ட விநாயகர்

திருச்சுற்று மாளிகையில் மேலேசுவரரை அடுத்து தென்புறம் விநாயகர் சன்னதி உள்ளது. சதுரமான கருவறையும் வெள்ளைக்கல் திருப்பணியுமான இச்சன்னதி சோமாசுகந்தர் சன்னதியை ஒத்த அமைப்புடையது. கருவறை நடுவே தாமரை இருக்கையில் வலது காலைக் குத்திட்டு இடதுகாலை மடித்து நான்கு கரங்களுடன்அமர்ந்த கோலத்தில் உள்ள இதன் தலையைக் கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. ஆனைமுகமும் சரிந்த வயிறும், வயிறு வரை நீண்டு இடம்புரியாக வளைந்து மோதகத்தைப் பற்றி நிற்கும் துதிக்கையும் நேரில் காணத்தக்கவை. அங்குச பாசமேந்திய மேற்கைகளைக்கடக முத்திரையில் கொண்டு, தந்தம் பிடித்த கீழ்வலக்கை முழங்கால்மீது அமைய இடக்கை இனிப்பு உருண்டையைப் பிடித்தவாறு காட்சியளிக்கிறது. பழமையான வடிவுடைய இச்சிற்பம் பிற்கால பாண்டியர் காலத்தியது.

Koviloor Digital Library

விசுவநாதர்

விநாயகர் சன்னதியை அடுத்துள்ள அறையில் மேடை மீது காசிவிசுவநாதர், விசாலாட்சி ஆகியோரின் தெய்வ உருவங்கள் வழிபாட்டில் உள்ளன. இதன் லிங்க வடிவுடைய விசுவநாதர் முன் நந்தி உள்ளது. இடப்புறம் சிறிய விநாயகரின் உருவமும், வலப்புறம் விஷ்ணு துர்க்கையின் உருவமும் வழிபாட்டில் உள்ளன.

துர்க்கையின் சிலை பழமையான தோற்ற முடையது. ஆழியும் சங்கமும் உட்புறம் சாய்ந்த நிலையில் கொண்டு வலக்கையால் அருள் பாலிக்கிறது. இடக்கை தொடைமீது ஊறு முத்திரையில் உள்ளது. தலையில் கரண்ட மகுடமும், காதில் மகரக் குழைகளும், கழுத்தில் பொட்டுமணி, கண்ட சரம், சரப்பளி, சரடு ஆகிய அணிகளும், தோளில் வாகு மாலையும், மார்பின் மீது கச்சையும், சன்ன வீரமும், தோளில் கேயூரமும், முன் கைகளில் மூன்று பெருவளையும், இடையில் முழங்காலுக்குக் கிழ்வரை கச்சையணிந்து, காலில் பட்டையான அணியும், பாதங்களில் சரமும் அணிந்து முகத்தில் இள நகைதவழ நேராக நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறது. இக்கோயிலின் பழமையினை உறுதிப்படுத்த உதவும் இச்சிலை கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சோழர்காலத்தியது. இது சோழமன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட நேமம் பழைய சிவாலயத்தின் வடதிசை அர்த்தமண்டப தேவகோட்டத்தை அலங்கரித்த சிலையாக இருத்தல் வேண்டும் எனத்துணியலாம். எனவே நகரத்தார் திருப்பணியின்போது நல்ல நிலையில் இருந்த இச்சிலையைத் திருச்சுற்று மாளிகையில் வைத்து வழிபட்டு வருகின்றனர். செயங்கொண்ட சோழிசுவரர் கோயிலின் பழமையினை உறுதிப்படுத்த உதவும் இச்சிலை, கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச்சார்ந்தது. சோழர் காலத்தியது.

Koviloor Digital Library

இதன் உயரம் 105.செ.மீ. அகலம் 25.செ.மீ. உடையது.

சுப்பிரமணியர் சன்னதி

திருச்சுற்று மாளிகையில் விசுவநாதரை அடுத்து சுப்பிரமணியருக்குத் தனிச்சன்னதி உள்ளது. இதுவும் ஏனைய பரிவார சன்னதிகளைப் போல் ஒத்த அமைப்புடையது. வெள்ளைக்கற்களைக் கொண்டு எழுப்பப்பட்டுள்ள இதன் கருவறைச் சுவரை, பல அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. அதன் கால்களில் பத்மாசனத்தில் யோகம் செய்யும் முனிவர், காளியின் மீது நர்த்தன மாடும் கண்ணன், ஆடையற்ற நிலையில் தோன்றும் மோகினி, கரங்களை உயர்த்தி வணங்கி நிற்கும் முனிவர், பால்கனியில் நிற்கும் பெண் உருவம், நீலோத்பலம் ஏந்திநிற்கும் அம்மன் ஆகிய அர்த்த சித்திரங்களைக் காணலாம்.

கருவறை நடுவே உள்ள சுப்பிரமணியர் வில்லேந்திய வேலராக மயிலின் முன்புறம் நிற்கும் தோற்றம் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

வில்லேந்திய வேலர்

வேலவரின் நான்கு கரங்களில் மேற்கைகள் இரண்டும் சக்திப்படையும், வச்சிரப்படையும் கத்தரி முத்திரையில் பற்றி நிற்கின்றன. கீழ்க்கைகளில் வலக்கை அம்பு ஏந்தும் பாவனையிலும், இடக்கை வில்லைப்பிடிக்கும் பாவனையிலும் காட்டப்பட்டுள்ளன. ஆயுதங்களைக் காட்டாமல் கைகள் காட்டும் முத்திரையிலேயே பாவனை வெளிப்படுத்தி நிற்கிறது. கரண்ட மகுடமும், ரத்தினப் பட்டமும், வட்டக்குழை, வாகுமாலை, முத்துவடம், சரப்பளி, கல்பதித்தமாலை, நீண்ட முத்துச்சரம், பூணூல், சன்னவீரம், உதரபந்தம், தொடைவரை இடைக்கச்சை, கழல், பாதசரம் ஆகிய அணிகள் முடிமுதல் அடிவரை அலங்

Koviloor Digital Library

கரிக்க, முகத்தில் இளநகை தவழ, மலர்ந்த கண்களோடும், அகன்று விரிந்த மார்போடும், திரண்ட உடற்கட்டோடும் தோன்றும் காட்சி வனப்பு மிக்கது. இவரது பின்புறமுள்ள மயிலும் அழகு மிக்கது. இது தன் கூர்மையான நீண்ட கால் விரல்களைப் பீடத்தில் பற்றிய நிலையில் கொண்டு கொண்டைக் கழுத்தை உயர்த்தி அலகினால் சிறிய பாம்பைப்பிடித்து நிற்கிறது. வேலைப்பாடு மிக்க அதன் தோகை அடங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளது. பீடம் முதல் முடிவரை 1.31மீ. உயரமும், 33.செ.மீ. தோள் அளவுமுடைய வில்லேந்திய வேலரின் இவ்வுருவம், பிற்காலப் பாண்டியர் காலத்தியது. இதன் காலம் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு ஆகும். காவிரிப்பூம்பட்டினத்து சாய்க்காட்டு சிவன் கோயில் வேலவரின் உலோகத் திருமேனியுடன் ஒப்பிடத்தக்கது. நேமம் பழைய சிவாலயத்தை அலங்கரித்த சிற்பங்களில் இதுவும் ஒன்று.

சோழர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட இக்கோயில், பிந்திய பாண்டியர்களின் திருப்பணியைப் பெற்றுத் திகழ்ந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இக்கற்சிலை ஒன்றே ஆகும். நகரத்தாரின் திருப்பணியின்போது வில்லேந்திய வேலரின் இரு தேவியரையும் செய்து வைத்துள்ளனர்.

காளி

இதனை அடுத்துள்ள அறையில் வட்டமாக மதிலைத் துளை செய்து, அதன்கீழ் பீடம் வைத்து, திரிசூலம், வேல், வெற்றிவாள் முதலியன சாத்தி வழிபட்டு வருகின்றனர்.

கஜலட்சுமி

திருச்சுற்று மாளிகையின் வடமேற்குப் பகுதியில் இச்சன்னதி அமைந்துள்ளது. கருவறை நீள்சதுர வடிவுடையது. அதன் நடுவே உள்ள மேடைமீது, கஜலட்சுமியும், அதன்

Koviloor Digital Library

இரு பக்கங்களிலும் எண்தோள் காளி, சரசுவதி ஆகியோரின் உருவங்களும் உள்ளன.

கஜலட்சுமி மேற்கைகளில் தாமரை மலரைப் பிடித்து, கீழ்க் கைகளால் அபயவரதமளிக்கிறது. அதன் இருபுறமும் இரு யானைகள் அமுத கலசமேந்தி நீர் சொரிகின்றன.

காளி தன் எண் கரங்களில் திரிசூலம், நாகம் சுற்றிய உடுக்கை, அங்குசம், பாசம், குறுவாள், கேடயம், வாள் கபாலம் ஆகிய ஆயுதங்களை ஏந்தி வலது காலைக் குத்திட்டு அமர்ந்த நிலையில், இடது காலால் அசுரனை மிதித்து அழிக்கிறது.

சரசுவதி தன் மேற்கைகளில் அக்கமாலையும், கெண்டியும் ஏந்தி கீழ் வலக்கையில் சின் முத்திரைகாட்டுகிறது. இடக்கை ஏடு ஏந்தி உள்ளது. அமர்ந்த கோலத்தில் உள்ள இச்சிற்பங்கள் அனைத்தும் இக்கோயில் முதல் திருப்பணியின் போது, நேமம் நகரத்தாரால் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளவை.

சண்டிகேசுவரர் சன்னதி

மேல் சுற்றுப்பிரகாரத்தின் வடதிசையில் சண்டிகேசுவரர்க்கு தனிச்சன்னதி எழுப்பப்பட்டுள்ளது. இதன் உபபீடம், அதிட்டானம், சுவர், கூரை ஆகிய பகுதிகள் எளிமையாக அமைந்து விளங்குகிறது. கூரையின் கபோதக முகப்பில் கஜலட்சுமியும் சுற்றிலுமுள்ள கூடுகளில் பல்வகைச் சிகரங்களும் அமைந்து அலங்கரிக்கின்றன. இடையிடையே கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் முறையே இந்திரன், திருமால், நான்முகன் ஆகிய தெய்வ உருவங்கள் வீற்றிருக்கக் காண்கிறோம். கூரையின் மீதுள்ள ஒருதள விமானம் சுதைச் சிற்பங்கள் நிறைந்து காணப்படுகின்றது. இதன் சிகரம் வட்டவடிவுடையது.

Koviloor Digital Library

சண்டிகேசுவரர்

சன்னதியின் நடுவே உள்ள சண்டிகேசுவரர் சிலை மிகவும் பழமையான வடிவுடையது. இவ்வுருவம் இடது காலை மடித்து வலது காலைத் தொங்கவிட்டு இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறது. சண்டிகேசுவரரின் வலக்கை நீண்ட கோடரியைப் பிடித்துள்ளது. தலையைச் சுருண்ட சடாபாரம் அலங்கரிக்கிறது. இரத்தினப்பட்டம், மகரக்குழை, வட்டக்குழை, தோள் மாலை, முத்துப்பட்டம், சரப்பளி, கல் பதித்த மாலை, பூணூல், வயிற்றுக்கச்சை, பூரிம முகப்புடைய தோள்வளை, கடகம், காப்பு, கைவளை, தொடைவரை இடைக்கச்சை, பக்கங்களில் சரிந்த ஆடைக்கட்டு, கழல், பாதசரம் அலங் கரிக்க, முகத்தில் இளநகை தவழ அமைதியான தோற்றத் துடன் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இவரது இடது மார்பை அலங்கரிக்கும் முத்தாலான பூணூல் கீழ்வயிற்றை அடையாமல் வலது முன் கையில் ஏறிச்செல்கிறது. தலைக் கோலம், உருவமைதி, ஆடை அணிகள், ஆயுதம், அமர்ந் துள்ள கோலம், பீடத்தின் அமைப்பு யாவும் கொண்டு இதனை கி.பி. 9 – 10 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் கலையாகக் கருதலாம். இச்சிலையின் உயரம் 65 செ.மீ. தோள் அகலம் 21 செ.மீ. ஆகும்.

பைரவர் சன்னதி

இச்சன்னதி மேல் சுற்றுப் பிரகாரத்தின் வடகிழக்குப் பகுதியில் மேல்திசை நோக்கியுள்ளது. இச்சன்னதி பீடம் முதல் கூரை வரை வெள்ளைக் கற்களைக் கொண் டும் மேலுள்ள விமானப்பகுதி செங்கல்லும் சுதையும் கொண்டும் எழுப்பப்பட்டுள்ளது. வாயில் முகப்பில் வேலைப்பாடுமிக்க தாரை வடிவுடைய அரைத்தூண்கள் சட்டத்தலையுடன் அலங்கரிக்கின்றன.

Koviloor Digital Library

பைரவர்

சன்னதி நடுவே தாமரை பீடத்தில் நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் பைரவரின் திருவுருவம் காணப் படுகிறது. அவரது இடப்புறம் பைரவரின் வாகனம் காத்து நிற்கிறது. பைரவரின் மேற் கைகள் உடுக்கையையும், ஆடும் நாகத்தையும் பிடித்துள்ளன. இடக்கைகள் நீண்ட திரிசூலத்தையும், கபாலத்தையும் கொண்டுள்ளன. இளம் பிறையுடன் கூடிய அனல் மகுடம் தலையிலும், மகரக் குழைகள் காதிலும், வட்டக்குழை இடக்காதிலும், கண்ட சரம், சரப்பளி கழுத்திலும், ஒற்றைமணி கோத்த சலங்கைவார் இடது தோளிலும், அரைஞாண் இடையி லும், மணிவார் தொடைமீதும், கழல்கள் காலிலும், பாதசரம் திருவடியிலும் அலங்கரிக்க அழகே உருவாய் ஆடையற்ற திருவுருவாய் பைரவர் உருவம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

சதுரமாக விரிந்த முகமும், நெற்றிக் கண்ணை உடைய அகன்ற நுதலும், நெளிந்த புருவமும், சீற்றத்தை வெளிக்காட்டும் திறந்த விழியும், புடைத்த நாசியும், கடைவாய்ப் பற்களோடு கூடிய திருவாயும், கொண்டு நேராக நிமிர்ந்து நிற்கும் பைரவரின் மேல் திசையில் பார் வைக்கு நேராக திருச்சுற்று மாளிகை மதிலில் வட்டமான துவாரம் காட்டப்பட்டுள்ளது.

இப்பைரவரின் உருவமைவும், பழமையான தோற்ற மும், உச்சப்பார்வையும், அணிகளின் தன்மையும், ஆயுதங் களின் அமைப்பும் கொண்டு, இதனைப் பிற்காலப் பாண் டியர் காலச்சிற்பமாகக் கருதலாம். கி.பி. 13 – ஆம் நூற் றாண்டைச் சார்ந்த இச்சிற்பம் நேமத்தை அடுத்துள்ள குன்றக்குடி குடைவரையில் காணப்படும் பைரவரின் உருவத்துடன் ஒப்பிடத்தக்கது. இவ்வுருவம் பீடத்துடன் 1.43. மீட்டர் உயரமும், பீடம் நீக்கி 1.13 மீட்டர்

Koviloor Digital Library

உயரமும் 31.செ.மீ. தோள் அளவும் கொண்டு சிற்பநூல் அளவுப்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

பள்ளியறைச் சன்னதி

இதனை முகமண்டபத்தின் வடபுறம் பைரவர் சன்னதியை ஒட்டி ஒரே உபபீடத்தின் மீது வழவழப்பான கருப்புக்கல்லில் எழுப்பியுள்ளனர். இது ஏனைய சன்னதிகளைப் போல் முறையாக அங்கங்களை பெற்றுத் திகழ்கிறது. அதிட்டான வரி முதல் கூரை வரை சிற்பங்களின்றி எளிய அமைப்பினையுடையது. கூரை முகப்பைக் கஜலட்சுமி உருவம் அலங்கரிக்கிறது. சன்னதியில் உள்ள பள்ளியறைக் கட்டில் மர வேலைப்பாடு கொண்டும் கண்ணாடித்துண்டுகள் ஒட்டியும், வண்ணக் கற்கள் பதித்தும் வனப்புடன் காட்சியளிக்கிறது. ஊஞ்சலில் பள்ளியறை அம்மனின் அமர்ந்த கோல உற்சவச்சிலை காட்சியளிக்கிறது. அதிகாலையில் தொடங்கும் திருவனந்தல் காலசந்தி ஆகிய காலங்களிலும், இரவு சந்தியின் போதும் பள்ளியறை திறக்கப்பட்டு பூசை நடைபெறுகிறது.

சுவாமிக்கோபுரம்

இக்கோயில் முதல் பிரகாரத்தின் திருச்சுற்று மதிலின் கீழ்த்திசை வாயிலாக சுவாமிக்கோபுரம் அமைந்துள்ளது. இக்கோபுரம் மூன்று நிலைகளை உடையது. இது உபபீடம் முதல் கலசம்வரை ஏழு பெரும் பகுதிகளைக் கொணடு விளங்குகிறது. உபபீடம் முதல் பிரஸ்தரம் வரை வெள்ளைக் கற்களைக் கொண்டும்,அதன் மேலுள்ளபகுதி செங்கல்லும் சுதையும் கொண்டும் எழுப்பப்பட்டுள்ளன. உப்பீடம் எளிமையான அமைப்புடையது. அதன் மேலுள்ள அதிட்டானம் பாதபந்த வகையைச் சேர்ந்தது. சுவர்ப்பகுதியின் இருபக்கங்களிலும், சட்டத் தலையுடன் கூடிய பாதத்தில் சிம்மத்தின் மீது ஒய்யாரமாக நின்று கொண்டிருக்கும்

Koviloor Digital Library

கொடிப் பெண்களையும், அதன் பக்கங்களில் இரு துவாரபாலகர்களையும் காணலாம். துவாரபாலகர்களின் பக்கச் சுவர்கள் எளிமையான அரைத்தூண்களைப் பெற்றுத்திகழ் கின்றன. இச்சுவர்ப் பகுதிக்கு மேல் வரும் பிரஸ்தரமானது எளிமையான தோற்றத்துடன் காட்சியளிக்கிறது. கூரைமீது இருஅடுக்குகளையுடைய சுவர்ப்பகுதி காட்டப்பட்டுள்ளது. இதன்கீழ் அடுக்கில் முனிவர்கள்புடைசூழ, வீணைவாசிக்கும் வீணாதர மூர்த்தி, உடுக்கையும் திரிசூலமும் ஏந்தி அருள் பாலிக்கும் சிவன், கஜலட்சுமி, உடுக்கையும் மானும் ஏந்தி அடியார்களுக்கு அருள் பாலிக்கும் சிவனது வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன. இரண்டாவது அடுக்கில் யானைக்கு மோட்சமளிக்கும் பெருமான், ரிஷபாருடர், உமையன்னை, அகோர வீரபத்திரர், அக்கினி வீரபத்திரர், உமையன்னையை ஊடல் தீர்க்கும் பிரான், சக்தியும் வச்சிரப் படையும் ஏந்தி அருள்பாலிக்கும் சுப்பிரமணியர், எண் திசைக்காவலர் ஆகியோரின் சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. இக் கோபுரத்தின் மூன்று நிலைகளிலும் கர்ணக்கூடு, அகாரை, பஞ்சரம், சாலை ஆகிய பகுதிகள் மாறிமாறி அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சாலையின்மேல் பிதுங்கிய நிலையில் மற்றொரு சாலை உயர்ந்து காணப்படுகிறது. இதனை 'ஏறுசாலை' என்றும், 'சொருகு சாலை' என்றும் கூறுவர்.

சுதைச் சிற்பங்கள்

முதல் தளத்தின் கிழ்த்திசையில் எருமைத்தலை அசுரனை அழிக்கும் மகிஷமர்த்தினி, பத்து கரங்களுடன் தோன்றும் வல்லபைக் கணபதி, அசுரனது தலையைத் தாங்கி நிற்கும் எண்தோள் ஈசன், வாளோடு தோன்றும் வீரன், துவாரபாலகர், நர்த்தனமாடும் காளி, ஆறுமுகப்பெருமான், அசுரனை அழிக்கும் எண்தோள் காளி ஆகிய சுதையாலான உருவங்கள்

Koviloor Digital Library

அலங்கரிக்கின்றன. மேல்திசையில் சாலையின் இரு புறமும் வாயில் காவலர்கள் காத்துநிற்க, பக்கங்களில் குறுவாளும், கேடயமும் ஏந்திநிற்கும் வீரர்களும் அஞ்சலித்துநிற்கும் அடியார்களும் காட்டப்பட்டுள்ளனர். அவ்வாறு தென்திசையில் சாலையின் முன்புறம் சுவடி ஏந்தி அருள் பாலிக்கும் தட்சிணாமூர்த்தியின் நின்ற கோலமும், அவரது பக்கங்களில் ஜனகாதி முனிவரும், தலையில் தலைப்பாகை அணிந்து அபயவரதமளிக்கும் முதியோனும், தாடிதரித்த பெரியோனும் காட்டப்பட்டுள்ளனர். வடதிசையில் சரசுவதி, சாவித்திரி ஆகிய தேவியருடன் தோன்றும் நான்முகனும், இடுப்பில் குடமேந்தி நிற்கும் குறத்தி, கற்றை மீசையுடன் தோன்றும் குறவன், வணங்கி நிற்கும் அடியார், மத்தளம் கொட்டும் கலைஞன் ஆகியோரின் சுதைச் சிற்பங்களைக் காணலாம். கூரையைத் தம் தோள்களில் தாங்கி நிற்கும் கோபுரம் தாங்கிகள், பல்வகையான மகுடங்களும் தலைப் பாகையும் தரித்து, கவர்ச்சியான மேலாடைஅணிந்து கழுத்திலும் மார்பிலும் உருத்ராட்ச மாலையையும், நீண்ட பதக்கங்களையும் பூண்டு மாறுபட்ட முகபாவத்துடன் காட்டப்பட்டுள்ளனர்.

இரண்டாவது தளத்தின் மேல்திசையில் சாலையின் பக்கங்களில் இரு வாயிற் காவலர்களும், குறுவாள் ஏந்திய வீரர்களும், மயிலேறும் முருகனும், இரணிய வதமும், கோபியர்களின் ஆடையைக் கவர்ந்து கொன்றை மரத்தில் நிற்கும் கண்ணனும், ஆடையற்ற நிலையில் ஆடை கேட்டு நிற்கும் கோபியர்களும் நாணத்துடன் காட்டப்பட்டுள்ளனர். வடதிசையில் தேவியர்சூழ் நான்முகன், வாளும் கேடயமும் ஏந்தி நிற்கும் வீரன், அனல் மகுடம் தரித்து நிற்கும் காளி, ஆகியோரின் சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. தென்திசையில் ஆலமர் செல்வன், இடையில் கௌபீனம் தரித்து நிற்கும் முனிவர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

Koviloor Digital Library

மூன்றாவது தளத்தின் மேல் திசையில் வாயில் காவலர், வாளோடு தோன்றும் வீரன், குழல் ஊதும் குழந்தைக்கண்ணன், ஆநிரையை மயக்கும் வேணுகோபாலன் ஆகியவையும், அதன் வேதிப் பகுதியில் நந்தியையும், சங்கூதும் பூதகணங்களையும் காண்கிறோம். கோபுரத்தின் சிகரப்பகுதி, நீண்டவண்டிக் கூரையை ஒத்த சாலைவடிவில் அமைந்துள்ளது. வடக்கு, கிழக்காக அமைந்துள்ள இச்சாலையின் இரு பக்கமும் மகாநாசி பேரழகோடு காட்சியளிக்கிறது. அந்நாசியின் நடுவே தாயும் சேயும் காட்டப்பட்டுள்ளனர். சாலையின் உடல் பகுதியைத் தொங்கு மாலைகள் அலங்கரிக்க, மேல் பகுதியைக் கட்டுமாலை, கண்ணாடிச் சட்டம் மற்றும் மகாபத்மம் ஆகியவை அழகு செய்கின்றன. அதன் மீது செம்பினாலான உலோகக் கலசங்கள் அலங்கரிக்கின்றன.

இராஜகோபுரம்

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
கோபுர தரிசனம் பாவ விமோசனம்'-போன்ற பழமொழிகள் தமிழகத்தில் வழங்கி வருகின்றன. இது கோபுரத்தின் சிறப்பையும், பெருமையையும் வலியுறுத்துவன. நேமம்கோயிலில் முந்தைய திருப்பணியின் போது சுவாமிக்கும் அம்மனுக்கும் உரிய கோபுரங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அண்மையில் 1991-இல் நடந்த குடநீராட்டு விழாவையொட்டி, இராஜகோபுரத்தைப் புதியதாக எழுப்பியுள்ளனர். இக்கோபுரம் இரண்டாம் திருச்சுற்றின் கீழ் வாயிலை அலங்கரிக்கிறது. இது சுமார் 66 – அடி உயரத்தில் கம்பீரமாக அமைந்து காட்சி அளிக்கிறது. இக்கோபுரம் ஐந்து நிலைகளைக் கொண்டு விளங்குகிறது. ஒவ்வொருநிலைகளிலும் சாலை, கர்ணக்கூடம், பஞ்சரம் ஆகிய பகுதிகள் மாறி மாறி அமைக்கப்பட்டுள்ளன. இக் கோபுரத்தின் சிகரப்பகுதியை கட்டுமாலை, கண்ணாடிச் சட்டம், மகா

Koviloor Digital Library

பத்மம், மகாநாசி, பாலிகை, அலுங்குகள், கலசங்கள் ஆகியன அலங்கரிக்கின்றன. மேலும் இக்கோபுரத் திருப்பணி காரைக்குடி திரு. பெ. சொக்கலிங்கம் செட்டியார் மற்றும் நேமம் நகரத்தார்களின் பெரும் முயற்சியால் எழுப்பப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

3. சௌந்தர நாயகி அம்மன் சன்னதி

செயங்கொண்ட சோழீசுவரர் கோயில் முகமண்டபத்தின் வடதிசையில் அமைந்துள்ளது. அம்மன் சன்னதி தென்திசை நோக்கியுள்ளது. இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. இச்சன்னதியின் எதிரே உள்ள மேல் சுற்றுப்பிரகாரம் அம்மன் சன்னதிக்கு முகமண்டபமாக அமைந்துவிளங்குகிறது. கருவறை சதுரவடிவுடையது. கருவறை நடுவே அம்பாள், சௌந்தர நாயகி என்ற பெயரில் வழிபாட்டிலுள்ளாள்.

சௌந்தர நாயகி

அம்மனின் திருவுருவம் தாமரைப் பீடத்தில் இரு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. அம்மனின் வலக்கை நிலோத்பலத்தைப் பிடித்தும், இடக்கை தாழ்கையாக அமைந்தும் விளங்குகிறது. அம்மனின் அடிமுதல் முடிவரை பாதசரம், காப்பு, முழங்காலுக்குக் கீழ்வரை இடைக் கச்சை, பூணூல், கல் பதித்த பதக்கம், முத்து வடம், மங்கலநாண், கைவளை, பூரிமம் பதித்த தோள் வளை, மகரக்குழைகள், கரண்ட மகுடம், சிரசக்கரம் ஆகிய அணிகளும், ஆடையும் அழகு செய்கின்றன. அருள் பாலித்து நிற்கும் சௌந்தர நாயகியை 1907-இல் நடந்த முதல் திருப்பணியின் போது நகரத்தார்கள் பிரதிட்டை செய்துள்ளனர்.

பழைய அம்மன்

திருப்பணிக்கு முன் நேமம் பழைய சிவாலயத்திற்குரிய தேவியைத் தற்போது அம்மன் சன்னதியின் மேற்திசையில் காணலாம். இவ்வுருவம் தாமரை இருக்கையின் மீது வலது

Koviloor Digital Library

காலை ஊன்றி இடது காலை முன்வைத்து இடையை வலப்புறம் வளைத்து ஒயிலாக நின்ற நிலையில் காணப் படுகிறது. அம்மனின் தலையைக் கரண்ட மகுடம் அலங் கரிக்கிறது. காதிலும், கழுத்திலும், கையிலும் அணிகள் பூண்டு, இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ் வரை ஆடை யுடுத்தி, இடையின் பக்கங்களில் ஆடைக்கட்டுகள் நீண்டு வனப்பூட்ட காட்சியளிக்கிறது. மெலிந்த உடலும், நீண்ட கரங்களும் கொண்டு பழமை வடிவுடையதாய்த் தோற்றமளிக்கும் இத்தேவி, பிந்திய பாண்டியர் காலத் தியது.

புற அமைப்பு

சௌந்தரநாயகி அம்மன் சன்னதி கருவறை வாயிலை சட்டத்தலையுடன் கூடிய இருவட்டமான அரைத்தூண் கள் அலங்கரிக்கின்றன. கருவறையின் புறச்சுவர்ப் பகுதி, சுவாமி சன்னதி கருவறை அமைப்பினை ஒத்து விளங்கு கிறது. இங்கு கோஷ்டமாடங்களின் கீழுள்ள கபோதக வரியில் சிலை பொருந்துவதற்கான பீடங்கள் சுவாமி சன்னதியைப் போல் வரியிலேயே இணைக்கப்படவில்லை. அவ்வாறு கருவறை அதிட்டான சுவரின் இடையே உள்ள அகாரையில் வாய் பிளந்த நிலையில் சட்டத்தலைகளுடன் கூடிய பஞ்சரக்கால்கள் அலங்கரிப்பதும் குறிப்பிடததக்க தாக உள்ளது.

கருவறை முன்புள்ள அர்த்த மண்டபம் தூண்களின்றி எளிமையான தோற்றமுடையது, இதன் வாயில் மகா மண்டப வாயிலைப்போன்று மணிச்சட்டங்கள் பதித்தும், சட்டத்தலையுடன் கூடிய செங்குத்தான வரம்புகள் வெட் டப்பட்டும் வனப்பூட்டுகிறது. வாயில் மேலுள்ள கூரையின் முகப்பை கஜலட்சுமியின் சிற்ப உருவங்கள் அலங்கரிக்கின் றன. கூரையின் கபோதகங்களின் இடையிடையே அம்ம னின் பல்வேறு வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக

Koviloor Digital Library

பிராமி, மகேசுவரி, இந்திராணி, வைணவி, கௌமாரி, வராகி, சாமுண்டி ஆகிய சப்த மாதர்களின் உருவங்கள் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றன. அம்மன் சன்னதி வாயிலின் இருபுறமும், துவார சக்திகள் இருவர் காத்து நிற்கின்றனர்.

அம்மன் கோயில் விமானம் வெள்ளைக் கல்லைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதன் விமானம் இரு தளத்தை உடையது. விமானத்தளத்தை கர்ணக்கூடுகளும், சாலைகளும், பஞ்சரங்களும் மாறிமாறி அலங்கரிக்கின்றன. இடையிடையே இறை உருவங்களும், பதுமைகளும், சிவ கணங்களும் அமைந்து அலங்கரிக்கின்றன. அவ்வாறு விமானத் பளத்தை விமானந் தாங்கிகளின் சுதை உருவங்கள் தாங்கி நிற்கும் காட்சி கண்டுகளிக்கத் தக்கது. இங்குள்ள சுதைச்சிற்பங்கள் வண்ணம் தீட்டி நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

4. நேமம் காளி

இப்பகுதியில் புகழ்பெற்ற தெய்வங்களில் நேமம்காளி குறிப்பிடத்தக்கது. அடங்காதிருக்கும் பெண்களை 'நேமம் காளிபோலஅடங்காப்பிடாரியாய் இருக்கிறாயே' என நேமம் காளியுடன் ஒப்பிட்டுப் பேசுவது வழக்கம். அந்த அளவிற்குப் பொது மக்களிடமும், நகரத்தார்களிடமும் மனதில் இடம் பெற்ற தெய்வமாக நேமம் காளி கருதப்படுகிறது.

அவ்வாறு மக்கள் தெய்வமாகப் போற்றப்படும் காளி, இங்கு உருவமின்றி சக்தி பீடமாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் பீடத்தினை நேமம் கோயில் இரண்டாம் பிரகாரத் திருமதிலின் பின்புறம் காணலாம். இக்காளி மிகவும் சீற்றமான தெய்வமாக இப்பகுதியில் கருதப்படுகிறது. பொதுவாக உச்சி வேளையில் பெண்களும், குழந்தைகளும் இங்கு செல்வதில்லை. காளிக்கு வைராவிகள் பூசை செய்து வருகின்றனர்.

தீபாவளிக்கு மஞ்சள் சிவப்பு வண்ணத்தில் பட்டுப் பாவாடை தைத்து பீடத்திற்குச்சாத்துவர். சிவராத்திரிக்கு நவதான்யங்களை அவித்து காளிக்குப் பச்சிலை பரப்பி வழிபடுவர். இதனைப் 'பச்சிலை பரப்புதல்' எனக்கூறுவர். தைப் பொங்கல் நாளில் பொங்கல் வைத்துப் படைப்பர்.

நேமம் காளிக்கு நேர்த்திக் கடனாக ஊரார் கிடாவை வாங்கி வைராவியிடம் கொடுப்பர். வைராவி குறிப்பிட்ட நாளில் கிடாவை இக்கோயில் பைரவர் சன்னதி முன் கொண்டுவந்து நிறுத்துவார். கிடாவிற்குத் தீபம் காட்டி மஞ்சள் நீர் தெளிப்பர். மஞ்சள் நீர் ஊற்றியவுடன் கிடாய் உடம்பு புல்லரித்து சிலிர்த்து நிற்கும். இதனை 'கிடாய் பிள்ளி காட்டுதல்' என்பர். கிடாய் தலையை ஆட்டி பிள்ளி கொடுத்தவுடன் அதனை முதல் பிரகாரத்திருமதில்

Koviloor Digital Library

மேற்புறமுள்ள துவாரத்தில் கிடாயைத் தூக்கி விடுவர். பின்புறத்தில் உள்ள மற்றொரு வைராவி ஏணியில் நின்று ஆட்டுக் கிடாவை வாங்கி இரண்டாம் பிரகார மதிலில் உள்ள மற்றொரு துவாரம் வழியாக வெளியே கொடுப்பார். கிடாய்த் தலையையும் முன் கால்களையும் வெளியே நீட்டியவாறு வெளிப்படும். அதனை வெளிப்பிரகாரத்தில் ஏணிவைத்து மீண்டும் வாங்கி காளி பீடத்தின் முன்பாக நிறுத்துவர். பின் வைராவி கிடாவை வெட்டி நேமம் காளிக்குப் பூசையிடுவார். கிடாயின் குருதி வெள்ளம் பலி பீடத்தில் தோய்ந்து நிற்கும். இந்நிகழ்ச்சி இரவு நேரங் களில் நடக்கும். பலியிட்ட கிடாவை, அங்கேயே சமைத் துப் பொங்கலிட்டு சாப்பிடுவர். எஞ்சி நிற்கும் உணவு களையும், பண்டங்களையும் வீட்டிற்கு எடுத்துச் செல்லாது அங்கேயே குழி தோண்டிப் புதைத்து விடுவர். இச் சடங்கில் வைராவி குடும்பத்துப் பெண்கள்கூட ஈடுபடுவ தில்லை.

இவ்விதம் கிராமப் பொதுவில் ஆட்டுக்கிடாயை வாங்கி நேமம் காளிக்குப் பூசை கொடுப்பது இன்றும் வழக் கமாக உள்ளது. இதனை 'கிடாய் சிறப்பு' எனக் கூறுவர்.

நேமம் காளி நித்தம் வாசம் செய்யும் இருப்பிடமான கோயில் மேற்திசையின் வெளிமதிலின் பின்புறமுள்ள பிடம் புனிதமாகக் கருதப்படுகிறது. இப்பகுதியில் பகலில் உச்சி நேரத்திலும், இரவு வேளையிலும், பெண்களும் குழந்தைகளும் நடமாடுவதில்லை. இக்காளிக்குரிய ஆயுதங் களான அரிவாள், ஈட்டி, திரிசூலத்தண்டு முதலியனவும் ஆடைகளுடையபேழையும் முதல் பிரகாரத்திலுள்ள துவா ரத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

5. நேமம் கோயில் சிற்பங்கள்

செட்டிநாட்டுப் பகுதியில் நேமம் கோயில் சிற்பங்கள் புகழ்பெற்றவை. இச்சிற்பங்களை நேமம் ஜெயங்கொண்ட சோழீசுவரர் கோயில் முகமண்டபத்தின் முன்புறத்தூண்களிலும், திருச்சுற்று மாளிகைப் பத்தியிலும் காணலாம். இங்கு அட்ட வீரட்டான மூர்த்திகளும், அவர்களது தேவியர்களும், விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோர்களது உருவங்களும் மிகப் பெரிய அளவில் இடம்பெற்றுள்ளன. இச்சிற்பவடிவங்கள் யாவும் ஒரேகல்லாலான கர்ணக்கால் மற்றும் அணிஒட்டிக்கால் போன்ற தூண்களின் முன்புறம் பக்கவாட்டிலும் பார்ப்போர் வியக்கும் வகையில் செதுக்கப்பட்டுள்ளன.

ஒரு நாமம், ஒருருவம், ஒன்றுமில்லாத இறைவன் நாம் உய்யும் பொருட்டுப பல்வேறு வகையான வடிவங்களைத் தாங்கி நம்மை ஆட்கொள்கிறான். ஆட்கொளளும் இறைவனின் வடிவங்கள மூன்று வகையின என்பர். அவை போகவடிவம், யோகவடிவம், வேகவடிவம் என்பனவாகும். உமாமகேசுவரர், சோமாசுகந்தர், இடபாருடர், இன்ன பிற திருவடிவங்களைப் போகவடிவமென்றும், தட்சிணா மூர்த்தியை யோகவடிவமென்றும், காலசம்காரமூர்த்தி, ஊர்த்துவதாண்டவமூர்த்தி, வீரபத்திரர் முதலான மூர்த்திகளை வேகவடிவமென்றும் கூறுவர். இவற்றில் நமது வாழ்வு இன்பம் நிறைந்து சிறப்படைய அருளுவது போக மூர்த்தியாகும். நமது மனம் உயர்ந்து ஞானவாழ்வு பெற அருளுவது யோக மூர்த்தியாகும். அவ்வாறு நாம் செய்யும் தீமைகளை அகற்றி ஆட்கொள்பவர் வேகமூர்த்தியாகும். இம்மூவகை மூர்த்திகளையும் நேமம் கோயிலில் சிற்பவடிவங்களில் கண்டு களிக்கலாம்.

Koviloor Digital Library

1. வல்லபைக்கணபதி

இக்கோயில் முகமண்டபத்தின் எதிரேயுள்ள திருச்சுற்று மாளிகை பத்தியில் முதல் தூணில் இச்சிற்பம் மேல்திசை நோக்கி வடிவமைக்கப் பட்டுள்ளது. தாமரைஇருக்கைமீது நிற்கும் மூசிக வாகனத்தில் கணபதி வல்லபையுடன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். வல்லபை, கணபதியின் இடது தொடைமீது அமர்ந்துள்ளாள். வல்லபையின் இடதுகை மலரைப்பிடித்தும், வலக்கை கணபதியின் இடையைப் பற்றியும் உள்ளன. விநாயகப் பெருமான் வல்லபையைத் தொடைமீது அமர்த்தி இடக்கையில் அணைத்தவண்ணம் காட்சியளிக்கிறார். கரண்ட மகுடம், பத்ரகுண்டலம், பதக்கம், மார்க்கச்சை, தோள்வளை, கைவளை, இடைக்கச்சை ஆகியன வல்லபையை அழகு செய்கின்றன.

வல்லபைக் கணபதி பத்துக் கரங்களில் பல்வகை ஆயுதங்களேந்தி காணப்படுகிறார். வலது கைகளில் முறையே சக்கரம். அம்பு, தந்தம், அங்குசம், மோதகம், மாதுளம்பழம் ஆகியவை உள்ளன. இடது கைகளில் முறையே தாமரை, வில், அல்லிமலர் ஆகியவற்றைக் கொண்டுள்ளார்.

வல்லபைக் கணபதியின் தலையில் கரண்ட மகுடமும் காதுகளில் செவிப்பூவும், நெற்றியில் முத்துப்பட்டமும் தொங்கும் தாமங்களும், துதிக்கையில் மணியும், கழுத்தில் கல்மணிகள் பதித்த பதக்கமும், முன்தோளில் கழுத்தணிகளின் குஞ்சமும், மேற் கைகளில் கற்கள் பதித்ததை யொத்த தோள்வளையும், முன்கையில் கல்மணிகள் கோத்த காப்பும், பெருத்த வயிறைச் சுற்றிலும் மெல்லிய உதரபந்தக் கச்சையும், இடதுதோளில் முத்துக்கள் கோத்த புரிநூலும், அரையில் மடிப்புடைய ஆடையும்,

Koviloor Digital Library

காலில் கல்மணிகள் கோத்த காப்பும், பாதங்களில் மெல்லிய பாதசரமும் வல்லபைக் கணபதியை வனப்பூட்டு கின்றன. மகுடம், நெற்றிப்பட்டம் கழுத்தணி, புரிநூல், கைவளை ஆகிய அணிகள் முத்துக்கள் கோக்கப்பட்டு அணி செய்கின்றன.

யானை முகத்தானின் நீண்ட துதிக்கை வனப்போடு சுருண்டு மேல் வயிற்றை அடைந்து இடம்புரியாக வளைந்துள்ளது. துதிக்கை முனை சிறிய மோதகத்தைப் பற்றியுள்ளது. விநாயகப் பெருமானின் தலையின் பக்கங் களில் இலை வடிவில் விரிந்துள்ள காதுகளும், பெருத்த மத்தகமும், அகன்ற தாள் வாயும், திறந்த கீழ் வாயும், இடப் புறத்தேயுள்ள கூர்மையான தந்தமும், வனப்போடு வளைந்த துதிக்கையும், அகன்ற தோளும், பெருத்த வயிறும், சதைப்பற்றுள்ள தடித்த கால்களும், அளவோடும் அழகோடும் அமைக்கப்பட்டுள்ளன. விநாயகரின் கூர்மை யான கண்களும், முழங்கால்களில் வெளிப்பட்டுள்ள எலும்புகளும், கால்விரல்களில் உள்ள நரம்புகளும் மிகக் கவனத்தோடு செதுக்கப்பட்டுள்ளன.

மூசிக வாகனம்

ஐயிருகரங்களுடன் வீற்றிருக்கும் விநாயகப் பெரு மானை மூசிகவாகனம் தன்மீது தாங்கி நிற்கும் பாங் கினை, அதன் கால்களைக் கொண்டு நாம் அறியும் அள விற்கு நுணுக்கத்தோடு நகரத்தார் காலச் சிற்பிகள் படைத்துள்ள பாங்கு போற்றுதற்குரியது. மூசிகத்தின் முகமும், கூர்மையான பற்களும், திறந்த வாயும், நீண்ட உடலும், வலுவான கால்களும், கூர்மையான நகங்களும், நீண்டு தொங்கும் வாலும், மிகக் கவனத்தோடு வடிக்கப் பட்டுள்ளன. மூசிக வாகனத்தின் வலப்புறம் பலாப் பழத்தைத் தலையிலேந்திய வண்ணம் சிவகணத்தின் உருவம் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு இத்தூணின்

Koviloor Digital Library

இடப்புறமுள்ள சதுரப்படையில் காம்புடன் கூடிய பெரிய பலாப்பழமொன்றை, இரு கைகளால் பற்றி, தலையில் தூக்கிய நிலையில் தோன்றும் பெரிய சிவகணம் ஒன்றும் காட்டப்பட்டுள்ளது.

விநாயகரின் தலைக்கு மேல்புறம் சரமாகத் தொடுத்த தொங்கும் பூமாலை வனப்போடு காட்டப்பட்டுள்ளது. வல்லபைக் கணபதியின் உருவை 1.50 மீட்டர். உயரமும், 0.70. மீட்டர் அகலத்துடனும் படைத்துள்ள, ஒன்பது நகரக் கோவில்களில் ஒன்றான மாத்தூர் ஐந்நூற்றீசுவரர் கோயிலில் உள்ள வல்லபைக் கணபதியின் உருவத்துடன் இவ்வுருவம் ஒப்பிடத்தக்கது. நகரத்தார் கலைத்திறனை வெளிப்படுத்தும் இச்சிற்பம், கி.பி.19 –ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

2. ஆறுமுகச்செவ்வேள்

இக் கோயில் முகமண்டபத்தின் முன்புறமுள்ள திருச்சுற்று மாளிகை வடதிசை கர்ணக்கால் தூணில் இவ்வுருவம் அமைந்துள்ளது. இங்கு பன்னிரு தோள்களில் பல்வகை ஆயுதங்களைப் பற்றி, மயில்வாகனத்தின் மீது வனப்புடன் வீற்றிருக்கும் ஆறுமுகச் செவ்வேளின் திருவுருவம், மேல் திசையை நோக்கி அமைந்துள்ளது. ஆறுமுகன் இடதுகாலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டு மயில்மீது அமர்ந்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளார். பன்னிருகரங்களில் வலக்கைகளில் முறையே மேலிருந்து கீழாகப்பெரிய அம்பு, வச்சிரப்படை, அம்பையொத்தகுறுவாள், அங்குசம், சக்கரம் ஆகிய ஆயுதங்களைக் கொண்டு வலது முன் கையால் அபயம் காட்டி அருள் பாலிக்கிறார். இடது கைகளில் முறையே பெருவில், சக்திப்படை, கேடயம், பாசம், தாமரைத்தண்டு ஆகியவற்றைப் பிடித்து, முன் இடக்கரத்தால் வரதமளிக்கிறார். ஆறுமுகனின் தலைகளை ஒரு

Koviloor Digital Library

வகைக் கரண்ட மகுடம் அலங்கரிக்கக் காண்கிறோம் நெற்றியில் பட்டமும், நீள் செவிகளில் குண்டலமும் கழுத்தில் மலர்ச்சரமும், விரிந்து வனப்பூட்டும் மலர்ப் பதக்கமும். மேற் கைகளில் கற்கள் பதித்ததை யொத்த தோள் வளையும், முன் கைகளில் முத்து வளையும், மேல் வயிற்றில் மெல்லிய உதரபந்தக் கச்சையும், இடது மார்பி லிருந்து கீழ்வயிறுவரை ஓடும் புரிநூலும், இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை ஆடையும், காலில் கல்மணிகள் பதித்த கழலும், பாதசரமும் அழகு செய்கின்றன. ஆறு முகப்பெருமானின் அமர்ந்த கோலமும், பன்னிரு கைகளும் ஆழ்ந்து அமைதியை வெளிப்படுத்தும் முகப்பொலிவும், நிமிர்ந்த மார்பும், விரித்த தோளும், அளவான அங்கங் களும், எழில் கூட்டும் இச்சிற்பத்தின் உயரம் திருவாசி யுடன் 1.50 மீட்டர், அகலம் 1.மீட்டர். இத்தகைய சிறு வேறுபாடுகளுக்கிடையே மாறுபட்ட கலை நுணுக்கத் தோடும், கலை வளத்தோடும் நகரத்தார் காலக்கலை மரபை அடையாளம் காணுமாறு இவை செதுக்கப் பட்டுள்ளன.

இச்சிற்பம் 1.20. மீட்டர் உயரமும், 0.35 மீட்டர் அகலமும் உடையது. எடுப்பான தோற்றமும் கொண்டு, ஆறுமுகனைச் சிற்பிகள் படைத்துள்ள பாங்கு போற்றுதற் குரியது. அறுமுகனைச் சுற்றிலும் வட்ட வடிவில் வனப் போடு திருவாசி அலங்கரிக்கிறது. தூண்களின் மீதுள்ள மகர வாயிலிருந்து திருவாசிகள் வெளிப்பட, அதன்மேல் முனையில் கீர்த்தி முகம் காட்டப்பட்டுள்ளது.

மயில் வாகனம்

பெருமானைத் தாங்கி நிற்கும் மயில் வாகனத்தின் சிற்ப அழகு இங்கு நேரில் கண்டு இன்புறத்தக்கது. வலு வான கால்களைத் தரையில் ஊன்றி நிமிர்ந்து நிற்கும் மயிலின் எடுப்பான தோற்றம் கண்டுகளிக்கத்தக்கது. வலப்

Koviloor Digital Library

புறம் வனப்போடு நீண்டுள்ள தோகையும், உறுதியான இறக்கைகளும், நீண்ட கழுத்தும் அம்மயிலை அழகு செய்யும் சதங்கைவாரும், உச்சிக் கொண்டையும், சிறிய கண்களும் கூரிய அலகும், ஆடும் அரவத்தை அலகினால் பற்றியுள்ள பாங்கும் இங்கு மிகக்கவனத்தோடு படைக்கப் பட்டுள்ளன. மயிலை மிக இயற்கையாகக் காணுமாறு படைத்துள்ள எழுவன் கோட்டை சிற்பிகள், ஆறுமுகப் பெருமானையும் மிக அற்புதமாக வடித்துள்ளனர்.

நகரத்தார் கோயில்களில் ஒன்றான மாத்தூர் கோயில் முகமண்டபத்து ஆறுமுகச் செவ்வேளுடன் இச்சிற்பம் ஒப் பிடத்தக்கது. மாத்தூரைப் போன்று, இங்கு ஆறு முகங் களும் காட்டப்படவில்லை. அச்சிற்பத்தின் பின்னழகில் தோன்றும் இடைவெளி இங்கு இல்லை. முன்புறத்தில் மூன்று முகங்களை மட்டும் காட்டி பின் முகங்களை இங்கு மறைபொருளாக்கியுள்ளனர்.

3. திரிபுரசுந்தரி

ஆறுமுகப் பெருமானின் இடப்புறம் சிவபெருமான் நான்கு கைகளில் ஆயுதம் பூண்டு, பார்வதி முன் போர்க் கோலம் கொள்ளும் காட்சி இங்கு சிறப்பாகச் செதுக்கப் பட்டுள்ளது. சிவபெருமான் தம் மேலிருகைகளில் மழுவும், மானும் தாங்கி நிற்கிறார். கீழ் இடக்கை நீண்ட வில்லைப் பிடித்துள்ளது. வலக்கை அம்பைப் பற்றியுள்ளது. தலையை நீள் சடைமுடி அலங்கரிக்கின்றது. வலது செவியில் மகரக் குழையும், இடது செவியில் சுருள் தோடும் பூண்டுள்ளார். கழுத்தில் மலர்ப் பதக்கமும், நீண்டு தொங்கும் மலர்ச்சர மும் அணிந்துள்ளார். மார்பில் பூணூலும், மேல் வயிற்றில் உதரக்கச்சையும் காட்டப்பட்டுள்ளன. மேற்கைகளில் கல் மணிகள் பதித்த தோள்வளையும், முன்கையில் காப்பும் அணி செய்கின்றன. இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ் வரை உடலையொட்டி ஆடைதரித்துள்ளார். இடையைச்

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE - 436846)




ஆறுமுகச் செவ்வேள், சிற்ப வடிவம்,
செயங்கொண்ட சோழீசுவரர் கோயில், நேமம்,
நகரத்தார் கலை

Koviloor Digital Library



மீனாட்சி கல்யாணம், சிற்ப வடிவம்,
செயங்கொண்ட சோழீசுவரர் கோயில், நேமம்,
நகரத்தார் கலை

Koviloor Digital Library



காலசம்கார மூர்த்தி, சிற்பவடிவம்,
செயங்கொண்ட சோழீசுவரர் கோயில், நேமம்,
நகரத்தார் கலை

Koviloor Digital Library

Koviloor Digital Library

சுற்றிலும் அரைக்கச்சையும், தொடைமீது தொடைமாலையும், கால்களில் கழலும், பாதசரமும், போர்க்கோலம் கொண்டுள்ள பெருமானை அழகு செய்கின்றன.

நீள் சதுர முகமும், விரிந்த நுதலும், உயர்ந்த புருவமும், எடுப்பான மூக்கும், திறந்த கண்களும், தன் எதிரேயுள்ள பார்வதியை நோக்கிய பார்வையும் மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன.

சிவபெருமான் நிற்கும் நிலை, முகத்திலே தோன்றும் பெருமிதமான பொலிவு, அங்கங்களின் அமைப்பு ஆடை, அணிகலன்களின் தன்மை யாவும் கவனத்தோடும், கலையழகோடும் வடிக்கப்பட்டுள்ளன. சிவபெருமான் தலைமீது தொடுத்த பூமாலைகள் வனப்போடு காட்சியளிக்கின்றன. இவ்வுருவம் 120. செ.மீ. உயரமும், 35. செ.மீ. அகலமும் உடையது.

4. பார்வதி

சிவபெருமானின் எதிரே உள்ள தூணில் பார்வதி போர்க் கருவிகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். பார்வதியின் மேல் வலக்கை அங்குசத்தையும், இடக்கை பாசத்தையும் பிடித்துள்ளது. கீழ் வலக்கையில் அம்பும், இடக்கையில் நீண்ட வில்லும் பற்றி, இடது காலை ஊன்றி, வலதுகாலை முன் வைத்து, அண்ணலின் முன்பு போர் தொடங்கும் நிலையில் உடலைத் திரிபங்கியாக வளைத்து நிற்கிறாள்.

பார்வதியின் தலையைக் கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. செவிகளின் மீது செவிப்பூக்கள் செருகப்பட்டுள்ளன. காதுகளில் வட்டமான ஓலைக் குழையும், கழுத்தில் பொட்டு மணியும், சரப்பளியும் அணிந்துள்ளார். பெருத்த தனங்களின் மீது மார்க்கச்சை இறுகக் கட்டப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

இரு தனங்களின் ஊடே புரிநூல் ஒடி கீழ் வயிற்றை அடைகிறது. தோள்களில் கற்கள் பதித்ததை யொத்த தோள்வளையும், முன் கையில் காப்பும், இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை, அலை அலையான மடிப்புகளுடன் கூடிய ஆடையும், இடையின் பக்கங்களில் சரிந்த ஆடைக்கட்டும், தொடைமீது வனப்பூட்டும் குறங்கு செறியும், தொடைமாலையும், கால்களில் அணி செய்யும் தண்டையும், பாதசரமும், பார்வதியை அழகு செய்கின்றன.

திரிபங்கத்தில் நிற்கும் பார்வதியின் உடலமைப்பு, குவிந்து ஒடுங்கிய முகப்பொலிவு, கோடிட்ட புருவங்கள், அழகிய நாசி, தெய்விகம் தவழும் மென்மையான உதடுகள் யாவும் எதிரேயுள்ள நீள்முடி அண்ணலின் பேரழகிற்கு ஈடுசெய்கின்றன. தன் எதிரே போர்க்கோலம் பூண்டுவரும் அண்ணலின் பேரழகையும், பெருமிதமான தோற்றத்தையும் நாணத்தோடு வியந்து நிற்கும் நிலையில் அன்னையின் அழகை வடித்துள்ளான் சிற்பி. இவ்வாறு அண்ணலின் எதிரே போர்க்கருவிகளை ஏந்தி, செயலற்று, தன்னை மறந்து அழகிய சிலையாக நிற்கிறாள். பார்வதியின் தலை மீது தொடுத்த மாலைகள் வனப்போடு காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் உயரம் 1.22. மீட்டர், அகலம் 0.72. மீட்டர் ஆகும்.

5. ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி

ஆலங்காட்டுக்காளி முன்பு சிவபெருமான் ஆடிய தாண்டவம் ஊர்த்துவ தாண்டவம். இத்தாண்டவச்சிற்பம் முகமண்டபத்தூணில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆடும் பெருமான், இடதுகாலை முயலகன் மீது வைத்து, வலது காலை மேலே உயர்த்தி எண் கரங்களை அதிரவீசி ஆடுகிறார். எண் கரங்களில் வலது கைகளில் முறையே மேலிருந்து கீழாக உடுக்கை, மழு, கத்தி, திரிசூலம் ஆகிய ஆயு

Koviloor Digital Library

தங்கள் காட்டப்பட்டுள்ளன. வலது முன்கை அபயமுத்திரையில் அருள் பாலிக்கிறது. இடது கைகளில் முறையே அனல், பாயும் மான், கேடயம், ரிஷபக் கொடி ஆகியன காட்டப்பட்டுள்ளன. முன் இடக்கை மார்புக்குக் குறுக்கே நீண்டு வேழ முத்திரை காட்டுகிறது.

மேலே தூக்கிய வலக்கால் முன்னிரு கைகளின் இடையே அமைந்து உயர்ந்து நிற்கிறது. சிவபெருமான் தலையை நீள் சடைமுடி அலங்கரிக்கிறது. மேற்காதுகளில் செவிப்பூக்க்ள் செருகப்பட்டுள்ளன. வலது காதில் மகரக்குழையும், இடது காதில் வட்டக் குழையிலிருந்து வெளிப்படும் நிலையில் மகரமும் அணி செய்கின்றன. கழுத்தில் பொட்டு மணியும், முத்துச்சரங்கள் கோத்த சரப்பளியும் வனப்பூட்டுகின்றன. தோள்களின் மீது கழுத்தணியின் குஞ்சங்கள் வீழ்ந்துள்ளன. மேற் கைகளில் இருவளையங்கள் தோள்வளையாக அணி செய்கின்றன. முன் கையில் காப்பும், சுண்டு விரலில் கல்பதித்த மோதிரமும் அழகு செய்கின்றன.

இடது தோளிலிருந்து புரிநூல் கீழ்வயிற்றை அடைகிறது. மேல் வயிற்றில் மெல்லிய உதரபந்தக்கச்சை காட்டப்பட்டுள்ளது. உந்திக்குழி, பிறை வடிவில் காட்சியளிக்கிறது. இடையிலிருந்து மேல் தொடை வரைத் தோலாடையும், இரு தொடை மீது மலர்கள் பதித்த தொடைமாலையாக அமைந்த இடைவாரும் வனப்பூட்டுகின்றன. இடையைச் சுற்றிலும் அரைக்கச்சை இறுகக் கட்டப்பட்டு, அதன் ஆடைக்கட்டுகள் பக்கங்களில் வனப்போடு விரிந்துள்ளன. இடது முழங்கால் மீது வீரமணியும், கால்களில் கல்மணிகள் கோத்த மெல்லிய பாதசரமும் ஆடும் பெருமானை அழகு செய்கின்றன.

Koviloor Digital Library

எண்கரங்களில் ஆயுதங்களேந்தி விசியாடும் பெருமானின் தோள்களின் இடையே மேல்கச்சை காட்டப் பட்டுள்ளது.

காரைக்கால் தாய்

அண்ணலின் வலப்புறத்தே பிறவா யாக்கைப் பெரியோனின் பாத மலரை நாளும் போற்றும் காரைக்கால் தாய் காட்டப்பட்டுள்ளார். அவரின் முதிர்ந்து தளர்ந்த கரங்கள் இரண்டும் தாளமேந்தி சிவபெருமானின் தாண்டவத்திற்கேற்ப இசைக்கக் காண்கிறோம். அவர் தளர்ந்த உடலும், தள்ளாடிய கால்களும், வற்றிய மார்பும், எலும்புருவாய் இடையில் கச்சணிந்து, முதுகில் கூன் விழுந்து தன்னை மறந்த நிலையில் காட்டப்பட்டுள்ளார்.

"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னடியை

மறவாமை வேண்டும்" என்னும்—பாடலை இங்கு நினைவு கூறும் வகையில், நகரத்தார் காலச்சிற்பிகள் அவரைத் தோற்றுவித்துள்ளனர். காரைக்கால் தாயின் முதுமையையும், முகத்தில் தோன்றும் தெய்வீக நிலையையும், அவரது விலா எலும்புகளையும் வெளிப்படுத்தியுள்ள சிற்பியின் திறன் இங்கு போற்றுதற்குரியது.

ஆடும் பிரானின் இடப்புறம் சிறிய மேடையின் மீது அமர்ந்து குடமுழா வாசிக்கும் சண்டியின் உருவமும் இங்கு காணத்தக்கது. சண்டியின் நான்கு கைகளில் முன்னிரு கைகள் குட வடிவிலுள்ள குடமுழா வாத்தியத்தைப்பற்றி இசைக்கின்றன. இவ்விரு கைகள் அண்ணலின் ஆட்டத்திற் கேற்ப இசையெழுப்ப, மேலிரு கைகள் அண்ணலின் ஆடலைக்கண்டு மேலே கூப்பி வணங்கி நிற்கும் நிலையில் உள்ளன.

காரைக்கால் தாயும், குடமுழா வாசிக்கும் சண்டியும் ஆடும் பெருமானின் அருகிலேயே காட்டும் வழக்கம்

Koviloor Digital Library

சோழர் காலத்திலிருந்து காணப்படினும், இங்கு நகரத்தார் காலச் சிற்பிகள் இவர்களைத் தனித் தன்மையுடன் வடித்திருக்கும் திறன் கண்டுகளிக்கத்தக்கது. ஆடும் பெருமானின் கீழ்வரிசையில் நந்திகணம் ஒன்று மத்தளம் வாசிக்கிறது.

நந்தியின் முகமும், மனித உடலும் கொண்டு விளங்கும் இவ்வுருவம் பின்கரங்களில் மழுவையும் மானையும் ஏந்தியுள்ளது. நந்தியின் கீழ்வரிசையில் 10.செ.மீ. உயரமுள்ள சிறிய சிவகணம் ஒன்று வளைந்த கொம்பு வாசிக்கும் நிலையிலுள்ள சிற்பமும் இங்கு காணத்தக்கது. இவ்வாறு சண்டி குடமுழா வாசிக்க, நந்திகணம் மத்தளம் கொட்ட, காரைக்கால் தாய் கைத்தாளம் போட, இசைக்கேற்ப ஊர்த்துவ தாண்டவம் ஆடும் சிவனின் பேரழகு போற்றுதற்குரியது. இவ்விசைக்கூத்தை விண்ணிலே கண்டு களிக்கும் கந்தர்வரும் வீணை மீட்டி நிற்கும் அரிய காட்சியைக் காணலாம். அண்ணலின் வலக்கரங்கள் ஒன்றில் ஆடும் அரவம் ஒன்று இணைந்து ஆடுகிறது. ஆடும் பெருமானோடு அவர் கரங்களிலுள்ள துடியும், மழுவும், மானும், கத்தியும், கிடுகும், சூலமும், நந்திக்கொடியும் இணைந்து ஆடுகின்ற ஒரு பிரமையை, இச்சிற்பம் காண்போருக்குத் தோற்றுவிக்கிறது.

அண்ணலின் பின்புறம் அழகிய திருவாசி ஒன்று கல்லிலே வடிக்கப்பட்டுள்ளது. அரைத்தூண்கள் மீதுள்ள மகரங்களின் வாயிலிருந்து வனப்போடு வெளிப்படும் நிலையில் வட்டவடிவில் அமைந்துள்ளது. அதைச் சுற்றிலும் ஒளிமயமான தீப்பிழம்புகள் மலர் வடிவில் அணி செய்ய, உட்புறம் முத்துத்தாமங்கள் இருவரிசையில் அலங்கரிக்க, நடுவே கீர்த்தி முகத்தோடு திருவாசி வெட்டப்பட்டுள்ளது இத்தூணின் முன்புறமும், பின்புறமும் உள்ள கற்களை எல்லாம் இடைவெளி தெரியுமாறு வெட்டியெடுத்து, மிக

Koviloor Digital Library

நுணுக்கமாகத் திருவாசியை மட்டும் நம் கண்முன் காட்டியுள்ள சிற்பியின் திறன் பாராட்டத்தக்கது.

ஆடுகின்ற அண்ணலின் இடது திருவடியின் கீழ் வீழ்ந்து கிடக்கும் முயலகன் தன் இருகரங்களில் வாளும், கேடயமும் பற்றியுள்ள நிலையில் காட்டப்பட்டுள்ளான். விரிந்த சடாபாரம் தலைக்கோலமாக அலங்கரிக்க; நெற்றியில் பொட்டும், முகத்தில் மீசையும், கழுத்தில் அணியும், கைகளில் வளையும், இடையில் மணிகள் கோத்த கச்சையும், காலில் காப்பும், பாதசரமும்அலங்கரிக்க, தலையைச் சற்றே நிமிர்த்தி முன்னோக்கிப் பார்க்கும் நிலையில், உருவம் வடிக்கப்பட்டுள்ளது.

ஒரு பெரிய கல்தூணில் ஆடும் பெருமானையும், நந்தி, சண்டி, காரைக்காலம்மை, திருவாசி ஆகியவற்றைக் குறிப்பிட்ட இடைவெளியோடு முறையாகச் செதுக்கியுள்ளதால், அச்சிற்பங்களிலும் ஆடும் பெருமானின் கரங்களிலும், நந்திக் கொடியிலும், சப்தஸ்வரங்கள் வருவதை இசைக் கலைஞர்கள் கண்டுகளிக்கலாம். இச்சிற்பத்தின் உயரம் நந்தி முதல், திருவாசிவரை, 2.25. மீட்டர், அகலம் – 1.00. மீட்டர்.

6. இடபாருடமூர்த்தி

முக மண்டப கர்ணக்காலில் ஊர்த்துவதாண்டவ மூர்த்தியின் இடப்புறம் இவ்வுருவம் காணப்படுகிறது. நந்தி வாகனத்தின் மீது நீண்ட இருக்கையில் சிவபெருமானும், உமையும் உமா சகிதராக கீழ்த்திசை நோக்கி அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கின்றனர்.

சிவபிரான் இடது காலை மடித்து, வலதுகாலைத் தொங்கவிட்டு, நான்கு கைகளுடன் சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். சிவனது வலது கால் ஆடும் அரவத்தின் மேல்

Koviloor Digital Library

அமைந்துள்ளது. சிவனது மேற்கைகள் மழுவையும் மானையும் பற்றியுள்ளன. கீழ்க்கைகள் இரண்டும், அபய வரத முத்திரையில் காக்கும் கையாகவும், வழங்கும் கையாகவும் காட்டப்பட்டுள்ளன. சிவனது தலையை நீள் சடைமுடியும், காதுகளில் மகரக்குழையும், கழுத்தில் சரப்பளியும், மார்பில் புரிநூலும் கைகளில் தோள்வளையும், காப்பும், இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை, இடைக்கச்சையும்,காலில் கழலும், பாதசரமும் அலங்கரிக்கின்றன.

சிவனது இடப்பக்கம் உமையன்னை சுகாசனத்தில் இரு கைகளுடன் அமர்ந்துள்ளாள். வலக்கை நீலோத்பலம் பிடித்துள்ளது. இடக்கை தொடைமீது அமைந்துள்ளது. தலையில் நீண்ட கரண்ட மகுடமும், காதில் மகரக்குழையும், ஓலைக்குழையும், கழுத்தில் மலர்ப்பதக்கமும், மார்பில் மார்க்கச்சையும், புரிநூலும்,மேல் வயிற்றில் உதரக்கச்சையும், இடையில் அலை அலையான ஆடையும் அணிந்து விளங்குகிறார்.

ரிஷப வாகனம்

சிவனும் உமையும் அமர்ந்துள்ள ரிஷபவாகனம் உருவில் பெரியது. இது கூர்மையான கொம்பும்,எடுப்பான முகமும், குழிந்த நாசியும், பக்கங்களில் விரிந்த காதும் சரிந்த தாடியும், நீண்ட உடல்வாகும், வலுவான முன் திலாவும், உறுதியான கால்களும், குளம்புகளும், நீண்ட வாலும் கொண்டு விளங்குகிறது. இதன் நெற்றியைச் சுற்றிலும் மலர்ப்பட்டமும், நாசியில் மூக்கணாங்கயிறும், கழுத்தில் கயிறும், மணிச்சரமும், வாரும், மாலையும், முதுகில் ஆடை விரிப்பும், பின்னுடலில் சதங்கைக்கோத்த இடைவாரும்,கால்களில் தண்டையும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. நீண்டு தொங்கும் நந்தியின் வாலை நீண்ட மீசைதரித்த மறவன் ஒருவன் கைகளால் பிடித்து நிற்கும்

Koviloor Digital Library

காட்சியும் இங்கு உற்று நோக்கத்தக்கது. மரவனின் உயரத்தைவிட, சிவபெருமானின் வாகனமான நந்தி எவ்வளவு உயர்ந்து நிற்கிறது என்பதை ஒப்பிடும் வகையில், இவ்வுருவம் இங்கு காட்டப்பட்டுள்ளது. தலையைச்சற்று இடதுபுறமாகத் திருப்பி, காதுகளைப்பக்கத்தில் விரித்துக் கொண்டு, சிவபெருமானின் ஆணையைக் கவனத்தோடு நோக்கி நிற்கும் நிலையில் அண்ணலையும், அன்னையையும் சுமந்து நிற்கும் காளை வாகனம் மிக இயற்கையாகச்செதுக் கப்பட்டுள்ளது. விஜயநகர, நாயக்கர்கால சிற்ப வரிசை யில் வைத்து எண்ணத்தக்கது என்றாலும், நகரத்தார் காலச்சிற்பிகள் இப்பகுதியிலுள்ள காளையை உய்த்து கல்லிலே சமைத்துள்ள பாங்கு கண்டு இன்புறத்தக்கது. முந்தைய சோழர், பாண்டியர் காலச் சிற்பங்களில் காட்டப் படாத மூக்குக்கயிறு நகரத்தார் கால நந்தியில் காட்டப் பட்டுள்ளதும், அணிகளின் தனித்தன்மையும் நகரத்தார் கலையை அடையாளம் காணச் செய்கின்றன.

இவ்வாறு ரிஷபவாகனத்தில் தம் தேவியோடு காட்சி யளிக்கும் சிவபெருமான், இடபாரூட மூர்த்தியாக வடி வமைக்கப்பட்டுள்ளார். இம் மூர்த்தியைச் சுற்றிலும் கல் லிலே வடித்த திருவாசி வனப்போடு காட்டப்பட்டுள்ளது ரிஷபாரூட மூர்த்தியின் பீடத்தில் நான்முகன் பறக்கும் இரு குதிரைகள் பூட்டிய தேரை ஓட்டி வருகிறான். பிரமனின் பின் கைகளில் அக்கமாலையும், கெண்டியும் உள்ளன. வீறுகொண்டு பாயும் புரவியைப் பிரமன் சாட்டை கொண்டு அடக்கி ஓட்டுகிறான். இச்சிற்பத் தொகுதியினை நேரிலே காணும்போது, விண்ணிலே தோன்றும் ரிஷபாரூட மூர்த்தியையே, நான்முகன் தன் தேரில் ஏற்றிவருவது போன்ற பிரமை ஏற்படுகிறது. இச்சிற்பம் திருவாசியுடன் உயரம் 2.25 மீட்டரும், அகலம் 1.00 மீட்டரும் உடையது

Koviloor Digital Library

7. ஆலங்காட்டுக்காளி – காளித் தாண்டவம்

சிவபெருமான் ஊர்த்துவத் தாண்டவ மூர்த்தியாக தோன்றும் சிற்பத்தின் எதிர்ப்புறம் ஆலங்காட்டுக்காளி எதிர்த்து நடனமாடும் உருவம் காட்டப்பட்டுள்ளது. வட திசை நோக்கிய திருவுருவாய் ஆலங்காட்டுக்காளி காணப் படுகிறாள். எண் கரங்களோடு காணப்படும் இத்தேவியின் வலது மேற் கரங்களில் அம்பு, சக்கரம், வாள், திரிசூலம் ஆகிய ஆயுதங்கள் உள்ளன. இடக்கரங்கள் முறையே மேலிருந்து கீழாக நாணுடன் கூடிய வில், சங்கு, கேடயம், கபாலம் ஆகிய ஆயுதங்கள் ஏந்திய நிலையில் காட்டப்பட் டுள்ளாள். கபாலம் ஏந்திய கையின் கீழ், சீற்றத்துடன் பட மெடுத்தாடும் பாம்பு ஒன்று காட்டப்பட்டுள்ளது.

இவளது தலையைச் சுற்றிலும் அனல் விட்டெரியும் சுவாலை மகுடம் ஒளிவீசுகிறது. நெற்றியில் பட்டமும், நீள் செவிகளில் வட்டக் குழையும், கழுத்தில் பதக்கம் கோத்த அட்டிகையும், முத்துக்கள் கோத்த சரப்பளியும், வனப்பூட்டுகின்றன. தனங்கள் மலர் முகப்புடைய மார்க்கச்சையால் இறுகக்கட்டப்பட்டுள்ளன. இரு தனங் களின் ஊடே ஆறாக ஓடிவரும் நிலையில் புரிநூல் காட் டப்பட்டுள்ளது. மேல்வயிற்றில் மெல்லிய உதரக்கச்சை கட்டப்பட்டுள்ளது. தோள்களில் இரட்டை வட தோள் வளையும், முன்கையில் பட்டையான கைவளையும். அணி செய்கின்றன. இடையிலிருந்து முழங்காலுக்குக்கீழ்வரை அலைவடிவான ஆடைகளைக் காண்கிறோம். இடைக் கச்சை இறுகக் கட்டப்பட்டுள்ளது. அதன் ஆடைக்கட்டு கள் பக்கங்களில் விரிந்து வனப்பூட்டுகின்றன. தொடை மீது தொங்கும் தாமங்களும், மலர்களும், மணிகள் கோத்த இடைவாரும், தொடைமாலையும் வீழ்ந்து வனப்பூட்டு கின்றன.

Koviloor Digital Library

கால்களில் கல்மணிகள் பதித்த கழலும், சதங்கை கோத்த பாதசரமும் அணிசெய்ய, வலது முன்காலை மடித்து ஊன்றி, இடதுகாலை நீட்டி முன்வைத்து, உடலை நான்காக நெளித்து, எண் தோள்களை அசைத்து விழித்த விழிகளில் அனல் கக்கும் நிலையில் ஆவேசம் கொண்டு நாசியைப் புடைத்து, புருவங்களை நெளித்து வாயின் பக்கங்களிலுள்ள கோரைப்பற்கள் வெளிப்பட ஆடுகின்றாள் காளி. இது நடமாடும் நல்ல திருக்கோலம்.

தன் எதிரே தலைக்குமேல், காலை உயர்த்தி ஆடும் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் ஆடலைத் தானும் ஆட இயலாது தோல்வியைப் பெண்மை ஏற்றுக்கொண்டாலும் அத்தேவியின் முகத்தில் ஒருவித சீற்றமும் சினமும் தோன்றி நிற்பதை நேரில் காண்கிறோம். ஆனால், இத் தேவியின் இடப்பக்கத்தில் நின்று அவளது முகத்தைச் சற்று உற்று நோக்குவோமானால், தோல்வியை ஏற்ற பெண்மையின் முகத்தில் ஒருவித நாணத்தின் சாயலைக் காணலாம். அவ்வாறு தன் தோல்வியைப் பெண்மை ஒப்புக் கொள்ளச் செய்த பெருமிதத்தைச் சிவனது முகத்தில் காணலாம். அத்தகைய நேர்த்தியான முறையில் இவ் வுருவம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆடும் காளியின் பின் புறத்தில் எழில்வாய்ந்த பிரபயைக் கல்லிலே நுட்பமாகச் செதுக்கிக் கலை வண்ணம் கண்டுள்ளனர். காளியின் திருவடியின்கீழ் நடமாடும் மங்கை ஒருத்தி காட்டப்பட்டுள்ளாள். அவ்வாறு அவளும் ஆட முயற்சிப்பதை இச்சிறிய சிற்பம் காட்டுகிறது. ஒப்பிட்டுக்காணும் வகையில் இதனைச் சிற்பி படைத்துள்ளான். மதுரை, தாடிக்கொம்பு, பேரூர் ஆகிய இடங்களிலுள்ள ஆடும் காளியின் சிற்ப வரிசையில் வைத்து எண்ணத்தக்க வகையில்-எழிலூட்டும் வகையில் இச்சிற்பம்

Koviloor Digital Library

அமைந்துள்ளது. இதுநகரத்தார் காலத்துக் சிற்பக்கலைக் குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இச்சிற்பத் தின்உயரம் 2. மீட்டர், அகலம் 0.90. மீட்டர் உடையது.

8. மீனாட்சி கல்யாணம்

இச்சிற்பம் முகமண்டபத்தின் தென்திசைத்தூணில் ஆடும் காளியின் வலப்புறத்தில் அமைந்துள்ளது. பாண்டிய நாட்டு மக்களால் போற்றிப் புகழப்பெறும் ஆலவாய் அழகரான சுந்தரேசப் பெருமான் மீனாட்சியம்மையைக் கரம்பற்றி மணக்கோலம்கொள்ளும் காட்சி இங்கு கல்லிலே வடித்த காவியமாகத் திகழ்கிறது. இச்சிற்பத் தொகுதியின் வலப்புறம் திருமால் ஆழியும் சங்கமும் பிடித்து, அழகராகத் தோன்றி தன் தங்கை பார்வதியைத் தாரை வார்த்து ஆல வாய் அழகரிடம் ஒப்படைக்கும் காட்சியைக் காணலாம். திருமால் நீலமேனி நெடியோனாக நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். மேல் வலக்கை ஆழியையும், இடக்கை சங்கத்தையும் பற்றியுள்ளன. கீழ் இடக்கையைத் தொடைமீது கொண்டு, வலக்கையால் புனித நீருடைய கெண்டியை யேந்தி மீனாட்சியின் வலக் கரத்தில் நீர் வார்க்கிறார்.

இடப்புறத்தில் அழகே உருவான அண்ணல் மணக் கோலம் பூண்டு நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் வலது திருக்கரம் நீட்டி, அன்னையைக் கரம் பற்றி ஏற்கி றார். ஆலவாய் அழகரது பின் கைகள் மழுவையும் மானையும் பற்றியுள்ளன. கீழ் இடக்கரம் மணக்கோலத் தைக் காண வந்த அடியார்களுக்கு ஆசி வழங்கும் கரமாக வரத முத்திரையில் அமைந்து அருள் பாலிக்கிறது. நீள் சடாமுடி, நெற்றிப்பட்டம், செவிப்பூ, மகரக்குழைகள், முத்துக்கள் கோத்த மலர் முகப்புடைய சரப்பளி, பொற்

Koviloor Digital Library

பூக்கள் கோத்த பதக்கமாலை, தோள்வளை, முத்துவளை, கேயூரம், புரிநூல், முழங்காலுக்குக் கீழ்வரை இடைக் கச்சை, தொங்கும் தாமங்கள், மலர் பதித்த இடைவார், தொடைமாலை, கல்பதித்தக் கழல்கள், பாதசரம் ஆகிய அணிகலன்கள் அண்ணலின் முடிமுதல் பாதம்வரை அலங் கரிக்கக் காண்கிறோம். சிவனின் விரிந்த நெற்றியில் மூன்றாவது கண் காட்டப்பட்டுள்ளது. உமையைக் கரம் பற்றுகிற பெருமிதத்தால் அவரது முகம் பேரெழிலோடு விளங்கக் காண்கிறோம். மலர்ந்த கண்களில் மகிழ்ச்சியும் இதழ்களில் இளமுறுவலும் பொங்கிப் பொலிவூட்டுகிறது.

ஆலவாய் அண்ணலுக்கும் அழகருக்கும் நடுவே முழு நிலவாய்த் தோன்றும் தேவி அண்ணலை மணக்கும் ஆனந்த பரவசத்தால் மலர்ந்த முகமும், முறுவலிக்கும் இதழும் கொண்டு, நாணத்தால் தன்னை மறந்த நிலையில் உடலை ஒடித்து ஒயிலாக நின்று தன்னை அண்ணலிடம் ஒப்புவிக்கும் மணக்கோலக்காட்சி திருக்கோலமாக விளங்கு கிறது. உமையின் வலக்கரம் அண்ணலின் கரத்துடன் இணைய, இடக்கரம் அல்லிமலரைப் பிடித்து நிற்கிறது. அன்னையின் முடியைச் செங்குத்தாகத் தூக்கி முடிந்த குந்தளம் என்னும் தலைக்கோலம் அலங்கரிக்கிறது.

பின் தோள்களில் வனப்புடன் வீழ்ந்துள்ள கேசங்களின் பக்கங்களில் மலர்ச்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. தலையின் இரு பக்கங்களிலும் சூரிய பிறையும் சந்திர பிறையும் செருகப்பட்டுள்ளன. நேர்வகிட்டில் நீண்ட தொய்யகம் அழகு செய்கிறது. செவிகளில் செவிப்பூக்கள் செருகப் பட்டுள்ளன. காதுகளில் நீலக்குதம்பை வனப்பூட்டுகிறது. கழுத்தில் மங்கல நாணான பொட்டுமணியும், முத்துக்கள் கோத்த சரப்பளியும் அணி செய்கின்றன. மேற்கைகளில் கற்கள் பதித்த கேயூரமும், முன்கைகளில் முத்துவளையும், விரல்களில் மோதிரமும் அழகு செய்கின்றன. அழகிய

Koviloor Digital Library

தனங்களின் நடுவே மலர் முகப்புடைய மார்க்கச்சையும், இரு தனங்களின் ஊடே மெல்லிய புரிநூலும், இடையி லிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை, அலை அலையான கீழாடையும் மெல்லிடையின் பக்கங்களில் சரிந்து வனப் பூட்டும் ஆடைக்கட்டும், இடையைச் சுற்றிலும் மலர் கோத்த இடைவாரும், தொடைமாலையும், கால்களில் தண்டையும், பாதசரமும், முடிமுதல் அடிவரை அணி செய்ய, அழகே உருவாகத் தோன்றுகிறாள்.

இச்சிற்பத் தொகுதியின் பீடத்தில் கல்யாண வைபவத்தை நான்முகன் குண்டத்தில் அக்கினி வளர்த்து நடத்தி வைக்கிறார். நான்முகனின் கரங்களில் அக்க மாலையும், கெண்டியுமுள்ளன. வலக்கரம் அபயகரமாகக் காட்டப்பட்டுள்ளது. நான்முகன் இரு பக்கங்களிலும் முகத்தில் தாடியும் மீசையும் தரித்து, தலையில் நீள்முடி யுடன் கூடிய இரு பெரியோர் வீணை முதலிய இசைக் கருவிகளைக் கையிலேந்தி அக்கமாலையை வலக்கைகளில் பற்றிய நிலையில் காட்டப்பட்டுள்ளனர்.

இம் மணக்கோலத்தின் பின்புறம் ஆலவாய் அண்ணல் வீற்றிருக்கும் மதுரையம்பதியின் தலமரமான கடம்பமரம் அடர்ந்த விருட்சமாகப் பூக்களுடன் பரந்துவிரிந்து காட்சி யளிக்கிறது. அண்ணலின் மணக்கோலத்தை விண்ணிலே காணவந்த கந்தர்வப் பெண் இரு கைகளிலும் நீண்ட மலர்மாலையை வனப்புடன் கொண்டு வணங்குகிறாள். இச்சிலையின் உயரம் 2.50 மீட்டர், அகலம் 1.10. மீட்டர் அளவுடையது.

9. சக்தி

முக மண்டபத்தின் முன்புறமுள்ள திருச்சுற்று மாளிகை யில் உள்ள தூணில் வல்லபைக்கணபதியை அடுத்து இச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. ஆறு கைகளுடன் நின்ற

Koviloor Digital Library

கோலத்தில் மேல்திசை நோக்கிய வண்ணம் இவ்வுருவம் அமைந்துள்ளது.

தாமரை இருக்கையின் மீது வலது காலைச்சற்று முன் வைத்து, இடையை வலப்புறமாக ஒடித்து, ஆபங்கத்தில் 6 - கரங்களுடன் நின்ற கோலத்தில் சக்தி காட்சியளிக்கிறாள். அன்னையின் வலது கரங்களில் முறையே சங்கு சக்கரம், நீலோத்பலம் ஆகியன உள்ளன. இடக்கைகளில் முறையே மேலிருந்து கீழாக விரிந்த பத்மம், கத்தி, தாமரை பொகுட்டு ஆகியவற்றைக் காண்கிறோம். அன்னையின் இடக்கரத்திலுள்ள தாமரைப் பொகுட்டினை அலகால் கவ்வுகின்ற நிலையில் கிளியின் உருவமொன்று காட்டப் பட்டுள்ளது. அம்மையின் விரல்களில் தம் காலைப்பதித்துக் கொண்டு பக்கத்தில் சாய்ந்த வண்ணம், கிளி தாமரைப் பொகுட்டினைக் கோதுகின்ற காட்சி எழிலூட்டுவதாக உள்ளது.

அல்லியும், தாமரையும் கையில் பிடித்து ஒயிலாக நிற்கும் அன்னை தன் எதிரே எண்கரங்களில் ஆயுதம் பூண்டு, நீண்ட வீணையை இசைத்தாடும் அன்னையின் கோலத்தை நின்றுகாணும்நிலையில்இச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேவியின் நீள்சதுர முகமும், கோடிட்ட புருவமும், மலர்ந் கண்களும், எடுப்பான நாசியும், குவிந்த உதடுகளும், நீண்டு மெலிந்த அங்கங்களும், அழகிய மார்பும் சிறுத்த இடையும்,பின்னழகின் பேரழகும் நேரில் கண்டு இன்புறத்தக் கவை.ரேகை ஓடிய கற்களைக் கொண்டு இச்சிற்பம் செதுக்கப்பட்டிருப்பதால்,இதன்கலையழகைமுழுமையாகத்துய்க்க இயலவில்லை. எனினும் அன்னை சக்தியின் மென்மையான கரங்களையும், கூர்மையான நகங்களையும், கால்களிலுள்ள நரம்புகளையும் கூட கவனமாகச் செதுக்கியுள்ள சிற்பியின் திறன் இங்கு உற்று நோக்கத்தக்கது. தேவியின் தலைமீது

Koviloor Digital Library

வீழ்ந்துள்ள பூமாலையும் வனப்புடையது. அம்மாலைகளைக் காட்டுவதற்காகவும், சிற்ப உருவைத் தூணின் முன்பு நிறுத்துவதற்காகவும் பின் புறங்களில் கற்களை இடைவெளியிட்டு ஒரே கல்லில் செதுக்கியுள்ள பாங்கும் கண்டு களிக்கத்தக்கது. இவ்வுருவம் பீடம் முதல் தலைமாலை வரை 1.90. மீட்டர் உயரமும், 0.85. மீட்டர் அகலமும் உடையது. நகரத்தார் கால கலையைச் சேர்ந்தது.

10. வீணையேந்திய பெருமான்

முகமண்டப முன்வரிசைத் தூண்களில் பார்வதி கல்யாணத்தை அடுத்துள்ள தென்திசைத்தூணில் இச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் எண்தோள்களில் மழு, மான், கத்தி, உடுக்கை, அக்கமாலை, சுவடி, இசைக் கோல், வீணை ஆகியவற்றையேந்தி ஆடுகின்ற பெருமானாக உள்ள சிற்பத்தை இங்குக் காணலாம்.

இவ்வாறு எண்தோள்களிலும் பல்வகை ஆயுதங்களேந்தி இடது காலைப் பின்வைத்து, வலதுகாலை வீசி முன் வைத்து, கைகளை பக்கங்களில் விரித்து அங்கங்களை நெளித்து வேகமாக ஆடும் பெருமானின் பேரழகினை இங்குக் கண்டு களிக்கலாம். பெருமானின் வலதுகைகளில் முறையே மேலிருந்து கீழாக நீள்மழு, வாள், அக்கமாலை, இசைக்கம்பு ஆகியவற்றைக் காணலாம். இடதுகைகளில் முறையே பாயும் மான், நாகம் சுற்றிய உடுக்கை, சுவடி ஆகியவற்றைக் காணலாம். நான்காவது கை நீண்ட வீணையைச் செங்குத்தாகப் பிடித்து மென்மையாக மீட்டி இசையெழுப்புகின்ற நிலையிலுள்ளது. வீணையின் அமைப்பும், அவ்வீணையில் அமைக்கப்பட்டுள்ள மென்மையான சுருதிகூட்டும் நரம்பும் இயற்கையாக அமைந்து காட்சியளிக்கின்றன. ஆடும் பெருமானின் பின்புறமுள்ள தூணிலிருந்து வெளிப்பட்ட பெரும் பாம்பு ஒன்று வீணையின் கீழ்ப்

Koviloor Digital Library

பகுதியைத் தன் மகுடத்தால் தாங்கி நிறுத்துவதும் இங்கு நேரில் காணத்தக்கது.

ஆடுகின்ற பெருமானின் கையிலுள்ள வீணையை அசைவின்றி ஒருமுகப்படுத்த பாம்பு தன் மகுடத்தால் தாங்கி நிறுத்தும் பாங்கினைப் பார்ப்போர் வியக்கும் வண்ணம் கல்லிலே படைத்துள்ளான் சிற்பி. காலில் கழலும், பாதசரமும் அணிந்து, திருவடிகளில் பாதக்குறடுகள் பூண்டு, இசையெழுப்பி ஆடும் பெருமானின் பேரழகினை நேரில் கண்டு லயித்த வண்ணம் எதிரேயுள்ள தூணில் தேவியின் திருக்கோலத்தைக் காணலாம். பண்காட்டும் இசையனான சிவனது இச்சிற்பவடிவினைக் காலையிலும் மாலை வேளை யிலும் அமைதியாக உற்று நோக்கினால் வீணையிலிருந்து வெளிப்படுகின்ற நாதம் நம்மைச் சூழ்ந்து நிற்பது போன்று ஒரு பிரமையை ஏற்படுத்தும்.

11. உக்கிரமூர்த்தி

முகமண்டபத்தின் முன்வரிசையில் தென்கிழக்கு மூலை யில் உள்ள தூணில் இச்சிற்பம் அமைந்துள்ளது. எண்கரங் களுடன் இடதுகாலை ஊன்றி, வலதுகாலை முன்வைத்து சீற்றத்துடன் தோன்றும் நிலையில் கிழ்த்திசை நோக்கிய வண்ணம் இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. உக்கிரமூர்த்தி யின் வலது கைகளில் முறையே மேலிருந்து கீழாக சக்திப் படை, வாள், கோடரி, திரிசூலம் ஆகிய ஆயுதங்கள் உள்ளன. இடது கைகளில் முறையே மழு, கேடயம், ஒலிக்கும் மணி, ஆடும் அரவம் ஆகியன உள்ளன. இதன் முன் வலக்கரத்தி லுள்ள திரிசூலமும், இடக்கரத்திலுள்ள நீண்ட அரவமும் குறிப்பிடத்தக்கவை. சுமார் 1. மீட்டர் நீளமும், 15.செ.மீ. சுற்றளவுமுள்ள படமெடுத்தாடுகின்ற பெரும் பாம்பைக் கையில் பிடித்துள்ளார். அதன் நீண்ட வால் தரையைத் தொடுகிறது. அது உக்கிர மூர்த்தியின் முகத்தின் பக்க வாட்டில் படமெடுத்து ஆடுகிறது.

Koviloor Digital Library

அவரது தலையின் மேல் நீண்டசடாமுடி அலங்கரிக்க தலையின் பின்புறம் இரு தோள்களிலிருந்து கொழுந்து விட்டெரியும் அக்கினி சுவாலைகள் அனல் வீசி சுடர்முடியாகக் காட்சியளிக்கிறது. செவிப்பூக்களும், மகர குண்டலங்களும், இரு காதுகளையும் அணிசெய்கின்றன. மலர் பதித்த பதக்கமும், கொன்றை மலர் அணிசெய்யும் சரப்பளியும் கழுத்தை அலங்கரிக்கின்றன.

கழுத்தில் கிடக்கும் கொடிய பாம்பு ஒன்று மார்பில் மாலையாக அணிசெய்கிறது. அது தன் வாலைச் சுருட்டி மடித்து முன்புறம் சீறி நிற்கிறது. இடது மார்பிலிருந்து கீழ் வயிறு வரை புரிநூல் ஓடுகிறது. மேல் வயிற்றில் மெல்லிய உதரக்கச்சையுள்ளது. மேற்கைகளில் இரட்டை வடத் தோள்வளையும், முன் கையில காப்பும், விரல்களில் மோதிரமும் அணி செய்கின்றன. இடையிலிருந்து மேல் தொடைவரை வட்டுடை வடிவில் இடைக்கச்சை வனப்பூட்டுகிறது. இடையைச் சுற்றிலும் அரைப்பட்டிகையும், இடையின் பக்கங்களில் முழங்கால்வரை சரிந்து தொங்கும் ஆடைக்கட்டும் காட்டப்பட்டுள்ளன. உக்கிர மூர்த்தியின் இரு மேல் தொடைகளின் மேலும் இரு கொடிய அரவங்கள் சுற்றியுள்ளன. நீண்ட வால்களால் தொடைகளைச் சுற்றியுள்ள நாகங்கள் சீறிப்படமெடுத்தாடுகின்றன. கால்களில் கற்கள் பதித்ததையொத்த கழல்களும், பாதங்களில் மெல்லிய சரங்களும் அணிசெய்கின்றன. இவ்வுருவத்தின் தலைமீது, தலைமாலை இரு பக்கங்களில் பிரிந்து வனப்போடு வீழ்ந்து அழகு செய்கிறது.

உக்கிரமூர்த்தியின் கையிலுள்ள ஆயுதங்கள் எல்லாம் கொடியன. அச்சம் தரும் வடிவுடையன. அவ்வாறு கழுத்திலும், கையிலும் தொடையிலுமாக நான்கு கொடிய அரவங்கள் காட்டப்பட்டுள்ளன. பரந்த அனல் மகுடமும், நீள்சதுர முகமும், நெளிந்த புருவமும், அகன்ற கண்களும்

Koviloor Digital Library

பருத்த விழிகளும், புடைத்த நாசியும், சற்றுப் பிளந்த வாயும், கடைவாய்ப்பற்களும் கொண்டு அனல் கக்கும் ஆவேசத்தோடும், சினத்தோடும், சீற்றத்தோடும் காட்டப் பட்டுள்ளன. நகரத்தார்காலச் சிற்பிகள் சீற்றத்தோடு படைத்துள்ள இவ்வுருவினைக்காணும்போது, கல்லிலே பல் வகை உணர்ச்சிகளை சிற்றுளியால் வெளிப்படுத்தும் சீரிய திறன் மிக்கவர்கள் என்பதை அறிய முடிகிறது. தலை மாலை முதல் பீடம்வரை இவ்வுருவம் 1.80. மீட்டர் உயரமும், 0·90. மீட்டர் அகலமும் உடையது. இது நகரத் தார்கலையாகும்.

12. உக்கிரசக்தி

முகமண்டபத்தின் எதிரேயுள்ள திருச்சுற்று மாளிகை பத்தியில் உக்கிர மூர்த்திக்கு எதிரே இவ்வுருவம் அமைந் துள்ளது. ஆறு கரங்களில் கொடிய ஆயுதமேந்தி சீற்றத் தோடு தோன்றும் இப்பெண்தெய்வம், வலது காலை தரையில் ஊன்றி, இடதுகாலை முன்நிறுத்தி உடலை முன்றாக ஒடித்து நிற்கிறது. இப்பெண் தெய்வத்தின் பின்னிரு கைகளில் சக்கரமும் சங்கும் கத்தரிமுத்திரையில் காட்டப்பட்டுள்ளன. நடு இரு கரங்கள் முறையே ஏர்க் கலப்பையும், மண்வெட்டியும், கடக முத்திரையில் பிடித் துள்ளன. முன் இரு கரங்களில் வலக்கரம் ஓங்கிய வாளை ஏந்தியுள்ளது. இடக்கரம் கேடயத்தைப் பற்றியுள்ளது. இத்தகைய ஆயுதங்களைப்பற்றி போர்க்கோலம் கொள் ளும் நிலையில் இதனை வடிவமைத்துள்ளனர்.

இப்பெண் தெய்வத்தைப் பாதசரம் திருவடியிலும், காப்பு காலிலும், தொடைமாலை தொடையிலும், இடை வார் இடையிலும், நீண்ட மடிப்புடைய இடைக்கச்சை கீழுடலிலும், புரிநூல் வயிற்றிலும், உதரக்கச்சை மேல் வயிற்றிலும், மார்க்கச்சை தனங்களின் மீதும், சரப்பளி

Koviloor Digital Library

மார்பிலும், மலர்ப்பதக்கம் கழுத்திலும், காப்பு முன் கையிலும், இரட்டைவடத் தோள்வளை மேற்கையிலும், கழுத்தணிக் குஞ்சங்கள் முன் தோளிலும், வட்ட மகரக் குழைகள் காதிலும், செவிப்பூக்கள் மேல் செவியிலும், மகுடம் தலையிலுமாக, பாதாதி கேசாந்தம் வரை அணி செய்யக் காண்கிறோம்.

நீள் சடா மகுடமும், வளைந்த புருவமும், நெற்றியிலுள்ள வட்டமான திலகமும், திறந்தகண்களும், கொட்டை விழி களும், புடைத்த நாசியும், கடைவாய்ப்பற்களும் கொண்டு ஆவேசத்தோடு போர்க்கோலம் கொள்ளும் நிலையில் இச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. பார்ப்போர் அச்சுறும் வகை யில் சிற்பிகள் கல்லிலே படைத்துள்ள பாங்கு போற்றுதற் குரியது. இதன் முழங்கால் எலும்புகளிலும், கால் நரம்பு, களிலும், கைவிரல் நகங்களிலும், அங்கங்களின் அசைவு களிலும், ஆயுதங்களின் அமைப்பு முறைகளிலும், சிற்பிகள் கொண்டுள்ள கவனம் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வுருவம் பாதம் முதல், தலைமாலை வரை 1.80. மீட்டர் உயரமும், பக்கங்களில் விரித்துள்ள கரங்கள் 75. செ.மீ. அகலமும் உடையது. இது நகரத்தார் கலையாகும்.

13. அக்கினிவீரபத்திரர்

இவ்வுருவம் முகமண்டபத்தின் எதிரேயுள்ள திருச்சுற்று மாளிகைப்பத்தியில் நான்காவது தூணில் அமைந்துள்ளது எண் தோள்களில் பல்வகை ஆயுதங்களேந்தி, சீற்றமுடன் தோன்றும் இவ்வுருவம் இடது காலை மடித்து ஊன்றி வலது காலை முன்வைத்து உக்கிரமாக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது.

இதன் வலது கைகளில் முறையே மேலிருந்து கீழாக முத்தலைச்சூலம், அரவம் சுற்றிய உடுக்கை, மழு, போர் வாள் ஆகிய ஆயுதங்கள் உள்ளன. இடக்கரங்களில்

Koviloor Digital Library

முறையே மேலிருந்து கீழாக கபாலம், பாசம், பாயும்மான், கேடயம் ஆகிய ஆயுதங்கள் உள்ளன. தலையில் நீள்சடா மகுடமும்,பின்புறம் விரிந்த அனல் மகுடமும் அலங்கரிக்கின்றன. பல்வேறு ஆயுதங்களைக் கைகளில் கொண்டு பார்போரை அச்சுறுத்தும் வகையில் ஆவேசமாகப் போர்க்கோலம் கொண்டு இவ்வுருவம் காட்சியளிக்கிறது.இவ்விதம் எண்கரங்களில் ஆயுதங்களேந்தி பருத்த விழிகளில் அனல் கக்கும் சீற்றத்தோடும், கட்டுக் கோப்பான உடல் கட்டுடனும் கம்பிரமாக இவ்வுருவம் விளங்குகிறது.

இவ்வுருவம் நீள்சதுர முகமும், விரிந்த கண்களும் பருத்த விழிகளும், நெளித்த புருவமும், புடைத்த மூக்கும் பிரித்த வாயும், கோரைப்பற்களும் கொண்டு சீற்றமுடன் படைக்கப்பட்டுள்ளது. இதன் நெற்றியில் மூன்றாவது கண் செங்குத்தாகக் காட்டப்பட்டுள்ளது.

வளைந்து நெளிந்த அங்கங்களின் அமைப்பும், பக்கங்களில் விரிந்துள்ள கரங்களும், முடியணியும், முகப்பொலிவும், ஆடை அணிகலன்களும் கொண்டு, இச்சிற்பத்தினை நகரத்தார் கலையென அறியலாம். இச்சிற்பத்தின் கீழ் ஸ்ரீ மன்மத சம்காரமூர்த்தி என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால், இது அக்னிவிர பத்திரரின் உருவமாதல் வேண்டும். இவ்வுருவம் பீடம் முதல் தலைமாலை வரை 2. மீட்டர் உயரமும், பக்கங்களில் விரிந்துள்ள கரங்கள் 0. 90. மீட்டர் அகலமும் உடையது. இது நகரத்தார் கலையாகும்.

14. எண்தோள்காளி

திருச்சுற்று மாளிகையின் தென்திசையில் வீரபத்திரரையடுத்து, காளியின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. தலையில் நீள்சடாமுடியும், பின்புறம் விரிந்த அனல் மகுடமும், காதுகளில் வட்டக்குழைகளும், கழுத்தில் மெல்லிய

Koviloor Digital Library

சரடும்,ஒற்றை மலர் பதித்த சரப்பளியும், தனங்களின் மீது மார்புக் கச்சையும், கைகளில் தோள்வளையும், காப்பும், மேல்வயிற்றில் உதரக்கச்சையும், இடையிலிருந்து முழங் காலுக்குக் கீழ்வரை அலைவடிவான பளுவான ஆடையும், இடையின் பக்கங்களில் நீண்ட ஆடைக்கட்டும், இடையைச் சுற்றிலும் இடைவாரும், தொடைமீது தொடைமாலையும், காலில் தண்டையும் பாதசரமும் தரித்து ஆடுகின்றாள். இவளது எண்கரங்களில் பல்வகைக் கொடிய ஆயுதங்கள் காட்சியளிக்கின்றன. வலது கரங்களில் முறையே, மேலி ருந்து கீழாக நாகம் சுற்றிய உடுக்கை, குறுவாள், அசுரன் திரிசூலம் ஆகியவற்றைக் காணலாம். இடது கரங்களில் முறையே பாசம், கேடயம், ரிஷபக்கொடி, கபாலம் ஆகிய ஆயுதங்கள் உள்ளன.

இவ்வாறு வலதுகாலைச் சற்று மடித்துத் தரையில் ஊன்றி, இடது காலை முன்வைத்து உடலை வளைத்து, எண் தோள்களில் ஆயுதம் தாங்கி உக்கிரமாகத் தோன்றும் தேவி, சிற்பியின் சீரிய கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இவ்வாறு மேற்கு நோக்கிய திருவுருவாய் எண்தோள் காளி காணப்படுகிறாள்.

மதுரைச் சிற்பத்துடன் இது ஒப்பு நோக்கத் தக்கது. ஆவேசத்தோடு ஆடும் காளியின் கால்களின் அசைவிலும், கரங்களின் வீச்சிலும் கூட இங்கு ஒரு நயத்தினையும், கலையினையும் காணமுடிகிறது. காளி அணிந்துள்ள ஆடை, அணிகலன்கள் யாவும் நகரத்தார் காலத்திய கலை வளத்தை வெளிப்படுத்துவன. இச்சிற்பம் பீடம் முதல் தலைமாலைவரை 2.மீட்டர் உயரமும், பக்கங்களில் விரிந் துள்ள கரங்கள் 0.90. மீட்டர் அகலமும் உடையது. நகரத் தார் கலையைச் சேர்ந்தது.

Koviloor Digital Library

15. காலசம்கார மூர்த்தி

மிருகண்ட ரிஷிக்கும் அவரது பத்தினி மனஸ்வினிக்கும் சிவபெருமானின் அருளால் தோன்றிய 16 – வயது நிரம்பிய மார்க்கண்டேயருடைய உயிரைக் காக்க வேண்டி சிவபெருமான் சீற்றத்துடன் இலிங்கத்திலிருந்து வெளிப் பட்டு இறப்புக்கடவுளான காலனைத்தம் காலால் உதைத்து சம்காரம் செய்யும் சிவனது வடிவினைக்கால சம்கார மூர்த்தி என்பர். இத்தகைய சிற்பம் இக்கோயில் திருச் சுற்று மாளிகையின் வடதிசையிலுள்ள பெரும் தூண் ஒன்றில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தொகுதியில் சிவலிங்கம், லிங்கத்தை பூசை செய்யும் மார்க்கண்டேயன், மார்கண்டேயனைத் தன் பாசக்கயிற்றால் எறிந்து அவனது உயிரைக்கொண்டு செல்ல எருமை மீது வரும் காலன், அக் காலனைத் தன்காலால் உதைத்து அழிக்க விரையும் அண்ணல் ஆகியோரின் உருவங் களைக் காணலாம்.

பதினாறு வயது வரைதான் இருக்க முடியும் என்பதை அறிந்து கொண்ட மார்க்கண்டேயன் அப்பிடியிலிருந்து விடுபட, இறைவனது பல்வேறு திருத்தலங்களுக்குச்சென்று நாள்தோறும் பூசை செய்து, 16-வயது நிறைவடையும் நேரத்தில் திருக்கடையூர் அடைந்து அங்கு இலிங்கவடிவில் எழுந்தருளியுள்ள இறைவனைத் தனது இரு கைகளால் தொட்டு வணங்கி உயிர்ப்பிச்சைக் கேட்டு வேண்டிநிற் கிறான். ஆனால், இறப்புக் கடவுளான எமனே16-வயதுக்கு மேல் மார்க்கண்டேய ஆயுளை நீட்டிக்க இயலாது என்பதால், அவனது உயிரை எடுத்துச் சென்று, தன் தலை வனிடம் சேர்க்க தனது கைகளில் பாசக்கயிறோடும், கதை யோடும், எருமையின் மீது அமர்ந்து ஆலயத்தை அடை கிறான். அங்கு லிங்க உருவை இருகைகளாலும் தழுவி நிற்கும் மார்க்கண்டேயனைக் காண்கிறான். நேரமறிந்து

Koviloor Digital Library

தன் இடது கையிலிருந்த நீண்ட பாசக்கயிற்றை மார்க்கண்டேயன் மீது எறிந்து, அவனது உயிரை எடுத்துச் செல்ல முனைகிறான். மார்க்கண்டேயன் மீது எறிந்த பாசக்கயிறு இலிங்கத்தின் ருத்திர பாகத்தைச் சுற்றி அணைந்துவர, பக்தனைக்காக்க வேண்டி சிவபெருமான் சீற்றத்தோடு வெளிப்படுகிறார்.

சிவன்

நான்கு கைகளில் ஆயுதம் பூண்டு, இடதுகாலைத் தரையில் ஊன்றி, வலது காலை மேலே தூக்கி, காலனது மார்பை நோக்கிக் குறிவைத்து அழிக்கும் பாவனையில் சிவபெருமான் வெளிப்படும் தோற்றம் பார்ப்போரை வியப்பில் ஆழ்த்தும்.

சிவன் மேற்கைகளில் மழுவும், மானும் ஏந்தியுள்ளார். கீழ் இடக்கை கபாலத்தைத் தாங்கியுள்ளது. முன் வலக்கை திரிசூலத்தைப்பிடித்து, காலனை சம்காரம் செய்யும் நிலையில் அவனது முகத்தை நோக்கி ஓங்கிய கரமாகக் காட்டப்பட்டுள்ளது.

சிவபெருமான் தலையில் சடாமகுடமணிந்து, காதுகளில் மகரக்குழை தரித்து, முகத்தில் மூன்று கண்களோடு ஆவேசத்தோடு காட்சியளிக்கிறார். பரந்த முகமும், உயர்ந்த புருவமும், திறந்த விழிகளும், சீற்றமுடன் கீழ் நோக்கிய பார்வையும், எடுப்பான நீண்ட நாசியும், சற்று குவிந்து விரிந்தவாயும், அங்கங்களின் அசைவும், ஆயுதங்களைப் பிடித்துள்ள தன்மையும், தூக்கிய காலில் தோன்றுகிற வேகமும், உறுதியான உடற்கட்டும், கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. மேலும் உடலில் மகரக்குழைகள், மலர்கோத்த பதக்கம், சரப்பளி, புரிநூல், இரட்டை வடத் தோள் வளை, கைக்காப்பு, உதரக்கச்சை, மலர்கள் அணிசெய்யும் வேலைப்பாடு மிக்க இடைக்கச்சை, கல்பதித்த கழல்கள், பாதசரம், யாவும் சிவனை அழகூட்டுகின்றன.

Koviloor Digital Library

கபாலமேந்திய சிவனது கீழ் இடக்கை உந்திவரை உயர்ந்து நிற்கிறது. அக்கரத்தின் கீழ்படமெடுத்து சீறிப் பாயும் பாம்பு ஒன்று காலனை நோக்கியவாறு காட்டப் பட்டுள்ளது. அதன் சுருண்டவால் காலனது வலக்கையில் உள்ள ஆயுதத்தோடு இணைகிறது.

காலன்

இங்கு காலன் தன் வாகனமான எருமைக் கிடா மீது இருகால்களையும் பக்கவாட்டில் தொங்கவிட்டு, இருகை களுடன் அமர்ந்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளான். ஓங்கிய வலதுகை கதாயுதத்தைப் பிடித்திருக்க, இடக்கை பாசக்கயிற்றைப் பற்றியிழுக்க, சிவனது சீற்றத்தைக்கண்டு தாளாது அச்சத்தால் தன் செயலிழந்து, விழிகள் பிதுங்க செயலற்று அப்படியே மல்லாந்து சாயும் நிலையில் காட் டப்பட்டுள்ளான். அவனது முகத்தில் ஒருவித இனம் தெரி யாத அச்சம் படர்ந்திருப்பதைக் காண்கிறோம். முகத்தில் மீசையும், கடைவாயில் கோரைப்பற்களும் கொண்டு விளங் கும் காலனது தலையை கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. அண்ணலது கருணை வேண்டி, இடது திருவடியில் முழங் காலுக்குக்கீழ் இடப்புறம் சாய்ந்த நிலையில் மன்றாடியது போன்று சித்திரிக்கப்பட்டுள்ள இச்சிற்பம் நகரத்தார் காலத்துச் சிற்பிகளின் கைத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

எருமை

காலனைச் சுமந்து வரும் எருமை வாகனமும் இங்கு நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது. கூர்மையான கொம்பும், பக்கங்களில் விரிந்த காதும், கண்களும், நீண்ட முகமும், மூக்குக்கயிறு தரித்த நாசியும், நீண்ட உடல்வாகும், வலு வான கால்களும், உறுதியான குளம்பும், பின்புறத்தில் தொங்கும் வாலும் மிக இயற்கையாக செதுக்கப்பட்டுள் ளன. எருமையின் கழுத்தில் சதங்கைக் கோத்தவாரும், பின் உடலில் இடைவாரும், மேலுடலில் விரிப்பும் காட்டப்

Koviloor Digital Library

பட்டுள்ளன. காலன் தன் நிலையை இழந்து செயலற்றுச் சாய்வதால், எருமை சற்று முன்புறம் சாய்வது போன்று அதன் முன் கால்கள் தடுமாறும் தன்மையைச் சிற்பி இங்கு நுணுக்கமாகக் காட்டியுள்ளான்.

மார்க்கண்டேயன்

மார்க்கண்டேயன் லிங்கத்தின் வடபுறம் இருகைகளால் லிங்கத்தைத் தொட்டு தழுவும் நிலையில் பூசித்து நிற்கிறான். அவனால் சாத்தப்பட்ட பூமாலை இலிங்கத்தின் மீது காணப்படுகிறது. நந்தவனத்தில் பூக்கள் கொய்து வந்த பூக்குடலை அவனது இடது தோளில் சிறு கவையில் மாட்டப்பட்டுத் தொங்குகிறது. அவனது நீண்ட முடியை சுருட்டி பின் கொண்டையிட்டுள்ளான். அவன் தலையைச் சுற்றிலும் உருத்திராட்ச மாலைகள் அலங்கரிக்கின்றன. அவனது கழுத்திலும், தோளிலும், முன் கையிலும் அக்க மாலைகள் அணிசெய்கின்றன. இடது மார்பில் புரிநூல் ஓடுகிறது. இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை மடிப்புடைய கீழாடை, பஞ்சகச்சமாகக் கட்டப்பட்டுள்ளது. அவனது முகத்தில் பயத்தோடு ஆழ்ந்த பக்தியும் வெளிப்படுகிறது. அவன் கரங்கள் தழுவிநிற்கும் சிவலிங்கம், முகலிங்கமாகக் காட்டப்பட்டுள்ளது. இலிங்கத்தின் நெற்றியில் திருநீற்றுப் பட்டைகள் உள்ளன.

காலனைக் கடிந்து உகக்கும் பெருமானை சீற்றத்தோடும் அவன் முன்பு செயலற்று வீழ்ந்து கிடக்கும் காலனை, உயிருக்கு மன்றாடும் நிலையிலும், பயத்தோடு ஆழ்ந்த பக்தியை உணர்த்தும் தெய்வீக உணர்வோடு மார்க்கண்டேயனையும் அவன் வேண்டி நிற்கும் இலிங்கத்தை தலையில் தாங்கி நிற்கும் சிவகணத்தைக் 'கடமையுணர்வோடு காட்டியும், அளவோடும், அழகோடும் ஒரேகல்லில் வடித்துள்ள இச்சிற்பத் தொகுதி, இங்குள்ள சிற்பங்களுக்கெல்லாம் மகுடம் வைத்தது போன்று அணி செய்கிறது. இலிங்

Koviloor Digital Library

கத்தையும், மார்க்கண்டேயனையும் சிவனது இடதுகாலை யும். சுற்றிவரும் பாசக்கயிறு 2.40. மீட்டரில் கல்லிலே வடிக்கப்பட்டுள்ளது. ஆலயத்திற்கு வந்து இச்சிற்பத்தைக் கண்டு செல்லும் பெரியோர்கள், இது கல்லா அல்லது கயிறா என்று வியக்குமளவிற்கு அமைக்கப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தொகுதி பீடம் முதல் தலை மாலைவரை 2. மீட்டர் உயரமும், 1.10. மீட்டர் அகலமும் உடையது. பாசக்கயிற்றின் நீளம் 2.40. மீட்டர் அளவுடையது.

16. வீணை மீட்டும் பெண் தெய்வம்

காலசம்கார மூர்த்தியின் மேல்புறம் உள்ள தூணில் ஆறுகைகளுடன் உடலைத் திரிபங்கத்தில் கொண்டு வீணை வாசிக்கும் பெண் தெய்வத்தின் உருவம் சிற்பமாக அமைக் கப்பட்டுள்ளது. இப்பெண் உருவம் இடது காலை முன் ஊன்றி, வலதுகாலைத் தூக்கி, பின் வைத்து, முன்காலைத் தரையில் ஊன்றி, ஆறுகைகளில் பல்வகைமங்கலப்பொருட் களைப் பிடித்துள்ளது. வலது கைகள் முறையே மேலி ருந்து கீழாக தாமரைப் பொகுட்டு, விரிந்த பத்மம், நீண்ட மலர்ச்சரம் ஆகியவற்றைப் பிடித்துள்ளன. இடது கைகள் முறையே நீலோத்பலம், ஒலிக்கும் மணியைப் பிடித்துள்ளன. இடது முன்கை நீண்ட வீணையை செங் குத்தாகக் கையிலேந்தி மீட்டும் நிலையில் காட்டப்பட்டுள் ளது.

வீணை மீட்டுகின்ற நாதத்தால் தன்னை மறந்து லயித்த நிலையில், வலதுகாலைத் தூக்கி ஆடும் தேவியின் முகப்பொலிவு, தலைக்கோலம், அங்கங்களின் அமைப்பு, உடலின் வளைந்து நிற்கும் நிலை, ஆடை அணிகலன்களின் தன்மை, பக்கங்களில் விரிந்த கரங்கள் யாவும் பாங்குற அமைக்கப்பட்டுள்ளன. நீண்டவீணையின் உருவமும், அதில் பூட்டியுள்ள மென்மையான நரம்புகளும், அந்நரம்புகளை

Koviloor Digital Library

மீட்டும் மென்மையான விரல்களும், அவ்விரல்களிலே வெளிப்படும் நரம்புகளும் கூட இங்கு மிக நுணுக்கமாகக் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் தலைமீது, தலைமாலைவீழ்ந்து வனப்பூட்டுகிறது. இச்சிற்பம் பீடம் முதல் தலைமாலைவரை 1.90. மீட்டர் உயரமும். 0.85. மீட்டர் அகலமும் உடையது.

17. தக்கையாக சங்காரமூர்த்தி

இவ்வுருவம் முக மண்டபத்தின் முன் வரிசையில் தென்திசையில் ரிஷபாருட மூர்த்தியை அடுத்துள்ள தூணில் அமைந்துள்ளது. இருக்கையின்மீது வலதுகாலை வளைத்து ஊன்றி, இடதுகாலை முன்புறம் நீட்டி, பத்துக் கைகளில் பல்வகை ஆயுதங்கள் பூண்டு ஆடும் நிலையில் இவ்வுருவம் காணப்படுகிறது. வலதுகைகளில் முறையே மேலிருந்து கீழாக சக்திப்படை, வச்சிரப்படை, கதாயுதம் பாசம், போர்வாள் ஆகிய ஆயுதங்கள் உள்ளன. இடது கைகளில் முறையே மேலிருந்து கீழாக மழு, அங்குசம், திரிசூலம், சக்கரம், விரிந்த பத்மம் ஆகியவை .உள்ளன.

இவ்வுருவம் கால்களை வளைத்து ஊன்றி ஆடும் நிலையிலும், அங்கங்களின் அசைவிலும், ஆடுகின்ற அழகிலும், கரங்களின் வீச்சிலும், கண்களின் போக்கிலும் கம்பீரமான கலையழகைக் காணமுடிகிறது. நெற்றியில் உள்ள கண்ணும், கைகளில் உள்ள ஆயுதங்களும், அங்கங்களை அணி செய்யும் ஆபரணங்களும் சிவபெருமானுக்குரியதாக விளங்குகின்றன.இதனைத் தக்கயாக சம்கார மூர்த்தி என்று அழைத்து வருகின்றனர். இவ்வுருவம்,பீடம் முதல் தலை மாலைவரை 2. மீட்டர் உயரமும், பக்கக் கரங்கள் 1. மீட்டர் அகலமும் கொண்டு விளங்குகிறது.

Koviloor Digital Library

18. உக்கிரகாளி

முகமண்டபத்தின் எதிரே உள்ள திருச்சுற்று மாளிகையில் ஆறுமுகச்செவ்வேளினை அடுத்துள்ள தூணில் இச் சிற்பம் அமைந்துள்ளது. இடது காலை மடித்து, முன் காலைத் தரையிலூன்றி, வலதுகாலை முன்புறம் நீட்டி, இடையை இடப்புறமாக ஒடித்து, திரிபங்கியாக எண் தோள்களில் ஆயுதம் தாங்கி நடமாடும் உக்கிரகாளியின் வடிவினை இங்குக் காணலாம். மேல்திசை நோக்கியுள்ள இவ்வுருவம் எண்தோள்களிலும் பலவகைக் கொடிய ஆயுதங்களைக் கொண்டுள்ளது. வலதுகைகளில் முறையே மேலிருந்து கீழாக சக்கரம், அம்பு,திரிசூலம் ஆகியவற்றைப் பிடித்துள்ளது. வலது முன்கை நீண்ட போர்வாளை ஏந்தியுள்ளது. இடது கைகளில் முறையே மேலிருந்து கீழாக சங்கு, நாணுடன் கூடிய வில், கபாலம் ஆகிய ஆயுதங்களைக் காண்கிறோம். இடது முன்கை பெரிய கேடயந்தைப் பற்றியுள்ளது.

அனல்கக்கும் ஆவேசத்தோடு அம்மன் வீறு கொண்டு அசைந்து ஆடும் கோலமும், அங்கங்களின் வேகமும் ஜடாமகுடமும், அனல் மகுடமும், அழகு செய்யும் தலைக் கோலமும் இங்கு நேரில் காணத்தக்கவை.

இக்காளியின் கைகளிலுள்ள ஆயுதங்களும், ஊர்த்துவ மாடும் பெருமானின் எதிரேயுள்ள காளியினுடைய ஆயுதங்களும் ஒத்துள்ளன. எனவே இதன் உருவ அமைப்பினைக் கொண்டும், எண்தோள்கள் ஏந்தியுள்ள ஆயுதங்களைக் கொண்டும், உருண்டைவிழிகளில் வெளிப்படும் உக்கிரப் பார்வையைக் கொண்டும் உக்கிரகாளியின் உருவமாகக் கருதலாம். இவ்வுருவம் 1.85. மீட்டர் உயரமும், 0.90. மீட்டர் அகலமும் உடையது.

Koviloor Digital Library

19. வில்லேந்தி அம்மன்

தென்புறத்திலுள்ள திருச்சுற்று மாளிகையில் தென் திசை நோக்கி இவ்வுருவம் அமைந்துள்ளது. ஆறு கரங்களிலும் கொடிய ஆயுதங்கள் பற்றி, வலதுகாலை முன் வைத்து, காலை வனப்போடு வளைத்து, முன்கால்களைத் தரையில், ஊன்றி உடலைத் திரிபங்கத்தில் கொண்டு அசைந்தாடும் கோலத்தில் சக்தியின் உருவம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இது வலதுகைகளில் மேலிருந்து கீழாக தீப்பந்தம், கத்தி, குறுவாள் ஆகியவையும், இடது கைகளில் முறையே ஆடும் அரவம், சிறிய கேடயம், நீண்டு வளைந்தவில் ஆகிய ஆயுதங்களும் உள்ளன.

இடது கையிலுள்ள வில்லைத் தரையில் ஊன்றி அசைந்து நிற்கும் நிலையிலும், இடையை இடப்புறமாக ஒடித்து நிற்கும் அழகிலும், மலர்ந்த கண்களோடு கீழே உற்று நோக்கும் அழகிலும் கலையழகைக் காணுமாறு வனப்போடு செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் சிவசக்தியின் அம்சங்களில் ஒன்றாதல் வேண்டும். இதன் தலைமீது மனோரஞ்சிதப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை வனப்புடன் வீழ்ந்துள்ளது. இத் தெய்வத்தின் முன்னழகும், பின்னழகும் போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளன. அன்னையின் இடது கையிலேஉள்ள வில்லை நுணுக்கமாகச் செதுக்குவதற்காகச் சிற்பிகள் எடுத்துக் கொண்ட முயற்சியை நேரில் காணும்போது நன்கு உணரலாம்.இது நகரத்தார் கலையைச் சேர்ந்ததாகும். இச்சிற்பம் பீடம் முதல், தலைமாலை வரை 1.95. மீட்டர் உயரமும், 0.90. மீட்டர் அகலமும் உடையது.

20. விதித்தும்பர்

இது வடதிசையிலுள்ள திருச்சுற்று மாளிகையில் இரண்டாவது தூணில் அமைந்துள்ள கடைசிச்சிற்பமாகும்.

Koviloor Digital Library

இது வலதுகாலைப் பின்னூன்றி, இடதுகாலைமுன் வைத்து, எண்கரங்களில் ஆயுதங்களேந்தி, பருத்தவிழிகளிலே அனல் கக்கும் ஆவேசத்தோடு இவ்வுருவம் அமைக்கப்பட்டுள்ளது. வலது கரங்களில் முறையே மேலிருந்து கீழாக அங்குசம், அம்பு, அரவம் சுற்றிய உடுக்கை, வெட்டுவாள் ஆகிய ஆயுதங்களையும், இடது கைகளில் முறையே கபாலம், நாணுடன் கூடியவில், கேடயம், அசுரன் தலை ஆகிய வற்றையும் கொண்டுள்ளது. சீற்றமுடன் தோன்றும் இத் தெய்வம் வெட்டிய அசுரனது உடலை முண்டமாகப் பக்கத்துத் தூணில் காணலாம். அவ்வசுரன் கையில் வாளேந்தி செயலற்று முண்டமாக நிற்கிறான். இறைவன் கையிலுள்ள அசுரன்தலை சுடர்முடியுடன் விழி பிதுங்கிய நிலையில் முறுக்கிய மீசையையும், கோரைப் பற்களையும் கொண்டு காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆடை அணிகள் அங்கங்களை அணிசெய்ய பரந்த முகமும், நெற்றிக்கண்ணும், நெளிந்த புருவமும், பருத்த கண்களும், புடைத்தநாசியும், துடிக்கும் உதடு களும், விரிந்த மார்பும், அகன்றதோளும், கட்டுக்கோப் பான உடல்வாகும், வலுவான அங்கங்களும் கொண்டு, ஆவேசமாக நிற்கும் நிலையில் இச்சிற்பம் வடிக்கப்பட் டுள்ளது. திருச்சுற்று மாளிகைப்பத்தியில், மேலும் நான்கு சிற்பத்திருவுருவங்களை நேரில் கண்டுகளிக்கலாம்.

நகரத்தார் காலத்தில் எழுவன் கோட்டைச்சிற்பிகளால் தோற்று விக்கப்பட்டுள்ள 24-சிற்பங்களும், அவர்களது கைவினையையும், கலைமரபையும் வெளிப்படுத்துவன. பல் வேறுஉணர்ச்சிகளைத் தெய்வ உருவங்களின் தன்மைகளுக் கேற்ப அமைத்துள்ளனர். அவ்வாறு அவ்வுருவங்களுக்குரிய கரங்களையும், அக்கரங்கள் ஏற்க வேண்டிய ஆயுதங்களை தெய்வங்களுக்குக்கொடுத்து முறையாக அமைத்துள்ளனர். சற்றேறக்குறைய ஒருநூறு ஆண்டுகளுக்குமுற்பட்ட அணி

Koviloor Digital Library

கள், ஆடைகள், ஆயுதங்கள் ஆகியவற்றை இச்சிற்பங்களில் காணலாம். இச்சிற்பங்கள் அணிந்துள்ள ஆடையும், ஆபரணங்களும், பல்லவர், சோழர் மற்றும் பாண்டியர் கால சிற்ப அணிகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன. இங்குள்ள ஒவ்வொரு சிற்பமும், நிற்கும் நிலையிலும், அசைவிலும், முகப் பொலிவிலும் கலை நயத்தோடு செதுக்கப்பட்டுள்ளன. சில சிற்பங்களின் மீது கல்லால் ஆன திருவாசிகள் கவினுற காட்டப்பட்டுள்ளன. ஆனால், பெரும்பாலும் மனோரஞ்சிதம் கோத்த மலர்மாலைகள் தலைமீது வனப்பூட்டும் வகையில் தலைமாலையாக அணி செய்கின்றன.

நேமம் கோயில் சிற்பங்கள் அனைத்தும் வைரவன் பட்டியிலிருந்து எடுத்துவரப்பட்டு செதுக்கப்பட்டுள்ள தாகக் கூறப்படுகிறது. அவை பார்ப்பதற்கு வெள்ளைக் கற்களாகக் காணப்பட்டாலும் உடல் முழுதும் ஆங்காங்கே கருப்பு நிற ரேகைகள் ஓடியிருப்பதால், உண்மையான கலைத்திறனைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு குறைகிறது. இருப்பினும் இங்கு கல்லிலே வடிக்கப்பட்டுள்ள வளைந்த வில், நீண்ட பாசக்கயிறு, ஆடும் அரவம் முதலியவற்றில் அவர்களது நுணுக்கமான கைத்திறனைக் காணலாம்.

விஜயநகரகால தூண் சிற்பங்களுக்கு ஸ்ரீரங்கமும், வேலூரும் புகழடைந்ததுபோல், நாயக்கர்கால சிற்பங்களுக்கு மதுரையும், தஞ்சையும், தாடிக்கொம்பும் சிறப்படைந்தது போல, நகரத்தார்கால தூண் சிற்பங்களுக்கு நேமம் புகழ் வாய்ந்ததாய்க் கருதலாம்.

இங்குள்ள பெரும் சிற்பங்கள் அனைத்தும் சைவ சமயத்தைச் சார்ந்தவையாக உள்ளன. சிவனது சம்கார மூர்த்திகளும், அனுக்கிரக மூர்த்திகளும், இங்கு சிற்பங் களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சிற்பங்களிலே காலசம்கார மூர்த்தியும், மீனாட்சிக்கல்யாணமும் ஆலங்

Koviloor Digital Library

காட்டுக்காளி முன்பு நடராசர் ஆடும் ஊர்த்துவ தாண்டவமும் குறிப்பிடத்தக்கவை. சுமார் 3.25. மீட்டர் உயரமுடைய கால்களின் முன்புறம் சுமார் 2-மீட்டர் உயரமுடைய பெரும் சிற்பங்கள் சிதையாமலும், கவனம் குறையாமலும், சீரிய முறையில் ஒரே கல்லில் படைத்துள்ள சிற்பியின் திறன் போற்றுதற்குரியது.


இவ்வாறு பெரும் தெய்வ உருவங்களைக் கல்லிலே தோற்றுவித்துள்ள சிற்பிகள், அவ்வுருவங்களில் வாகனங்களையும் மறந்தாரில்லை. சிவனது வாகனமான காளையையும், ஆறுமுகச் செவ்வேளின் வாகனமான மயிலையும், விநாயகரின் வாகனமான மூசிகத்தையும், காலனின் வாகனமான எருமையையும், ரதி, மன்மதன் வாகனங்களான கிளி, அன்னங்களையும் நேர்த்தியாகப்படைத்து வெற்றிக் கண்டுள்ளனர். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தோன்றி வளர்ந்த நகரத்தார் கலைவளத்தை அறிந்து கொள்ளவும், ஆய்வு செய்யவும் இச்சிற்பங்கள் பெரிதும் பயனுடையன. இச்சிற்பங்களைத் தோற்றுவித்த பெருமை எழுவன் கோட்டை ஸ்தபதிகளுக்கும், அவர்களை ஊக்குவித்த பெருமை நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கும் உரியது.

Koviloor Digital Library




சந்திரசேகர மூர்த்தி, சந்திரசேகர அம்மன்
செப்புத்திருமேனிகள், நேமம்,
நகரத்தார்கலை
காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு

Koviloor Digital Library




நடராசர், சிவகாமி, மணிவாசகர், செப்புத்திருமேனிகள்
செயங்கொண்ட சோழீசுவரர் கோயில், நேமம்,
நகரத்தார் கலை.

Koviloor Digital Library




அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மணிவாசகர்,
செப்புத்திருமேனி, நேமம்,
நகரத்தார் கலை.

Koviloor Digital Library




விநாயகர் செப்புத்திருமேனி,
செயங்கொண்ட சோழீசுவரர் கோயில், நேமம்,
நகரத்தார் கலை.

Koviloor Digital Library



சுப்பிரமணியர் செப்புத்திருமேனி,
செயங்கொண்ட சோழீசுவரர் கோயில், நேமம்,
நகரத்தார் கலை

Koviloor Digital Library



நந்தி, பலிபீடம், கண்ணாடி, செப்புத்திருமேனி,
செயங்கொண்ட சோழிசுவரர் கோயில், நேமம்,
நகரத்தார் கலை

Koviloor Digital Library

6. செப்புத் திருமேனிகள்

நேமம் செயங்கொண்ட சோழீசுவரர் கோயிலில் 28. செப்புத்திருமேனிகள் உள்ளன. இங்குள்ள செப்புத்திரு மேனிகள் மூன்று காலக்கட்டத்தில் செய்தளிக்கப்பட்டுள் ளன.

1. முதல் காலக்கட்ட செப்புத்திருமேனிகள் பிந்திய பாண்டியர் காலத்தவை. இவற்றை கி.பி.12–13 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் கருதலாம். இக்கோயி லில் உள்ள பிரதோஷ நாயகர், சந்திர சேகரமூர்த்தி, சந்திரசேகர அம்மன் ஆகியவை இக்காலக்கட்டத்தில் செய்தளிக்கப்பட்டுள்ளவ.

2. இரண்டாவது காலக்கட்டத்தைச்சார்ந்த செப்புத்திரு மேனிகள் விஜயநகரர் காலத்தவை. கி.பி.15–ஆம் நூற் றாண்டைச்சார்ந்தவை.இக்கோயிலில் உள்ள திருமகள் மற் றும் சக்கரத்தாழ்வார் ஆகிய இரு செப்புத் திருமேனிகளும் இக்காலக்கட்டத்தவை. இவை முழுவதும் பஞ்சலோகக் கலவையால் வார்க்கப்பட்டவை. காலத்தால் பழமையும், கலைச் செறிவால் புகழும் கொண்டவை. இக்கோயிலின் பழமையையும், புகழையும் அடையாளம் காண துணை புரிபவையாகும்.

3. மூன்றாவது காலக்கட்டத்தைச் சார்ந்த செப்புத் திருமேனிகள் யாவும் நகரத்தார் காலத்தவை. நேமம் நகரத் தார்கள் இக்கோயிலில் முதல் திருப்பணியைத் தொடங்கிய காலக்கட்டத்தைச் சார்ந்தவை. இவை கி.பி. 1875 முதல் 1925 வரை இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவை. இக் காலக்கட்டத்து செப்புத்திருமேனிகளே இக்கோயிலில் எண்ணிக்கையில் மிகுந்து காணப்படுகின்றன. அவை யாவன.

Koviloor Digital Library

1. நடராசர்
2. சிவகாமி
3. விநாயகர்
4. சுப்பிரமணியர்
5. வள்ளி
6. தெய்வானை
7. பிரதோஷ நாயகர்
8. பள்ளியறை சொக்கர்
9. பள்ளியறை அம்மன்
10. சோமாசுகந்தர்
11. தனிஅம்மன்
12. சுக்கிரவார அம்மன்
13. சண்டிகேசுரர்
14. அஸ்திர தேவர்
15. அழகு நாச்சியம்மன்
16. அப்பர்
17. சம்பந்தர்
18. சுந்தரர்
19. மாணிக்கவாசகர்
20. நந்தி
21. பலிபீடம்
22. கண்ணாடி

இவை அனைத்தும் செப்புக்கலவையால் முழுதும் கனமாக வார்க்கப்பட்டுள்ளன. இவை செம்பொன் நிறமும் வெங்கல நிறமும் கொண்டவை. நாட்டுக்கோட்டை நகரத்தாரின் படிமக்கலையை வெளிப்படுத்துபவை. இச் செப்புத்திருமேனிகளில் அக்கால ஆடை அணிகளின் வகைகளையும், ஆயுதங்களின் தன்மைகளையும் அடையாளம் காண வகை செய்கின்றன.

பாண்டியர் காலப்படிமங்கள்

சோழ மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட இக்கோயிலில் சோழர் காலத்துப் படிமங்கள் ஏதும் கிடைத்தில. சோழர்களுக்குப்பின் இப்பகுதியை ஆட்சிசெய்த பாண்டிய மன்னர்கள் காலத்தில் செய்தளிக்கப்பட்ட சிலைகளாக மூன்று செப்புத் திருமேனிகள் உள்ளன. தற்போது இக் கோயில் வழிபாட்டில் உள்ள பிரதோஷ நாயகர் அவற்றில் காலத்தால் முற்பட்டதாகும். இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச்சார்ந்தது. ஏனைய சந்திர சேகரர், சந்திர

Koviloor Digital Library

சேகரஅம்மன் ஆகிய படிமங்கள் இரண்டும் கி.பி. 12,13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவற்றைக் கொண்டு இக்கோயிலின் தொன்மையை. அடையாளம் காணலாம்.

1. பிரதோஷ நாயகர்

நீண்ட செவ்வகப்பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் சிவனும் உமையும் நின்ற கோலத்தில் வார்க்கப் பட்டுள்ளன. சிவனின் மேற்கைகளில் நீள் மழுவும், மானுமேந்தி, கீழ் வலக்கையால் அபயம்காட்டி, இடக்கையால் உமையை அணைத்து நிற்கிறார். சடைமகுடம் தலையிலும், முத்துப்பட்டம் நெற்றியிலும், பத்தரக்குண்டலம், இடது காதிலும், கண்டசரம் கழுத்திலும், சரப்பளி அரும்புச்சரம், சவடிமார்பிலும், பூணூல் இடது மார்பிலும், உதரபந்தம் நடு வயிற்றிலும், சிம்ம முகக்கச்சை இடையிலும் சிவனை அலங்கரிக்கின்றன. சிவனின் பின்தோள்களில் சுருண்ட கேசங்கள் வனப்பூட்டுகின்றன. சிரச்சக்கரம் உடைந்துள்ளது. சிவனின் வலது காதிலும், மேற்கையிலும் அணிகள் காட்டப்படவில்லை. முன்கையில் மூன்று கைவளையங்களும், விரல்களில் மோதிரங்களும் அழகு செய்கின்றன. சிவனின் நெற்றியில் மூன்றாவது கண் காட்டப்பட்டுள்ளது.

உமையாள்

கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் சிவனது இடப்புறம் உமை திரும்பி நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளாள். உமையின் வலக்கை கடகமுத்திரையில் அமைந்து, இடக்கை டோல முத்திரையில் தாழ்கையாக உள்ளது. கரண்ட மகுடம், மங்கலநாண், அரும்புச்சரம், சவடி, முத்தாலான பூணூல், கேயூரம், கைவளை, காப்பு, முத்துவளை, முழங் காலுக்குக்கீழ்வரை இடைக்கச்சையாவும் உமையைஅழகு செய்கின்றன. பொன்னிறத்தில் காட்சியளிக்கும் இப்படி

Koviloor Digital Library

மங்கள் முழுதும் கனமாக வார்க்கப்பட்டுள்ளன. பழமை யான தோற்றமுள்ள இச்சிலையின் முகம், உடல் ஆகிய வற்றைப் பிற்காலத்தில் திருத்தி அமைத்துள்ளனர். அதனால் சிவனின் வலது கட்டைவிரல், இடக்கையில் ஏந்தியுள்ள மான், பீடக்கொம்பு ஆகியவை உடைந்துள் ளன. உருவில் சிறிய இவ்விரு சிலைகளும் தொன்மையான தோற்றத்துடன் விளங்குகின்றன. இக்கோயிலின் தொன்மையினை அறிவதற்கும், அடையாளம் காண்பதற் கும், இச்சிலைகள் பெரிதும் துணை செய்கின்றன. இதன் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டாகும். சிவனது உயரம் பீடத்துடன் 44. செ.மீட்டரும், பீடம் நீக்கி 34. செ.மீட்டரு மாகும். தோள் அகலம் 8.5 செ.மீ. அவ்வாறு உமை பீடத் துடன் 36. செ.மீட்டரும், பீடம் நீக்கி 27. செ.மீட்டரும், தோள் அகலம் 6.5.செ.மீ. உடையது.

2. சந்திரசேகர மூர்த்தி

இப்படிமம் சதுர பீடத்தின் மீதுள்ள தாமரை இருக் கையில் நேராக நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது. சிவனின் மேல் வலக்கை மழுவைப் பிடித்துள்ளது. இடக்கை பாயும் மானைப்பற்றியுள்ளது. கீழ்வலக்கை அருள் பாலிக் கும் அபயமுத்திரை காட்டுகிறது. இடக்கை தொடை மீது அமையும் பாங்கில் உள்ளது. நீள் சடைமுடி தலையிலும், மலர்மாலை நெற்றி மேலும், முத்துப்பட்டம் நெற்றியி லும், சிரசக்கரம் பின் தலையிலும், தலைக்கோலமாக அலங்கரிக்கின்றன. வலது காதில் சிறிய மகரக் குழையும், இடது காதில் வட்டமான பெரிய குண்டலமும் அழகு செய்கின்றன. தோள்களின் மீது தோள்மாலை வீழ்ந்துள் ளது. கழுத்திலும் மார்பிலும், பெரிய முத்துவடம், மெல்லிய முத்தாரம், சரப்பளி, அரும்புச்சரம் ஆகிய அணிகள் அலங்கரிக்கின்றன. இடது தோளை முத்துப் புரிநூல் அழகு செய்கிறது. நடுவயிற்றில் உதரக்கச்சையும்,

Koviloor Digital Library

மேற்கையில் பூரிமம் முகப்புடைய கேயூரம் அலங்கரிக்கிறது. முழங்கையில் கடகமும், முன் கையில் மூன்று முத்து வளைகளும் அழகு செய்கின்றன. இடையின் முன்புறம் சிம்ம முகப்புடைய கச்சை அலங்கரிக்கிறது. மேல்தொடைவரை தோலாடையும், தொடைமீது வனப்பூட்டும் முத்துத் தாமமும், இடையைச் சுற்றிலும் அரைப்பட்டிகையும், இடையின் பக்கங்களில் நீண்டு தொங்கும் ஆடைக்கட்டும், இருகால்களின் இடையே உள்ள நீண்ட முத்துச்சரமும், பாதங்களில் பாதசரமும், சிவனது முடிமுதல் அடிவரை அலங்கரிக்கக் காண்கிறோம்.

சதுரமான முகமும், அகன்ற நெற்றியும், நீண்ட கண்களும், எடுப்பான மூக்கும், சற்று பிரிந்த திருவாயும், விரிந்த மார்பும், நீண்ட உடல்வாகும் கொண்டு விளங்கும் இப்படிமம் பாண்டியர் கலையை வெளிப்படுத்தி நிற்கிறது. ஆடை, அணிகள், ஆயுதங்கள் ஆகியவற்றின் தன்மை யாவும், அக்கலையை அடையாளம் காட்டுவதாக அமைகின்றன. இது கி.பி. 12,13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இப்படிமத்திற்குரிய பீடம் நகரத்தார் திருப்பணியின் போது செய்து இணைக்கப்பட்டுள்ளது.
இதன் உயரம் பீடத்துடன் 77 செ.மீ. பீடம் நீக்கி 59 செ.மீ. அகலம் 14. செ.மீ. ஆகும்.

3. சந்திரசேகர அம்மன்

இப்படிமம் தாமரை இருக்கையின் மேல் நின்ற கோலத்தில் இரண்டு கைகளுடன் வார்க்கப்பட்டுள்ளது. வலக்கை கடக முத்திரையில் மலர் ஏந்தும் பாவனையில் உள்ளது. இடக்கை டோலமுத்திரையில் தாழ்கையாக நீண்டுள்ளது. கரண்டமகுடம் தலையிலும், வட்டமான சிரசக்கரம் பின் தலையிலும் அலங்கரிக்கின்றன. நெற்றியைச் சுற்றிலும் முத்துப்பட்டமும், அதன் மேல் தலையைச் சுற்றிலும் கண்ணி மாலையும் அழகு செய்கின்றன. நீள்செவியில்

Koviloor Digital Library

மகரக்குழையும், மேல் செவியில் செவிப்பூக்களும், கழுத்தில் பொட்டுமணி, முத்துவடம், முத்தாரம், சரப்பளி, ஆகிய அணிகளும், தோளில் வாகுமாலையும், மேற்கையில் பூரிமம் தைத்த கேயூரமும், முழங்கையில் காப்பும், முன் கையில் கைவளையும், விரல்களில் மோதிரமும், மார்பில் நாலும், திறந்த தனங்களின் ஊடே சன்னவீரமும், இடையின் முன்புறம் சிம்ம முகப்புடைய கச்சையும்,இடையைச் சுற்றிலும் மணிகள் கோத்த பொன்னணியும், மேகலையும், தொடை மீது குறங்கு செறியும், அரைவட்ட வடிவுடைய இடைவாரும், இடையின் பக்கங்களில் முழங்காலுக்குக் கீழ்வரை சரிந்து வனப்பூட்டும் ஆடைக்கட்டும்,பாதங்களில் பாதசரமும் உமையின் திருமுடிமுதல் திருவடிவரை அலங்கரிக்கக் காண்கிறோம்.அன்னையின் முன்னழகும் பின்னழகும் கண்டு களிக்கத்தக்கவை.

உமையின் சதுரமான முகமும், உயர்ந்த புருவமும், நீண்ட கண்களும், விரிந்த இமையும், இளநகை உதிர்க்கும் இதழ்களும் கொண்டு அமைதியே வடிவாக அருள் சுரக்கும் அன்னையின் உருவம் வார்க்கப்பட்டுள்ளது. பிந்திய பாண்டியர் கலையை வெளிப்படுத்தும் இச்சிலை, கி.பி.13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச்சார்ந்தது. இக்கோயிலிலுள்ள பிரதோஷ நாயகர் படிமத்தைவிட காலத்தால் சற்று பிற்பட்டது.

பழைய சிவாலயத்திற்கு உரிய இச்சிலை, நகரத்தார் திருப்பணியின் போது 1907 - இல் பீடம் செய்து இணைக்கப்பட்டுள்ளது. இச்சிலை பீடத்துடன் 64.செ.மீ. ,பீடம் நீக்கி 48.செ.மீ. தோள், அகலம் 13.செ.மீ.ஆகும்.

புதையலில் கிடைத்த செப்புச்சிலைகள்

சுமார் 30-ஆண்டுகளுக்கு முன்பு நேமம் அருகே காட்டாத்தாங்குடியில் புதையல் மூலம் கிடைத்த இரு செப்புச் சிலைகள் நேமம் கோயிலில் பாதுகாப்பில் இருந்து வரு

Koviloor Digital Library

கின்றன. இவை இரண்டும் அப்பகுதியில் இருந்து, மறைந்த வைணவக்கோயிலுக்குரியவை. அவற்றில் ஒன்று திருமாலின் தேவியர்களில் ஒருவரான திருமகளின் உருவமாகும். மற்றொன்று அவ்விண்ணகரத்திற்குரிய சக்கரத்தாழ்வார் திருமேனியாகும்.

4. திருமகள்

இப்படிமம் நின்ற கோலத்தில் தனிப்பீடத்தில் காட்சியளிக்கிறது. தேவியின் வலக்கை மலரைப்பிடித்தும், இடக்கை தாழ்கையாகவும் அமைந்துள்ளன. கரண்ட மகுடம், சிரசக்கரம், மகர குண்டலம், தோள்வளை, கேயூரம்,கடகம், காப்பு, மங்கலநாண்,கண்டசரம், சரப்பளி, பூணூல், மேகலை, இடைக்கச்சை, குறங்குசெறி, பாதசரம் ஆகிய அணிகலன்கள் திருமகளை வனப்பூட்டுகின்றன. திருமகளின் நீண்ட உருவம், இடையை இடப்புறமாக ஒடித்துத் திரிபங்கியாக நிற்கும் நிலையும், பரந்த முகமும் மலர்ந்த கண்களும், வனப்பான அணிகளும் சிறப்பாக வார்க்கப்பட்டுள்ளன. காதில் உள்ள மகரக் குழையும், கச்சையில்லாத் தனமும், மார்பில் உள்ள பூணூலும், மலரேந்திய கைகளின் அமைப்பும் கொண்டு இதனைத்திருமாலின் இடப்புறமுள்ள தேவியரான திருமகளாக அடையாளம் காணமுடிகிறது. இச்சிலை கி.பி.15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தது. கடைப்பாண்டியர் காலத்திற்கு பின் வந்த விஜய நகரக்காலத்தைச் சார்ந்ததாக இதனைக் கருதலாம். இவ்வுருவம் 72.செ.மீ. உயரமும்,13.5செ.மீ. அகலமும் உடையது.

5. சக்கரத்தாழ்வார்

சதுரமான தகட்டின் மீதுள்ள தாமரைப் பீடத்தில் செங்குத்தாக அமைந்துள்ள உலோகத் தூணின் பலகை மீது இரு குந்து சிம்மங்கள் வீற்றிருக்க அதன் தலைமீது

Koviloor Digital Library

சுடரோடு கூடிய வட்டமான சக்கரம் அமைக்கப்பட்டுள்ளது. சக்கரத்தின் நடுவே 16 – இதழ்களை உடைய தாமரை மலர் விரிந்து வனப்பூட்ட, அதன் நடுவே கீர்த்தி முகம் காட்டப்பட்டுள்ளது. இது முந்தைய விஜய நகரக் காலத்தியது. இவை இக்கோயிலுக்குரிய இரண்டாம் காலக்கட்டத்தைச் சேர்ந்த செப்புத்திருமேனியாகக் கருதலாம். இதன் உயரம் 51,5. செ.மீ. அகலம் 31.செ.மீ. உடையது.

6. நடராசர்

நேமம் நகரத்தார்கள் இக்கோயிலை முழுமையாகத் திருப்பணிசெய்து, இக்கோயிலுக்குரிய செப்புத்திருமேனிகள் பலவற்றைச் செய்தளித்துள்ளனர். இக்கோயிலில் உள்ள நகரத்தார் கலைவளத்தை வெளிப்படுத்தும் செப்புத்திருமேனிகளில் நடராசர் வடிவமும், அன்னை சிவகாமியின் உருவமும் குறிப்பிடத்தக்கவை. சோழர், பாண்டியர்களின் கலைப்பாணியை முன்னோடியாகக் கொண்டு, தழுவிச் செய்யப்பட்ட இவ்வடிவங்களில் நகரத்தாரின் கலை தனித்து மிளிர்வதை இங்குக் காணலாம். எடுத்துக்காட்டாக இக்கோயிலில் உள்ள ஆடும் கூத்தனின் செப்புத்திருமேனியைக் கூறலாம். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த, சிறந்த படிமக்கலைப் படைப்புகளில் இதுவும் ஒன்றாக விளங்கக்காண்கிறோம். இது செப்புக் கலவையால் கவனத்தோடு வார்க்கப்பட்டுள்ளது. முழுதும் கனமாக வார்க்கப்பட்டுள்ள இத்திருமேனி பொன்னிறத்தில் காட்சியளிக்கிறது.

உயர்ந்த பீடத்தின் மேலுள்ள தாமரை இருக்கைமீது மண்டியிட்டுக்கிடக்கும் முயலகனின் முதுகில் நடராசப் பெருமான் தம் வலதுகாலைச் சற்று மடித்து, செங்குத்தாக ஊன்றி, இடக்காலை மேல்தூக்கி முன்புறம் வீசிறிய நிலையில் கொண்டு நான்கு கைகளுடன் ஆடும் பெரு

Koviloor Digital Library

மானாகக்காட்சியளிக்கிறார். இவரது மேல் வலக்கை உடுக்கையைக் குறுக்காகப் பற்றியுள்ளது. உடுக்கையைப் பிடித்து நிற்கும் அக்கை, டமருகமுத்திரையில் அமைந் துள்ளது. மேலிடக்கை பக்கங்களில் மடிந்த நிலையில் தீ அகலைத்தாங்கியுள்ளது. அகலைத்தாங்கிநிற்கும் அக்கை, அரைநிலா வடிவத்தில் அமைந்துள்ளது. தீயகல் சுடரிட்டு எரிகிறது. அண்ணலின் வலது முன்கை மடித்து மேல் நோக்கிய நிலையில் அபய முத்திரை காட்டுகிறது. இடக்கை மார்புக்குக் குறுக்கே அமையாமல் முன்புறம் எழிலாக நீண்டு வேழ முத்திரை காட்டுகிறது.

இப்பெருமானின் நீள்சதுர முகம் மிகவும் நிமிர்ந்த நிலையில், பெருமிதமான தோற்றம்கொண்டு மிடுக்காக விளங்குகிறது. இப்பெருமானின் விரிந்த நுதலும், செங்குத் தான நெற்றிக்கண்ணும், வில்போல் வளைந்த புருவமும், நீண்ட கண்களும், திறந்த விழியும், எடுப்பான மூக்கும், குவிந்து மலர்ந்த திருவாயும், அளவான மார்பும், தோள் களிலிருந்து பிரிந்து செல்லும் நீண்ட கரங்களும், இடையி லிருந்து வெளிப்பட்டு நிற்கும் தூக்கிய திருவடியும், முயல கனின் உடலின் மீது அழுந்தி நிற்கும் தாளும் மிகக் கவன மாக வார்க்கப்பட்டு விளங்குகின்றன.

ஆடுகின்ற அண்ணலின் தலைக்கோலம் வேலைப்பாடு மிக்கது. தலையின்மீது, பூரிமங்கள் என்ற முகப்பு அணி பதித்த மகுடமும், மகுடத்தின் 'உச்சியில் தாமரை மலர் மொட்டும் அணிசெய்ய, தலையின் இரு பக்கங்களிலும் வேகத்தில் விரிந்தாடும் விரிசடைகள் காட்டப்பட்டுள்ளன. பக்கத்திற்கு நான்கு சடைகளாக விரிந்து வனப்பூட்டும் இவ்விரிசடை, தோள்மாலையோடு இணைந்த நிலையில், தனியாக வார்க்கப்பட்டு, சிரசக்கரத்தில் பொருத்திவைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய வார்ப்புமுறை நகரத்தார் கலையை மிக எளிதில் அடையாளம் காண

Koviloor Digital Library

நமக்கு வகை செய்கிறது. இவ்விதம் ஆடும் பெருமானை மகுடத்தோடும், விரிசடையோடும் விழா நாட்களில் அலங்காரம் செய்து, எழுந்தருளச் செய்யும் வகையில் இப்படிமம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாதசதங்கை காலிலும், ஒலிக்கும் கழல்கள் கெண்டைக்காலிலும், கிண்கிணி என்னும் ஒற்றைச் சதங்கையணி இடது முழங்காலிலும், மெல்லிய கச்சை இடையிலும், அரைப்பட்டிகை இடுப்பிலும், சரிந்து குறுகிநிற்கும் ஆடைக் கட்டு இடையின் பக்கங்களிலும் இடையின் முன்புறம் சிம்மமுகக் கச்சைக்கு மாறாக, அரை வட்ட வடிவுடைய ஆடையும், கற்கள் பதித்ததையொத்த மெல்லிய உதர பந்தம் நடுவயிற்றிலும், பூணூல் மார்பிலும்,சரப்பளி, கண்டசரம் கழுத்திலும், காப்பு கைவளை முன்கையிலும், பூரிமம் பதித்த தோள்வளை மேற்கையிலும், மகரக் குழை வலது காதிலும், ஓலைக்குழை இடது காதிலும், சடைமகுடம் தலையிலுமாக அழகிய அணிகளும், ஆடைகளும் பெருமானின் திருவடிமுதல் திருமுடிவரை அமைந்து அலங்கரிக்கின்றன. மேலும், படமெடுத்தாடும் நாகம் ஒன்று அபயமளிக்கும் வலது முன் கரத்தைச்சுற்றிய நிலையில், அணியாகக் காட்டப்பட்டுள்ளது.

முயலகன்

ஆடும் பெருமானின் வலது திருவடியின் கீழ் மண்டியிட்டுக்கிடக்கும் நிலையில் முயலகன் காட்டப்பட்டுள்ளான். அவனது கரங்கள் படமெடுத்தாடும் பெரும் பாம்பின் வாலைப் பற்றியுள்ளன. முயலகன் தலையை, விரிந்த சடாபாரம் அலங்கரிக்கிறது. காதுகளில் வட்டக்குழைகளும், நெற்றியில் பட்டமும், கழுத்தில் அணியும், முன் கையில் காப்பும், இடையில் தொடைவரை ஆடையும், இடைக்கட்டும், காலில் தண்டையும் அணிந்து, அண்ணலின்

Koviloor Digital Library

தூக்கிய இடது திருவடியை, நிமிர்ந்து பார்க்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளான். முயலகனின் பரந்த முகமும், தூக்கிய புருவமும் வியந்து வெறித்துப் பார்க்கும் பார்வையும், பெருத்த நாசியும், கடைவாய்ப்பற்களோடு கூடிய வாயும், குட்டையான அங்கங்களும், பருத்த உடலும் கவனமாக வார்க்கப்பட்டுள்ளன.

முயலகனின் பின்புறமுள்ள ஆடும் நாகத்தின் விரிந்த படம், அண்ணலின் வலது முழங்காலின்கீழ் இணைந்த வண்ணம் வார்க்கப்பட்டுள்ளது. இது எவ்விதமான பிடிப்புமின்றி, வலக்காலால் ஊன்றியாடும் பெருமானின் உடல் வாகைத் தாங்கி நிற்கும் வகையில் சமன் செய்கிறது. பிந்திய பாண்டியர் கலையில் பின்பற்றப்பட்ட இம்முறை, நகரத்தார் பாணியிலும் தொடர்ந்துள்ளது. ஒலிமயமாக ஆடும் பெருமானைச் சுற்றிலும் ஒளிமயமான சுடர்கள் கொண்ட திருவாசி வட்டமாக இணைக்கப்பட்டுள்ளது. திருவாசியைச்சுற்றிலும், இருபத்தேழு சுடர்கள் காட்டப் பட்டுள்ளன. சிவனின் ஆடும் அழகும், அங்கங்களின் அசைவும், அழகிய தலைக்கோலமும், மிடுக்கான பார்வையும், ஆடை அணிகலன்களின் தன்மையும், இச்சிலையில் சீரிய முறையில் அமைந்து, நகரத்தார் கலைத்திறனை வெளிப் படுத்தி நிற்கின்றன. இதன்காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு. இப்படிமம் பீடம் முதல், முடிவரை 107. செ.மீ. உயரமும், அடிமுதல் முடிவரை 80. செ.மீ. உயரமும், 17. செ.மீ. தோள் அகலமும் கொண்டு விளங்குகிறது.

7. சிவகாமி

நேமம் நடராசப் பெருமானின் அருகில் சிவகாமி அழகிய உருவாக இருகைகளுடன் நின்ற கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளாள். இவரது வலதுகால் சதுரமான பீடத்தின் மேலுள்ள தாமரை இருக்கையில் ஊன்றியும், இடது கால் சற்று முன்புறம் வைத்து மடித்து நின்ற நிலையில்

Koviloor Digital Library

இடையை வலப்புறமாக ஒடித்து ஒயிலாக நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளாள். சிவகாமியின் வலதுகை அழகிய நீலோத்பல மலரைக் கடக முத்திரையில் பிடித்துள்ளது. இடக்கை டோல முத்திரையில் நீண்டு எழில் கையாக அமைந்துள்ளது.

சிவகாமியின் தலையை உயர்ந்த கேசபந்தமும், பின்புறம் சிரசக்கரமும் அலங்கரிக்கின்றன. நெற்றியைச் சுற்றிலும் முத்துப்பட்டம் வனப்பூட்ட, காதுகளில் மகரக்குழைகள் அலங்கரிக்க, கழுத்தில் கண்டசரமும், பதக்கம் கோத்த அட்டிகையும் வனப்பூட்ட, திறந்த மார்பில் இரு தனங்களுக்கிடையே பூணூல் ஆறாக ஓட, மேல் வலக்கையில் பூவேலைப்பாடு மிக்க தோள்வளையும், இடக்கையில் பூரிமம் பதித்த கேயூரமும் அணிசெய்ய, முன்கையில் கைவளை அழகுசெய்ய, இடையிலிருந்து முழங்காலுக்குக் கிழ்வரை, சிம்மமுக எளிய இடைக்கச்சை உடலை ஒட்டி எழில் கூட்ட, இடையைச்சுற்றிலும் எளிய மேகலையும், இடைவாரும், தொடைமீது குறங்குசெறியும், இடையின் பக்கங்களை ஒட்டித்தொங்கும் மெல்லிய ஆடைக்கட்டும் அழகு செய்ய, கால்களில் காப்புமாக முடிமுதல் அடிவரை அணியும் ஆடையும் தரித்து அழகிய உருவாகக் காட்சியளிக்கிறார். அன்னையின் பீடத்தை வேலைப்பாடுமிக்க திருவாசி அலங்கரிக்கிறது. இது இரு தூண்களின்மீது இரு பறவை உடலைப் பாதியாகக் கொண்ட மகரங்கள் அலங்கரிக்க, அம்மகரங்களின் வாயிலிருந்து திருவாசி சுடர் வளைந்து வனப்பூட்டும் வகையில் அமைந்துள்ளது. இது தனித்தனியாகப் பொருத்தும் வகையில், மூன்று துண்டுகளாக வார்க்கப்பட்டுள்ளது.

அன்னை சிவகாமி திரிபங்கியாக நிற்கும் கோலம், நீண்ட உடல்வாகு, நிமிர்ந்த மார்பு, குவிந்த தனங்கள், சதுரமாக விரிந்த முகம், அருள்சுரக்கும் கண்கள், நீண்ட

Koviloor Digital Library

புருவம், செங்குத்தாகத் திலகமிட்ட நுதல், நீண்ட தொள்ளைக்காதுகள், எடுப்பான நாசி, குவித்து விரிந்த இதழ்கள் யாவும் அருகே ஆடும் பெருமானின் அழகுக்கு ஈடுசெய்வன. இச்சிலையில் இவரது பின் அழகைவிட முன்னழகு மிகுந்து நிற்கிறது. செப்புக் கலவையாலான இவ்வுருவம் முழுதும் கனமாகவும் கனத்தோடும் வார்க்கப் பட்டுள்ளது. சிவகாமியை அலங்கரிக்கும் மகுடமும் அட்டிகையை ஒத்த கழுத்தணியும், இடையின் முன்புறமுள்ள சிம்ம முகக்கச்சை முகப்பும், தோள்வளையும் நகரத்தார் கலையை அடையாளம் காண உதவுகின்றன. நேமம்-நடராசப் பெருமானை நகரத்தார் செய்தளித்த காலத்திலேயே அன்னை சிவகாமியையும், மணிவாசகப் பெருமானையும் ஒரு சேரச் செய்தளித்து மகிழ்ந்துள்ளனர். நாட்டுக் கோட்டை நகரத்தார் கலை வளத்தைக் கண்டறிய இவை சீரிய சான்றாக அமைகின்றன. இச்சிலையின் உயரம் 81 செ.மீ. அகலம் 15.5 செ.மீ' காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு.

8. மாணிக்க வாசகர்

பாண்டிய நாட்டில், திரு வாதவூரில் தோன்றி திருவாசகம் தந்த வாதவூரருக்கு உரிய செப்புத் திருமேனி இங்கு காணத்தக்கது. இது நடராசர் சபையில் தாமரை இருக்கைமீதுஇரண்டு கால்களையும் ஊன்றி நின்றகோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது. மாணிக்கவாசகரது வலக்கை அக்க மாலையைப்பற்றி, சின்முத்திரைகாட்டுகிறது. இடக்கையில் ஏந்தியுள்ள ஏடு எழுத்துக்கள் இன்றி எளிமையாகக் காட்சியளிக்கிறது. அவரது மழுங்கிய தலையைச் சுற்றிலும் உருத்திராட்சமாலை அலங்கரிக்கிறது.அவரது தோள்வரை நீண்ட தொள்ளைக் காதுகளில் சிறிய வளையம் அணி செய்கிறது. கழுத்தில் கண்டசரமும், மார்பில் கற்கள் பதித்ததை யொத்த பொற்சரமும் அழகு செய்கின்றன

Koviloor Digital Library

விரிந்த இடது மார்பிலிருந்து முப்புரிநூல் கீழ்நோக்கி ஓடுகிறது. மேற்கைகளில் கேயூரம் என்னும் பட்டையான தோள்வளை அலங்கரிக்க, முன்கைகளில் மணிகள் கோத்த காப்பு வனப்பூட்டுகிறது. இடையிலிருந்து கீழ்த் தொடை வரை எளிமையான ஆடையும், இடையைச் சுற்றிலும் துண்டும் அணிந்து கெண்டைக் கால்களில் கால் காப்பும் தரித்துக் காட்சியளிக்கிறார்.

இப்பெருமானின் வட்டமான முகமும், நீண்டபுருவமும் மலர்ந்த கண்களும், நீண்ட எடுப்பான மூக்கும், மூல மந்திரங்களை உச்சரிக்கும் திருவாயும், விரிந்த மார்பும், அளவான அங்கங்களும் பொலிவோடு காட்சியளிக்கின்றன. மார்பு முழங்கால் ஆகிய பகுதிகளில் எலும்பு வெளிப்படும் நிலையில் இத்திருமேனி முழுதும் கனமாக வார்க்கப்பட்டுள்ளது. நேமம் மாணிக்கவாசகரின் படிமம், இரணியூர் கோவில் படிமத்துடன் ஒப்பிடத்தக்கது. இரணியூர் படிமத்தில்தலையைச் சுற்றிலும் சுருண்ட கேசங்களுடனும், காதுகளில் அணியின்றியும், கழுத்தில் உருத்திராட்சமும், இடையில் கௌபீனமும், இடுப்பில் அரைஞாணும், காலில் தண்டையும் அணி செய்ய, மாறாக நேமத்துப் படிமம், சுருண்ட கேசங்களின்றியும், தொள்ளைக்காது களில் கடுக்கனும், கழுத்திலும், மார்பிலும் கற்கள் பதித்த பொன்னணிகளும், இடையில் முண்டும், காலில் காப்பும் பூண்டு காட்சியளிக்கக் காண்கிறோம். இப்படிமம் நகரத்தார் கலையை வெளிப்படுத்தி நிற்கிறது. காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. இதன் உயரம் 52 செ. மீட்டர். அகலம்13.செ. மீட்டர் உடையது.

9. நர்த்தன ஞானசம்பந்தர்

சோழநாட்டில் சீர்காழியில் தோன்றிய ஆளுடைய பிள்ளையான ஞானசம்பந்தர், இங்கு தாமரைப்பீடத்தில் வலது காலைப் பக்கவாட்டில் ஊன்றி, இடது காலை

Koviloor Digital Library

மேலே தூக்கி மடித்து ஆடும் பிள்ளையாகக் காட்சியளிக்கிறார். அவரது வலக்கை, மேலே தூக்கி மடக்கிய வண்ணம் சுட்டுவிரலால் சுட்டும் நிலையில் சூசி முத்திரை காட்டுகிறது. இடக்கை பக்கத்தில் வீசி எறிந்த நிலையில் கொண்டு எழிலாக முத்திரை காட்டி நிற்கிறது, இவரது தலையில் செங்குத்தாகத் தூக்கி முடிந்த கேசபந்தம் தலைக் கோலமாக அலங்கரிக்க, பின்புறம் சிரசக்கரம் அமைந்து விளங்குகிறது. காதுகளின் மேற்புறம் செவிப்பூக்களும், கீழ்ப்புறம் மகரக்குழைகளும் அழகு செய்கின்றன. கழுத்தில் கற்கள் பதித்த சரப்பளியும், மார்பில் பதக்கமும் மணிகளும் கோத்த தொங்கு சரமும் அழகு செய்கின்றன. மேற்கைகளில் மணிகள் கோத்த தோள் வளையும், வளையமும், முன் கைகளில் காப்பும், புறங்கைகளில் வங்கியும் அழகு செய்ய, மார்பில் பூநூலும் இடையில் சிறு மணிகள் கோத்த பட்டையான அரைஞாணும், காலில் காப்பும் அணிந்து ஆடை அற்ற நிலையில் இளம்பிள்ளையாக இவ்வுருவம் வார்க்கப்பட்டுள்ளது. ஆடும் பிள்ளையின் முகத்தில் இளமை தவழ்கிறது. ஞானக்குழந்தையின் இளமைக் கோலத்தை வெளிப்படுத்தும் அழகும், ஆடையற்ற உருவும் அங்கங்களின் அமைப்பும் அணிகளின் தன்மையும் மிகக்கவனமாகக் கொண்டு நகரத்தார்காலச்சிற்பிகள் ஞானசம்பந்தரை வடித்துள்ளனர். இது முழுவதும் கனமாக வார்க்கப்பட்ட செப்புத் திருமேனியாகும். இப்படிமம் நகரத்தார் கோயில்களில் ஒன்றான இலுப்பைக்குடி கோயிலில் உள்ள பாண்டியர் கால நர்த்தன ஞானசம்பந்தரின் படிமத்துடன் ஒப்பிடத்தக்கது. இவ்வகையில் இப்படிமம் நகரத்தார்கலையின் தனித்தன்மையை வெளிப்படுத்துகிறது. இத்திருமேனி 46.5. செ.மீ. உயரமும், 9.செ.மீ. அகலமும் உடையது. இதன் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு.

Koviloor Digital Library

10. ஞானசம்பந்தர்

தேவாரம் பாடிய மூவரில் ஒருவரான ஞானசம்பந்தர் இடது கையில் பொற்கிண்ணம் ஏந்தி, வலது கையால் சுட்டி,சூசி முத்திரை காட்டும் இளம் பிள்ளையாக இடையில் ஆடையின்றி, மணிகள் கோத்த அரைஞாணும், சதங்கை வாரும் அணிந்த நிலையில் காட்டப்பட்டுள்ளார். இவரது தலையின் மேல் சிண்டு முடிந்து, தலையில் முன் புறம் காட்டப்பட்டுள்ளது. நெற்றியை ஒட்டி, கற்கள் பதித்ததை ஒத்த நெற்றிப்பட்டமும், அகன்ற இளநுதலில் திலகமும் அணிந்து, சிறிய தொள்ளைக்காதுகளில் அணியின்றி பாலறாப் பாலகனாக, ஞானக் குழந்தையாகத் தோற்றுவித்துள்ளனர் நகரத்தார் காலச்சிற்பிகள். இளம் குழந்தையான ஞானசம்பந்தரின் கழுத்திலும், மார்பிலும், தோள்களிலும், மேற்கையிலும், முன்கையிலும் உருத்திராட்ச மாலைகள் கோத்த கழுத்தணியும், தோள்வளையும், காப்பும் அலங்கரிக்கின்றன. இவர் அணிந்துள்ள கண்ட உத்திராட்சமும், மாலையும் ஏனைய அணிகளும் நகரத்தார் கலையை அடையாளம் காண வகைசெய்கின்றன. ஞானசம்பந்தரின் குழந்தைப் பருவத்தை மிக இயற்கையாகக் செம்பிலே வார்த்துள்ள நகரத்தார் காலச் சிற்பிகளின் கைத்திறன் போற்றுதலுக்குரியது. இக்கோயிலில் உள்ள ஆடும் நர்த்தன சம்பந்தரின் படிமத்தை விட இது காலத்தால் சற்று பிற்பட்டது. ஞானசம்பந்தரின் இரு வேறுபட்ட தோற்றத்தையுடைய படிமங்களை இவ்வாலயத்தில் கண்டு களிக்கலாம். இதன் உயரம் 51.5 செ.மீ. அகலம் 14 செ.மீ. உடையது.

11. அப்பர்

திருவாமூரில் தோன்றிய திருநாவுக்கரசரான அப்பர் பெருமானை, இங்கு வயது முதிர்ந்த சிவனடியாராகக் கூப்பிய கரங்களோடு தாமரைப் பீடத்தில் பணிந்து நிற்கும்

Koviloor Digital Library

நிலையில் செப்புச்சிலையாகக் காணலாம். அப்பரின் மழுங்கிய தலையைச் சுற்றிலும் உருத்திராட்ச மணிமாலையும், கழுத்தில் கண்ட ருத்திராட்சமும், மார்பில் நீண்டு தொங்கும் உருத்திராட்ச மணிவடமும, மேற்கையிலும், முன்கையிலும் இரட்டைவட உருத்திராட்ச மணிகள் கோத்த அணிகளும் அலங்கரிக்கின்றன. அப்பர் பெருமானின் வலது முன் தோளில் சிறிய கைப்பிடியுடன் கூடிய உழவாரப் படை சாத்தப்பட்டுள்ளது.

இவரது இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை, நீண்ட எளிய ஆடையும், இடுப்பைச் சுற்றிலும் கட்டி முடித்த துண்டும் அணிந்து, பக்திப் பெருக்கோடு எளிமையாகக் காட்சியளிக்கிறார். அப்பா அணிந்துள்ள உருததிராட்ச மணிகள் கோத்த நெறறியிலுளள திலகமும் வேட்டியை ஒதத, நீணட ஆடையும துணடும உழவாரப படையின் அமைபபும நகரத்தாா கலையை எள்துல அடையாளம் காண வகை செய்கன்றன. முழுதும் கனமாக வார்க்கபபட்ட இப்படிமம் கி.பி. 19-ஆம நூறறாண்டின் பிற்பகுதியைச் சார்நதது. இவ்வாலயததுல உள்ள, அப்பர், ஞானசம்பந்தர், சுநதரர் ஆகிய மூவரின் சிலைகளும் ஒரு காலக்கட்டத்துல் ஒரே சிறபியின் கை வண்ணத்தால் வார்க்கப்பட்டுள்ளன. இதன் உயரம் 51.5 செ.மீ. அகலம் 13.5. செ.மீட்டரும் உடையது.

13. சுந்தரமூர்த்தி

சுந்தரரின் செப்புத் திருமேனி தாமரைப் பீடத்தின் மீது வலது காலை ஊன்றி, இடது காலைச் சற்று முன் வைத்து இடுப்பை வலப் புறமாகச் சாய்த்து, இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது. வலது கை தாமரை மொட்டினைக் கடக முத்திரையில் பிடித்துள்ளது. இடக்கை தொடைமீது ஊறு முத்திரையில் அமைந்துள்ளது. கிரீடமகுடம் தலையிலும், வட்டமான

Koviloor Digital Library

சிர சக்கரம் பின்புறமும் அமைந்து, காதுகளில் வட்டமான மலர்க்குழையும், நெற்றியில் இரத்தினப்பட்டமும், கழுத்தில் கண்ட சரமும், மார்பில் சரப்பளியும், சபடியும், தொங்கு சரமும், இடது மார்பில் பூணூலும், மேற்கைகளில் இரட்டைவட தோள்வளையும், முன் கையில் மணிகள் கோதககாப்பும், இடையிலிருந்து தொடைவரை குறங்கு செறிகள் அலங்கரிக்கும் ஆடையும், இடையைச் சுற்றிலும் அரைப்பட்டிகையும், இடையின் பக்கங்களில் வளப்பூட்டும் ஆடைக்கட்டும், கால்களில் கழலும் அலங்கரிக்க, இராச வசிகரத்துடன், இளவரசரை ஒத்த உருவமாக இப்படிமம் வார்க்கப்பட்டுள்ளது. இரணியூர்-சுந்தரர் படிமத்தின் உருவமைப்பிலிருந்தும், ஆடை அணிகலன்களிலிருந்தும் இது முற்றிலும் வேறுபட்டுத் திகழ்கிறது. இவ்வுருவம் திருமுனைப்பாடிநாட்டு இளவரசரின் இளமைத் தோற்றத்தை நம் நினைவில் நிறுத்துகிறது. சோழரது படிமக்கலையின் சாயல் இப்படிமத்தில் காணப்படினும் நகரத்தாரின் கலைப்பாணி இப்படிமத்தில் பதிவாகியுள்ளதை நன்கு காணமுடிகிறது. சுந்தரரின் வேறுபட்ட உருவங்களை மாறுபட்ட நிலையில் இரணியூர் – நேமம் படிமங்களில் காணமுடிகிறது. இதன் உயரம் 51.5 செ.மீ. அகலமும், 14.5 செ.மீ. உடையது. காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தது.

14. பிள்ளையார்

இப்படிமம் தாமரையிருக்கையின் மீது நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது. விநாயகரின் மேல் வலக்கை அங்குசத்தையும், இடக்கை பாசத்தையும் பிடித்துள்ளது. கீழ்வலக்கை தந்தத்தைக் கொண்டுள்ளது. இடக்கை மோதகத்தை ஏந்திநிற்க விநாயகரின் துதிக்கை இடம்புரியாக வளைந்து, அம்மோதகத்தைப் பற்றுகிறது. கரண்டமகுடம், சிரசக்கரம், கண்டசரம், கல்

Koviloor Digital Library

பதித்த நீண்ட முத்துச்சரம், முத்துவளை, காப்பு, உதர பந்தம், பூணூல், முழங்காலுக்குக் கீழ்வரை இடைக்கச்சை, பாதசரம் ஆகிய அணிகளும், ஆடைகளும் விநாயகரை அலங்கரிக்கின்றன. இலைவடிவான காதுகள் விநாயகரின் தோளில் விரிந்துள்ளன. இச் சிற்பத்தின் நிற்கும் நிலை, முழங்காலுக்குக் கீழ்வரை காட்டப்பட்டுள்ள ஆடையின் அமைப்பு, இடையின் பக்கங்களில் சரிந்துதொங்கும் ஆடைக்கட்டு, அணிகளின் தன்மை, ஆயுதங்களின் அமைப்பு யாவும் நகரத்தார் கலையை வெளிப்படுத்தி நிற்கின்றன. காலம். கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. இதன் உயரம் 52.செ.மீ. தோள் அகலம் 16செ. மீ. உடையது.

15. சுப்பிரமணியர்

இப்படிமம் சதுரமான பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் நான்கு கைகளுடன் சமபங்கத்தில் நேராக நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது. மேற்கைகள் இரண்டும் முறையே சக்திப்படையையும்,வச்சிரப்படையையும் பற்றியுள்ளன. கீழ்க்கைகள் அபயவரதமளிக்கின்றன. கரண்டமகுடம், சிரசக்கரம், ரத்தினப்பட்டம், மகரகுண்டலம், வாகுமாலை, கண்டசரம், சரப்பளி, பூணூல், உதர பந்தம்,பூரிமம் பதித்த கேயூரம், காப்பு, சிம்ம முகப்புடைய இடைக்கச்சை, கழல், பாதசரம் ஆகிய அணிகள் சுப்பிரமணியரை அழகு செய்கின்றன. இடையிலுள்ள ஆடை முழங்காலுக்குக் கீழ்வரை நீண்டு அலங்கரிக்கிறது. காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. நகரத்தார்கலை. இதன் உயரம் 67.செ.மீ. அகலம் 16செ.மீ. உடையது.

16. வள்ளி

சுப்பிரமணியரின் வலப்பாகத்தில் காணப்படும் தேவி இங்கு தாமரை இருக்கைமீது இடையை வலப்புறமாக

Koviloor Digital Library

ஒடித்து திரிபங்கியாக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். இடக்கை நீலோத்பல மலரைப் பிடித்துள்ளது. வலக்கை நீண்டு தொங்கும் தாழ் கையாக அமைந்துள்ளது. கரண்ட மகுடம் தலையிலும், ரத்தினப்பட்டம் நெற்றியிலும், வட்டமான ஓலைக் குழைகள் காதிலும், கண்டசரம் கழுத்திலும், சரப்பளி மார்பிலும் ஓடும், பூணூல் இரு தனங்களின் இடையிலும், தோள்வளையம் மேற்கையிலும், கைவளைக்காப்பு முன்கையிலும் தேவியை அலங்கரிக்கின்றன. இடையின் முன்புறம் கீர்த்தி முகப்புடைய கச்சைஅணி செய்ய, இடையைச் சுற்றிலும் மணிகள் கோத்த எளிய மேகலையும், இடையின் பக்கங்களில் வனப்போடு சரிந்து நிற்கும் ஆடைக்கட்டும், தொடைமீது முத்துச்சரமும், முழங்காலுக்குக்கீழ்வரை எளிய இடைக் கச்சையும் அலங்கரிக்க, மார்பில் கச்சையணிந்து மலர்ந்த முகத்தோடு வள்ளியின் உருவம் வார்க்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 58.செ.மீ. அகலம் 13.செ.மீ உடையது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

வள்ளியின் கையில் மலரைத்தனியாகச் செய்து பொருத்தியுள்ளனர். இத்தகைய வழக்கு, நகரத்தார் கால கலைப்பாணியில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

17. தெய்வானை

இப்படிமம், இரண்டு கைகளுடன் தாமரை இருக்கை மீது இடையை இடப்புறமாக ஒடித்து, கழுத்தை வலப் புறமாகச் சாய்த்து, ஒயிலாக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. வலக்கை தாமரை மலரைக் கடக முத்திரையில் பிடித்துள்ளது. இடக்கை தொங்கும் கரமாக லோல முத்திரையில் அமைந்துள்ளது. தேவியின் அடிமுதல் முடிவரை பாதசரம், கால்காப்பு, கீர்த்தி முகப்புடைய இடைக்கச்சை, கைவளை, காப்பு, தோள்வளை, பூணூல்

Koviloor Digital Library

சரப்பளி, கண்டசரம், தோள்மாலை, மகரக்குழைகள், ரத்தினப்பட்டம், கற்கள் பதித்த கரண்ட மகுடம், சிரசக்கரம் ஆகிய அணிகலன்கள் அணிசெய்கின்றன.

தெய்வானையின் காதுகளில் உள்ள மகரக்குழையும், கச்சையில்லாத திறந்த மார்பும், மார்பின் இடையே ஓடும் பூணூலும், தெய்வானையின் உருவை எளிதில் அடையாளம் காண வகை செய்கின்றன. ஆடை அணிகளும், அங்கங்களின் அமைப்பும், கைகளில் தனியாகச் செய்து பொருத்தப்பட்டுள்ள மலரும், நகரத்தார் கலையை அடையாளம் காண வகை செய்கின்றன. இதன் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு. தேவியர் இருவரும் முழுதும் கனமாக, செப்புக்கலவையால் வார்க்கப்பட்டுள்ளனர். இதன் உயரம் 58 செ.மீ. அகலம் 13. செ.மீ. உடையது. சுப்பிரமணியர் குழுவைச் சேர்ந்த தேவியர் இருவர் உருவமும் ஒரே காலத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. இம்மூவரும் ஒரே சிற்பியின் கைவினையால் வார்க்கப்பட்டுள்ளனர்.

18. பள்ளியறைச் சொக்கர்

இப்படிமம் நான்கு கைகளுடன் தாமரை இருக்கைமீது இடதுகாலை மடித்து, வலதுகாலைத் தொங்கவிட்டு, அமர்ந்த கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது. மேல்வலக்கை வலுவான மழுவையும், இடக்கை துள்ளிக்குதிக்கும் மானையும், கத்தரி முத்திரையில் பற்றியுள்ளது. கீழ்வலக்கை அபயகரமாக அமைந்து அருள் பாலிக்கிறது. இடக்கை சிம்மகர்ண முத்திரையில் அமைந்துள்ளது. சடை மகுடம், சிரசக்கரம், மகரகுண்டலம், கண்டசரம், சரப்பளி, சவடி, தொங்குசரம், தோள்வளை, கைகாப்பு, உதரபந்தம், பூணூல், இடைக்கச்சை, கழல் ஆகிய அணிகலன்கள் பள்ளியறைச் சொக்கரை அலங்கரிக்கின்றன.

சதுரமான பரந்த முகம், நெற்றிக்கண்ணை உடைய விரிந்த நுதல், உயர்ந்த புருவம், அருள்பாலிக்கும் திறந்த

Koviloor Digital Library

கண்கள், எடுப்பான நாசி, குவிந்து விரிந்த திருவாய், அகன்ற தோள், அளவான அங்கங்கள் யாவும் முறையாக அமைந்து விளங்குகின்றன. இப்படிமத்தின் உடல்வாகு, அங்கங்களின் அமைப்பு, ஆடை அணிகள், ஆயுதங்களின் தன்மை யாவும் நகரத்தார் கலையை வெளிப்படுத்துவன. பள்ளியறைச் சொக்கரை அழகிய கீர்த்திமுகத் திருவாசி அலங்கரிக்கிறது. அர்த்த சாமப் பூசையின் போது, பள்ளி யறைச் சொக்கரை, பள்ளியறைக்கு முறையாக எழுந் தருளச் செய்வர். இங்கு நடக்கும் பூசைக்குப்பின் இரவு முழுவதும் பள்ளியறையில் சொக்கரை இருக்கச் செய்து, மறுநாள் விடியற்காலையில் திருவனந்தல் பூசைக்குப்பின் கருவறைக்கு மீண்டும் கொண்டு சேர்ப்பது வழக்கம். இச் செப்புத்திருமேனி 25.5.செ.மீ. உயரமும், 7.5. செ.மீ. அகலமும் உடையது.

19. பள்ளியறை அம்மன்

தாமரை இருக்கைமீது, இருந்த கோலத்தில் இரண்டு. கைகளுடன் அம்மனின் படிமம் வார்க்கப்பட்டுள்ளது. அம்மனின் வலக்கை நீலோற்பலத்தைக் கடக முத்திரை யில் பிடித்திருக்க, இடக்கை சிம்ம கர்ண முத்திரையில் அமைந்துள்ளது. காப்பு, இடக்கச்சை, சன்னவீரம், கண்ட சரம், சரப்பளி, சவடி, கைவளை, தோள்வளை, மகரக் குழை, சடை மகுடம், சிரசக்கரம் ஆகிய அணிகள் அடி முதல் முடிவரை அம்மனை அழகு செய்கின்றன. இடையி லிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை, கச்சையணிந்து, மார்க் கச்சையின்றி எளிமையாக அம்மனின் உருவம் அமைந்துள் ளது. அம்மனின் பீடத்தைச் சுற்றிலும், வேலைப்பாடுமிக்க திருவாசி அலங்கரிக்கிறது. அம்மனின் உயரம் 21.5. செ.மீட்டரும், அகலம் 16.5. செமீட்டரும் உடையது.

பள்ளியறைச் சொக்கர் செய்தளிக்கப்பட்ட காலத்தி

Koviloor Digital Library

லேயே மேற்படி அம்மனின் உருவமும் வடிக்கப்பட்டுள்ளது. இவ்விரு படிமங்களின் உடல்வாகும், ஆடை அணிகளும் நகரத்தார் கலையை வெளிப்படுத்துவன. இவை கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவை. இவ்வாலயத்திற்குரிய செப்புத்திரு மேனிகளில் இவையே உருவத்தில் சிறியவையாகவும், எளிமையும், அழகும் மிக்கவையாகவும் திகழ்கின்றன.

20. அஸ்திரதேவர்

சதுரமான பீடத்தின் மீது உள்ள தாமரை இருக்கையில் செங்குத்தாக உயர்ந்துள்ள வட்ட தூணில் மேல் உள்ள பலகையில் முத்தலைச்சூலமாக வார்க்கப்பட்டுள்ளது. பலகைமீதுள்ள சூலத்தின்பீடம் மூவிதழ்களைக் கொண்டு விரிந்த மலராக அலங்கரிக்கிறது. இப்படிமம் சித்திரைத் திங்களில் பத்தாம் நாள் உற்சவத்தில் ஊருணிக்கு உலாவாக எடுத்துச் செல்லப்படுகிறது. இதன் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இதன் உயரம் 44. செ.மீ. அகலமும் 14. செ.மீ. உடையது.

21. சோமாஸ்கந்தர்

இப்படிமம் குழந்தை குமர வேலுடன் அன்னையும் அத்தனும் அம்மையப்பராகத்தோன்றும் காட்சி, வார்ப்பிலே வடிக்கப் பெற்று வனப்புடன் விளங்குகிறது.

அ. சிவன்

சிவனது உருவம் தாமரை இருக்கையின்மீது வீற்றிருக்கும் கோலத்தில் காட்சியளிக்கிறது. மழுவும், மானும் மேற்கைகளில் ஏந்தி நிற்க, கீழ்வலக்கை அபயகரமாக அருள்பாலிக்கிறது. சடைமகுடம், சிரசக்கரம், மகர பத்தரக் குண்டலங்கள், கண்டிகை, சரப்பளி, தோள்வளை, கைவளை, பூணூல், உதரக்கச்சை, இடைக்கச்சை, பாதசரம் ஆகிய அணிகலன்கள் சிவனின் திருமுடிமுதல் திருவடிவரை

Koviloor Digital Library

அலங்கரிக்கக் காண்கிறோம். சிவனது நெற்றியில் மூன்றாவது கண் காட்டப்பட்டுள்ளது. சதுரமான பரந்த முகமும், அகன்ற நெற்றியும், உயர்ந்த புருவமும், நேரிய பார்வையும், எடுப்பான நாசியும், அழகிய மோவாயும் கொண்டு பெருமிதமாக விளங்கக் காண்கிறோம்.

ஆ. பிரியாவிடை

சிவனது இடப்புறம், அமர்ந்தகோலத்தில் பிரியாவிடை காட்சியளிக்கிறாள். பாதசரம், இடைக்கச்சை, உதரபந்தம், பூணூல், கண்டசரம், தோள்வளை, கைவளை, குழைகள், தலைமகுடம் ஆகிய அணிகலன்கள் உமையன்னையை பாதம் முதல் கேசம்வரை அலங்கரிக்கின்றன. சதுரமான பரந்த முகமும், திலகம் தரித்த நுதலும், தூக்கிய புருவமும், நீள்நாசியும், அருள்மழை மொழியும் மலர்ந்த கண்களும் கொண்டு, சிவனது இடப்புறம் பிரியாவிடையாக அமர்ந்துகாட்சி அளிக்கின்றாள்.

இ. குழந்தை முருகன்

சிவனுக்கும் உமைக்கும் இடையே, சிற்றிளம் குழந்தையாகக் குமரவேல் தோன்றும் காட்சியைக் கண்டு களிக்கலாம். இளம் பாலகனாய் நின்று விளையாடும் கோலத்தில் கந்தனின் உருவம் படைக்கப்பட்டுள்ளது. செம்பிலே வார்க்கப்பட்ட இவ்விறைக் குடும்பம் இங்கு தெய்வீகப் பொலிவோடு காட்சியளிக்கிறது.

22. உமாசகித சந்திரசேகரமூர்த்தி

செவ்வக பீடத்தின் மீதுள்ள இரு தாமரை இருக்கையில் சிவனும் உமையும் தனித்தனியாக நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளனர். சிவன் மேற்கைகளில் மழுவும், மானும் ஏந்தி, கீழ்வலக்கையால் அபயம் காட்டுகிறார். இடக்கை அழைத்து வழங்கும் ஆகூய முத்திரை காட்டுகிறது. உமையின் வலக்கை நீலோத்பலம் பற்றியும்,

Koviloor Digital Library

இடக்கை தாழ்கையாகவும் அமைந்துள்ளன. சிவனது தலையில் சடாமகுடமும், உமையின் தலையில் கிரீட மகுடமும் அலங்கரிக்கின்றன. இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ் வரை ஆடையும், கச்சையும் அணிந்து பல்வேறு அணிகலன்கள் பூண்டு, இருவரும் காட்சி அளிக்கின்றனர். இதன்காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. இது நகரத்தார் கலை. சிவனின் உயரம் 46. செ.மீ. அகலம் 9.5. செ.மீ. உமையின் உயரம் 40.5. செ.மீ. தோள் அகலம் 8.5. செ.மீ. உடையது.

23. ஆடிப்பூர அம்மன்

இப்படிமம் சதுரபீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது. அம்மனின் வலக்கை நீலோத்பலம் பிடித்துள்ளது. இடக்கைதொங்கும் கரமாக நீண்டுள்ளது. அம்மனின் ஆடை அணிகள் யாவும் நகரத்தார் கலையை வெளிப்படுத்துவன. திருவாசியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இடையை வலப்புறம் ஒடித்து, திரிபங்கியாக நிற்கும் இத்தேவியின் படிமம் கி.பி.19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. உயரம் 66 செ.மீ. அகலம் 12. செ.மீ. உடையது. இதனை சுக்கர வார அம்மன் என்றும் அழைப்பர்.

24. அழகு நாச்சியம்மன்

இப்படிமம் சதுர பீடத்தின் மேலுள்ள தாமரை இருக்கையில் நேராக நின்ற கோலத்தில் நான்கு கைகளுடன் வார்க்கப்பட்டுள்ளது. மேல் வலக்கை திரிசூலத்தைப்பிடித்துள்ளது. இடக்கை பாசக்கயிறைக்கொண்டுள்ளது. கீழ் வலக்கை அபய முத்திரை காட்டி அருள் பாலிக்கிறது. இடக்கை கபால கிண்ணத்தைத் தாங்கியுள்ளது. தலையில் விரிந்த அனல் மகுடம் அழகு செய்கிறது. காலகளில் முறையே மகரக் குழையும், மலர்க்குழையும் அலங்கரிக்

Koviloor Digital Library

இன்றன. கழுத்தில் பொட்டுமணி, பொற்சரம், சவடி ஆகிய அணிகள் அழகு செய்கின்றன. தோளில் இரு தோள் வளையும், கைகளில் காப்பும், காலில் தண்டையும் அணிந்து, இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை ஆடை அணிந்து அருள் பாலிக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளாள். நெற்றியில் கண்ணும், வாயில் கடைவாய்ப்பற்களும் அமைந்து, புடைத்த நாசியும், திறந்த விழியும் கொண்டு அம்மனின் முகம் காணப்படுகிறது. அணிகள், ஆயுதங்கள், ஆடையாவும் கொண்டு, இதனை நகரத்தார் கலையாகக் கருதலாம். இதன் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, அம்மன்கோயிலின் உற்சவத்தின் போது இதனை வீதி உலாவாக, சிம்ம வாகனத்தின் மீது எழுந்தருளச் செய்வர். இதன் உயரம் 73.செ. மீ. அகலம் 16.செ.மீ அளவுடையது.

25. சண்டிகேசுரர்

இப்படிமம் தாமரை இருக்கையின் மீதுஇரு கைகளைக் கூப்பிய நிலையில் வணங்கி நின்ற கோலத்தில் வார்க்கப் பட்டுள்ளது. வலது முன் தோளின் மீது கோடரியை ஒத்த மழுவாயுதம் சாத்தப்பட்டுள்ளது. தலையை உயர்ந்த சடைமகுடமும் சிரசக்கரமும் அலங்கரிக்கின்றன. மேற் காதுகளில் செவிப்பூக்கள் செருகப்பட்டும், கீழ்க்காதுகளில் மலர்க் குண்டலங்கள் அணிந்தும்காட்சியளிக்கிறது. நெற்றியைச் சுற்றிலும் இரத்தினப்பட்டமும், கழுத்து, மார்பு மேற்கை முன் கைகளில் மணிகள் கோத்த அணிகலன்களும் அழகுசெய்கின்றன. இடது மார்பில் பூணூல் காட்டப் பட்டுள்ளது. இடையிலிருந்து கீழ்த்தொடைவரை எளிமையானஆடையும், இடையின் முன்புறம் விசிறி மடிப்புடைய முகப்பும், இடையைச் சுற்றிலும் அரைப்பட்டிகையும்,இடையின்பக்கங்களில் சரிந்துதொங்கும் ஆடைக் கட்டும்,தொடைமீது முத்துச்சரமும், இரு தொடைகளின்

Koviloor Digital Library

வடே தொங்கு சரமும், கால்களில் மணிகள் பதித்த காப்பும் சண்டிகேசரை அலங்கரிக்கின்றன.

சதுரமான பரந்த முகமும், நுதலில் செங்குத்தான திலகமும், உயர்ந்த புருவமும், பக்திப் பரவசமூட்டும் கண்களும், குவிந்த வாயும், அளவான அங்கங்களும் கொண்டு விளங்கும் இவ்வுருவம் ஆழ்ந்த பக்தியை வெளிப் படுத்தும் நிலையில், அமைதியாகக் காட்டப்பட்டுள்ளது. கீழ் பீடத்தில் திருவாசியைப் பொருத்துவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. சண்டிகேசுரரின் வலது தோளில் சார்த்தியுள்ள கோடரியை ஒத்த, மழு ஆயுதத்தின் வடிவமைப்பு நகரத்தார் கலையை அடையாளம் காண உதவுகிறது. இரணியூர் படிமத்துடன் ஒப்பிடத்தக்க இப் படிமம், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தது. இவரது படிமம் பஞ்ச மூர்த்திகளில் ஒன்றாகக் கருதப்பட்டு வருகிறது. இதன் உயரம் 62. செ. மீட்டரும் அகலம் 13. செ. மீட்டரும் உடையது.

26. நந்தி

சிவபெருமானின் வாகனமான நந்தியை சுவாமி சன்னதியின் எதிரேயுள்ள மகா மண்டபத்தில் முன்புறம் அமைப்பது பண்டைய வழக்கமாகும். நந்தியின் உருவம் நீள் சதுர பீடத்தின்மீது, கால்களை மடித்து, பின் காலின் இடையே வாலைச் சுருட்டிய நிலையில் இறைவனை நோக்கிய வண்ணம் படுத்துள்ளது. நீண்ட உடல்வாகும், வலுவான கால்களும், நிமிர்ந்த தலையும், இடப்புறம் சாய்ந்த கழுத்தும், பக்கங்களில் விரிந்த காதுகளும், கீழ் வாய்ப் பற்களுடன் திறந்த வாயும், பிறைவடிவான நாசியை நாவால் நீவும் நீண்ட நாக்கும், பக்கங்களில் திறந்த கண்களும், செங்குத்தாக வளர்ந்த கூர்மையான கொம்புகளும், திரண்ட திமிலும், நீண்ட வாலும், இரண்டாகப் பிளந்த கால் குளம்புகளும், குளம்புகளின்

Koviloor Digital Library

மேற்புறத்தில் அமைந்துள்ள திருகாணிக்குளம்புகளும் மிகக் கவனமாக வார்க்கப்பட்டுள்ளன.

நந்தியின் கொம்புகளின் முனையில் கொப்பியும், நெற்றியில் நீண்ட ஆரமும், வாயைச்சுற்றிலும் முகப்புக் கயிறும், நாசியில் முறுக்கேறிய மூக்குக்கயிறும், கழுத்தில் ஒற்றைச் சதங்கைகோத்த கயிறும், மணிகோத்த சதங்கை வாரும், முதுகில் விரிந்துள்ள விரிப்பும், இடையின் பின் புறம் இடைவாரும் அமைந்து நந்தியை அலங்கரிக்கின்றன. நகரத்தார் படிமக் கலைப்பாணியை வெளிப்படுத்தும் இந்நந்தி, கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது 44.5. செ.மீ. உயரமும், 40. செ.மீ. நீளமும், 26. செ.மீ. அகலத்துடனும் அமைந்துள்ளது.

27. பலிபீடம்

மகா மண்டபத்தின் நடுவேயுள்ள மேடைமீது, நந்திக்குப் பின்புறம் பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் எளிய அதிட்டானத்தின்மீது, விரிந்த தாமரை கவிழ்ந்த நிலையில் விளங்குகிறது. பலி பீடத்தை உலோகத்தால் அமைக்கும் வழக்கம் நாயக்கர் காலம் முதல் வழக்கிலிருந்து வந்துள்ளது. இம்மரபு நகரத்தார் காலத்திலும் தொடர்ந்துள்ளது. இது செப்புக் கலவையால் உட்புறம் பொள்ளலாகக் குவிந்த நிலையில் வார்க்கப்பட்டுள்ளது. இது நகரத்தார் கலையைச் சேர்ந்தது. இதன் உயரம் 14. செ. மீட்டரும், அகலம் 20. செ. மீட்டரும் உடையது.

28. கண்ணாடி

இது மகா மண்டபத்தில் பலி பீடத்தின் முன்புறம் நிறுத்தப்பட்டுள்ளது. சதுரமான பீடத்தில் செங்குத்தாக உயர்ந்து நிற்கும் பித்தளை வார்ப்பாலான உலோகத் தான் பலகை மீது, சுற்றிலும் வேலைப்பாடு மிக்க கீர்த்தி முகப்புடைய கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. கண்ணாடி

Koviloor Digital Library

யின் முன்புறமும், பின்புறமும் குவிந்து, வழுவழுப்பாகக் காட்சியளிக்கின்றன. கண்ணாடியைச் சுற்றிலும் இரு பத்தினான்கு இதழ்களைக் கொண்ட இலைக்கருக்குகள் வனப்பூட்டுகின்றன. கண்ணாடி அமைந்துள்ள பலகையின் இரு பக்கங்களிலுமாக, இரு குந்து சிம்மங்கள் வாயில் வளைந்த இலைக்கருக்குகளுடன் வனப்பூட்டுகின்றன. பித்தளை வார்ப்பில் வடிக்கப்பட்டுள்ள இக்கண்ணாடி ஒரு மீட்டர் உயரமும், 41.செ.மீ. அகலமும் உடையது. இக்கண்ணாடி நேமம் நகரத்தாரால் செய்தளிக்கப் பட்டுள்ளது.

நகரத்தார் கலை

தமிழகத்தை ஆண்ட மன்னர் மரபினருக்குப் பிறகு செட்டிநாட்டுப் பகுதியில் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் செய்தளித்த இக்கலைச்செல்வங்களை நகரத்தார் கலையாகக் கருதலாம். இவை சோழர் பாண்டியர், விசயநகரர், நாயக்கர் போன்ற நீண்ட கலைமரபின் தொடர்ச்சியாக இருப்பினும், நகரத்தார் கலையை அடையாளம் காணுமாறு இவற்றின் தனித்தன்மைமிளிரக் காண்கிறோம். இப்புதியகலைமரபையே நகரத்தார்கலை என அழைக்கலாம். இவை முந்திய கலைப் பாணியின் தொடர்ச்சிக்கு ஒரு குறிப்பிடத்தக்க சான்றாக அமைகின்றன.

Koviloor Digital Library

7. திருவிழாக்கள்

நாள் வழிபாடு

நேமம் செயங்கொண்ட சோழீசுவரர் கோயிலில் காரணாகம முறைப்படி தினமும் ஐந்துகால பூசைகள் நடைபெறுகின்றன. இங்கு அதிகாலையில் தொடங்கும் திருவனந்தல் பூசையிலிருந்து இரவு பள்ளியறை பூசைவரை அனைத்தும் இறைவனுக்கே நடைபெறுகின்றன. இவ்வாறு சூரியன் உதிப்பதற்கு முன் தொடங்கி, மறைந்த பின் நடப்பது வரை நாள் வழிபாடு எனப்படுகிறது.

சைவ ஆகமங்கள் ஒரு நாளில் நடைபெறும் ஒருகால வழிபாடு முதல் எட்டுகால பூசை வழிபாடு வரை எம்முறையில் நடைபெற வேண்டுமென்று விரித்துக் கூறுகின்றன. நேமம் கோயிலில் நாள் தோறும் நடைபெறும் வழிபாடுகள் முறையே!

திருவனந்தல்	– காலை	6.00மணி	– 6.30மணி
காலசந்தி	– காலை	8.00மணி	– 9.00மணி
உச்சிக்காலம்	– காலை	11.00மணி	– 12.00மணி
சாயரட்சை	– மாலை	5.00மணி	– 6.00மணி
அர்த்தசாமம்	– இரவு	8.30மணி	– 9.00மணி
பள்ளியறை	– இரவு	9.00மணி	– 9.30மணி

நகரக்கோயிலானதால் சாயரட்சை அம்மன் சன்னதி பூசை முடிந்ததும் குருக்கள் திருநீறு வழங்கும்போது 'ஒக்கூர் உடையார்' என்று முதலிலும், இரண்டாவதாக 'அயல்கோயில் நகரத்தார்' என்றும் மூன்றாவதாக 'நகரத்தார்' என்றும் கூப்பிட்டு அழைத்து திருநீறு வழங்கும் மரபு இருந்து வருகிறது. விசேடகாலங்களில், அரண்மனையரையும், நகரத்தாரையும், நாட்டாரையும், ஊராரையும் அழைப்பது உண்டு.

Koviloor Digital Library

திருவிழாக்கள்

கோயில் திருவிழாக்கள் உற்சவங்கள் என அழைக்கப் படும். நேமம் கோயிலில் பண்டைய நாளில் நடந்த திரு விழாக்களையும் இன்று நடந்துவரும் திருவிழாக்கள் முதலியவற்றையும் இங்குக்காணலாம். இக்கோயிலில் ஆவணித்திங்களில் பிள்ளையார் சதுர்த்தி நடைபெறுகிறது புரட்டாசி மாதத்தில் நவராத்திரிவிழா ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது. விஜயதசமி இரவு மகர் நோம்பு உற்சவம் நடைபெறுகிறது. கார்த்திகை மாதத்தில் திருக் கார்த்திகை அன்று ஆலயத்தில் நிறைய தீபங்கள் ஏற்றி சுவாமி சுப்பிரமணியருக்குச் சிறப்பு வழிபாடு செய்வர். பஞ்சமூர்த்திகளை எழுந்தருளச்செய்து, சொக்கப்பானை கொளுத்தி வீதிவருவது வழக்கமாய் இருந்து வந்துள்ளது. மார்கழி மாதம் 30 நாட்களும் இங்கு திருப்பள்ளி எழுச்சிப் பூசை நடைபெறுகிறது. மார்கழி மாதத்தில் திருவாதிரை அன்று நடராசருக்குச் சிறப்பு வழிபாடும் நடந்துவருகிறது.

தைப் பொங்கல்

தைமாதத்தில் சுற்றுக்கோயில் அனைத்திற்கும் நேமம் கோயில் சார்பாகப் பொங்கல் பூசை சாமான்களுடன் பானை வழங்கப்படும். கோயில் சிப்பந்திகள் அனைவருக்கும் பொங்கல் வைப்பதற்கு வேண்டிய மஞ்சள், இஞ்சி, வெற்றிலைப்பாக்கு, வாழைப்பழம், அரிசி, வெல்லம் போன்ற முக்கியப் பொருள்களை பொங்கல் பானையோடு சுவாமி சன்னதி முன்பு வழங்குவர். சங்கராந்தி பொங்கல் அன்று சுவாமி சன்னதியில் நந்திக்குப் பின் புறத்தில் பொங்கல் வைத்து, உச்சிக்காலத்தின் போது, சிறப்பு வழி பாடு செய்யப்பட்டு வருகிறது. மாசி மாதம் மகா சிவராத்திரி அன்று இக்கோயில் இறைவன் இறைவிக்கு அபிடேகம் செய்து, அலங்கார ஆராதனை நடைபெறு

Koviloor Digital Library

கிறது. அன்று இரவு சுவாமி கோயிலில் உள்ள நேமம் காளிக்கும் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

கோயில் வாகனங்கள்

நேமம் கோயிலின் சிற்பங்களையும் செப்புத்திருமேனி களையும் அடுத்து நாம் காணவேண்டிய கலைச்செல்வங் களாக இக்கோயிலுக்குரிய மரவாகனங்களைக் குறிப்பிட லாம். இக்கோயிலுக்குரிய மொத்தவாகனங்கள் எட்டு. அவற்றில் ஏழு மரததாலும், ஒன்று வெள்ளியாலும் செய்தளிக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் உள்ள மரவாகனங்கள் முறையே: பெரிய காளைவாகனம்-1, பெருச்சாளிவாகனம்-1, சிறிய காளைவாகனம்-1, அன்னவாகனம்-1, மயில்வாகனம்-1, சிம்மவாகவம்-1, சுற்றும்குதிரைவாகனம்-1. இவை அனைத்தும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தவை. நகரத்தார் காலத்திய மரச்சிற்பங்களுக்கு எடுத்துக் காட் டாகத் திகழ்பவை. இவ்வாகனங்களுக்குரிய வண்ணங்கள் தீட்டப்பட்டு கண்ணாடிக் கற்கள் பதிக்கப்பட்டு கவினுறக் காட்சி அளிக்கின்றன.

இவற்றில் சிறிப்பாயும் சிம்மவாகனமும், கண்ணாடி பதிதத காளைவாகனமும் கம்பீரமானவை. பக்கங்களில் விரிந்த இறக்கையோடு உள்ள அன்னவாகனம் அழகு மிக்கது. தோகை விரிந்த மயில்வாகனம் வனப்புடையது. சுற்றும்குதிரைவாகனம் காணத்தக்கது. இவற்றில் காளை வாகவம் உருவில் பெரியது; சிறியது பெருச்சாளி வாகன மாகும்.

ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழா நாட்களில் பஞ்சப் பேரம், ஆடிப்பூர அம்மன் மற்றும் அழகு நாச்சி யம்மன் ஆகிய செப்புச்சிலைகளை அலங்கரித்து இவ் வாக னங்கள் மீது வைத்து திருவீதி வலம் வருவது பண்டைய வழக்கமாக இருந்து வந்துள்ளது. இவ்வாகனங்களில் பெருச்

Koviloor Digital Library

சாளிவாகனம் விநாயகருக்குரியது. பெரிய காளைவாகனம் சோமாசுகந்தருக்குரியது. சிறிய காளைவாகனம் சண்டிகேசுரருக்குரியது. அன்னவாகனம் அம்மனுக்குரியது. மயில் வாகனம் சுப்பிரமணியருககுரியது. சிம்மவாகனம அழகு நாச்சி யம்மனுக்குரியது. இதனை மகர நோன்பு உற்சவத தின்போது எழுந்தருளச்செய்வர்.

வெள்ளிவாகனம்

இக்கோயிலில் உள்ள வெள்ளி காளைவாகனத்தை மரத்தில் செதுக்கி அவற்றின் மேல் வெள்ளித்தகடுகள் போர்த்தி வெள்ளி வாகனத்தை உருவாக்கியுள்ளனர். இவற்றால் அவர்களது செல்வச் சிறப்பையும், கலைத்திறனையும் நன்கு அடையாளம் காணமுடிகிறது. இக்கோயிலில் உள்ள வெளளி ரிஷபவாகனம் மேலச்சிவபுரி சி. ஆ. சி. சின்னான் செட்டியாரால் உபயமாகச் செய்தளிக்கப்பட்டுள்ளது. இவ வெள்ளி வாகனத்தில் சௌந்தர நாயகி அம்மனை எழுநத ருளச் செய்வது வழக்கம்.

இங்குள்ள வாகனங்கள் அனைததும் நேமம் கோயில திருசசுறறு மாளிகைப பத்தியின் வடதிசையில் உள்ள வாகன அறையில் பாதுகாப்பாக வைககபபடடுளளன. இவறறில மரவாகனங்கள அனைத்தும் 1907-இல் நடநத அஷ்டபநதன மகாகும்பாபிஷேகத்தை ஒட்டி செய்தளிக்கப் பட்டுளளன. அதன்பிறகு நடைபெறற கும்பாபிஷேகததை யொட்டி, வாகனங்களுக்குப் புதிய வண்ணங்கள் தீட்டப் பட்டுளளன.

சட்டத்தேர்

நேமம் கோயிலுக்கென்று தனியாக சட்டத்தேர், சப்பரம் முதலிய இருந்தன. அவை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஓடியதாக ஊரார் கூறுவர். அண்மைக்காலம் வரை மாடுகள் பூட்டி ஓட்டிவந்த இரு சகடைகள் இன்றும் உள.

Koviloor Digital Library

8. கோயில் குடியும் நிர்வாகமும்

நேமம் கோயிலில் நாள்தோறும் பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்காகக் கோயில் குடிமக்களும் சிப்பந்திகள் பலரும் முன்பு இருந்து வந்துள்ளனர். அவர்களில் குருக்கள், வைராவி போன்ற பணியாளர்களுக்கென்று தனியாக மான்யம் இருந்ததாக அறிகிறோம்.

தற்போது இக்கோயில் பணியில் குருக்கள், சுயம்பாகம், மணியம், உதவிகணக்கர், வைராவி, ஓதுவார், அறைக் காரர், மெய்க்காவல், நந்தவனம், மேளம் ஆகிய பணி யாளர்கள் பதின்மர் ஈடுபட்டுள்ளனர்.

கோயில் நிர்வாகம்

நேமம் கோயிலைச்சார்ந்த நகரத்தார்கள் மொத்தம் 1500-க்கு மேற்பட்ட புள்ளிகள் 21-ஊர்களில் வளர்ந்தேறி வாழ்கிறார்கள். இவர்களில் காரியக்காரர்கள் 25-பேர். ஆண்டுக்கு 5 பேர். 5 ஆண்டுக்கு ஒருமுறை வெகுதானிய வருஷம் முதல் பழைய காரியக்காரரர்கள் 12-பேருடன் மேலும் 13-பேர் சேர்க்கப்பெற்று, ஆண்டுக்கு 1 முதல் 5, 6 முதல் 10, 11 முதல் 15, 16 முதல் 20, 21 முதல் 25 வரை வரிசையில் அவ்வக்குடும்பத்தில் வயதாலும், அனு பவத்தாலும் முதிர்ந்தவர்கள் ஐந்தைந்து பேர் கூடிச் சிறந்த முறையில் நிருவகித்து வருகிறார்கள். அவர்கள் முறையே:

1. நெற்குப்பை - கு.பழ.சு.வகை.
2. நெற்குப்பை - லெ.ராம.ப.வகை.
3. கீழச்சிவல்பட்டி - மெ.மு.கரு.வகை.
4. மேலச்சிவபுரி - ராம.மு.வகை.
5. மேலச்சிவபுரி - நா.ஆ.சி.வகை.

(ஐவரும் ஓர் ஆண்டு)

Koviloor Digital Library

6. வலையப்பட்டி - குழ.அடை.வகை.
7. வலையப்பட்டி - ந.மு.வகை.
8. வேந்தன்பட்டி - ந.ந.வகை.
9. வேந்தன்பட்டி - நா.அரு.வகை.
10. ராங்கியம் - வ.நா.வகை.

(ஐவரும் ஓர் ஆண்டு)

11. காரைக்குடி - நா.நா.வகை.
12. கண்டனூர் - தெ.அரு.வகை.
13. பள்ளத்தூர் - தெ.அ&.தெ.மு.& மு.பி.வகை (3)
14. பள்ளத்தூர் - அரு.மு.நெ.சு.வகை.
15. கானாடுகாத்தான் - அள.சு.வகை.

(ஐவரும் ஓர் ஆண்டு)

16. அரிமளம் - சி.ராம.வகை.
17. அரிமளம் - மு.செ.வகை.
17. கோட்டையூர் - கு.கரு.வகை.
19. கோட்டையூர் - கு.மு.வகை.
20. கோட்டையூர் - கு.வீர.வகை.

(ஐவரும் ஓர் ஆண்டு)

21. காரைக்குடி - அரு.அ.வ்கை.
22. காரைக்குடி - வீர.அ.வகை.
23. காரைக்குடி - தெ.வ.கரு.வகை.
24. தேவகோட்டை - உ.ராம.மெ.வகை.
25. தேவகோட்டை - உ.ராம.உ.வகை.

(ஐவரும் ஓர் ஆண்டு)

இவ்விதம் காரைக்குடியில் 4-பேர், தேவகோட்டையில் 2-பேர், கோட்டையூரில் 3-பேர், பள்ளத்தூரில் 2-பேர், கானாடுகாத்தானில் ஒருவர், அரிமளத்தில் 2-பேர், நெற்குப்பையில் 2-பேர் வேந்தன்பட்டியில் 2-பேர், மேலைச் சிவபுரியில் 2-பேர், வலையப்பட்டியில் 2-பேர். ராங்கியத்தில் ஒருவர், கீழச்சிவல்பட்டியில் ஒருவர், கண்டனூரில்

Koviloor Digital Library

ஒருவர் ஆக 25-பேர்கள் ஒன்று கூடி நேமம் கோயிலை நிர்வகித்து வருகிறார்கள்.

இவ்வாண்டு (1990-1991) நடப்பு காரியக்காரர்களாக ஐவர் இருந்து வருகின்றனர். அவர்கள் முறையே:

1. நெற்குப்பை லெ.ராம.ப. லெட்சுமணன் செட்டியார்
2. நெற்குப்பை பழ. பட்டாபிராமன் செட்டியார்
3. மேலச்சிவபுரி ராம. மு. தியாகராஜன் செட்டியார்
4. மேலச்சிவபுரி ராம. சுப்பையா செட்டியார்
5. கீழச்சிவல்பட்டி மெ.மு.கரு.மு. முத்தையா செட்டியார்

கோயில் சொத்துக்கள்

நேமம் கோயிலுக்கு 1990 வரை, 500-ஏக்கர் நஞ்சை புஞ்சை தென்னந்தோப்புகள் உள்ளன. தற்போது நஞ்சை புஞ்சை தென்னந்தோப்புகள் வகையரா 35 ஏக்கர் வரை அனுபவத்தில் இருந்து வருகிறது. மேலும், வெயில் உகந்த பிள்ளையார் கோயில், அய்யனார் கோயில், அழகு நாச்சியம்மன் கோயில், நித்தம் புதுமை நாச்சியம்மன் கோயில், பச்சிலை நாச்சியம்மன் கோயிலுக்குமாக மான்ய நிலங்கள் இருந்ததாக நேமம் கோயில் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

குடநீராட்டுவிழா

கேரள சிங்கவளநாட்டில் நேமம் ஆகிய குலசேகர புரத்தில் தேனாறு பாயும் இளநலம் உடையார்களான நேமம் கோயில் நகரத்தார்களால் ஸ்ரீ சௌந்தர நாயகி உடனாய அருள்மிகு செயங்கொண்ட சோழீசருக்கும், கணேசர், ஸ்கந்தர், பைரவர், சண்டீசர் முதலிய பரிவார தேவதைகளுக்கும் அழகு நாச்சியம்மனுக்கும், நிகழும் பிரமோதூத ஆண்டு தைத்திங்கள் 21-ஆம் நாள்(1991 பிப்ரவரி மாதம் 3ஆம் தேதி) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை குடநீராட்டு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

Koviloor Digital Library

9. சோழகுல ஊருணி

திருக்கோயிலின் தென்திசையில் இவ்வூருணி அமைந்துள்ளது. சோழர்காலத்தில் இருந்து ஊருணியை நகரத்தார்கள் முழுமையாக விரிவுபடுத்தி படித்துறைகளும், நெடு மதில்களும் கட்டி, கண்மாயிலிருந்து தண்ணீரை ஊருணிக்குக் கொண்டுவரும் சாளரங்களை முறையாக அமைத்துள்ளனர். இவ்வூருணி பார்ப்பதற்கு மிகவும் பரந்து விரிந்து பெரிய ஏரிபோல் பிரமாண்டமாகக் காட்சியளிக்கிறது.

பண்டையநாளில் சோழ மன்னரால் தோற்றுவிக்கப் பட்ட இவ்வூருணி சோழகுல ஊருணி என்று பெயரிடப் பட்டு இன்று 'சோழாகுள ஊருணி' என மருவி வழங்கப் படுகிறது. ஊருணி நீர்நிறைந்த காலங்களில் பெரியதடாகத்தை யொத்தும், நீர்வற்றிய காலங்களில் ஊருணியைச் சுற்றியுள்ள படித்துறைகளின் அமைப்பு விளையாட்டு மைதானத்தை ஒத்தும் பார்ப்போரை வியப்பிலாழ்த்துகிறது.

படித்துறைகள்

ஊருணியின் வடதிசையில் இருபடித்துறைகளும், தென்த்திசையில் இருபடித்துறைகளும் அமைந்துள்ளன. அவ்வாறு கீழ்த்திசையிலும், மேல்திசையிலும் பக்கத்திற்கு ஒரு படித்துறை அமைந்து விளங்கக்காண்கிறோம், இவ்வாறு நான்கு திசைகளிலும் ஆறு படித்துறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஊருணியை அடைவதற்கு ஐந்து படிக்கட்டுகளையுடைய ஏறுபடியும், பதினேழு படிக்கட்டுகளையுடைய இறங்கு படித்துறையும் மிகவும் விசாலமாக அமைக்கப் பட்டுள்ளன. இப்படிக்கட்டுகள் ஒவ்வொன்றும் 16.30 மீட்டர் நீளமும், 88. செ. மீட்டர் அகலமும் உடையன.

Koviloor Digital Library

சுற்றுமதில்

ஊருணியின் மதில் சுவர்கள் நான்கு புறங்களிலும் கோட்டை மதிலையொத்து உயர்ந்து விளங்குகின்றன. இது 3.15. மீட்டர் உயரமுடையது. செம்புராங் கற்களைக் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. மேலும் சங்ககாலத்தில் செம்பை உருக்கி வார்த்ததை யொத்த உறுதிபடைத்த சுவர்கள் இருந்ததாக இலக்கியச் செய்திகள் கூறும். இதனை 'செம்பு இயன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்' என நெடு நல்வாடை கூறும். பண்டைய தமிழர்களின் கட்டடக் கலையை நினைவூட்டும்வகையில் இங்குள்ள மதில் சுவர்கள் எழுப்பபடுள்ளன. மேலும், இதை நேரில் பார்ப்போர் இரும்பைக்காய்ச்சி உருக்கிவார்த்த துண்டுகளால் இது கட்டப்பட்டுள்ளதா என வியக்கும் வகையில் இம்மதில் சுவர்கள் அமைப்பிலும் அழகிலும் உறுதி படைத்து விளங்கக்காண்கிறோம்.ஊருணியைச் சுற்றிலும் மேல்புறத்தில் அதன் உள்பக்கங்களில் நடந்துவர முறையான பாதை யுள்ளது. ஆலவடியின் பக்கச் சுவரில் விளக்கு வைக்கும் மாடங்கள் வரிசையாக அமைந்துள்ளன.

ஊருணியின் தென்மேற்குப் பகுதியில்நேமம் ஊர்க்கண் மாயிலிருந்து ஊருணிக்கு நீரைக்கொண்டுவர சாளரத்தோடு கூடிய உள்வாய் அமைக்கப்பட்டுள்ளது. 'உள்வாயின் வெளிப்புறம் படிக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன.

ஊருணியின் வடக்குத்திசையிலுள்ள இருபடித்துறைக்கு நடுவே, சோழகுல விநாயகர் கோயிலும், திருச்சுற்று மண்டபமும் எழில்வாய்ந்த நிலையில் காட்சியளிக்கின்றன. நீர் நிறைந்த இவ்வூருணியில் அல்லியும், ஆம்பலும் நிறைந்து அழகாகக் காட்சியளிக்கின்றன. நகரத்தார்களது திட்டமிட்ட கட்டடக்கலைக்கு இவ்வூருணி சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இச்சோழாவூருணி திராவிடக்

Koviloor Digital Library

கட்டடக்கலையை நினைவூட்டும் வகையில் அமைந்து விளங்குகிறது.

செட்டி ஊருணி

கோயிலுக்கு எதிரே விடுதிக்குக் கீழ்ப்புறம் உள்ள ஊருணியைச் செட்டி ஊருணி என்பர். இதன் படித்துறைகளும், மதிற்கற்களும் சரிந்த நிலையில் காட்சியளிக்கின்றன. இவ்வூருணி நேமம் கிராமத்திற்குக் குடிநீராகப் பயன்படுகிறது. செம்புராங்கல்லால் கட்டப்பட்ட இவ்வூருணி தற்போது ஊர் பஞ்சாயத்தாரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நேமம் கோயிலார் குடியிருந்த காலத்தில் காரைக்குடி அரு. அ. குடும்பத்தார்களால் ரூ. 15,000 செலவில் பிள்ளையார் கோயிலும் குளமும் நிறுவப்பட்டுள்ளன. செட்டியாரால் தோற்றுவிக்கப்பட்டதால் இது 'செட்டி ஊருணி' என அழைக்கப்படுகிறது.

Koviloor Digital Library

10. சோழகுல விநாயகர் கோயில்

நேமம் கிராமத்தை அடைந்தவுடன் நம்கண்முன் தோன்றுவது திருக்குளத்தின் வடகரையில் வனப்போடு தோற்றமளிக்கும் இவ்விநாயகர் ஆலயமே. ஊராரும், நகரத்தாரும் கோயில் திருக்குளத்தில் மூழ்கி நீராடிவிட்டு, இவ்விநாயகரை வழிபடுவதற்கு ஏற்ற வகையில் வடகரையிலுள்ள படித்துறையின் பக்கத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. அதன் பக்கங்களில் கம்பீரமாக நிற்கும் இரு கல்யானைகளின் சிற்பங்கள் கவினுற செதுக்கப்பட்டுள்ளன இப்படிக்கட்டுகளைத் தாண்டிச் சென்றால் வனப்புமிகு சோழகுல விநாயகரைக்கண்டு தரிசிக்கலாம்.

சோழகுல விநாயகர்

நீண்ட பீடத்தின் மீது இருபக்கங்களிலும் நாகர்கள் சூழ விநாயகர் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். இவ்வுருவம் வலது காலைக் குத்திட்டு இடதுகாலை மடித்து நான்கு கரங்களுடன் காணப்படுகிறது. மேலும் வலக்கை அங்குசத்தையும், இடக்கை பாசத்தையும் பிடித்துள்ளன. கீழ் வலக்கை கூர்மையான தந்தத்தைப் பற்றியுள்ளது. இடக்கை மோதக உருண்டையை ஏந்தியுள்ளது. கரண்ட மகுடத்தைத் தலையில் அணிந்து நிமிர்ந்து நோக்கி கம்பீரமாகக் காட்சியளிக்கும் ஆனைமுகத்தானின் துதிக்கை இடம்புரியாக வளைந்து இடக்கையிலுள்ள மோதகத்தைப் பற்றுகிறது. பெருத்த மத்தகமும், கூர்மையான கண்களும், பக்கங்களில் விரிந்த காதுகளும், கூரிய தந்தமும், இடம்புரி துதிக்கையும், ஆனைமுகத்தானை அழகு செய்கின்றன. அகன்ற தோளும், சரிந்த வயிறும், குட்டையான அங்கங்களும் தசைப்பற்றுள்ள உடலும் கொண்டுள்ள இவ்விநாயகரின் உருவம் அளவோடு அமைக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

இக்கோயில் கருவறை, முகமண்டபம், திருச்சுற்று மண்டபம், விமானம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. கோயில் சன்னதி கீழ்த்திசையை நோக்கியுள்ளது. விநாயகர் வீற்றிருக்கும் கருவறை சதுரவடிவுடையது. அதன் உட்பக்க அளவு-1.80. மீட்டர். வெளிப்பக்க அளவு 4.மீட்டர் உடையது. கருவறையின் புறச்சுவர்கள் கட்டடக் கலைச் சிறப்பு மிக்கதாக விளங்குகின்றன. கருவறை முன்புறம் முகமண்டபம் விசாலமாக அமைந்துள்ளது. இம்மண்டபத்தை இருவரிசைகளில் 8. தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்கள் 2.85. மீட்டர் உயரமுடையுவை.

தூண்சிற்பங்கள்

இத்தூண்களின் கீழேயுள்ள சதுரப்படைகளில் தெய்வ உருவங்களும் மானிட மற்றும் மிருகங்களின் சிற்பங்களும் காட்சியளிக்கின்றன. முகமண்டபத்தின் முன் வரிசையிலுள்ள தூண்களில் சண்டிகேசுவரர், தலமரத்தின் கீழே இருக்கும் இலிங்கம், இரணியனை மடியில் கிடத்தி அவனது குடலை உருவி மாலையாகக் கொள்ளும் சிங்கபிரான், அவனது காலடியில் வணங்கி நிற்கும் இரணியன் மகன் பிரகலாதன், சக்தி வச்சிரப்படையோடு மயில் வாகனத்தின் மீது காட்சியளிக்கும் முருகப் பிரான், இலிங்கத்திற்குப் பால் சொரியும் பசு, கையில் கூடை ஏந்தி வரும் குறத்தி, அங்குசம் பாசம் ஏந்தியுள்ள ஆனை முகத்தான் ஆகிய சிற்பங்கள் உள்ளன. மேலும், ஓங்கிய கையும் கதாயுதமும் கொண்டு விளங்கும் வீரஆஞ்சநேயர், அம்மையப்பனாகத் தோன்றிக் காட்சியளிக்கும் உமா சகிதமூர்த்தி, சந்திர சேகர மூர்த்தி, தண்டாயுதபாணி, காமதேனு ஆகிய சிற்பங்களும் அலங்கரிக்கின்றன. முகமண்டத்தின் பின் வரிசையிலுள்ள தூண்களில் பாய்ந்துவரும் யாளி, அம்பும் வில்லும் ஏந்திவரும் இராம பிரான், இடையில் கோவணம் தரித்து நிற்கும் பழனியாண்டி, ஆடும்மயில்,

Koviloor Digital Library

தாருகா வனத்தில் மானோடும் சிவகணங்களோடும் தோன்றி, பிச்சை உகுக்கும் பெருமானான பிச்சாடன மூர்த்தி, ரிஷப வாகனத்தின் மீது சுகாசனத்தில் தனித்து வீற்றிருக்கும் சிவபெருமான், பத்மாசனம் கொண்டு தியானத்தில் வீற்றிருக்கும் நான்முகன், மழுவும் மானுமேந்தி காளை வாகனத்தோடு தோன்றும் ரிஷப வாகன மூர்த்தி. தாடியும் மீசையும் சடாமுடியும் தரித்தயோகி, குழலூதும் வேணுகோபாலன், இன்னிசையில் மயங்கி நிற்கும் ஆநிரைகள், அல்லி மலர்ஏந்தி நிற்கும் அன்னை சௌந்தரநாயகி, அழகிய அன்னம், பறக்கும் குதிரை, பாயும் யாளி ஆகிய சிற்பங்களைக் காணலாம்.

ரிஷப வாகன மூர்த்தி

இச்சிற்பங்களில் காளை வாகனத்தின் முன்புறம் சிவ பெருமான் மழுவும் மானுமேந்தி அருள் பாலித்து நிற்க, அவரது இடக்கரம் காளைக்குத்துளிர் கொடுக்கும் கரமாக அமைந்துள்ளது. இவ்வாறு சிவனது காளை வாகனம் அண்ணலது இளங்கரங்களையே துளிராகக் கொண்டு, அக்கரங்களைத் தன் வாயில் கவ்வி சுவைத்து நிற்பதை மிக அற்புதமாகச்செதுக்கியுள்ள பாங்கு குறிப்பிடத்தக்கது. ரிஷபத்தின் முன்புறம் சிவபெருமான் நிற்கும் கோலங்கள் செம்பிலும் கல்லிலும் காலம் தோறும் கலைப்படைப்புகளில் காட்டப் பட்டிருப்பினும், இங்குள்ள உருவம் வேறுபட்டிருக்கக் காண்கிறோம்.

முதாட்டி

முகமண்டபத்துப் பின் வரிசைகளில் உள்ள இரண்டாவது தூணில் வயது முதிர்ந்தும், உடல் தளர்ந்தும், கூனிக் குறுகி, கையில் கைத்தடி ஏந்தி, தள்ளாடி வரும் மூதாட்டியின் உருவம் ஒன்றைக் காணலாம் இம்மூதாட்டி இடையிலுள்ளஆடை நெகிழ்வதறியாது, தன்னையே மறந்த நிலையில் விநாயகரை வழிபட்டுச் செல்வது போன்று சிற்பம்

Koviloor Digital Library

வடிக்கப்பட்டுள்ளது. முதாட்டியின் முகவாய் எலும்புகளை யும், நெஞ்சு, மற்றும் விலா எலும்புகளையும் கூட மிக நுணுக்கமாக வெளிப்படுத்தியுள்ள நகரத்தார் காலச் சிற்பி களின் திறன் நேரில் கண்டு மகிழத்தக்கது. பல்வேறு இறை உருவங்களைப் பாங்குறப் படைக்கும் இக்கலைச் சிற்பிகள், மானிட உருவங்களை எவ்வளவு கவனத்துடன் செதுக்கி யுள்ளார்கள் என்பதற்கு இச்சிற்பங்கள் சிறந்த எடுத்துக் காட்டு. முகமண்டபத்தூண்களில் ஆழ்ந்த தியானத்தில் நான்முகனையும், சீற்றத்தோடு குடலை உருவும் நரசிம்ம னையும், வேணுகானம் இசைக்கும் கோபாலனையும், பாய்ந்து வரும் வீர அனுமானையும், காட்சி கொடுக்கும் பெருமானையும் மாறுபட்ட சூழலில் பாங்குற அமைத் துள்ளனர்.

கல் யானைகள்

முகமண்டபத்தின் வாயிலை அலங்கரிக்கும் இரு யானைகளின் உருவங்கள் வனப்புடையவை. பெருத்த உடலும், வலுவான கால்களும், நீண்டு வளைந்த துதிக்கை யும், வனப்போடு விரிந்த காதுகளும், உருண்ட திரண்ட மத்தகமும், கூர்மையான சிறிய கண்களும், உறுதியான தந்தங்களும் கொண்ட களிறு வடிவம் கல்லிலே வடிக்கப் பட்டுள்ளது. கழுத்தைச் சுற்றிலும் சதங்கை வாரும், மலர்ச்சரமும் அணிசெய்ய, முதுகின் மீது மேல் விரிப்பும், பின் உடலில் இடைவாரும் அலங்கரிக்க, மணியோசை யுடன் கம்பீரமாக நடந்து வரும் வண்ணம், இரு களிறு களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக் கோயில் விமானத்தைத் தவிர அனைத்துப் பகுதிகளும் வெள்ளைக் கற்களால் கட்டப்பட்டுள்ளன. விமானம் செங்கல்லும் சுதையும் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட இக்கோயில் நகரத் தார்களுடைய கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

Koviloor Digital Library

11. மறைந்த விண்ணகரம்– பெருமாள் கோவில்

நேமம் சிவாலயத்தின் மேற்புறம் பெருமாள் ஊருணி அமைந்துள்ளது. ஊருணிக்குத் தென்புறமுள்ள மேட்டில் பெருமாள் கோவிலொன்று இருந்து அழிந்திருக்கிறது. அதன் தடயங்கள் முற்றிலும் சிதைந்து, சிதறுண்டு பல்வேறு பகுதிகளில் காணக்கிடக்கின்றன. குறிப்பாக இவ்வூருணிக்கு மேல் புறத்திலுள்ள வெயில் உகந்த விநாயகரைச் சுற்றி, பெருமாள் கோவிலுக்குரிய கட்டுமானக் கற்களும், அதிட்டானம் மற்றும் கபோதக வரிகளும் காணக்கிடக்கின்றன.

மறைந்த விண்ணகரத்தில் புகழோடு விளங்கிய திருமாலுக்கு உரிய தாமரைப் பீடம் ஒன்றும் இங்கு காணக்கிடக்கிறது. பெருமாள், நாச்சியார் ஆகியோரின் உருவங்கள் பல ஆண்டுகளுக்கு முன்புவரை இப்பகுதியில் இருந்ததாகவும் அதனை வெளியூரார் எடுத்துச் சென்று விட்டதாகவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இவ்வாறு பெருமாளுக்குரிய சிதையுண்ட கட்டிடப்பகுதிகளைக் கொண்டு, கி.பி. 12–13–ஆம் நூற்றாண்டுகளில் இப்பகுதியில் பெருமாள் கோவில் ஒன்று இருந்திருக்க வேண்டும் என அறிய முடிகிறது. இன்று மறைந்த பெருமாள் கோவிலுக்கு அருகில் அதனை நினைவூட்டும் வகையில் பெருமாள் ஊருணி மட்டும் இருக்கிறது. இது பெருமாள் கோவிலுக்குரிய திருப்பாற்கடலாக இருந்திருக்கவேண்டும்.

Koviloor Digital Library

12. கிராம தெய்வங்கள்

நேமம் கிராமத்தில் கிராம தேவதைகளும், சுற்றுப்புற சிறு தெய்வங்களுக்குமாகக் கோயில்கள் பல உள்ளன. அவை முறையே வெயில் உகந்த விநாயகர், அழகாபுரி பிள்ளையார், செட்டி ஊருணி பிள்ளையார், அழகு நாச்சியம்மன், நொண்டிக்கருப்பர், பச்சிலை நாச்சியம்மன், நித்தம் புதுமை நாச்சி என்னும் நெம்மேனியம்மன், சேவகப்பெருமாள், ஐயனார் ஆகிய தெய்வங்களாகும். அவற்றை இங்கு காணலாம்.

ஸ்ரீ அழகு நாச்சியம்மன் கோயில்

ஊருக்கும் வடக்கே நந்தவனத்தின் வடபுறம் இக்கோவில் அமைந்துள்ளது. இப்பகுதியில் செம்புராங்கல்லால் அடித்தளம் அமைக்கப்பட்ட பழைய கோயில் ஒன்றும் காணப்படுகிறது. சுமார் 700 – ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியை ஆட்சி செய்து வந்த பாண்டிய மன்னன் சோணாடு வழங்கி அருளிய சுந்தரபாண்டியன் காலத்தியது. கூரைக்கட்டுகளுடன் இங்கிருந்த பண்டைய கோயில் காலவெள்ளத்தில் சிதைவுண்டு தற்போது கீழ்க்கோயில் என்ற பெயரில் எஞ்சி நிற்கிறது. கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் பழைய கோவிலுக்கு மேல் திசையில் நகரத்தார்கள் புதிதாக வெள்ளைக்கற்களால் திருப்பணி செய்துள்ளனர். இன்று இக்கோவில் அம்மன், அழகு நாச்சி, அழகிய நாயகி, அழகிய நாச்சியம்மன், வேங்கையடி நாச்சி என்று பல பெயர்களில் அழைக்கப்பட்டு வருகிறது.

வேங்கையும் வெங்கலப்பநாயக்கனும்

சிறு கூடல் பட்டியில் இருந்துவந்த வெங்கலப்பநாயக்கன் இப்பகுதிக்கு ஒரு நாள் குதிரையில் வந்தபோது, அம்மன் கோவில் புதரிலிருந்து வீறு கொண்ட வேங்கை

Koviloor Digital Library

யொன்று பாய்ந்துவர, அதனைக்கண்டு அச்சமடைந்த மன்னன் அம்மனை வேண்டி நின்றான். அம்மன் அருளி னால் வேங்கை விலகிச்சென்றது. தன் உயிரைக் காத்த அம்மனுக்கு வெங்கலப்பநாயக்கன் தன் ஆளுகைக்கு உட்பட்ட திருமுக்காணிப்பட்டியில் நிலத்தைப் பூதானமாக அளித்துள்ளான். இன்றும் அந்நிலம் 'வேங்கையடி நாச்சி யார் செய்' என்ற பெயரில் இருந்து வருகிறது.

சக்தி பூசை

அந்நில வருமானம் இன்றும் கோயிலுக்கு அளிக்கப் பட்டு வருவதுடன், அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு ஆண்டு தோறும் 'சக்தி பூசை' நடத்தப்பட்டு வருகிறது. இப்பூசையின் முதல் 10-நாட்களிலும் சர்க்கரைப் பொங்கல், பாயசம் ஆகியவை வைத்து படைக்கப் பெற்று 11-ஆம் நாள் சக்தி பூசை நடத்தப்படுகிறது. இந்நாளில் முட்டை, முருங்கைக்காய், முனை முறியாக் கத்தரிக்காய், கச்சைக்கருவாடு, கீரை, கோழி, காயம் கருப்பட்டி புழுங்கலரிசி ஆகியவற்றைச் சமைத்துப் பொங்கலிட்டு அம்மனுக்கு முன் பள்ளயங்கட்டி பூசை செய்வர். இப்பூசை முடிந்த பின்பு கருவறையைச் சாத்திவிட்டு, கோயில் பிரகாரத்தை 11 முறை வலம் வருவர். பின்னர், கோயில் படிவாசலில் தேங்காயை உடைத்துக் கைகளால் மூன்று முறை தட்டி ஒலியெழுப்பிக்கருவறையைத்திறப்பர்.அம்மன் முன்வைக்கப்பட்டுள்ள பள்ளயத்திலுள்ள பதார்த்தத்தில் ஒரு உருண்டை எடுத்து வந்து கோயிலுக்கு வெளியே வடமேற்கு மூலையில் துர்த்தேவதைகளுக்கு எறிந்து விட்டு மூன்று கை தண்ணீர் தெளிப்பர். இதனை 'எறி சோறு எறிதல்' எனக் கூறுவார்கள். ஆண்டு தோறும் இக்கிராமத்தில் வைகாசி மாதம் மஞ்சு விரட்டு முடிந்த பிறகு, கோயில் பூசாரியால் இத்தகைய சக்தி பூசை நடத்தப்பட்டு வருகிறது.

Koviloor Digital Library

கோயில் அமைப்பு

நகரத்தாரால் திருப்பணி செய்யப்பட்ட புதியகோயில் வடதிசை நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிற் கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபம், திருச்சுற்று, கோபுர வாயில், சுற்று மதில் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது.

கருவறை

அம்மன் கருவறை நீள் சதுர வடிவில் அமைந்துள்ளது. அதன் உட்பக்க அளவு 2.50 மீ. நீளமும் 1.92 மீ. அகலமும் உடையது. கருவறை நடுவே அழகிய நாச்சியம்மன் செவ்வக பீடத்தின் மேல் அமர்ந்து வலது காலைக் குத்திட்டு, இடது காலைக் கீழே கிடக்கும் அசுரனின் தலையை மிதித்த வண்ணம் எட்டு கரங்களுடன் காட்சியளிக்கிறாள்.

அம்மனின் வலது கைகளில் முறையே மேலிருந்து கீழாக, போர்வாள், நீள் மழு, குறுவாள், திரிசூலம் ஆகிய கொடிய ஆயுதங்கள் காட்டப்பட்டுள்ளன. இடது கைகளில் முறையே மேலிடக்கை வியக்கும் கரமான விஸ்மய முத்திரையில் அமைந்து காணப்படுகிறது. ஏனைய கைகளில் திரிசூலக் கைப்பிடியுள்ள மணி, கேடயம், கபாலத்தட்டு ஆகியன காணப்படுகின்றன. அம்மனின் தலையின் முன் புறம் எளிய மகுடமும், தலையைச் சுற்றிலும் வட்டமாக விரிந்து வனப்பூட்டும் அனல் மகுடமும் அழகு செய்கின்றன நெற்றியைச் சுற்றிலும் முத்துப்பட்டம் அலங்கரிக்கிறது. வலது காதில் அபயக் குரல் எழுப்பும் அசுரனின் நர குண்டலம் அலங்கரிக்கிறது. இடதுகாதில் வட்டவடிவமான குண்டலம் அணி செய்கிறது. அம்மனின் இடையிலிருந்து மேல் தொடை வரை இடைக்கச்சை காட்டப்பட்டுள்ளது. அம்மனின் பாதம் முதல் கேசம் வரை பல்வகை அணி கலன்கள் அழகு செய்கின்றன. அன்னையின் காலடியில்


Koviloor Digital Library

சூலாயுதத்தால் மார்பு பிளவுண்டு விழிபிதுங்க விழுந்து கிடக்கும் அசுரன் அன்னையின் அருள் வேண்டி அபயக் குரல் எழுப்புகிறான். வெற்றியின் சின்னமாக அம்மனும், தோல்வியின் சின்னமாக அசுரனும் இங்கு காட்டப் பட்டுள்ளனர். இதன் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும. பழமையும் புகழும் மிக்க இப்பெண் தெய்வம் நேமம் கிராம மக்களின் நம்பிக்கைக்குரிய தெய்வமாக விளங்குகிறது. பாண்டியர் காலத்தைச் சேர்நத அழகு நாச்சியம்மனுக்கு நேமம் நகரத்தார்கள் திருபபணி செய்து பிரமோதூத ஆண்டு தைத்திங்கள் 21-ஆம் நாள் (3.2.1991) அன்று குட நீராட்டு விழாவை சிறபபாகச் செய்துள்ளனர்.

நொண்டிக் கருப்பர்

இக்கிராம தெய்வம் ஊரின் வடதிசையில் அமைந் துள்ளது. உருவங்கள் ஏதுமின்றி பலி பீடத்தை நொண்டிக் கருபபராக வழிபடுகின்றனர். ஆத்திமரத்தடியின் தூரின் மீது பீடம் எழுப்பி, படிகட்டி அதன் மீது கல்திண்டு அமைததுள்ளனர். திண்டின் உச்சியில் நிறுத்தப்பட்டுள்ள பெரிதும சிறிதுமான இரு அரிவாள்களை முறையே பெரிய கருபபராகவும், சிறிய கருப்பராகவும் கருதி வணங்குவர். நொண்டிக் கருப்பர் ஆத்திமரத்தடி யில் இருப்பதாக ஐதிகம். கிராமமக்கள் நோய்வாய்ப் பட்டால, நோய்தீர கருப்பரை வேண்டிக்கொள்வர். நேர்த்திக் கடனாக உசிலை மரத்துக் கம்புகளைப் பட்டை நீக்கி கறறையாக எடுத்து வந்து கருப்பருக்குக் காணிக்கை செலுத்துவர். ஆதி-திராவிட இனத்தைச் சேர்ந்த கோயில் பூசாரிகள், நேர்த்திக் கடனாக வைத்துச் சென்ற உசிலைக் கம்புகளைக் கொண்டு, விசேட நாட்களில் பொங்கலிட்டுப் பூசை செய்வர். இப்பகுதி வாழ் மக்களுக்கு மட்டுமின்றி ஆடு மாடு முதலிய கால்நடைகள் நோய்வாய்ப்பட்டாலும்

Koviloor Digital Library



அம்மன் கோயில் விமானத்தோற்றம்,
அழகுநாச்சியம்மன் கோயில், நேமம்,
நகரத்தார் கலைப் பணி.

Koviloor Digital Library



அழகுநாச்சியம்மன் சிற்பவடிவம்,
அழகுநாச்சியம்மன் கோயில், நேமம்,
பாண்டியர் கலை
காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

Koviloor Digital Library

இக்கருப்பரிடம் மஞ்சு விரட்டுக் காலங்களில் வேட்டித் துண்டு எடுத்து சாத்துவதாக வேண்டிக் கொள்வது வழக்கம். குழந்தைப்பேறு இல்லாதவர்களும் கருப்பரை வணங்கி நலம் பெறுகின்றனர். குழந்தை பிறந்தவுடன் அதனைக் கருப்பரின் வாசலில் வைத்து குழந்தைக்குப் பெரியகருப்பன் என்றும், சின்ன கருப்பன் என்றும் பெயர் சூட்டுவர்.

பச்சிலை நாச்சியம்மன்

நொண்டிக் கருப்பருக்கு வடபுறமுள்ள பீடத்தை பச்சிலை நாச்சியாக வழிபடுகின்றனர். இதனை நொண்டிக் கருப்பரின் மூத்தாளாகக் கருதுவர். ஆண்டிற் கொருமுறை ஆடி மாதத்தில் கருங்கிடா வெட்டி நொண்டிக்கருப்பருக்கும் பச்சிலை நாச்சியம்மனுக்கும் கிராமத்து மக்கள் பூசை செய்வது வழக்கம். பொங்கலிட்ட மண்பாத்திரங்கள், குடங்கள் யாவும் பூசைக்குப் பின்பு உசிலை மரத்தின்மீது வைக்கோல் புரிகட்டிவைத்துவிடுவர். இதனைப் பூசாரிகள் தவிர வேறு யாரும் தொடுவதில்லை. ஆண்டுதோறும் பச்சிலை நாச்சியம்மனுக்குச் சிறப்புச் செய்யும் போது நேர்த்திக் கடனாக ஆட்டுக்கிடா, சேவல் ஆகியவற்றை அம்மனுக்குக் கொடுத்து வருகிறார்கள். இது ஊரார், நகரத்தார் எல்லோருக்கும் பொது கிராம தெய்வமாக இருந்து வருகிறது.

வெயிலுகந்த விநாயகர் கோயில்

வெயிலுகந்த விநாயகர் கோயில் ஊருக்கு மேல் திசையில் நேமத்தான் கண்மாய்க்கரையில் தென் கோடியில் அமைந்துள்ளது. இவ்விநாயகர் சிலைமிகவும்பழமைவாய்ந்ததாகத் திகழ்கிறது. இதற்குமேலே விமானமும் கோயிலும் அமைக்கத் திருவுளமில்லை! மண்டபம் சிதைந்துள்ளது. இதைச்சுற்றிலும் கருங்கற் குவியல்களும், கோயில் கட்டுமானவரி கற்களும், தூண்களும் எங்கும் சிதறுண்டு காணப்

Koviloor Digital Library

படுகின்றன. இதனை நோக்க முன்பு இப்பகுதியில் ஒரு கற்றளி இருந்திருக்க வேண்டும் என அறியலாம். இக் கோயிலில் பெரிதும் சிறிதுமாக மூன்று விநாயகரின் உரு வங்கள் வழிபாட்டில் உள்ளன. இவற்றில் ஒன்று பெரியது. ஏனைய இரண்டும் உருவில் சிறியன. பெரிய பிள்ளை யாரை வெயிலுகந்த விநாயகர் என அழைத்து வழிபடு கின்றனர்.

வெயிலுகந்த விநாயகர்

இவ்வுருவம் தாமரை பீடத்தின் மீது வலது காலைக் குத்திட்டு, இடதுகாலை மடித்து அமர்ந்த கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறது. மேல் வலக்கை அங்குசத்தைப் பிடித்துள்ளது. இடக்கை சிதைந்துள்ளது. கீழ்வலக்கை, தந்தத்தைக் கொண்டுள்ளது. மோதக உருண் டையை இடக்கை தாங்கியுள்ளது. இடம்புரி விநாயகரின் தலையைக் கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. இதன் எதிரே பிள்ளையாரின் மூசிக வாகனமும், பீடமும் உள் ளன. இவ்வுருவம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச்சார்ந்தது.

ஆண்டுதோறும் தமிழ்ப்புத்தாண்டு நாளில் இங்கு நேமம், பழையூர், நேமத்தான் பட்டிபுத்தூர், பழை யூர், மேலக்குடியிருப்பு ஆகிய ஐந்துகிராம மக்களும் பெரும் திரளாக ஒன்று கூடி பொங்கலிட்டுப் பூசை செய்கின்ற னர். இக்கோயிலுக்குத் தென்திசையில் பிள்ளையார் ஊருணி அமைந்துள்ளது. இது தீர்த்த விசேடம் வாய்ந்த ஊருணியாகும். செயங்கொண்டார் சதகத்தில் முத்தப் பையா, இவ்விநாயகரையே காப்புச் செய்யுளாகப் பாடியுள் ளார்.

Koviloor Digital Library

13. பிற்சேர்க்கைகள்

பிற்சேர்க்கை–1

நேமம் கோயில் நகரத்தார் வாழும் ஊர்கள்
(சனவரி 1991)

எண்	ஊர்ப்பெயர்	புள்ளி விவரம்
1.	நெற்குப்பை	84
2.	வேந்தன்பட்டி	99
3.	மேலச்சிவபுரி	121
4.	வலையபட்டி	131
5.	உலகம்பட்டி	30
6.	ராங்கியம்	60
7.	கீழச்சிவல்பட்டி	30
8.	கோட்டையூர்	126
9.	கண்டனூர்	16
10.	பள்ளத்தூர்	133
11.	பலவான்குடி	9
12.	கானாடுகாத்தான்	67
13.	அரிமளம்	82
14.	காரைக்குடி	237
15.	செயங்கொண்டபுரம்	88
16.	தேவகோட்டை	144
17.	கல்லல்	29
18.	சண்முகநாதபுரம்	7
19.	அரண்மனை சிறுவயல்	8
20.	செம்பனூர்	64
21.	பி. அழகாபுரி	1
		1566

Koviloor Digital Library

பிற்சேர்க்கை – 2

தகவல் தந்தவர்கள்

திருவாளர்கள்.

1. எஸ். பரமேஸ்வர குருக்கள், அர்ச்சகர், செயங்கொண்ட சோழீசுவரர் கோயில், நேமம்.
2. எஸ்.எம். இராமநாத குருக்கள், நேமம்.
3. ரா. சாமிநாத அய்யர், கோயில் மணியம், நேமம்.
4. க. சுப்பிரமணிய பட்டர், பூசாரி, அழகு நாச்சியம்மன் கோயில், நேமம்.
5. கரு. நாச்சியப்ப பண்டாரம், நந்தவனம், நேமம்,
6. ரோஜா. முத்தையா செட்டியார் கோட்டையூர்.
7. பீ. சோமசுந்தரம் செட்டியார், பள்ளத்தூர்.
8. உ.அ.பெரி.மு.அரு.அ. பத்மநாபன் செட்டியார், பள்ளத்தூர்.
9. ஆர். கற்பகம், முதல்வர், மகளிர்கல்லூரி, பள்ளத்தூர்.
10. நா.வள்ளி, உதவிப் பேராசிரியர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.
11. மது.ச. விமலானந்தம், பேராசிரியர், அரசு தன்னாட்சிக்கல்லூரி, கும்பகோணம்.
12. வை. பாலசுப்பிரமணியம், தமிழாசிரியர், சிலைமான்.
13. ச. கிருஷ்ணமூர்த்தி, தொல்பொருள் அலுவலர், சிதம்பரம்.
14. சுப.சித. சுப்பிரமணியன் செட்டியார், காரைக்குடி.
15. சண்முகம் ஸ்தபதி, எழுவன் கோட்டை.
16. வே. இராமன் ஸ்தபதி, கரந்தை.

Koviloor Digital Library

17. செல்லக்கண்ணு ஸ்தபதி, கழனிவாசல்.
18. குழ. சுப்பையா சேர்வை, நேமம் நாட்டுச்சேர்வை, ஆற்காடு.
19. லெ. அழகப்பன், ஆற்காடு.
20. கரு. காளிமுத்து, திருமாலைக்கட்டி, நேமம்.
21. லெ. சீதாராமசாமி, கோட்டையூர்.
22. எம். ஆறுமுகம், கோயில் உதவிக்கணக்கர், நேமம்.

பிற்சேர்க்கை–3

துணைநூற் பட்டியல்

1. தென்னிந்திய சிற்பவடிவங்கள் – க. நவரத்தினம், 1941.
2. நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு-பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார், 1953.
3. செயங்கொண்டார் வழக்கம் – அழ. முத்தப்பச் செட்டியார் (உரைவிளக்கத்துடன்) பதிப்பாசிரியர், தி. சந்திரசேகரன், 1955.
4. ஆலய விக்கிரக நிர்மாண ஆயாதி சிற்பரகசியம்– ஸ்தபதி. டி.பி. கணேசமூர்த்தி, 1960.
5. சிற்பச் செந்நூல் – வை. கணபதி ஸ்தபதி, 1978.
6. பிள்ளையார்பட்டி தல வரலாறு – சா. கணேசன் முதற்பதிப்பு, 1955. மூன்றாம் பதிப்பு. 1988.
7. நேமம் கோயில் வரலாறு - நாராயண -நடராசன் செட்டியார், செட்டிமார் கழகம், கீழச்சிவல் பட்டி – 1961.

Koviloor Digital Library

8. ஒன்பது நகரக் கோயில்கள் - டாக்டர். தமிழண்ணல், நகர மலர் - திங்கள் வெளியீடு.

9. இலுப்பைக்குடி கோயில் - மா. சந்திரமூர்த்தி, 1988.

10. மாத்தூர் கோயில் - மா. சந்திரமூர்த்தி, 1988.

11. இரணியூர்க் கோயில் - மா. சந்திரமூர்த்தி, 1990.

12. நேமம் செயங்கொண்ட சோழீசர் - வீர.சுப்பிரமணியம், தினமணிசுடர் அநுபந்தம், 28.1.1968.

13. சிவநேசன் - செந்தமிழ்த் திங்கள் வெளியீடு - பலவான்குடி - மார்ச்சு, 1936.

14. Elements of Hindu Iconography - T.A. Gopinatha Rao. I & II Volumes, Second Edition, 1971.

15. The Nagarathars of South India- S. Chandrasekhar, First Edition - 1980.

Koviloor Digital Library

முன் வந்த மூன்று நூல்கள்

1. இலுப்பைக்குடி கோயில்

நூற்றுக்கணக்கான சிற்பங்களைப் பற்றிப் படிக்கும் போது ஒரு சிறிதாவது சலிப்பு வருகிறதா என்றால், வரவில்லை! காரணம்? ஆசிரியரின் அழகான வருணனை மிக்க நடைதான். குறிஞ்சிப் பாட்டில் 99 வகையான மலர்களையும் அழகாக அடுக்குவது போல, நம் மனத்திலேயே கொலு வைத்துவிடுகிறார் ஆசிரியர். இவரைப் பற்றி ஒரே வரியில் விமர்சிப்பதென்றால், இப்படிச் சொல்லலாம்: இவர் சந்திரமூர்த்தி அல்ல—சூரியமூர்த்தி!

பேரா. டாக்டர் வ. தேனப்பன்

... இதனை நகரத்தார் பெருமைபேசும் நூலாக அல்லாமல், தமிழகக் கோயிற் கலையின் இடையறவு படாத் தொடர்ச்சிவரலாறாக எழுதியிருப்பது பாராட்டுக்குரியது.

டாக்டர் தமிழண்ணல்

இக்கோயிலின் கலைச் சிறப்பையும் கட்டிட அமைப்பையும், படிமக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றின் குறிப்பு நலன்களையும் இந்நூல் முழுமையாக விளக்குகிறது.

தினமலர் சென்னை2 1.3. 1990

2. மாத்தூர் கோயில்

மாத்தூர் கோயிலை அங்குலம் அங்குலமாக ஆய்ந்து அதன் சிற்பக் கலைச் சிறப்புகளைப் பக்கம் பக்கமாக விவரித்திருக்கிறார். சிற்பக் கலையின் அழகைக் கண்டு களித்துக் கூறுவது இந்நூலின் தனிச்சிறப்பு. இந்நூல் ஒரு நற்பணி.

தினமணி (மலேசியா) 11.9.1988

Koviloor Digital Library

நம்மவர்கள் எடுக்க வேண்டிய முயற்சியைவிட அதிக முயற்சி எடுத்துக்கொண்டு இந்நூலை வெளியிட உதவியுள்ளார். அவருக்கு நாம் என்றென்றும் கடப்பாடு உடைவர்களாகின்றோம்.

பேரா. A.R. இலக்குமணன்

மாத்தூர் கோயிலைப் பற்றிய முழுமையான வரலாற்றுச் செய்தியை இந்த அழகிய நூல் விரிவாகக் கூறுகிறது. கோயில் நூல்கள் எழுதுவோருக்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

கோயில் கட்டடக்கலை, படிமங்கள் ஆகியவற்றில் நூலாசிரியர் நுண்மாண் நுழைபுலத் தேர்ச்சி பெற்றவர் என்பதை அவர் இந்நூல் எழுதியுள்ள பாங்கிலிருந்து தெரிகிறது.

தினமலர்: சென்னை 21.1.1990

3. இரணியூர்க் கோயில்

சோழர், பல்லவர், பாண்டியர்களைப் போல, நகரத்தார் வளர்த்த கோயிற் கலைகளை, 'நகரத்தார் கலை' என்று இவர் முதன் முறையாகக் கண்டறிந்து இந் நூல் வரிசையில் நிறுவி வருகிறார்.

ஜஸ்டிஸ். அரு. இலக்குமணன்

கோவிலூர் ஆதீனம்
Acc. No: 762
01:38
-630 307